வரு.74 இல. 37 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் වාරමඤ්ජරී
28 பக்கங்கள் 80/-
2022 செப்டெம்பர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 11 Sunday, 2022




02 மக்களின் அலட்சியத்தால் காவுகொள்ளப்பட்ட பிஞ்சு
03 நேர்மைத்தன்மையற்ற சில கட்சிகள்
05 சாமானியன் இதயம் தொட்ட அன்னை
24 விடுகதை விளையாட்டு






# புதிய இராஜாங்க அமைச்சுகளுக்கு தனியான நிதி ஒதுக்கீடு கிடையாது

## செயலாளர்களும் இல்லை; புதிதாக பணியாளர்களை நியமிக்கவும் முடியாது

**அரச செலவினங்களை குறைக்க ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அவரது செயலாளரினால் சில பரிந்துரைகள் வெளியிடப்பட்டன.**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கடந்த 08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்கள் 37 பேருக்குமுரிய விடயதானங்களுக்குரிய இராஜாங்க அமைச்சுக்களுக்கு தனியான நிதி ஒதுக்கீடு செய்வதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அத்துடன் இராஜாங்க அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமிக்கப்பட மாட்டார்களென்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளரினால் இந்த பரிந்துரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அத்துடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர்கள் தமது கடமைகளை மேற்கொள்ளும்போது புதிய விதிமுறைகளுக்கமைய செயற்பட வேண்டுமென்றும் ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் விடுத்துள்ள பணிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் படி,

01. இராஜாங்க அமைச்சுக்களுக்கு தனியாக நிதி ஒதுக்கப்படமாட்டாது. இராஜாங்க அமைச்சுக்களுக்கு செயலாளர் நியமிக்கப்படமாட்டார்கள். துறைசார் இராஜாங்க அமைச்சர்கள், பணிகளை இலகுபடுத்த, தனது அமைச்சுக்களிலுள்ள மேலதிக செயலாளர்களில் சிரேஷ்ட அதிகாரியின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்கள் தமது அமைச்சில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாளர்களைப் பயன்படுத்தியே தமது பணிகளை பூர்த்தி செய்ய வேண்டும். பதவிகளில் புதியவர்களை அமர்த்துவதற்கான கோரிக்கைகளை நிர்வாக சேவைகள் திணைக்களத்திடம் முன்வைக்கக் கூடாது.
03. அமைச்சரவை அமைச்சர்கள் தற்போது பணி செய்துவரும் அலுவலக வளாகத்துக்குள்ளேயே இராஜாங்க அமைச்சர்களின் பணிகளையும் முன்னெடுக்க வேண்டும்.

04

# இரண்டு நாள் விஜயமாக இலங்கை வந்தார் சமந்தா

## உயரதிகாரிகள், பாதிக்கப்பட்ட மக்களை சந்திப்பார்




சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டத்தின் நிர்வாகி சமந்தா பவர், இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்தடைந்தார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான அபிவிருத்தியை வலுப்படுத்தும் நோக்கில் இந்த விஜயம் அமைந்துள்ளது. அரசாங்கத்தின் உயர்மட்ட

04

# கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் மூடப்படவுள்ளது

## 2023 ஜூலைக்குள் மூட அந்நாட்டு அரசு முடிவு



நோர்வே அரசு மேற்கொள்ளும் கட்டமைப்பு மாற்றங்களின் ஒரு பகுதியாக கொழும்பிலுள்ள தனது தூதரகத்தை மூடுவதற்கு நோர்வே அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நோர்வே அரசாங்கம் வெளிநாட்டு தூதரகப் பணிகளின் வலையமைப்பில் கட்டமைப்பு மாற்றங்களைச் செய்ய தீர்மானித்துள்ளதாக இலங்கைக்கான நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை, ஐரோப்பாவிலும் அதற்கு

04

# ஆடைக் கைத்தொழிலில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு

## உடனடியாக செயலில் இறங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்பு



நாட்டுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரும் ஆடைக் கைத்தொழில் துறையினர் எதிர்நோக்கும் சவால்களை அடையாளம் கண்டு, அவற்றைத் தீர்க்க உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதியின்

04

# நாம் எதிர்பார்க்காத வகையில் எமது கட்சி அழிக்கப்பட்டுவிட்டது

## விரைவில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கூட்டணி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு புதிய இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ளும் பொறுப்பு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்குமாறு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளதாக பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன

04

# இலங்கை மீண்டெழ புலம்பெயர் தமிழர்களது ஒத்துழைப்பு தேவை

## ஜெனீவாவில் வைத்து நீதியமைச்சர் விஜேதாச தெரிவிப்பு



இலங்கை மீண்டெழ புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகளும், ஒத்துழைப்புக்களும் கட்டாயம் தேவையென்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜெனீவா சென்றுள்ள இலங்கை குழுவிலுள்ள முக்கியஸ்தரான நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஓர் ஒழுங்குமுறையில் தீர்வுகளைக் காணும் பணியை எமது அரசாங்கம்

04

**பதுளையில் கொடூரச் சம்பவம்**

# தாயும் மகளும் கூரிய ஆயுதங்களால் குத்திக்கொலை

பதுளை ஹிங்குருகம கெலன்பில் தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு தாயும் மகளும் கூரிய ஆயுதங்களால் வெட்டியும் குத்தியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தொடர் குடியிருப்பு வீடொன்றில் வசித்து வந்த 83 மற்றும் 55 வயதுடைய பெண்களே படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

62 வயதுடைய மற்றுமொரு பெண் படுகாயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முகத்தை மூடியபடி வந்த சிலரே இவர்களை தாக்கியுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இந்த சம்பவத்துக்கான காரணம் இதுவரை

04

# பிரிட்டிஷ் மகாராணியின் இறுதிக் கிரியைகள் 19 ஆம் திகதி

## தேசிய துக்க தினம் அறிவிப்பு



பிரிட்டிஷ் மகாராணி 02 ஆவது எலிசபெத்தின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை சகல இராஜ மரியாதைகளுடன் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மகாராணியார் கடந்த 08 ஆம் திகதி தனது 96 ஆவது வயதில் காலமானார். மகாராணிக்கு கௌரவமளிக்கும் நோக்குடன் 19 ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கையில் தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்க அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவியாக செயற்பட்டுவந்த மகாராணியாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நோக்குடன் கடந்த 09 ஆம் திகதி முதல்

04

# பெருந்தோட்டத்துறை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

## மலையக தலைவர்கள் ஓரணியில் செயற்பட முடிவு



அண்மைக்காலமாக நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மலையகப் பகுதிகளில் பெருந்தோட்டத்துறை மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரம், தொழிலாளர் நலன்கள் மற்றும் ஏனைய சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்குடன் உடனடி தேவைகளை பூர்த்தி செய்வது மற்றும் நீண்டகால திட்டமிடல்

04

**உத்தியோகபூர்வமாக இலங்கை பணியாளர்களால்**

# வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தொகையில் அதிகரிப்பு

## இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கிறது




வெளிநாடுகளிலிருந்து இலங்கை பணியாளர்கள் அனுப்பும் பணம் கடந்த மாதம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இவ்வாண்டு ஜூலையில் தொழிலாளர்கள் அனுப்பிய பணம் 279.5 மில்லியன்

04

# எங்கள் கருத்து...

## இலங்கைத் தமிழ் அகதிகளின் துயரம் போக்குவது அவசியம்!

இந்தியாவின் தமிழ்நாட்டில் பல தசாப்த காலமாக அகதிகளாகத் தஞ்சமடைந்து வாழ்ந்து வருகின்ற இலங்கைத் தமிழர்களை மீண்டும் தாயகத்துக்கே திருப்பி அழைப்பதற்கான எண்ணம் இலங்கை அரசாங்க மட்டத்தில் தோன்றியிருப்பதை சமீப தினங்களாக அறிந்து கொள்ள முடிகின்றது. அரசாங்க முக்கியஸ்தர்கள் சிலர் மாத்திரமன்றி, வடமாகாண ஆளுநரான ஜீவன் தியாகராஜாவும் இவ்விடயம் தொடர்பாக அண்மையில் அக்கறையை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொடிய இனவன்செயலுடன் வடக்குத் தமிழ்மக்கள் தமிழகத்துக்குப் புலம்பெயர்வது ஆரம்பமாகியது. அதன் பின்னர் இலங்கையில் சுமார் மூன்று தசாப்த காலம் நீடித்த உள்நாட்டு யுத்தம் காரணமாக மேலும் ஏராளமான தமிழர்கள் இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு படகுகளில் இடம்பெயர்ந்தனர். தமிழ்நாட்டுத் தகவல்களின்படி அங்கே இலங்கைத் தமிழர்கள் சுமார் 58 ஆயிரம் பேர் அகதிகளாக வாழ்வதாக தெரியவருகின்றது. ஆனால் 1983 இலிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களில் இருந்து தற்போது மூன்றாவது தலைமுறையும் அங்கே உருவாகி விட்டதனால், தமிழகத்திலுள்ள மொத்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமென்றே நம்பப்படுகின்றது.

இவர்களில் சுமார் மூவாயிரம் பேர் இலங்கை திரும்பியிருந்தனர். ஆனால் தாயகத்தில் அவர்கள் எதிர்பார்த்தவாறு வாழ்வதற்கான சூழலும், வசதிவாய்ப்புகளும் அமையவில்லை. எனவே அவர்களில் பலர் மீண்டும் தமிழகத்துக்கே அகதிகளாகத் திரும்பி விட்டனர்.

04

**உண்டியல் முறை மூலமாக**

# கோடிக்கணக்கில் பணப் பரிமாற்றம்


**வங்கிக் கணக்குகள் பரிசோதனை**

உண்டியல் மற்றும் ஹவாலா ஆகிய சட்டவிரோத முறைகளின் மூலம் இரண்டு மாதங்களில் ஒன்பது கோடி ரூபாய் பணம் பரிமாற்றம் செய்யப்பட்ட வங்கிக் கணக்கு தொடர்பில்

04

**திடீர் சுகயீனம் காரணமாக**

# லஹிரு வீரசேகர மருத்துவமனையில்




முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக காலி முகத்திடல் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளராக இருந்த லஹிரு வீரசேகர திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பு


04

# கேகாலையில் கோர விபத்து

## மூவர் பலி; இருவருக்கு காயம்; வானுடன் மூன்று மோ.சைக்கிள்கள் மோதி சம்பவம்

*வரக்காப்பொலை தினகரன் நிருபர்*



கொழும்பு, கண்டி பிரதான வீதியில் கேகாலை ரன்வல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூன்று இளைஞர்கள் பலியாகியுள்ளனர். விபத்தில் மற்றுமிருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு பிரதான வீதியில் 76ஆம் கிலோ மீற்றரில் உள்ள ரன்வல பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு (09) 10.30 மணியளவில் இவ்விபத்து

04

# யாழ். சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் 70 பவுண் நகைகள் அபேஸ்



வரலாற்று சிறப்பு மிக்க யாழ். செல்வச் சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவில் பங்கேற்க வந்த அடியார்களிடம் சுமார் 70 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

04

# மக்களின் அலட்சியத்தால் காவுகொள்ளப்பட்ட பிஞ்சு

கடந்த சிலநாட்களாகப் பெய்த கடும் மழையையும் விட ஒட்டு மொத்த குருநாகல் பிரதேசத்தையுமே அழ வைத்த துன்பகரமான செய்தி ஒன்று கடந்த 05ம் திகதி திங்கட்கிழமை மாலை மிகக் குறுகிய நேரத்திற்குள் பரவியிருந்தது.

குருநாகல் மலியதேவ மாதிரி வித்தியாலயத்தில் ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த 14 வயதுடைய சஜித கிஹான் குணரத்ன என்ற மாணவன் கடும் மழை பெய்து கொண்டிருந்த நிலையில் பாடசாலை விட்டு தனது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது நீர் நிரம்பியிருந்த வடிகானினுள் வீழ்ந்து அடித்துச் செல்லப்பட்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

"இன்று என்னால் பாடசாலைக்குச் செல்ல முடியாது.... நான் பாட்டியுடன் விகாரைக்குச் செல்லப் போகிறேன்...." சஜித அன்றைய தினம் காலை வீட்டிலிருந்தவர்களுக்கு இவ்வாறு கூறினான், என்றுமில்லாதவாறு கடும் மழை அன்று காலை முதல் பெய்து கொண்டிருந்ததால் பாடசாலைக்குச் செல்வதற்கு தயக்கமாக இருந்த போதுதான் அவ்வாறு கூறினான்.

கடந்த காலங்களில் சரியான முறையில் பாடசாலை செல்ல முடியாமற் போனமையினாலும், இன்றும் இரண்டு நாட்களில் பாடசாலை இரண்டாம் தவணை முடிவடைந்து விடுமுறை வழங்கப்பட இருந்ததாலும் சஜித அன்றைய தினம் சஜித பாடசாலை சென்றது சஜிதவின் தாய் சஜிதவுக்கு அவற்றை விளக்கி கூறியதன் பின்னராகும். சஜித அன்று பாடசாலை சென்றதும் கடும் மழைக்கு மத்தியிலாகும்.

குருநாகல் மலியதேவ மாதிரி வித்தியாலயத்தில் ஒன்பதாம் வகுப்பில் கற்கும் சஜித, 14 வயது மாணவனாக இருந்த போதிலும் அவர் இன்னமும் பாடசாலை விட்டு வீட்டுக்குச் செல்வது தனது தாயுடனோ அல்லது பாட்டியுடனோதான். வழமைபோலவே அன்றைய தினம் (05ம் திகதி) சஜிதவின் பாட்டி சஜிதவை பாடசாலையிலிருந்து அழைத்து வருவதற்காக வெளியேறி அரைவாசித் தூரத்திற்குச் சென்றிருந்த போதிலும் பாட்டியால் தொடர்ந்தும் அவ்வீதியில் செல்ல முடியாது போனது. காரணம் ஆறு அடி கூட அகலம் இல்லாத அவ்வீதியை வெள்ள நீர் முற்றாக மூடியிருந்தது.

தனது பாட்டி வரும் வரைக்கும் காத்திருக்காத சஜித, பாடசாலையிலிருந்து வெளியேறி அங்கிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தைக் கடந்து தனது வீட்டுக்குச் செல்வதற்கு ஆயத்தமானான். ஆனால் அவனது பயணம் முற்றுப் பெறவில்லை. சஜித அவ்வாறு வீட்டை நோக்கி நடந்து சென்றது வீதியில் வலது பக்கத்திலாகும். வீட்டுக்கு சில யார்கள் தூரத்தில் அமைந்துள்ள முச்சந்தியில் மாணவர்களை ஏற்றிச் செல்லும் பாடசாலை வாகனத்திற்கு சஜித விலகி இடம் கொடுத்தது மிகவும் சிரமத்திற்கு மத்தியில் வீதியின் ஒரு பக்கத்திற்குச் சென்றேயாகும். வீதிக்கு அருகில் நீர் அதிக வேகத்தில் செல்லும் வடிகான் இருப்பதை சஜித அறிந்திருக்கவில்லை. அந்த வீதியும் மிகவும் குறுகலானது

திடீரென கால் வழுக்கி வடிகானினுள் சஜித விழும் காட்சியை ஒருவருமே காணவில்லையா என்பது இன்னமும் பிரச்சினைக்குரிய ஒன்றாகவே உள்ளது. மிகவும் அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தும் "சிசு செரிய" பாடசாலை சேவை வாகனச் சாரதியாவது சஜித வடிகானினுள் வீழ்வதைக் கண்டிருந்தால் சஜிதவுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது. வடிகானினுள் வீழ்ந்த சஜித பெரிய கானினுள் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார். உள் வீதி ஒன்றிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது.



சஜித நீரில் அடித்துச் செல்லப்பட்டாலும், அவரது பாடசாலை புத்தகப் பை நீரில் மிதப்பதைக் கண்டவர்கள் சஜித வடிகானினுள் வீழ்ந்திருக்கலாம் என நினைத்த அச்சமடைந்தனர். இச்சம்பவம் காட்டுத் தீ போல பரவியதை அடுத்து பெருமளவான மக்கள் அந்நேரத்தில் பெய்து கொண்டிருந்த மழையையும் பொருட்படுத்தாமல் அவ்விடத்தில் ஒன்று கூடினர்.

சஜிதவை அழைத்துச் செல்வதற்காக வீட்டிலிருந்து வந்த சஜிதவின் பாட்டி, தனது பயணத்தைத் தொடர முடியாதளவுக்கு வடிகான்கள் நீரால் நிரம்பி வீதியையும் நீர் முற்றாக மூடியிருந்தது. இந்நேரத்தில்தான் வடிகானினுள் மாணவர் ஒருவர் வீழ்ந்து அடித்துச் செல்லப்பட்டுள்ளார் என மக்கள் கூக்குரலிட்ட சத்தத்தைக் கேட்ட சஜிதவின் பாட்டியும் சம்பவ இடத்தை நோக்கி பதட்டத்துடன் அழுது கொண்டே ஓடிச் செல்கிறார். எனினும் சஜித அவ்விடத்தில் இருக்கவில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் அகலமானதாக இருந்த வடிகான் தற்போது சிறியதாக ஆகிப் போயிருந்தாலும் நீர் மிகவும் வேகமாக அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. சஜிதவைத் தேடுவதற்காக வடிகானினுள் இறங்கிய சிலர் நீரில் நீந்திச் சென்று சஜிதவைத் தேடிக் கொண்டிருந்த போது இன்னும் சிலர் வீதிக்கு குறுக்காக காணப்படும் சிறிய கானினுள் சஜித சிக்கிக் கொண்டிருக்கலாம் எனக் கூறினர். எனினும் சஜித உண்மையிலேயே அவ்வாறு கானுக்குள் சிக்கிக் கொண்டிருக்காரா எனத் தேடுவதற்கு அவ்விடத்தில் கூடியவர்களால் முடியாது போனது. காரணம் நீர் அடித்துக் கொண்டு செல்லும் வடிகானின் மறு பக்க வடிகானை மூடி கொங்கிரீட் போடப்பட்டிருந்ததாகும்.

இதனிடையே இச்சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பொலிஸாரும், அவ்விடத்திற்கு வந்த இராணுவ வீரர்களும் சஜிதைத் தேடுவதற்கு பெரும் முயற்சி மேற்கொண்டனர். பிரதேசவாசிகளுடன் நகர சபை ஊழியர்களும் ஒன்று சேர்ந்து இரண்டு பெக்கோ இயந்திரங்களைப் பயன்படுத்தி கொங்கிரீட் தட்டினை உடைத்து விட்டு சஜிதவைத் தேடினர். ஆனால் அந்தக் கானுக்குள் தண்ணீர் விநியோகத்திற்காக பொருத்தப்பட்டிருந்த குழாய்க்கு அருகில் சஜித சிக்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டான்.

சஜிதவை மீட்டெடுத்த அங்கு கூடியிருந்தவர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மிகத் துரிதமாக சஜிதவை குருநாகல் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். தீயணைக்கும் இராணுவப் படையின் கெப் வாகனத்தில் சஜிதவைக் கொண்டு சென்றனர். அந்நேரம் சஜித வாழ்வுக்கும், மரணத்திற்கும் இடையிலான பெரும் போராட்டத்தில் சிக்கிக் கொண்டிருந்ததை பெரும்பாலும் அனைவரும் அறிந்து கொண்டிருந்தனர்.



குருநாகல் போதனா வைத்தியசாலை அமைந்திருப்பது சஜித இந்த விபத்திற்கு முகங்கொடுத்த இடத்திலிருந்து சுமார் 700, 800 மீற்றர் தொலைவிலாகும். சஜித அங்கு எடுத்துச் செல்லப்பட்ட நேரம் குருநாகல் வைத்தியசாலையின் சுகாதாரப் பணியாளர்களும் சஜிதவின் உயிரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் சிகிச்சையளிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளுடன் ஆயத்த நிலையிலேயே இருந்தனர்.



சஜிதவின் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வைத்தியசாலையின் வைத்தியர்கள் எடுக்காத முயற்சிகள் இல்லை. எனினும் அந்த முயற்சிகள் யாவுமே பயனற்றுப் போயின.

இதனால் ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் குருநாகல் உள்ளூராட்சி மன்றத்தினை நோக்கியும், அரச அதிகாரிகளை நோக்கியும் மாத்திரம் விரலை நீட்டவில்லை. இரண்டு அடிகளால் தமது காணிகளை விசாலப்படுத்திக் கொள்வதற்குத் துடிக்கும் குறித்த பிரதேசத்தில் வசிக்கும் சில நபர்களையும் நோக்கியே அவர்கள் குற்றம்சாட்டினர். இந்த சட்டவிரோத மதிலினால் வீதிகள் குறுகி, மழை நீர் வழிந்தோடக்கூடிய வடிகான்கள் மூடப்பட்டு சின்னஞ்சிறு மாணவன் தனது உயிரைத் தியாகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேசத்தில் வாழும் பலரும் குற்றம்சாட்டினர்.

நகரை அண்மித்த அனைத்து கட்டிட நிர்மாணங்களும் அனர்த்த முகாமைத்துவ கொள்கைகளுக்கு அமைவாகவே அமைக்கப்பட வேண்டும் என்ற போதிலும், அதற்கு அப்பால் சென்று அரசியல் நெருக்கங்கள், இலஞ்சம், பணக் கொடுக்கல் வாங்கல் போன்றவற்றிற்கு அடிபணிந்து செயற்படும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் இன்று சஜிதவின் மரணத்திற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது தொடர்பில் அனேக சமூக செயற்பாட்டாளர்கள், கற்றவர்கள் என பலரும் சமூக வளைத்தளங்களில் பல்வேறு கருத்துக்களை பதிவிட்டிருந்தார்கள். இது அவ்வாறான கருத்துக்களில் ஒன்றாகும்,

"வீதிகளைப் போடுகிறார்கள். வடிகால்களை அமைப்பதில்லை.... வடிகால்களை நிர்மாணிக்கின்றார்கள், covering slab இல்லை. covering slab போட்டால் அவை உறுதியானதாக இல்லை.

TO க்களை இப்பிரதேசத்திலேயே காண முடியாது. அனர்த்தங்கள் இடம்பெற்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் தொலைபேசி அழைப்புக்கும் பதில் தருவதில்லை. இதேபோன்று மற்றொரு பெரும் துயரம் இடம்பெறுவதற்கு முன்னர் செயலில் இறங்க வேண்டும்..."

மகனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத சஜிதவின் தாய் அழுது புரண்டார். அழுது புலம்பிய தந்தையைப் பார்த்த அங்கிருந்த அனைவரின் கண்களும் கண்ணீரால் நிரம்பியது.

குமாரி திசாநாயக்கா ...
தமிழில்: எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை
முதலீட்டு முன்மொழிவுகளுக்கான அழைப்பு
விவசாயம் சார்ந்த களஞ்சியசாலை மற்றும் கைத்தொழில் செயற்றிட்டம்
தம்புள்ள நகரம்



நிர்மாணம் - உரிமைத்துவம் - செயற்படுத்துதல் - ஒப்படைத்தல் அடிப்படையில் விவசாயம் சார்ந்த களஞ்சியசாலை மற்றும் கைத்தொழில் செயற்றிட்டமொன்றை நிர்மாணிப்பதற்கு காணித் துண்டொன்றை குத்தகைக்கு வழங்குவதற்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் / அபிவிருத்தியாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| குத்தகைக் காலம் | : 30 வருடங்கள் |
| காணியின் அளவு | : 0A 3R 17.7P (137.7 பேர்ச்) |
| அடிப்படை விலை ரூபா | : 40,000,000.00 |
| பிணை முறி ரூபா | : 800,000.00 |

- இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் முதலீட்டாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் தொடர்புடைய மேலதிக தகவல்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பிரேரணைகள் கோரும் ஆவணமொன்றை பெற்றுக்கொள்வதற்கு பெறுமதி சேர் வரி (VAT) உள்ளடக்கிய மீளளிக்கப்படாத 100,000.00 ரூபா தொகையை பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து 2022 செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 9வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் 2022 ஒக்டோபர் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
- அபிவிருத்திப் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளல் 2022 நவம்பர் மாதம் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். அபிவிருத்தி முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளல் நிறைவுற்றதன் பின் கிடைக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகள் பத்தரமுல்ல ''சுஹுருபாய'', 17ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அவர்களின் அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
தொடர்புகொள்ளவும்:
பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி),
ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகார சபை,
8ஆம் மாடி, செத்சிறிபாய, கட்டம் 1,
பத்தரமுல்ல.

**தொலைபேசி:**
011-2875921, 011-3611950,
070-2988625 மற்றும்
011-2875916-20
நீடிப்பு 2960-2967
தொலைநகல் இல. 011-2875900
மின்னஞ்சல் முகவரி:
directorred@uda.gov.lk
இணைய தளம்: www.uda.gov.lk

**தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணைக்கக் குழு, 17ஆம் மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 'சுஹுருபாய', பத்தரமுல்ல.**

## CCCLine Bikeathon 2022 இம்மாதம் 4 முதல் 12 வரை

CCCLine 1333 எனும் கட்டணமில்லா தொலைபேசி சேவையானது CCC அறக்கட்டளையின் திட்டமாகும். இது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வருகின்றது. இலங்கை மக்களுக்கு இச் சேவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் CCCLine க்கு நிதி திரட்டுவதற்கும் வருடம் தோறும் Bikeathon சைக்கிள் சவாரி ஏற்பாடு செய்யப்படுகின்றது. Bikeathon இலங்கை முழுவதும் 1333 கிலோமீட்டரை உள்ளடக்கிய சவாரியாகும். உலக தற்கொலை தடுப்பு தினமான செப்டம்பர் 10 ஆம் திகதி இச்சவாரி முடிவடைகின்றது. சவாரியின் போது இலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் சைக்கிளோட்டிகள் CCCLine சேவை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி நிதி திரட்டுவார்கள்.

1333 எனும் இலக்கத்துக்கு கட்டணமில்லாமல் பகல் வேளையில் எந்நேரத்திலும் எந்த தொலைபேசியிலிருந்தும் அழைப்பினை ஏற்படுத்தலாம். பயிற்சி பெற்ற வளவாளர்கள் அழைப்பாளர்களுக்கு உதவுவர்.

CCCLine வருடாந்த பராமரிப்புக்கு உதவும் Bikeathon சவாரி இந்த ஆண்டு தற்போதைய சூழலில் மிக குறைந்த பங்கேற்பாளர்களுடன் இடம்பெறும்.



பாடகர் கலைக்கமலின் 56ஆவது கீத்ராத் நிகழ்ச்சி நேற்று முன்தினம் கொழும்பு 07 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.

## இனிய நந்தவனம் வெள்ளிவிழா மலரின் அறிமுக நிகழ்வு

இனிய நந்தவனம் வெள்ளிவிழாமலரின் அறிமுக நிகழ்வு இலங்கையில் இடம்பெறவுள்ளது. இவ்விழா எதிர்வரும் 2022.09.18 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ளது. ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமையில் இந்நிகழ்வு நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக தமிழக தொழிலதிபர் முகம்மது அபுபக்கர் சித்தீக், வீரகேசரி வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே.ஆர்.பி. ஹரன், தினகரன், தினகரன் வாரம ஞ்சரியின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவர், தமிழன் நாளிதழ் வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் எஸ். சிவராஜா,வீரகேசரி செய்திப் பிரிவுப் பணிப்பாளர் ஆர். பிரபாகரன், தினக்குரல் செய்தி ஆசிரியர் வே. கணேசன், தமிழ்மிரர் பிரதம ஆசிரியர் கனகராஜா, இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ் சேவைப் பணிப்பாளர் இரத்தினசிங்கம் கணபதிப்பிள்ளை ஆகியோர் இந் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்துகொள்வார்கள்.



செல்வி இனியவள் காண்டீபன் தமிழ்வாழ்த்துப்பாட, கொழும்பு தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆழ்வார் கந்தசாமி வரவேற்புரையாற்ற, ஞானம் பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன் தலைமையுரையாற்றுவார்.

கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா, கவிஞரும் எழுத்தாளருமான முருகன் சிவலிங்கம் ஆகியோர் சிறப்பு விந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

எழுத்தாளரும் ஆய்வாளரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவருமான முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

திருமதி ரஞ்சனி சுப்பிரமணியம் நூல் விமர்சன உரையாற்ற, இனியநந்தவனம் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் ஏற்புரையையும் நன்றியுரையையும் ஆற்றுவார்.

கலைஞானச்சுடர் சுபாசினி பிரணவன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார். கலாபூஷணம் பொன்னுத்துரை நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பு செய்வார்.




# சர்வகட்சி அரசு அமைக்கும் கலந்துரையாடலில் சில கட்சிகளிடம் நேர்மைத்தன்மை கிடையாது!

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி கூறுகின்றார்

## தேர்தலுக்கு நாம் அஞ்சவில்லை; எவ்வேளையிலும் தேர்தலை சந்திக்க தயார்!

## இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் தேவையற்ற நன்மை–களைப் பெறுவதற்கு சிலர் முயற்சி!

**சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான கலந்துரையாடல்களில் சில கட்சிகள் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பி தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து அவர் எம்முடன் விடயங்க ளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவி–னால் அண்மையில் சமர்ப்பிக்கப்ப ட்ட இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு சாத்தியமான நன்மைகளை வழங்க ஜனாதிபதி முயற்சித்துள்ளார். இது இடைக்கால வரவுசெலவுத் திட்டம். எனவே, இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. எவ்வாறாயினும், தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு மக்களுக்கு உதவக் கூடிய அதிகபட்ச நன்மைகளை வழங்குவதற்கு ஜனாதிபதி முயற்சித்ததை நாம் பாராட்டுகிறோம்

**கே: பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் கட்சியின் பதவிகளில் மாற்றம் இருக்கும் என்று கூறியிருந்தீர்கள். விளக்க முடியுமா?**

பதில்: ஆம், பொதுஜன பெரமுன கட்சியின் யாப்பின்படி மிகவும் குறைவான நிர்வாகிகளே உள்ளனர். இப்போது அதன் யாப்பில் திருத்தம் செய்துள்ளோம். முன்பை விட மூன்று மடங்கு கட்சி பதவிகள் இருக்கும். எங்கள் கட்சி மாநாட்டில், கண்டிப்பாக நிறைய புதியவர்கள் பதவிக்கு வருவார்கள்.

**கே: அனைத்துக் கட்சி அரசாங்க–த்தை அமைப்பதற்கான பலசுற்று விவாதங்களுக்குப் பிறகும் இணக்கப்பாடொ–ன்றுக்கு வரமுடியாதுள்ளது. இதற்குக் காரணம் என்ன?**

பதில்: ஒரு கட்சியாக, நாங்கள் ஜனாதிபதியைச் சந்தித்து சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளோம். இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு சில கட்சிகள் நிறைவேற்ற முடியாத பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்க முயல்கின்றன. வெளிப்படையாக, நேரடியாகச் சொல்லாமல் தவிர்க்கப் பார்க்கிறார்கள். அவர்களில் எவருக்கும் கலந்துரையாடல்களில் இணைந்து கொள்வதில் உண்மையான எண்ணம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஜே.வி.பி மட்டும் சர்வகட்சி அரசாங்கத்தில் சேர விரும்பவில்லையென நேரடியாகக் கூறியுள்ளது. ஆனால் மற்றைய கட்சிகள் தாங்கள் இணைவதற்கு தயாராக இருப்பதாகக் கூறி, பின்னர் பல்வேறு நிபந்தனைகளை முன்வைக்கின்றன. இதுதான் முக்கிய பிரச்சினை என்று நினைக்கிறேன்.

**கே: சர்வகட்சி அரசாங்கம் மேலும் தாம–தமானால், உடனடியாக இராஜாங்க அமைச்சர்களை நியமிக்குமாறு பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள் குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: உடனடியாக இராஜாங்க அமைச்சர்களை நியமிக்க வேண்டாம் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர். நாங்கள் சொன்னது விஷயங்கள் தாமதமாகி வருகின்றன, நிலையான அரசாங்கம் இருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம். ஆட்சி அமைக்கும் வரை யாரும் எதுவும் செய்ய விரும்பவில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு என்ன மாதிரியான அரசு மற்றும் கொள்கைகள் இருக்கப் போகின்றன என்பதை அவர்கள் பார்க்க விரும்புகிறார்கள். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் வெளிநாடுகள் போன்ற சர்வதேச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது அரசாங்கம் ஸ்திரமான நிலையில் உள்ளதா என்பதைப் பார்ப்பார்கள். இந்தச் சூழ்நிலையில், அரசாங்கத்தின் நலன் கருதி, அரசாங்கம் ஸ்திரமாக இருப்பதைக் காட்ட குறைந்த பட்சம் சில இராஜாங்க அமைச்சர்களையாவது நியமிப்பது நல்லது.

**கே: பாராளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வேட்புமனுவை ஆதரிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒருமனதாகத் தீர்மானித்தது எது?**


பதில்: சில காரணங்கள் இருந்தன. நாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சர்வகட்சி அரசாங்கமே நாட்டுக்கு சிறந்த தீர்வாக அமையும் என நினைத்தோம். சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எங்கள் கட்சியால் பரிந்துரைக்கப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார்.



சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு வசதியாகவே தான் இராஜினாமாச் செய்வதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு ஆசனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய ரணில் விக்கிரமசிங்க சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பார் என எண்ணினோம்.

மறுபுறம், அவருக்கு ஒரு தலைவராக பணியாற்ற நிறைய அனுபவம் இருந்தது. இந்த இரண்டு அம்சங்களையும் கருத்தில் கொண்ட பிறகு, சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கக் கூடிய சிறந்த நபர் அவரென்று நாங்கள் நினைத்தோம். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து யாரேனும் இருந்தால், அவர் அமைச்சரவையில் தனக்கெனத் தனிநபர்களை வைக்க முயற்சிப்பார். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஒருவரானால், அவர் தனது பெரும்பான்மையான உறுப்பினர்களை அமைச்சரவையில் வைத்திருக்க விரும்புகிறார். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்தப் பிரச்சினை இல்லை. அவர் அதிகபட்சமாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அமைச்சரவைக்கு ஒருவர் மட்டுமே. எனவே இந்தப் பணியைச் சரியாக நிறைவேற்றக் கூடியவர் அவர்.

*(16ஆம் பக்கம் பார்க்க)*




# நஞ்சற்ற விவசாயத்தை நோக்கிய பயணமே எதிர்காலத்துக்கு சிறந்தது

இந்தியாவின் வடக்குப் பிரதேசத்தில் சிக்கிம் பிராந்தியம் அமைந்துள்ளது. பூட்டான், திபெத் மற்றும் நேபாளத்துக்கு எல்லையாக அமைந்துள்ள சிக்கிம் இயற்கையிலேயே அழகு நிரம்பிய சிறந்த சூழல் தொகுதியை கொண்ட பிரதேசமாகும். அதன் ஒரு பகுதி இமயமலைக்கும் எல்லையாக உள்ளது.

அப்பிரதேசம் இரசாயனத் திரவியங்களின் பாவனை இல்லாத சிறந்த உணவு உற்பத்தியுடன் கூடிய உலகின் முதலாவது பிராந்தியமாக வரலாற்றில் இணைந்து கொண்டுள்ளது. குற்றங்களற்ற சிறந்த அரசாங்கத்தைக் கொண்ட பிரதேசமாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

1960களில் இந்தியாவில் பசுமைப் புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அதிகரித்த மக்கள் தொகைக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதே அதன் ஒரே நோக்கமாகக் காணப்பட்டது. அதுவரை காலமும் சாதாரண சம்பிரதாய விவசாயத்தை மேற்கொண்டு வந்த விவசாயிகள், அதிக அறுவடையைப் பெறுவதற்காக உரம் மற்றும் இரசாயன திரவியங்களைப் பாவிப்பதற்கு தூண்டப்பட்டார்கள். நவீன இயந்திரங்களையும் பாவிக்கத் தொடங்கினார்கள்.

மீண்டும் திரும்பிப் பார்த்த இந்திய சூழலியலாளர்கள் அதிக அறுவடையை வழங்கும், விரைவில் உற்பத்தி செய்யும் முறைகள் அந்நாட்டின் மண், நீர் மற்றும் சூழல் தொகுதியை அசாதாரண பிறழ்வுகளுக்கு உட்படுத்தியுள்ளதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். அவ்வாறான வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் சிக்கிம் பிராந்தியம் அமைதியாக இலக்குடன் கூடிய பயணம் ஒன்றை பயணித்துள்ளது.

சிக்கிம் பிராந்திய ஆட்சியாளர்கள் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தீர்மானம் ஒன்றை எடுத்தார்கள். விவசாய நடவடிக்கைகளுக்காக பிராந்தியத்திற்குள் எவ்வித இரசாயன திரவியங்களையும் கொண்டு வரவோ அல்லது பயன்படுத்தவோ தடை செய்தார்கள். அங்கு விவசாயிகள் மண்ணை வளப்படுத்தும் முறைகளைப் பின்பற்றினார்கள். கொம்போஸ்ட்டை உற்பத்தி செய்தார்கள். விலங்கு மற்றும் தாவரப் பகுதிகளை மண்ணில் கலந்ததோடு, நுண்ணங்கிகளின் வளர்ச்சிக்கும்அது வழிவகுத்தது. இயற்கை விவசாயத்திற்கு பொருத்தமாக நிலத்தை மாற்றிக் கொண்டுள்ளார்கள்.

சில இடங்களில் விவசாயிகள் பசுமை இல்லங்களை அமைத்துள்ளதோடு, அதன் உள்ளே சிறிய உபகரணங்களைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். ஆரம்ப காலத்தில் அறுவடையில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் கையில் கிடைத்த வருமானம் குறைந்துள்ளது. அங்கு சிக்கிம் பிராந்திய ஆட்சியாளர்கள் விவசாயத்துக்கு நிவாரண முறை ஒன்றை அறிமுகம் செய்துள்ளார்கள். சிக்கிம் பிராந்தியத்தின் பெறுமதி உலகம் பூராவும் பிரபல்யமானதோடு, உலகின் பல நாடுகளில் இருந்தும் இயற்கை விவசாயம் மற்றும் அங்கு சமைக்கப்படும் உணவுகளை சுவைப்பதற்காக உல்லாசப் பயணிகள் வருகை தருகின்றார்கள்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்தி அதிக அறுவடையைப் பெறும் விவசாய நடவடிக்கைகளுக்கு பழகிப் போயிருந்த சிக்கிம் விவசாயிகளின் எண்ணங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது இலகுவாக இருக்கவில்லை. முதலாவது நடவடிக்கையாக உரம் மற்றும் இரசாயனத் திரவியங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட நிவாரணம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக குறைக்கப்பட்டதோடு, 2014 இல் இருந்து நஞ்சுடன் கூடிய இரசாயன மற்றும் உர விற்பனை மற்றும் விலைக்கு வாங்கலை தடை செய்ய சட்டம் இயற்றப்பட்டது. அதற்கு இரண்டு வருடங்களுக்குப் பின்னர் இயற்கை விவசாய பிராந்தியமாக சிக்கிம் பிரகடனப்படுத்தப்பட்டதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

இந்திய விவசாய அறிக்கைகள் குறிப்பிடுவது போன்று 2020 மார்ச் இறுதியில் நாட்டில் 2.78 மில்லியன் ஹெக்டயர் காணியில் இயற்கை விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 12 பிராந்தியங்களில் இயற்கை விவசாயத்துக்கான சான்றிதழை வழங்கும் அரச நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு சரியான தரத்துடன் கூடிய இயற்கை விவசாயத்திற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய, ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரா பிராந்தியங்களில் மொத்த இயற்கை விவசாய நடவடிக்கைகளில் நூற்றுக்கு 50% உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு மாத்திரமல்ல ஆயிரக்கணக்கான அரசு அல்லாத அமைப்புகள், தனியார் பிரிவுத் திட்டங்கள் இயற்கை விவசாய நடவடிக்கைகளுக்காக முன்வந்துள்ளன. தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்களை மேற்கொள்கின்றன. கோசலம், கோமயம் என்பவற்றைக் கலந்து உரத்தைத் தயாரிக்கும் விவசாயிகள் அதன் மூலம் உயர்ந்த பலனை பெற்றுக் கொள்கிறார்கள். இயற்கைக்கு இசைவான பக்டீரியாக்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பல உள்ளன. அவர்கள் திரவமாக உற்பத்தி செய்யும் கரைசலை நீருடன் கலந்து விவசாயிகள் விவசாயத்துக்கு பயன்படுத்துகின்றார்கள்.

இலங்கையிலும் விவசாய அமைப்புகள் மற்றும் சூழலை நேசிக்கும் விவசாயம் பற்றிய அர்ப்பணிப்புடன் செயல்படும் அநேகமானோர் இதற்கு சமமான முறைகளை செயல்படுத்தி வருகின்றார்கள். பல மாகாணங்களிலும் இயற்கை விவசாயம் இடம் பெறுகின்றது. இந்தியா, ஜப்பான், இந்தோனேசியா போன்ற நாடுகளின் அனுபவங்களைப் பெற்றுள்ளதோடு இலங்கைக்கே உரிய பழைய விவசாய முறைகளை மீண்டும் கொண்டு வந்து ஆய்வுகளும் மேற்கொள்ளப் படுகின்றன. சூழலுக்கு இசைவான பக்டீரியாக்களை உற்பத்தி செய்தல், மண்புழு போன்ற உயிரினங்களை இனப்பெருக்கம் செய்தல், பசுக்கள் உள்ளிட்ட கால்நடை வளர்ப்புடன் கூடிய இணைந்த விவசாயம் மற்றும் தேனீ வளர்ப்பு மூலம் மகரந்தச் சேர்க்கையை மேற்கொண்டு அறுவடையை அதிகரித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுதல் போன்ற முறைகளை பயன்படுத்துகிறார்கள்.

இரசாயன உரம் தேவையான பாரிய அளவில் செய்யப்படும் உற்பத்திகளுக்கு இடமளிப்பதோடு, இயற்கை சூழல் தொகுதியில் இரசாயன உரமற்ற விவசாயத்துக்கு வேறான சந்தர்ப்பம் வழங்குவது நல்லது. நடைமுறையை பலாத்காரம் ஆக்குவது பொருத்தமற்றது. ஒன்று அல்லது பல வழிகளில் நிவாரணம் பெற்றுக் கொடுத்து விவசாயத்தில் பிறழ்வை ஏற்படுத்துவது மிகவும் பாதிப்பான விடயம் என்பதை குறிப்பிட வேண்டியுள்ளது. இலங்கையின் விவசாய முறைகளுக்கு வரலாறு உண்டு. பயிர்ச்செய்கை முறையுடன் இணைந்த சூழலுக்கு இசைவான விவசாயம் நாட்டில் காணப்பட்டது. அவற்றின் அழிவுக்கு வழிகோலிய விடயங்கள் பற்றி திரும்பிப் பார்ப்பதற்கு பதிலாக எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நியாயமான நடவடிக்கைகள் குறித்து வல்லுனர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவிலும் இலங்கையிலும் விவசாய மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் சூழலுடன் இணைந்த முறையாக காணப்பட்டன. பசு ஒரு வளமாக கருதப்பட்டது. விவசாயத்தை இலகுபடுத்துவதோடு உரத்தைப் பெற்றுக் கொடுக்கும் வளமாக கருதப்பட்டது. இன்றும் பசு இந்தியாவில் உயர்வாக மதிக்கப்படுகின்றது. பால் உற்பத்திக்காக பசுக்களை வளர்க்கும் பிராந்தியங்களில் விவசாய உற்பத்திகளுக்காக இரசாயன உரத்தை பாவிப்பது குறைவாகும் என இந்திய அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்தியா 2005 ஆம் ஆண்டிலிருந்து இரசாயன உரப் பாவனையற்ற தேசிய விவசாய கொள்கை ஒன்றை செயல்படுத்தி வருகின்றது. விவசாயத்தை மேம்படுத்துவதற்கான முடிவுகளை எடுப்பதோடு இயற்கையாக மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கைக்கும் உதவிகளை வழங்குகின்றது. பாரிய அளவிலான அமைப்புகள் நெல், உருளைக்கிழங்கு, சோளம்,மரக்கறி மற்றும் பழங்களை இரசாயன பாவனையின்றி உற்பத்தி செய்ய ஊக்குவிக்கின்றன.

அவர்களுடன் இலட்சக்கணக்கான விவசாயிகள் இணைந்துள்ளமையை குறிப்பிடலாம். சேதன மற்றும் அசேதன விவசாய நடவடிக்கைகளில் சமநிலை முக்கியமாகும். ஒரு முனைக்கு மாத்திரம் அதிக அவதானத்தை செலுத்துவதற்குப் பதிலாக விவசாயக் கொள்கைகள் மற்றும் ஒழுங்கமைப்புகளை தயாரித்து அனைவருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கல் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். இரசாயன உரத்தை பாவிக்காமல் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கு விசேட கேள்விகள் உள்ளன. சரியான முறை மற்றும் கொள்கைகளைப் பின்பற்றினால் இலங்கையின் ஏற்றுமதி விவசாயத்திற்கும் அதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

සතොස

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## 2022/23 ஆம் ஆண்டுக்கான ஒன்றிணைந்த சில்லறை சேவை வழங்குனர்களை பதிவு செய்தல்

லங்கா சதொச லிமிடட் நிறுவனத் தலைவரினால், **ஒன்றிணைந்த சில்லறை சேவை வழங்குவதற்கு விரும்புகின்ற வர்த்தக அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்காக விற்பனையகங்களில் இட வசதி வழங்குதற்காக** அவ்வாறான சேவை வழங்குனர்கள் பதிவு செய்யப்படும்.

பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் சில்லறை வர்த்தக சேவைகள்;

1. மருந்தகங்கள்
2. பேக்கரி
3. மீன் மற்றும்/ அல்லது இறைச்சி/ முட்டை விற்பனை காட்சியரங்கு
4. மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை காட்சியரங்கு
5. வேறு பொருத்தமான வர்த்தகம்

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரர்கள் **லங்கா சதொச** இணையதளத்தில் **(www.lankasathosa.org)** விண்ணப்பப் படிவம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இலவசமாக தரவிறக்கம் செய்ய முடியும், இல்லையேல் 2,500 ரூபாவை செலுத்தி **லங்கா சதொச தலைமை அலுவலகத்தில்** சந்தைப்படுத்தல் பிரிவில் இருந்து (5ஆவது மாடி) பெற்றுக்கொள்ள முடியும்.

முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை தேவையான அனைத்து ஆவணங்களுடன் பதிவுத் தபாலில் **தலைவர், லங்கா சதொச லிமிடட், அவதானத்துக்கு - DGM (சந்தைப்படுத்தல்), இலக்கம் 24, சதொச செயலக அலுவலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். பதிவுப் படிவத்தை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“2022/23 ஆம் ஆண்டுக்கான ஒன்றிணைந்த சில்லறை சேவை வழங்குனர்களை பதிவு செய்தல்”** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
முகாமையாளர் சந்தைப்படுத்தல் - 070 36 11 524

தலைவர்,
லங்கா சதொச லிமிடட், அவதானத்துக்கு - DGM (சந்தைப்படுத்தல்)
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

## சம்மாந்துறை ஆஸ்பத்திரி OPD பகுதியில் யானை நுழையவில்லை

### செய்திக்கு வைத்தியசாலை நிர்வாகம் மறுப்பு

எமது மின்னிதழ் பத்திரிகையில் நேற்று வெளியாகியுள்ள 'சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் காட்டு யானை நுழைந்த' செய்தியை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை நிர்வாகம் முற்றாக மறுத்துள்ளது.

அச் செய்தியின் உண்மைத் தன்மையை ஆராயாமல் எமது பிராந்திய ஊடகவியலாளர் அதை அனுப்பி வைத்துள்ளார். அச் செய்தியே வெளிவந்துள்ளது.

அந்த செய்தியை எமது இரு பிராந்திய ஊடகவியலாளர்களும் அனுப்பியுள்ளனர். ஆனால் வைத்தியசாலை வட்டாரங்கள் அவ்வாறான ஒரு சம்பவம் நடக்கவில்லை என உறுதிப்படுத்தியுள்ளது.

இச் செய்தியால் ஏற்பட்ட குழப்பத்திற்கு வருந்துகிறோம்.

ஆர்

<u>இலங்கை பெருந்தோட்ட சேவையாளர்களின் கூட்டு ஒப்பந்தம்;</u>

# முதலாளிமார்களின் கோரிக்கைக்கு மறுப்பு தொழிற்சங்க நடவடிக்கைக்கு முஸ்தீபு



இலங்கை பெருந்தோட்ட சேவையாளர்களின் 2022/2025 கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தையில் முதலாளிமார் சம்மேளனம் முன்வைத்த சம்பள உயர்வை ஏற்றுக் கொள்ள மறுத்த இலங்கை தோட்ட சேவையாளர்கள் சங்கம் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் வகையில் சம்பள அதிகரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.நூற்றுக்கு 70 வீதம் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.இல்லாத விடத்து நாடு தழுவிய தொழிற் சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சங்கத்தின் தலைவர் வன்னியாராச்சி,பொதுச் செயலாளர் ரொபட் பிரன்சிஸ், உதவித் தலைவர் செல்வராஜா ஆகியோர் கூட்டாக செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

அதில் அவர் மேலும் கூறியதாவது,

இலங்கை பெருந்தோட்ட சேவையாளர்களின் மூன்று வருடத்துக்கான கூட்டு ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில் பெருந்தோட்ட சேவையாளர்களின் சம்பளம் மற்றும் இதர சேவைகள் தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தில் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம்,இலங்கை முதலாளிமார் சம்மேளனம் ஆகியன கைச்சாத்திடுகின்றன.

செப்டம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் புதிய கூட்டு ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திட வேண்டும்.ஆனால் ஒக்டோபர் 01 ஆம் திகதி வரை ஒப்பந்தம் அமுலில் இருக்கும் என தெரிவித்தனர். சங்கத்தின் உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் மற்றும் நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளை கருத்தில் கொண்டே இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம்,இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துக்கிடையில் இரு கலந்துரையாடல்கள் இராஜகியவிலுள்ள இலங்கை முதலாளிமார் சம்மேளன தலைமையகத்தில் நடைபெற்றுள்ளது.அக் கலந்துரையாடல்களில் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம், முதலாளிமார் சம்மேளனம் முன்வைத்த சம்பள அதிகரிப்பு வீதத்துக்கு மறுத்ததையடுத்து பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.அத்தோடு இன்றைய பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு நியாயமான சம்பள உயர்வை வழங்குமாறும் சங்கம் கோரியுள்ளது.

## அல்ஹிக்மா வித்தியாலயத்தின் பெயர் மாற்றம்

க/அல்ஹிக்மா வித்தியாலயம் என 2013ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை, 2022 ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி முதல் க/எனசல்கொல்ல ஆரம்ப பாடசாலை என உத்தியோகபூர்வமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாண கல்வி திணைக்களத்தினால் இந்த பெயர் மாற்றம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### வெளிநாடுகளிலிருந்து வரும்...

அமெரிக்க டொலர்களாகும். இதன்படி ஜனவரி, ஜூலை 2022க்கான மொத்த பெறுமதி 1,889.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்நிலையில் 2022 ஆகஸ்டில் உத்தியோகபூர்வ வழிகளில் இலங்கை பணியாளர்கள் அனுப்பிய பணம் 325.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இதனடிப்படையில் 2022 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான காலப் பகுதியில் அனுப்பிய பணத்தின் மொத்த பெறுமதி 2,214.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை 2022 ஜூலையில் அதிகாரப்பூர்வ வழிகள் மூலம் அனுப்பப்பட்ட தொழிலாளர்களின் பணம் 2021 இன் தொடர்புடைய காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 50% குறைந்துள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

### தாயும் மகளும் கூரிய...

கண்டறியப்படவில்லை.

எச்.எம்.ரன்மெனிக்கா (85) ஆர்.எம்.ஜெயவதி (55) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். ஆர்.எம். மிசிநோனா என்பவர் (60) காயமடைந்துள்ளார்.

### யாழ். சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில்...

தங்க நகைகளைப் பறிகொடுத்த 18 பேர் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

பல்லாயிரக் கணக்கான அடியார்கள் தேர்த்திருவிழாவில் பங்கேற்றனர். இவர்களிடம் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். தங்க நகைகளைப் பறிகொடுத்த 18 பேர் வழங்கிய முறைப்பாடுகளின் படி சுமார் 70 தங்கப் பவுண்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். தீர்த்தத் திருவிழா என்பதனால் அதிகளவான அடியார்கள் பங்கேற்றனர்.

### நாம் எதிர்பார்க்காத வகையில்...

பெரமுனவின் முக்கிய பதவிகளை மறுசீரமைக்க கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்து, அவரை கட்சியிலிருந்து நீக்குமாறு பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கட்சியின் செயற்குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு புதிய இளைஞர்,யுவதிகளை இணைத்துக் கொள்ளும் பொறுப்பு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்க்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நாமல் ராஜபக்க்ஷ தலைமையில் எதிர்வரும் நாட்களில் நாடுமுழுவதும் கட்சிக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

அத்துடன் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபிக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் தரப்பினரை மீண்டும் பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைக்கும் முன்னெடுப்புக்களை பொதுஜன பெரமுனவின் ஒரு தரப்பினர் மேற்கொண்டுள்ளனர்.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு முன்னர் கட்சியை முழுமையாக மறுசீரமைக்க பொதுஜன பெரமுன கவனம் செலுத்தியுள்ளது. பொதுஜன பெரமுனவின் கீழ்மட்ட உறுப்பினர்களை ஒன்றிணைத்து மாதாந்தம் கூட்டத்தை நடத்தவும் கட்சி மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### லஹிரு வீரசேகர...

தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மருதானை பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை அவர் கைது செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 30 ஆம் திகதி மருதானை – எல்பின்ஸ்டன் மண்டபமருகே நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக கூறியே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை அவர் நேற்று ரூ.2 இலட்சம் கொண்ட இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

### கோடிக்கணக்கில்...

சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. நாடு முழுவதிலுமுள்ள உண்டியல் மற்றும் ஹவாலா ஆகிய சட்டவிரோத பணப் பரிமாற்ற முறைமைகள் தொடர்பில் மத்திய வங்கி மற்றும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மடகஸ்காரிலிருந்து வாகனங்களை இறக்குமதி செய்வது என்ற போர்வையில் உண்டியல் கடத்தல்காரர்களால் இந்தப் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த கடத்தல் தொடர்பில் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி கீதல் தலைமையில் விசேட குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

### இரண்டு நாள் விஜயமாக இலங்கை...

அதிகாரிகள், தனியார்துறைசார் பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் தற்போதைய நெருக்கடியின் விளைவாகப் பாதிக்கப்பட்டோரை அவர் சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கும் அமெரிக்கா எவ்வாறு உதவமுடியும் என்பது குறித்தும் சமந்தா பவர், கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளார்.

இதேவேளை ஒன்றிணைந்ததும், சுபீட்சமானதும், பாதுகாப்பானதுமான சுதந்திர இந்திய – பசுபிக் பிராந்தியத்தைக் கட்டியெழுப்புவதற்கான அமெரிக்காவின் பூரண ஆதரவையும் அவர் இதன்போது உறுதிப்படுத்துவாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரிட்டிஷ் மகாராணியின் இறுதிக்...

நாட்டிலுள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்கள் தேசிய கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட்டிருந்தன.

பிரிட்டிஷ் மகாராணியின் இழப்பையடுத்து கடந்த 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் 02 நிமிட மௌனாஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதேவேளை நேற்று சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக இங்கிலாந்து மன்னராக பதவியேற்ற 03 ஆவது சார்ள்ஸ் மன்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில்,

மக்களுக்கு சேவையாற்ற தமது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்தவர் ராணி எலிசபெத் என, அவர் தெரிவித்துள்ளார்.

அவரது இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வரும் அதே வேளை, புதிய மன்னராக சார்ள்ஸ் நேற்று பதவியேற்றார்.

லண்டனில் உள்ள செயிண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் நேற்று முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கிய அக்சசன் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 700 உறுப்பினர்களைக் கொண்ட பேரவையில் 200 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர்களிடையே, மூன்றாம் சார்ள்ஸ், மன்னராகப் பிரகடனப்படுத்தப்பட்டதும், அவர் உறுதிமொழி ஏற்று பதவியேற்றுக் கொண்டார்.

சார்ள்ஸின் மனைவி கமிலாவுக்கு ராணி பட்டமும், மகன் வில்லியம்ஸுக்கு இளவரசர் பட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

### வாசகர் கவனத்திற்கு...

தவிர்க்க முடியாத காரணங்களால் வாரமஞ்சரியில் வாரந்தோறும் வெளிவரும் கீழ்க்காணும் தொடர்கள் இவ்வாரம் வெளிவரமாட்டாது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.













### கேகாலையில் கோர விபத்து...

இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து கண்டி நோக்கி சென்ற வேன் எதிரே கேகாலையிலிருந்து நாங்கல்ல நோக்கி வந்த 03 மோட்டார் சைக்கிள்களுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

03 மோட்டார் சைக்கிள்களிலும் ஐந்து இளைஞர்கள் பயணித்துள்ளனர். இவர்களுள் மூவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன், இருவர் காயமடைந்து கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். உயிரிழந்த 03 இளைஞர்களும் 27 வயது உடையவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலக்கம் 408 அப்துல் காதர் மாவத்தை நாங்கல்ல, துல்ஹிரிய முகவரியைச் சேர்ந்த முகம்மது மிஹ்லார் முஹம்மது மிப்ராஸ்.

பெரலிவத்த, மங்கெதர, துல்ஹிரிய முகவரியைச் சேர்ந்த ரகுமான் முகமட் ரஹீம், நாங்கல்லயைச் சேர்ந்த மல்கான் அபுல் ஹஸன் முஹம்மது மனாஸிர் கான் ஆகிய மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

வேனின் சாரதி கொலன்னாவை வீதி தெமட்டகொடை கொழும்பு என்ற முகவரியைச் சேர்ந்த அப்துல் காதர் அப்துர் ரஹ்மான் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### பெருந்தோட்டத்துறை மக்கள்...

அடிப்படையில் அரசியல் தொழிற்சங்க வேறுபாடுகளின்றி இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கு மலையகத் தலைவர்கள் முன்வந்துள்ளனர்.

பேராசிரியர் எஸ். விஜயசந்திரனின் அழைப்பின் பேரில் கொழும்பு 'கெப்ரி' தனியார் விடுதியில் கடந்த 08 ஆம் திகதி நடைபெற்ற பூர்வாங்க கலந்துரையாடலில் சகல அரசியல் கட்சிகளையும் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், வே. இராதாகிருஷ்ணன், பழனி திம்பரம், வடிவேல் சுரேஷ், ஜீவன் தொண்டமான், வேலு குமார், எம் உதயா மற்றும் பேராசிரியர் சந்திரபோஸ், பெ. முத்துலிங்கம் உள்ளிட்டோருடன் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், செயலாளர் நாயகம் எஸ். விஜயசந்திரன், முன்னாள் எம்.பி மாரிமுத்து, தொழிலதிபர் எஸ். மணிமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

மலையக மக்களின் அரசியல் உரிமைகள், பொருளாதாரம், கூட்டு ஒப்பந்தம் மற்றும் ஏனைய சமூக நிலைமைகளின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கில் அந்தந்த துறைகள் சார்ந்த நிபுணர்கள், சிவில் செயற்பாட்டாளர்களின் குழுக்களை அமைத்து செயற்படுவதற்கும் இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

### புதிய இராஜாங்க அமைச்சுகளுக்கு..

04. இராஜாங்க அமைச்சர்களுடைய பணியாளர் குழாமில் பிரத்தியேகச் செயலாளருக்கு மட்டுமே உத்தியோகபூர்வ வாகன வசதி வழங்கப்படும். பிரத்தியேகச் செயலாளரின் உத்தியோகபூர்வ சாரதியின் மேலதிக நேரம் மற்றும் இதரக் கொடுப்பனவுகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் படி கையாளப்பட வேண்டும்.

05. பணியாளர் குழாமின் ஏனைய உறுப்பினர்களுக்காக 02 வாகனங்கள் மட்டுமே ஒதுக்க வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக அமைச்சுக்கு சொந்தமான ஏனைய வாகனங்களை அதிகாரிகள் பயன்படுத்தக்கூடாது.

06. நிர்வாக உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், அலுவலக உதவியாளர், சாரதி ஆகியோர், நிரந்தர அரச ஊழியர்களாகவே இருத்தல் வேண்டும். அந்த சாரதிகள் மாதாந்தம் மேலதிக நேர கொடுப்பனவாக அதிகபட்சம் 150 மணிநேரத்துக்கான கொடுப்பனவை மட்டுமே பெறமுடியும்.

07. பிரத்தியேகச் செயலாளர், ஒருங்கிணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர், மக்கள் தொடர்பு அதிகாரி ஆகியோருக்கு குறைந்தபட்ச தொலைத் தொடர்பு கொடுப்பனவு வழங்க முடியும். இதில் டேட்டா பயன்பாடு, சர்வதேச தொலைபேசிக் கட்டணம், மாதாந்த நிலையான கட்டணம், வரிகள் உட்பட ஏனைய கட்டணங்களும் இவற்றில் உள்ளடங்கும்.

08. உதவி ஊழியர்களுக்கு அரச செலவில் தொலைபேசிக் கட்டணங்கள் வழங்கப்பட மாட்டாதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, அரச செலவினங்களை நிர்வகிப்பதற்கென விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறே ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் (09) இவ்வாறு பணிப்புரை வழங்கியுள்ளார்.

## எங்கள் கருத்து

## இலங்கைத் தமிழ் அகதிகளின் துயரம் போக்குவது அவசியம்!

தாயகத்தில் உரிய இருப்பிடமின்றி, வறுமையில் வாழ்வதைப் பார்க்கிலும் அகதிகளாக தமிழ்நாட்டில் வாழ்வதே உத்தமமானதென அவர்கள் கருதுகின்றனர்.

இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன்கள் தொடர்பாக தமிழகத்தின் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காண்பிக்கின்ற அக்கறையும் ஆதரவும் போற்றுதற்குரியதாகும். அகதிகளுக்கான வீட்டுத் திட்டங்கள், புனர்வாழ்வு, தொழில்வாய்ப்பு என்றெல்லாம் சிறப்பான திட்டங்களை அறிவித்துள்ளார் தமிழகத்துக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய கடப்பாடு இலங்கைத் தமிழர்களுக்கு உள்ளது.

ஆனாலும் அனைத்துக்கும் அப்பால் 'அகதிகள்' என்ற நாமத்துடன் எத்தனை காலம்தான் அவர்கள் தமிழகத்தில் வாழ்வது என்பதுதான் மனநெருடலுக்குரிய வினா ஆகும். தாயகம் மீதான ஏக்கம் அவர்களுக்கு உள்ளது. அவர்களில் பலர் மீண்டும் இலங்கை திரும்பி, உரிய வாழ்வாதாரத்துடன் நிம்மதியாக வாழவே விரும்புகின்றனர். ஆனால் அதற்கான வசதிவாய்ப்புகள் இல்லையென்பதே உண்மை.

அவர்களது முன்னைய இருப்பிடங்கள் அடையாளமே இல்லாமல் காடு மண்டியும், மக்கள் நடமாட்டமின்றியும் காணப்படுகின்றன. அடிப்படை வசதிகளற்ற அவ்விடத்தில் அவர்கள் எவ்வாறு மீளக்குடியேறி வாழ்வது? அன்றாட சீவனோபாயத்துக்கு அவர்கள் எங்கே செல்வர்? அம்மக்களின் பூர்வீக இருப்பிடங்கள் ஏராளமானவை அபகரிக்கப்பட்டு விட்டன. இந்நிலையில் அவர்கள் மீளக்குடியேறுவதென்பது சாத்தியமில்லை!

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் எமது நாட்டு மக்களேயாவர். அவர்களது வேதனைகள் அதிகம். அவர்களை மீண்டும் தாயகம் வரவழைப்பதென்பது மகிழ்ச்சியான விடயம். ஆனால் அதற்கான வசதிகளையும், எதிர்கால நம்பிக்கைகளையும் முதலில் வழங்குவது அவசியம்.

### இலங்கை மீண்டெழ புலம்பெயர்...

முன்னெடுக்குமென்றும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை முன்வைத்தே தீருமென்றும் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் நல்ல தீர்வு முன்வைக்கப்படும். அந்தக் கைதிகளில் ஒரு தொகுதியினர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளனர். காணி விடயம் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்கும் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி நடத்திய பேச்சின்போது இதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணாமல் புலம்பெயர் தமிழ் மக்களுடன் இலங்கை அரசாங்கம் நெருக்கமாகச் செயற்பட முடியாதென்று தெரிவிக்கப்படும் கருத்துடன் நான் உடன்படுகின்றேன் என்றார்.

### கொழும்பிலுள்ள நோர்வே...

அப்பாலுமுள்ள பல நோர்வே தூதரகங்களை வலுப்படுத்துவதை உள்ளடக்கியுள்ளதாக தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக 2023 ஜூலை இறுதிக்குள் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் உட்பட வெளிநாடுகளிலுள்ள ஐந்து நோர்வே தூதரகங்களை நிரந்தரமாக மூடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பிலுள்ள தூதரகத்தை மூடும் முடிவு நோர்வேக்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு உறவில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாதென தூதரகம் தெரிவித்துள்ளது.

நமது இரு நாடுகளுக்குமிடையிலான நட்பு மற்றும் ஆக்கபூர்வமான உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு நோர்வே அரசு உறுதிபூண்டுள்ளதாக தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் நீண்டகால இருதரப்பு இராஜதந்திர உறவுகளின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்காக, நோர்வே ஒரு தூதரை அங்கீகரித்து இலங்கையை உள்ளடக்கிய பிராந்தியத்திலுள்ள மற்றொரு நோர்வே தூதரகத்தை இயக்க எதிர்பார்க்கிறது.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம், மூடப்படும் செய்தியைப் பகிர்ந்து கொள்வதில் நான் வருத்தமடைகிறேன்" என்று நோர்வே தூதுவர் ட்ரைன் ஜோரன்லி எஸ்கெடால் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் மூடப்பட்டவுடன், இலங்கைக்கான தூதரக சேவைகள் பிராந்தியத்திலுள்ள மற்றொரு நோர்வே தூதரகத்திலிருந்து வழங்கப்படும்.

இலங்கை மற்றும் மாலத்தீவிலிருந்து விசா விண்ணப்பங்களைக் கையாளும் விசா மையம் ஏற்கனவே புதுடில்லியிலுள்ளது, மேலும் வீசா விண்ணப்பதாரர்கள் தமது நியமனங்களுக்காக கொழும்பிலுள்ள VFS அலுவலகத்துக்குச் செல்ல முடியுமென்றும் அறிவித்துள்ளது.

### ஆடைக் கைத்தொழிலில் நிலவும்...

செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த ஆலோசனையை வழங்கினார்.

ஆடைக் கைத்தொழிலில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது மற்றும் தொழிலாளர்களைப் பாதிக்கக்கூடிய பாதகமான விளைவுகளை கண்டறிவது தொடர்பில் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடலொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் (08) நடைபெற்றது.

இலங்கையில் ஆடைக் கைத்தொழிலானது ஏற்றுமதி துறையில் முன்னணி வகிக்கின்றது. எனவே இத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில், இத்துறையில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண்பது குறித்து இச்சந்திப்பில் நீண்ட நேரம் கலந்தாலோசிக்கப்பட்டது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, மூலப்பொருட்கள், அந்நியச் செலாவணி ஆகியன இத்துறையில் ஏற்படுத்தியுள்ள பாதகமான விளைவுகள் குறித்தும் இச்சந்திப்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

நாடு எதிர்நோக்கியுள்ள இந்த சவாலான தருணத்தில் ஆடைக் கைத்தொழிலை பாதுகாத்து அதன் முன்னேற்றத்துக்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக அத்துறையுடன் தொடர்புடைய அரச திணைக்களங்களின் தலைவர்கள், ஜனாதிபதியின் செயலாளரிடம் உறுதியளித்தனர்.

இது தொடர்பில் அமுல்படுத்தக்கூடிய உடனடி தீர்வுகள் மற்றும் ஆலோசனைகள் ஆகியவற்றை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

# உலகநாயகி இரண்டாம் எலிசபெத் மகாராணி எட்டா உயரத்து பேரரசியானாலும்



# சாமானியன் இதயம் தொட்ட அன்னை

## முழு உலகையும் சோகத்தில் ஆழ்த்திய இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மரணம்



மருமகள் டயானாவுடன்





2ஆம் உலகப்போரின்போது தங்கையுடன் வானொலி ஒலிபரப்பில்



2ஆம் உலகப்போரில் மெக்கானிக்காக..

வாசுகி

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக பிரித்தானியாவின் மகாராணியாக இருந்தவர் என்பதும் உலகில் தற்போது உயிருடன் இருப்போரில் பெரும்பாலோர் இரண்டாம் எலிசபெத் மகாராணியைத் தவிர வேறு எந்த பிரிட்டிஷ் மன்னரையோ அரசியையோ அறிந்திருக்கவில்லை என்பதும் இந்த உலகளாவிய சோகத்துக்கான பிரதான காரணமாக இருக்கலாம். இதனால் தான் அவரது மரணத்தின் எதிரொலியானது உலகளாவியதாக இருந்தது.

பெரும்பாலும் ஒரு முக்கிய நபரின் மரணத்துக்காக உலகம் ஒரு பெருமூச்சுவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விடும். ஆனால் வியாழனன்று பிரித்தானியாவின் மகாராணியார் இரண்டாவது எலிசபெத் இறந்தார் எனும் செய்திக்கான எதிர்வினையானது வித்தியாசமாகவும் மிகவும் இதய பூர்வமானதாகவும் இருந்தது. அதில் மன்னராட்சிக்கான எதிர்ப்பினைக் காண இயலவில்லை.

பிரித்தானியாவிற்கு அப்பால் உள்ள மில்லியன் கணக்கானவர்களின் வாழ்க்கையிலும் ஏதோவொரு விதத்தில் மகாராணியார் தாக்கத்தைச் செலுத்தியிருந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அவர் தனது 25வது வயதில் அரியணை ஏறினார். ஐரோப்பா மீண்டும் போரையும் ஆக்கிரமிப்பையும் எதிர்கொள்ளும் காலகட்டத்தில் அவர் இறந்திருக்கிறார்.

பொதுமக்களின் வாழ்விலிருந்து தனிமைப்பட்டு மிகவும் கடுமையான சட்டதிட்டங்களுடன் கூடிய அரச வாழ்க்கை பற்றிய விமர்சனங்கள் மக்கள் மத்தியில் அதிகளவில் இருந்தாலும் பிரித்தானியாவின் மரபு மாற்றம், பிரித்தானியாவை பன்முக கலாசார அதிக மதச்சார்பற்ற சமூகமாக மாற்றுதல் மற்றும் பிரிட்டிஷ் பேரரசை பிரிட்டிஷ் கொமன்வெல்த் ஆகக் குறைத்தல், பிரிட்டனை பெரிய சக்தி என்ற நிலையில் இருந்து. மாற்றுவது என்பன மாகாராணியாரின் சாதகமான மாற்றங்களாக உலகெங்கிலும் நினைவு கூரப்படுகின்றது.





பெற்றோருடன்



கணவர் மற்றும் பிள்ளைகளுடன்



கணவருடன்

### மன்னராட்சியின் மீதான விமர்சனங்களுக்கு மத்தியிலும் உலகளாவிய ரீதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது



முடிக்குரிய வாரிசுகள் மகாராணியுடன்


பல வழிகளில் மகாராணியாரின் குடும்ப பிரச்சினைகள், அவரது மகன் இளவரசர் அன்ட்ரூவைச் சுற்றியுள்ள ஊழல்கள் மற்றும் அவரது பேரன் ஹரி மற்றும் அவரது மனைவி மேகனுடன் அரச குடும்பத்தின் பொது முறிவு போன்றவை மகாராணியாரை தனது மக்களுடன் நெருக்கமாக்கியது. நன்மையோ தீமையோ அவர் தேசிய ஒற்றுமையின் அடையாளமாக மதிக்கப்பட்டார் . உலகெங்கிலும் உள்ள மக்கள் அவரது பெரிய குடும்பத்தின் வாழ்க்கை, காதல்கள், விவாகரத்துகள் மற்றும் துன்பங்களைத் தங்களுக்கு நேர்ந்தது போல் கருதியது, அவரது மாய செல்வாக்கின் வலிமையால் நிகழ்ந்ததுதான்!

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உக்ரைனை ஆக்கிரமிப்பதன் மூலம் ஐரோப்பாவின் மிகப் பெரிய போரைத் தொடக்கியுள்ள ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் மூன்றாம் சார்ல்ஸ் மன்னருக்கு தனது அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார். "இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பை எதிர்கொள்ளும் தைரியத்தையும் விடாமுயற்சியையும் நான் வேண்டுகிறேன்." என்று அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டனின் புதிய பிரதமர் லிஸ் ட்ரஸை வாழ்த்திய சில நாட்களுக்குப் பிறகு ராணி இறந்தார். அவர் முதலில் சந்தித்த பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில். மொத்தம் 15 பிரிட்டிஷ் பிரதமர்களுடன் அவர் பணியாற்றியிருக்கிறார். அனேகமாக எந்தப் பிரதமரும் அவருடன் முரண்பட்டதாக செய்திகள் இல்லை.



கைக் குழந்தையாக





முடிக்குரியோரின் வாரிசுகள் அனைவரும்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தால் வடிவமைக்கப்பட்ட கரீபியனில் மகாராணியாரின் மரணம் முரண்பட்ட உணர்ச்சிகளைத் தோற்றுவித்துள்ளது. ஜமெய்க்காவின் பிரதமர் ஆண்ட்ரூ ஹோல்னஸ் உலகத் தலைவர்களுடன் இணைந்து அரச குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்தார்.

ஆனால் மற்றவர்களுக்கு ராணியின் மரணம் பிராந்தியத்தின் காலனித்துவம் சார்ந்த கடந்தகால நினைவுகளையும் மற்றும் அடிமை வர்த்தகத்தின் கொடுமைகளையும் நினைவூட்டுவதாக இருந்தது.

எனினும் எலிஸபெத் மகாராணியார் அடிமை வர்த்தகம் மற்றும் நாடு பிடிக்கும் காலனித்துவத்துடன் நேரடி சம்பந்தம் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் அவர் இரண்டாம் மகாயுத்தத்தின் பின்னர் பதவியேற்கும் போது அவை முடிந்து போனவையாக இருந்தன. பேரரசின் வீழ்ச்சிக் காலத்தின் ஆரம்பம் என்று கூட அவர் காலத்தைச் சொல்லலாம். விக்டோரியா கட்டி எழுப்பிய பேரரசு சிதையத் தொடங்கியிருந்தது.

### அரச குடும்பத்து அரியணைக்கான வாரிசுகள்

ராணி இரண்டாம் எலிசபெத் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவரது மூத்த மகன் சார்ள்ஸ் அரசராகியுள்ளார். நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த பதவி 73 வயதில் தான் வந்தடைந்திருக்கிறது.

அவர் மூன்றாம் சார்ள்ஸ் என்று அழைக்கப்படுவார். அரசர் மூன்றாம் சார்ள்ஸ் தான், இரண்டாம் சார்ள்ஸ் மன்னர் 1660 முதல் 1685வரை ஆட்சி செய்த பின்னர் இப்போதுதான் மற்றொரு சார்ள்ஸ் மூன்றாவது என்ற பட்டத்துடன் அரியணை ஏறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதே சமயம் இரண்டாம் எலிசபெத் தான், பிரிட்டிஷ் வரலாற்றில் நீண்ட காலம் அரியணையில் ஆட்சி செய்தவர். உலக அளவில் அதிக காலம் ஆட்சி செய்த அரசர் பிரெஞ்சு மன்னன் 14ம் லூயி. இவர் 72 ஆண்டுகளாக ஆட்சி செய்துள்ளார். அந்த வரிசையில் மகாராணியார் இரண்டாம் இடத்தை வகிக்கிறார். இவரது ஆட்சி காலம் எழுபது ஆண்டுகள்.



சார்ள்ஸ் மற்றும் டயானாவுடன்

#### ராணி மற்றும் எடின்பரோ கோமகன் இளவரசர் பிலிப்

பிரிட்டனை 70 ஆண்டுகளாக ஆட்சி செய்த ராணி, கடந்த ராணியாக இருந்தார். செப்டம்பர் 8, 2022 அன்று மரணமடைந்தபோது அவருக்கு வயது 96.

1926ஆம் ஆண்டு பிறந்த இளவரசி எலிசபெத், 1952ஆம் ஆண்டு தனது தந்தையான ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் மரணத்திற்குப் பிறகு அரியணை ஏறியவர். அவர் 1947ஆம் ஆண்டு கிரேக்கத்தை தாய் நாடாகக் கொண்ட செல்ஸ்விக் சொன்டர் பேர்க் என்ற ஜெர்மனிய பெயரைக் கொண்டவரை திருமணம் செய்தார். அவரது கிரேக்க அடையாளத்தை மறைக்கும் வகையில் மவுண் பேட்டன் என்ற ஆங்கிலப் பெயர் அவருக்கு சூட்டப்பட்டது. அவரது அன்னையரின் பெட்டன் பேர்க் என்ற நாமத்துக்கு இணையான பெயர் இது. திருமணத்தின் பின்னர் எடின்பரோ கோமகன் என்ற பெயர் சூட்டப்பட்டது.

இளவரசர் ஃபிலிப் 1921இல் பிறந்தவர். இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் கடற்படையில் பணியாற்றியவர். அவர் ஒருவர் தான் பிரிட்டிஷ் வரலாற்றில் நீண்ட காலம் ஆட்சி செய்த ராணியின் கணவர். 22,000க்கும் மேற்பட்ட தனிபட்ட செயல்பாடுகளை மேற்கொண்டவர், 2017ஆம் ஆண்டு அரச கடமைகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

அவர் ஏப்ரல் 9, 2021 அன்று மரணமடைந்தார். மிகச் சாதுவான இராணியின் கணவர் என்ற பெயர் இவருக்குண்டு. பிரசித்தி பெற்ற பெண்மணிகளின் கணவர்மார் சாதுவாகத்தான் இருந்தாக வேண்டும்.

#### சார்ள்ஸ் அரசரானார்

பி றப்பு: 1948 ராணியின் மூத்த மகன்.

முன்னாள் வேல்ஸ் இளவரசர். லேடி டயானா ஸ்பென்சரை மணந்தவர். ஜூலை 29, 1981 டயானா வேல்ஸ் இளவரசி ஆனார். அவர்களுக்கு வில்லியம், ஹரி என்று இரண்டு பிள்ளைகள். பிறகு, அவர்களுக்கு இடையே 1996இல் திருமண முறிவு ஏற்பட்டது. ஒகஸ்ட் 31, 1997 அன்று, இளவரசி டயானா பாரிஸில் நிகழ்ந்த கார் விபத்தில் மரணமடைந்தார். அது இன்றைக்கும் மர்மமான மரணம் தான்.

அவர் ஏப்ரல் 9, 2005ம் திகதி தன் நீண்டகால நண்பியான கமில்லா பார்க்கர் பவுல்ஸை மணந்தார். இவர் விவாகரத்தான பெண்மணி என்பது இன்றைக்கும் குறைபாடாகவே பார்க்கப்படுகிறது.



இறுதியான சந்திப்பு

#### இளவரசர் வில்லியம், கார்ன்வால் மற்றும் கேம்பிரிட்ஜின் கோமகன்

பிறப்பு: 1982

இளவரசர் வில்லியம் தற்போதைய அரசர் மூன்றாம் சார்ள்ஸ் மற்றும் வேல்ஸ் இளவரசி டயானாவின் மூத்த மகன். இப்போது அவர் அரியணை வாரிசு வரிசையில் முதலிடம் வகிக்கிறார்.



இளவரசி ஷார்லோட்

அவரது தாயார் உயிரிழந்தபோது அவருக்கு 15 வயது. அவர் செயின்ட் எண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் கற்றபோது தனது வருங்கால மனைவி கேத்தரின் மிடில்டனை சந்தித்தார். அவர்கள் 2011இல் திருமணம் செய்துகொண்டனர்.

அவரது 21வது பிறந்தநாளில், உத்தியோகபூர்வ சந்தர்ப்பங்களில் ராணியின் பக்கம் நிற்கக்கூடிய நாட்டின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். அவருக்கும் அவரது மனைவிக்கும் ஜூலை 2013இல் முதல் குழந்தையாக ஜோர்ஜ் மற்றும் 2015இல் இரண்டாவதாக சார்லோட் மற்றும் மூன்றாவதாக 2018இல் லூயி ஆகிய மூவர் பிறந்தனர்.

வடக்கு வேல்ஸில் அமைந்துள்ள விமானப் படைத்தளத்தில் மீட்பு விமானியாக மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். அதற்கு முன்பு, இளவரசர் வில்லியம் ராணுவம்,ரோயல் கடற்படை மற்றும் விமானப் படையில் பயிற்சி பெற்றார். அவர் தனது அரச கடமைகளுடன் கிழக்கு எங்கிலியன் விமான ஆம்புலன்ஸில் துணை விமானியாக இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். ராணி மற்றும் எடின்பரோ கோமகன் சார்பாக அதிக அரச பணிகளை மேற்கொள்வதற்காக அவர் 2017ஜூலையில் அந்தப் பதவியை விட்டு விலகினார்.

அரியணையின் வாரிசாக, அவரது முக்கிய கடமைகள், அரசி மற்றும் அவரது அரச கடமைகளில் ஆதரிப்பதாகும்.

#### கோர்ன்வால் மற்றும் கேம்பிரிட்ஜின் இளவரசர் ஜோர்ஜ்

பிறப்பு: 2013

கோர்ன்வால் மற்றும் கேம்பிரிட்ஜ் இளவரசர் ஜோர்ஜ், 22 ஜூலை 2013 அன்று லண்டனிலுள்ள செயின்ட் மேரி மருத்துவமனையில் பிறந்தார்..

இளவரசர் ஜோர்ஜ் அதாவது வில்லியத்தின் மூத்த மகன். தனது தந்தைக்குப் பிறகு அரியணைக்கான இரண்டாவது இடத்தில் உள்ளார்.

#### கோர்ன்வோல் மற்றும் கேம்பிரிட்-ஜின் இளவரசி சார்லட்

பிறப்பு: 2015

இளவரசி கேத்தரின் அதாவது வில்லியத்தின் மனைவி 2015ஆம் ஆண்டு பெற்றெடுத்த பெண் குழந்தையின் பெயர் ஷார்லோட் எலிசபெத் டயானா என்பதாகும்.

அவர் தனது தந்தை, மூத்த சகோதரரைத் தொடர்ந்து அரியணை வாரிசாக மூன்றாவது இடத்தில் உள்ளார்.

# அடுத்த தேர்தலை இலக்கு வைத்து புதிதாக உருவாகும் கூட்டணிகள்!

**நாடு பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அரசியல் கட்சிகளின் கூட்டணிகள் மற்றும் கட்சிகளுக்கிடையிலான மறுசீரமைப்புக்கள் குறித்த பரபரப்புக்களும் அதிகரித்துள்ளன. மக்களின் எதிர்ப்புக் காரணமாக பதவியை விட்டு விலகி வெளிநாடு சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியிருக்கும் சூழ்நிலையில், பல அரசியல் கட்சிகள் அடுத்ததொரு தேர்தலுக்குத் தயாராகி வருவதாகத் தெரிகிறது.**



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பி சுமார் ஒருவாரமாகும் நிலையில், அவர் இதுவரை நேரடியான அரசியலில் ஈடுபாடு காண்பிக்கவில்லை. நாடு திரும்பிய அவரை வரவேற்க பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் விமான நிலையம் சென்றிருந்ததுடன், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக வீட்டுக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதேநேரம், அரசியல் கட்சிகள் அடுத்த கட்டத்தை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. பழம்பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் வருடாந்த மாநாடுகள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்தன. இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி நாட்டுக்கு வழங்கும் புதிய தலைமைத்துவத்துடன் கட்சியும் பலமான நிலைக்குச் செல்லும் என்ற நம்பிக்கை அக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. மறுபக்கத்தில் சுதந்திரக் கட்சியும் தனது வருடாந்த மாநாட்டை அதன் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடத்தியிருந்தது.

சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு முன்னராகக் கூடிய மத்திய குழு கட்சியின் யாப்பை மாற்றி தலைவருக்கு அதிகாரத்தைக் கூட்டியிருந்தது. அதாவது கட்சியின் விருப்பத்துக்கு மாறாக செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தலைவருக்குக் காணப்படும் அதிகாரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டிருந்ததுடன், இதற்கு எதிராக நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த வழக்கு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

அதேநேரம், 'எமக்குப் பிழைத்தது எங்கே' என்ற தொனிப்பொருளில் கட்சியைப் பலப்படுத்துவதற்கான கலந்துரையாடல் நிகழ்வுகளை பொதுஜன பெரமுன கட்சி ஆரம்பித்துள்ளது. இதில் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு மாவட்ட ரீதியில் உள்ள கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர். கட்சியின் மாநாட்டில் புதிய பதவிகள் வழங்கப்படவிருப்பதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார்.

கட்சிகள் இவ்வாறு தம்மைப் பலப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கும் நிலையில், புதிய கூட்டணிகளும் உதயமாகியுள்ளன. 'மேலவை இலங்கைக் கூட்டணி' என்ற புதிய கூட்டணி உருவாகியுள்ளது. பொதுஜன பெரமுனவிலிருந்து விலகிச் சென்று பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் விமல் வீரவன்ச உள்ளிட்டவர்கள் இணைந்து இக்கூட்டணியை உருவாக்கியுள்ளனர்.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவித்துரு ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கமியூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை சமசமாஜ கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன. எதிர்காலத்தில் நடக்கக் கூடிய தேர்தலை இலக்கு வைத்தே இந்தக் கூட்டணி உதயமாகியுள்ளது.

இது இவ்விதமிருக்க பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சென்று தற்பொழுது எதிர்க்கட்சியில் அமைந்துள்ள மற்றுமொரு குழுவும் உருவாகியுள்ளது. பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட டளஸ் அழகப்பெரும உள்ளிட்ட 13 உறுப்பினர்கள் இதில் உள்ளடங்குகின்றனர்.





**முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிப்பாரா என்பது பற்றிய தகவல்கள் இதுவரை இல்லை. ஆனால் அரசியல் பிரபலங்கள் பலர் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் எதிர்கால தேர்தலுக்காக கூட்டணிகளாக ஒன்றுசேர்கின்றனர்**

பொதுஜன பெரமுனவின் தலைவராகச் செயற்பட்ட பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளட்டவர்கள் இக்கூட்டணியில் அங்கம் வகிக்கின்றார்கள். குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கிய வியத்மக அமைப்பின் சார்பில் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களே இதில் அங்கம் வகிக்கின்றனர். எதிர்காலத்தில் இவர்களும் தேர்தலுக்குத் தயாராகத் தொடங்கியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையிலான புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் புதிய அலுவலகமும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த அலுவலகத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திறந்து வைத்திருந்தார். இந் நிகழ்வில் பாராளுமன்றத்தில் சுயாதீனமடைந்துள்ள அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் சந்திம வீரக்கொடி ஆகியோரும், 43 ஆவது படையணிக்குத் தலைமை வகிக்கும் பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தனர்.

மறுபக்கத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் 37 இராஜாங்க அமைச்சர்கள் கடந்த வியாழக்கிழமை பதவியேற்றிருந்தனர். பொதுஜன பெரமுனவில் கடந்த காலத்தில் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களுக்கே மீண்டும் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தில் இணையப் போவதில்லையென சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்குக் கூறியிருந்தாலும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூவர் இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்றுள்ளனர். ஏற்கனவே சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இருவர் அமைச்சுப் பதவிகளை ஏற்றுள்ள நிலையில், மேலும் மூவர் இராஜாங்க அமைச்சர்களாகியுள்ளனர்.

இது தவிரவும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாகப் பாராளுமன்றத்துக்கு நுழைந்து இதற்கு முன்னர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட டயனா கமகே, அரவிந்த குமார் ஆகியோருடன் கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், சிவநேசத்துரை சந்திரகாந்தன் போன்றவர்களுக்கும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் அடுத்துவரும் பொதுத் தேர்தலொன்றுக்குத் தயாராகத் தொடங்கியுள்ளன. இருந்தபோதும் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு மத்தியில் தேர்தலொன்றுக்குச் செல்வது எந்தளவுக்குச் சாத்தியமாக இருக்கும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இராஜாங்க அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக விமர்சனங்கள் எழுந்துள்ள சூழ்நிலையில், தேர்தல் குறித்த ஏற்பாடுகளும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

பி.ஹர்ஷன்...

---

# எதிரி நாடுகளை அச்சுறுத்தும் இந்தியாவின் விக்ராந்த் கப்பல்!

**சக்தி வாய்ந்த பிரமாண்டமான போர்க்கப்பல் ஒன்றை நிர்மாணித்துள்ள இந்தியா, அக்கப்பலை கடந்த வாரம் தனது நாட்டின் பாதுகாப்பு சேவையில் இணைத்துக் கொண்டுள்ளது. வல்லரசு நாடுகளையே அச்சுறுத்தும் வகையில் பல்வேறான நவீன பாதுகாப்பு வசதிகளை இக்கப்பல் கொண்டுள்ளது.**

பிரதமர் நரேந்திர மோடி கொச்சியில் 'விக்ராந்த்' கப்பலின் சேவையைத் தொடக்கி வைத்தார். இந்த விக்ராந்த் கப்பல் விமானம் தாங்கிய இந்தியாவின் 2 ஆவது போர் கப்பலாக செயல்படுகின்றது.

கப்பல் படையைப் பொறுத்தவரை இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அரபிக் பெருங்கடல், வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் ஆகிய பகுதியில் இந்திய இராணுவ கப்பல்கள் ஆதிக்கம் செலுத்தி, இந்தியாவிற்கு வரும் ஆபத்தைத் தடுத்து வருகின்றன.

இந்நிலையில் இந்தியா தனக்கான விமானம் தாங்கிய போர்க் கப்பலை எந்த நாடுகளின் துணையும் இல்லாமல் இந்தியாவிலேயே தயாரித்து நாட்டிற்காக அர்ப்பணித்துள்ளது. கொச்சியில் உள்ள கப்பல் கட்டுமான மையத்தில் அக்கப்பல் நிர்மாணிக்கப்பட்டது.

உலகில் இதுவரை அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து மற்றும் சீனா ஆகிய நாடுகள்தான் வேறு நாடுகளின் துணையில்லாமல் போர் கப்பல்களை உருவாக்கியிருந்தன. தற்போது அந்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சேர்ந்துள்ளது. இந்தியா உருவாக்கிய இந்தக் கப்பலுக்கு 'விக்ராந்த்' எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

இந்தியா முதன் முதலாகப் பயன்படுத்திய விமானம் தாங்கிய போர்க் கப்பலின் பெயர் 'விக்ராந்த்' என்பதாகும். இந்தக் கப்பல் தற்போது தனது பணியை முடித்து விட்டது.

தற்போது பழைய விக்ராந்த் கப்பலை முழுவதுமாக பிரித்து விட்டனர். இந்நிலையில்தான் புதிதாகத் தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கிய போர்க் கப்பலுக்கு 'விக்ராந்த்' என மீண்டும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது இந்தியாவின் இரண்டாவது விமானம் தாங்கிய போர்க் கப்பலாகும். ஏற்கனவே 'ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா'என்ற கப்பல் தற்போது செயற்பாட்டில் உள்ளது.

புதிய விக்ராந்த் கப்பல் மொத்தம் 262 மீற்றர் நீளம், 62 மீற்றர் அகலம் கொண்டது. இது சுமார் 2 கால்பந்தாட்ட மைதானத்தை விட பெரியதாகும். இந்தக் கப்பல் மொத்தம் 18 தளங்களைக் கொண்டது. இதில் 1600 பேர் பயணிக்க முடியும். 30 விமானங்களைத் தாங்கிச் செல்லும் திறன் கொண்டது.



இந்தக் கப்பலில் ஒரே நேரத்தில் 1600 பேர் பயணித்தாலும், அவர்கள் அனைவருக்கும் கப்பலிலேயே உணவு தயாரிக்கும் இயந்திரங்கள் உள்ளன. இந்தக் கப்பலில் உள்ள சப்பாத்தி தயாரிக்கும் இயந்திரத்தினால் ஒரு மணிநேரத்திற்கு 3000 சப்பாத்திகளைத் தயாரிக்க முடியும்..

இந்தக் கப்பலில் மொத்தம் 250 தாங்கிகள் அளவிலான எரிபொருள் சேமித்து வைக்க முடியும். இந்தக் கப்பலை நிறுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நங்கூரம் ஒலிம்பிக்கில் இருக்கும் நீச்சல் குளத்தைப் போல 2 மடங்கு பெரிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலின் மொத்த எடை 42,800 தொன் கொண்டது.இந்தக் கப்பலில் எ.ம்.ஐ.ஜி ரக ஜெற் யுத்த விமானங்களை வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் மொத்தம் 28 நோட்ஸ் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது.

இந்தக் கப்பலின் பாதுகாப்பிற்காக நவீன அம்சங்கள் இருக்கின்றன. இது கப்பலைக் கடலில் விபத்தில் சிக்க வைக்காமல் தடுக்கும். இதனால் இந்தக் கப்பல் நடுக்கடலில் சேதமாகி மூழ்கும்அபாயம் இருக்காது.

மேலும் இந்தக் கப்பலில் ஆயுதங்களாக *Barak8 SAM, AK630 Close in Weapon System, Stabilised Remote Controlled Guns* உட்பட சக்தி வாய்ந்த ஆயுதங்கள் இருக்கின்றன. இந்த ஆயுதங்களின் செயல் திறன் என்ன? இது கப்பலின் எந்த இடத்தில் இருக்கிறது? எத்தனை எண்ணிக்கையில் இருக்கிறது என்ற தகவல்கள் எல்லாம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. பல ஆயுதங்களின் பெயர்கள் வெளியிடப்படவில்லை.இந்தக் கப்பலின் கட்டுமானம் முதன் முதலாக 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அப்பொழுதே இந்தக் கப்பலுக்குத் தேவையான இரும்புகள் எல்லாம் வெட்டத் தொடங்கப்பட்டது. அடுத்தாக கப்பல்களின் முதுகெலும்பு என அழைக்கப்படும் கீல் என்ற பகுதி கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. கீல் பாகத்தை உருவாக்குவதுதான் கப்பலின் உண்மையான கட்டுமானத்தின் முதல் வேலையாகும்.





**எதிரிகளைத் தாக்கியழிக்கும் ஏவுகணைகள் உட்பட நவீன ஆயுதங்கள்: மொத்தம் 262 மீற்றர் நீளம், 62 மீற்றர் அகலம்; மொத்தம் 18 தளங்கள்; 1600 பேர் பயணிக்கவும், 30 விமானங்களைத் தாங்கிச் செல்லவும் வசதிகள்**

**விமானம் தாங்கி போர்க்கப்பல்களை நிர்மாணிக்கும் ஆற்றலில் உலகநாடுகள் வரிசையில் இடம்பிடித்தது இந்தியா!**

2012 ஆம்ஆண்டு இந்தக் கப்பலின் அடிப்படை கட்டுமான பணிகள் முடிந்தன. 2013 ஆம் ஆண்டு இந்தக் கப்பல் முழுமையாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட கப்பலாக உருவாக்கப்படத் தொடங்கியது. அதன் பின்னர் கப்பலின் உள் கட்டுமான வேலைகள், பெயின்ற் பூசுவது உள்ளிட்ட பல வேலைகள் நடந்தன.

2020 ஆம் ஆண்டு இந்தக் கப்பலுக்கான என்ஜின் உள்ளிட்ட பாகங்கள் பொருத்தப்பட்டு கப்பல் கடலில் இறக்கத் தயார் ஆனது. 2020 நவம்பர் 30 ஆம் திகதி கப்பல் கடலில் இறக்கப்பட்டு சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் ஓகஸ்ட் 2021 முதல் ஜூலை 2022 வரை பல்வேறு கட்டமாக சோதனை நடத்தப்பட்டது. இப்போது அக்கப்பல் கட்டி முடிக்கப்பட்டது.

இந்தக் கப்பல் இருப்பதால் எதிரி நாடுகள் இந்தியாவின் கடல் எல்லையில் வாலாட்ட முடியாது என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். முக்கியமான சீனா இந்தியப் பெருங்கடலில் ஆதிக்கம் செலுத்த நினைப்பதைத் தடுக்க முடியும்.

இராணுவத் துறையில் இந்தியாவின் தற்சார்பை நோக்கிய குறிப்பிடத்தக்க முயற்சியாக இக்கப்பல் தயாரிப்பைக் குறிப்பிட முடியும். இந்திய கடற்படையின் போர்க் கப்பல் வடிவமைப்பு அலுவலகத்தால் வடிவமைக்கப்பட்டு, மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர் வழிகள் அமைச்சகத்தின் கீழ் பொதுத்துறை நிறுவனமாக இயங்கும் கொச்சி கப்பல் கட்டும் நிறுவனத்தால் இக்கப்பல் நிர்மாணிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

**சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் கட்சி அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் வகிபாகம் முக்கியமானதாகும். சுமார் நானூறு வருடங்களாக ஏகாதிபத்திய–வாதிகளின் அடிமைத்தனத்தில் இருந்த நம் தாய்நாட்டை விடுவித்து சுதந்திர நாடாக இலங்கையை உருவாக்குவதில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களின் பங்கு அளப்பரியதாகும்.**

இதனை முன்னிலைப்படுத்தி தேசியத் தலைவர்களால் உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி 76 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளமை பெருமையளிக்கும் விடயமாக அமைந்துள்ளது. கடந்த சுமார் ஏழு தசாப்தங்களாக மாறி மாறி நாட்டை ஆட்சி செய்த கட்சிகளில் ஒன்றாக ஐக்கிய தேசியக் கட்சி விளங்குகின்றது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

நாட்டில் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும் கொண்டுவரப்பட்ட கொள்கைத் திட்டங்கள் பலவற்றுக்கு உரிமை கோரக்கூடிய பெருமையைக் கொண்ட இந்தக் கட்சி தனது 76வது வருட பூர்த்தியை அண்மையில் கொண்டாடியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், அக்கட்சியிலிருந்து தெரிவான நான்காவது ஜனாதிபதியாகவும் விளங்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் மாநாடு நடைபெற்றிருந்தது.

கடந்த தசாப்தங்களில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து அவ்வப்போது வீழ்ச்சி கண்டாலும் மீண்டும் ஏறுமுகம் கொடுத்த கட்சி என்ற வரலாற்றை ஐ.தே.க கொண்

மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

வழமைக்கு மாறாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் அதன் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவா

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கான மேலும் பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கேற்ப நமது அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட வேண்டும்.

இவை அனைத்தையும் விட முக்கியமானது 'தேசிய சபை உருவாக்குவதாகும். கட்சித் தலைவர்கள் குழு ஒன்றுகூடி ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டத்திற்காக உடன்பாடு காண முடியும். தேசிய சபை தொடர்பில் இந்த வாரம் இறுதி முடிவு காண எதிர்பார்ப்பதாக பிரதமர் கூறியுள்ளார். அதனுடன் மேலும் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட உள்ளன. பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டம் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பான புதிய சட்டம் ஒன்றை



சுக்கள் மாறும் போது மாறாத கொள்கையை உருவாக்குவோம். இந்த கொள்கை கட்டமைப்பை 05 ஆண்டு திட்டங்களாகச் செயல்படுத்துவோம்.

நாம் சிங்களவராக, தமிழராக, முஸ்லிம்களாக அல்லது வேறு எந்த இனத்தவராக இருந்தாலும் சரி, இது எமது தாய்நாடாகும். நாம் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளராக இருந்தாலும் மொட்டுக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஈபிடிபி, ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சுயேச்சையாக இருந்தாலும் சரி, நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்பதை மறக்கக் கூடாது. நாம் ஒன்றிணைந்து இந்த நாட்டை முன்னேற்றுவோம் எனவும் ஜனாதிபதி இங்கு அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

அதேநேரம், ஐ.தே.கவின் பொதுச்

# வீழ்ச்சியிலிருந்து வேகமாக மீண்டெழுகிறது ஐ.தே.க!



முன்வைக்க இருக்கிறோம்.

இளைஞர் பாராளுமன்றம் சட்டப்பூர்வமாக்கப்படும். மக்கள் சபை அமைப்பது தொடர்பில் எமது முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய யோசனை ஒன்றை முன்மொழிந்துள்ளதுடன், அந்த பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது' எனக் குறிப்பிட்டார்.

"2023 ஆம் ஆண்டில் இருந்து 2048 ஆம் ஆண்டு வரை 25 ஆண்டுகள்






## "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவ ஆளுமையை தெளிவாக வெளிப்படுத்திய ஐ.தே.கவின் 76 ஆவது வருடாந்த மாநாடு"







## அனைவரின் அர்ப்பணிப்பான உழைப்பினால் நாட்டை மீண்டும் முன்னைய நிலைமைக்கு கட்டி–யெழுப்புவதற்கு ஐ.தே.க மாநாட்டில் கட்சித் தலைவர் திடசங்கற்பம்!



டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் எந்தவித உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படாத நிலையில், தேசியப் பட்டியல் ஊடாக அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரம் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்று ஒரு சிறிது காலத்திலேயே பிரதமராகி, பின்னர் பதில் ஜனாதிபதியாகி, பின்னர் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மையானவர்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க இடம்பிடித்தார்.

இது மாத்திரமன்றி, அவருடைய பதவி வெற்றிடத்துக்கு மற்றுமொரு ஐ.தே.க உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான ஆளுமைமிக்க தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி தற்பொழுது மாத்திரமன்றி இதற்கு முன்னரும் பல்வேறு தலைமைத்துவ சவால்களைச் சந்தித்து மக்கள் மத்தியில் பிரபலமிழந்து மீண்டும் பதவிக்கு வந்த வரலாறு உண்டு. இதன் தொடர்ச்சியாகவே ஐ.தே.க மீண்டும் மீட்சி பெற்றிருக்கிறது என்று கூறலாம்.

மிகவும் சவாலான சூழலில் நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கட்சியையும் மீண்டும் பலமான நிலைக்குக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உருவாகியிருப்பதை அக்கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் மூலம் தெரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது.

'முன்பிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் மற்றும் ஜனாதிபதிகளைப் போன்று பதவிகளை வழங்குவதற்கு இன்று என்னால் முடியாது. மக்கள் இன்று அழுத்தத்தில் உள்ளனர். சிலரால் மூன்று வேளையும் சாப்பிட முடியாத நிலை உள்ளது. பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். நாம் அனைவரும் நமது உழைப்பால் நிச்சயமாக இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவோம்' என ஐ.தே.கவின் 76 ஆவது வருடாந்த

னந்தா, பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்டவர்களை இதில் குறிப்பிட்டுக் கூற முடியும்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் குறிப்பிடுகையில், 'இந்தக் காலப்பகுதியில் அரசாங்கம் என்ற வகையில் 22 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். அதை நிறைவேற்ற வேண்டும். அரசியலமைப்பு மேலும் திருத்தப்பட்டுள்ளது. விசேட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நீக்கப்பட வேண்டும். அரசியலமைப்புக்கு முரணான சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரம் நீக்கப்பட வேண்டும்.

உள்ளன. இந்த காலப்பகுதிக்குள் சக்திவாய்ந்த மற்றும் வளமான இலங்கையை உருவாக்குவோம். அடுத்த ஆண்டு முதல் அதை தொடங்குவோம். அதன் பலனை காண நான் இருக்க மாட்டேன். ஆனால் இங்குள்ள இளைஞர்கள் சிறப்பாக வாழக்கூடிய எதிர்காலத்தை உருவாக்க விரும்புகிறேன்.

நமது கொள்கைகளை இரும்புச்சட்டத்தை போன்று வைத்திருப்போம். ஆட்சிகள் அமைச்

செயலாளர் ரங்க பண்டார மற்றும் உபதலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேர்தன, உப தலைவர் ருவன் விஜயவர்த்தன உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் இங்கு உரையாற்றியிருந்தனர். எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பலமான நிலைக்குக் கொண்டு செல்லப்படும் என்பது அவர்களின் உரைகள் மூலம் அழுத்திக் கூறப்பட்டிருந்தது.

"பல வருடங்கள் நாட்டை ஆட்சி செய்த போதும், ரணில் விக்கிரமசிங்கவுக்கான சுக்கான் கிடைக்கவில்லை. தற்பொழுது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி நாட்டை பலமான நிலைக்குக் கொண்டு செல்ல ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவார்" என்ற நம்பிக்கையை பாலித்த ரங்க பண்டார முன்வைத்தார்.

'இப்போது சுக்கான் உங்கள் கைக்கு வந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினரின் உள்ளங்களை குணப்படுத்த நாம் போராட வேண்டும். நாம் அந்த போராட்டத்திலும் வெற்றி பெற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை பலமாக கட்டியெழுப்பிய கட்சியே தவிர நாட்டை பலவீனப்படுத்திய கட்சி அல்ல' என அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதிப் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க தெரிவானதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியினருக்குப் பாரியதொரு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் தமது கட்சியைவிட்டுப் பிரிந்து சென்றவர்களை இணைத்து மீண்டும் பலமான கட்சியை உருவாக்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக அவர்கள் நம்புகின்றனர்.

## ஏகாதிபத்தியவாதிகளின் அடிமைத்தனத்திலிருந்து நாட்டை மீட்டெடுப்பதிலும், இலங்கையில் பாரம்பரிய கலாசார விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அக்காலத்தில் பெரும்பங்காற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு மக்கள் மத்தியில் மீண்டும் பெருகும் அறிகுறிகள்!

# கந்தப்பளை ஹைபொரஸ்ட் இலக்கம் மூன்று தோட்டத்தில் மாறுபட்ட வடிவங்களில் உருவெடுத்துள்ள அட்டூழியங்கள்



- சுய விலகலை பலவந்தப்படுத்தும் தோட்ட நிர்வாகம்
- பொருளாதார பாதாளத்தில் வீழ்ந்துள்ள தொழிலாளர்களை மேலும் நசுக்கும் செயலாகும்

ராகலை ரமேஸ் ...

பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு நேரும் அட்டூழியங்கள் இன்று மாறுப்பட்ட வடிவங்களில் உருவெடுத்துள்ளதாக தோன்றுகிறது. தோட்ட தொழிலாளர்களை பலவந்தமான சுய விலகலை ஹைபொரஸ்ட் இலக்கம் மூன்று தோட்ட நிர்வாகம் ஆரவாரமில்லாமல் அமுல்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கந்தப்பளை ஹைபொரஸ்ட் இலக்கம் மூன்று தோட்டத்தில் பணியாற்றும் (45) வயதுக்கு குறைந்த தொழிலாளர்களை தொழிலில் இருந்து ஓய்வு பெற்று சேவைக் கால பணத்தை பெற்று செல்லுமாறு தோட்ட நிர்வாகம் பலவந்தப்படுத்துவதாக வலப்பனை பிரதேச சபையின் ஹைபொரஸ்ட் வட்டார இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி உறுப்பினர் பழனி சௌந்தராஜன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் மேலும் கூறிய அவர்,.

ஹைபொரஸ்ட் இலக்கம் 03 பிரிவு தோட்டம் 140 ஹெக்டையரில் தரமான தேயிலை பயிரிடப்பட்ட தோட்டமாகும்.

காலனித்துவ ஆட்சியில் வெள்ளையர்களால் ஹைபொரஸ்ட் தோட்டத்தில் சிறந்த விளைச்சலை தரக்கூடிய உயர்தர தேயிலை பயிரிடப்பட்டு சிறப்பாக விளங்கிய தோட்டம் என்ற பெயர் இன்றும் மாறாமல் காணப்படுகிறது.

காலப்போக்கில் அரசாங்கம் பெருந்தோட்டங்களை பொறுப் பேற்று பராமரித்த போதும் கூட இத்தோட்டத்தில் தேயிலை விளைச்சல் குறைந்ததாக சரித்திரமில்லை.

அன்று இத்தோட்டத்தில் 500க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தேயிலை தோட்ட வருமானத்தை நம்பியே வாழ்ந்து வந்தனர். காலப் போக்கில் இத்தோட்டத்தை தனியார் கம்பனிகள் பொறுப்பேற்று சிறிது காலம் சிறப்பாக கொண்டு நடத்திய போதும் இன்று இத் தோட்டத்தின் நிலை முற்றாக மாற்றம் பெற்றுள்ளது.

இருப்பினும் 500க்கு அதிகமாக தொழிலாளர்கள் பணியாற்றிய இந்த தோட்டத்தில் நிர்வாக கெடுப்பிடி,வருமான குறைவு காரணமாக தொழிலில் இருந்து விலகிய நிலையில் இப்போது இத் தோட்டத்தை முகாமைத்துவம் செய்து வரும் தோட்ட நிர்வாகம் இத் தோட்டத்தில் காணப்பட்ட 140 ஹக்டேயர் தேயிலை நிலத்தை 88 தொழிலாளர்களுக்கு பிரித்து வழங்கியுள்ளது.

இவ்வாறு பிரித்து வழங்கிய தேயிலை மரங்களை தொழிலாளர்கள் பராமரித்து அதில் பறிக்கப்படும் தேயிலையை நிர்வாகம் பெற்று வந்தது.

அதேநேரத்தில் தேயிலை நிலங்கள் பிரிக்கப்பட்டதால் பராமரிப்பு செலவை ஈடுசெய்ய முடியாத தொழிலாளர்கள் பலர் தேயிலை நிலங்களை கைவிட்டு நாளாந்த வருமானத்திற்கென மாற்று தொழிலை தேடி சென்றதால் இப்போது 52 தொழிலாளர்கள் மாத்திரமே தேயிலை தொழிலில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் ஏராளமான தேயிலை நிலங்கள் காடாகியுள்ளன. ஆனால் தற்போது தேயிலை தொழிலை நம்பி தமக்கு வழங்கப்பட்ட தேயிலை நிலத்தை பராமரித்து கொழுந்து பறித்து வரும் 52 தொழிலாளர்களில் 42 வயது தொடக்கம் 45 வயதுக்குட்பட்ட 25 தொழிலாளர்களை தொழிலில் இருந்து விலகி தமக்கான சேவைக்கால பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு தோட்ட நிர்வாகம் பலவந்தப்படுத்துகிறது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் தொழிலாளர்களுக்கு நிர்வாகம் கொடுக்கும் கெடுபிடிகளால் எதிர்காலத்தில் பாரிய பாதிப்புகளுக்கு தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

அதேநேரத்தில் ஹைபொரஸ்ட் தோட்ட நிர்வாகம் வயது குறைந்த தொழிலாளர்களை பலவந்தமாக பணி விலக பணித்து வரும் செயற்பாட்டை எதிர்த்து சகல தொழிற் சங்கங்கள் ஒன்று திரண்டு தொழில் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பிரதேச சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

# பல்வேறு வடிவங்களில் நெருக்குதலை சந்திக்கும் மலையக சமூகம்

பன். பாலா ...

நாட்டின் சமகால பொருளாதார தன்மை மலையக மக்களை வெகுவாக பாதித்துள்ளது. பிந்திய நிகழ்வுகளாக மண்ணெண்ணெய், மா விலை அதிகரிப்பு மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக இம்மக்களைப் போட்டு வதைக்கின்றது. மண்ணெண்ணெய் விலை ஏற்றத்தை சமாளிக்க நிவாரணம் வழங்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இடைக்கால வரவு செலவுத் திட்ட உரையின் போது குறிப்பிட்டிருந்தார். எனினும் இதுவரை எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டதாக தெரியவில்லை.

பொருளாதார ரீதியிலான அழுத்தம் மனோ ரீதியிலான முரண்களை உருவாக்கவே செய்யும். இதனைத் தான் அமரார் ஆசிய ஜோதி நேரு 'பொருளாதாரம் சிறப்புற்றால் தான் தன் மானத்துடன் வாழலாம்' என்று கூறிச் சென்றார். தனிமனித இயல்பு வாழ்க்கை எப்படி பாதிப்புக்கு உள்ளாகின்றதோ அதே போல அரசியல் மட்டத்திலும் தளம்பல் நிலையைத் தோற்றுவிக்க பொருளாதார வீழ்ச்சி சூழ்ச்சி செய்வது தவிர்க்க இயலாத சமாச்சாரமே ஆகும்.

இதனை நேருஜீ எளிமையாக சொல்லி வைத்திருக்கின்றார். 'வறுமை வாசல் வழியாக பிரவேசித்தால் ஜனநாயகம் யன்னல் வழியாக வெளியேறி விடும்! என்கிறார் அவர். என்ன பொருத்தமான கூற்று. ஜனநாயகத்தின் முக்கிய பண்புகளில் ஒன்று சகிப்புத் தன்மை. அது இல்லாமல் போகும் பட்சத்தில் பாதிப்பு பல்வேறு வடிவங்களில் பாடாய்ப்படுத்தும். அப்படியொரு இக்கட்டான நிலைக்கு மலையக சமூகம் தள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் சுமார் ஒன்றரை இலட்சம் பேர் வரையிலேயே பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இருக்கின்றார்கள். ஒரு காலகட்டத்தில் 15 இலட்சமாக இருந்தது இத்தொகை. இன்று நிலைமை தலைக்கீழாக மாறி வருகின்றது. இதற்கான காரணிகள் பல இருக்கின்றன. இருந்தும் அடிப்படை உந்துதலாக இருப்பது வறுமை தான்.

உழைக்க மறுப்பவர்களைத் தான் வறுமை வதை செய்யும் என்பார்கள். கார்ல் மார்க்ஸின் சித்தாந்தமும் இது தான். ஆனால் பெருந்தோட்டச் சமூகம் உழைக்க சோம்பலாளர்கள் அல்லவே. அவர்கள் வாழப்பிறந்தவர்கள் என்று சொல்வதை விட உழைக்கப் பிறந்தவர்கள் என்று மகுடம் சூட்டினாலும் தகும். ஆனால் உழைப்புக்கு ஏற்ற உபகாரம் எதனையும் இதுவரை பெறாமலே இருக்கும் பரிதாபத்துக்கு உரியவர்கள்.

இந்த ஓரங்கட்டல் தான் இன்றுவரை இவர்களை பின்னடைவிற்கு தள்ளிவிட்டுள்ளது. இதற்கு இதுவரை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், இவர்களை வழிப்படுத்திய தலைமைகள், தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் அனைத்துமே பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. கூடவே புத்திஜீவிகளும் அடக்கம்.

இம்மக்களின் குரலுக்கு செவிசாய்க்கக் கூடிய பின்புலம் நாட்டில் இல்லை. இதனால் வாக்களிக்கும் அங்கீகாரம் பெற்றிருந்தும் தேசிய ரீதியல் பேரம் பேசக் கூடிய பலத்தை இச்சமூகம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றது என்பதை மறுப்பதற்கு இல்லை. இதனால் தமது தேவைகளுக்கான அழுத்தத்தை பிரயோகிக்க கூடிய வாய்ப்பின்றி அரசியல்வாதிகளின் பின்னால் அலையாய் அலைய வேண்டிய அவலம்.



மலையக அரசியல்தளம் ஸ்திரமாக இருப்பதாக படவில்லை. எங்கும் சுயநல தேவைகளுக்கான நிகழ்ச்சி நிரலுடன் ஓடியாடித்திரியும் அரசியல்வாதிகள் ஏராளம். தொழிற்சங்கங்களும் பலவீனமடைந்து போயுள்ளன. இதனால் ஓர் அசமந்த சூழல் அரசோச்சுகின்றது. அதிரடியான சமூக மாற்றத்துக்குத் தான் உடனடியாக எதனையும் சாதிக்க முடியாது என்றால் கல்வி சார் சமூகம் ஒன்றின் எதிர்கால முன்னேற்றத்திற்காக எதையாவது செய்ய வேண்டாமா?.

## சவால்களுக்குள்ளாகும் மலையகக் கல்வி

நடைமுறை சிக்கல்களால் மாணவர் கல்வி நிலை பின்னடைவு கண்டு வருகின்றது. பாடசாலை வரவில் குறைபாடு, பாடசாலை இடைவிலகல், ஆர்வமில்லாத கற்றல் போக்கு, தேடலில் ஆர்வமின்மை என்று ஒரு தேக்க நிலை மலையக கல்விச் சூழலைக் கவ்விக் கொண்டு இருப்பதாக கல்வியியலாளர்கள் கருத்திடுகிறார்கள். இதனால் மந்த போஷணத்துக்கு மாற்று ஏற்பாடு எத்தனை அவசியமோ அந்தளவுக்கு மந்தமான கற்றல் போக்குக்கும் மாற்று ஊட்டம் தேவைப்படுகிறது.

குறிப்பாக தொழிற்சங்கங்கள் தமது முழுமையான கவனத்தை மலையக கல்வி அபிவிருத்தியின் பால் செலுத்துவது முக்கியமானது. இந்த தொழிற் சங்கங்களுக்கு மாதாந்த சந்தா பணம் மூலம் புலமை பரிசில், தொழிற் பயிற்சி என்பவற்றுக்குச் செலவிட முடியும். ஏற்கனவே இதற்கான கட்டமைப்புகளை சில தொழிற்சங்கங்கள் கொண்டிருக்கின்றன. இருந்தும் முழுமையான பயன்பாடுகளைத் தான் பெற முடிவதில்லை என்று முணு முணுப்பு எழாமல் இல்லை.

பல தொழிற்சங்கங்கள் பல் தேசிய தொண்டு நிறுவனங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளன. இவைகள் மூலம் வருடாந்தம் நிதி ஆதாரங்கள் கிடைக்கின்றன. இந்த உதவிகள் பெருந்தோட்டத் தொழிலாளர்களை மையப்படுத்தியே கிடைக்கின்றன. பாடசாலை அபிவிருத்தி, கல்வி மேம்பாடு, தொழில்சார் பயிற்சி நெறிகளை வழங்குவதற்கென பெருந்தொகையான நிதி கிடைக்கின்றது. அதே நேரம் இங்கு இயங்கும் பல அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், சிவில் அமைப்புகளும் வெளிநாடுகளில் இருந்து நிதியுதவிகளைப் பெற்று வருகின்றன. இந்த நிதிகள் செலவு செய்யப்படும் விதம் பற்றி யாருக்கும் தெரியாது. சில அமைப்புகள் செயலமர்வுகளை நடத்துவதற்கு மட்டுமே நிதியினைச் செலவிடுகின்றன. வேறு சில நிறுவனங்கள் ஆய்வுகளுக்கும் அறிக்கைகளுக்கும் மாத்திரமே பணத்தை இறைக்கின்றன. வெளிநாட்டு நிதி மூலம் நிர்வாக முகாமைத்துவ வசதிக்காக கட்டட வசதிகளும் சில அமைப்புகளுக்கு உண்டு.

கடந்த காலங்களில் இவ்வாறு கிடைக்கப்பெற்ற பெருந்தொகையான நிதிக்கு நடந்த கதி பற்றி மலையக புத்திஜீவிகள் கேள்வி எழுப்பவே செய்கின்றனர். பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி மேம்பாடு, தொழில் பயிற்சிக்கென வழங்கப்பட்ட வாகனங்கள், கட்டடங்கள், இயந்திர உபகரணங்கள் தன்னிச்சையாக விற்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெறவே செய்கின்றன. குறிப்பாக மக்கள் பயணத்துக்காக இந்தியாவினால் வழங்கப்பட்ட 50 மினிரக பஸ் வண்டிகள் விற்பனையில் முறைகேடுகள் இருப்பதாக கூறப்பட்டது.



இது போலவே கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான கணனி மற்றும் தொழிற் பயிற்சி உபகரணங்களும் காணாமற் போன திருவிளையாடல்களும் நடந்துள்ளன. விற்கப்பட்டதாக அல்லது காணாமற் போய் விட்டதாக கூறப்படும் சாதனங்கள் பற்றி பொறுப்புக் கூறலை முறையாக எவருமே ஏற்கவில்லை. எல்லாமே மூடி மறைக்கப்பட்ட சங்கதியாகிப் போனது.

இவ்வாறான கையாடல், மோசடிகளால் ஒரு சமூகத்தின் எதிர்கால சந்ததியினருக்கு துரோகம் இழைப்பது பற்றி சம்பந்தப்பட்ட தரப்புகள் இனியாவது யோசிக்க வேண்டும். நாட்டின் கல்வி போதனை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. ஆனால் பிற சமூக மாணவர்களிடம் காணப்படும் ஆர்வமும் அக்கறையும் இன்னும் மலையக மாணவர்களிடம் வந்து சேரவில்லை என்றே ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

இதற்கான காரணங்களும் இனம் காணப்பட்டுள்ளன. இதில் முக்கியமானது மூவேளை உணவு சம்பந்தமானது. குறிப்பாக காலை உணவு விவகாரம். பல பெருந்தோட்டப் பிள்ளைகள் முழு பட்டினியாகவோ, பாதி வயிற்றோடோதான் பாடசாலைக்கு சமுகம் அளிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வினால் முழுமையான சத்துணவை பிள்ளைகளுக்கு வழங்க பல பெற்றோரால் இயலாதுள்ளது. போக்குவரத்து செலவினங்கள், பாடசாலை உபகரணங்கள் விலை பன்மடங்கு உயர்ந்து போயிருப்பது பாரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

இதனால் முழுமையான கல்வியைப் பெறுவதில் தடங்கல் நிலைமையே ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து பெருந்தோட்டப் பிள்ளைகள் மீள்வதற்கு உடனடி வேலைத்திட்டங்கள் அவசியமாகின்றது. எனவே இந்த இக்கட்டான சூழ்நிலையில் தொழிற்சங்க தரப்பு, அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள், சிவில் அமைப்புகள், வசதிபடைத்தோர் இம்மாணவர்களுக்கு கை கொடுக்கும் கைங்கரியங்களில் இறங்குவது நல்லது. இது பெற்றோர்களது சிரமங்களைக் குறைக்க பெரிதும் உதவும். மாணவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். இதே போல இம்மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் அரசியல் மட்டத்தில் ஆக்கப்பூர்வமாக செயற்பட்டு காரியமாற்றுவது அவசியமானது.

இது அவர்களின் கடப்பாடு. அவர் என்ன செய்யப் போகிறார், இவர் என்ன செய்யப் போகிறார் என்று வேவு பார்த்துக் கொண்டிராமல் தத்தமது கடமையைச் சரியாக நிறைவேற்ற இந்த அரசியல் தலைமைகள் முன்வர வேண்டியது மிக மிக முக்கியமானது. இது உடனடி தேவையுமாகும்.

# அபிவிருத்தியில் அநாதையாக்கப்பட்ட உடப்புஸ்ஸலாவை நகரம்

வலப்பனை பிரதேச சபைக் குட்பட்ட உடப்புஸ்ஸலாவை நகரில் காணப்படும் உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய அபிவிருத்தி குறைப்பாடுகளை நிவர்த்திக்க உள்ளூராட்சி மன்றம் உட்பட நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.



உடப்புஸ்ஸலாவை நகரம் அபிவிருத்தியில் அனாதையாக்கப்பட்ட நகரமாக காணப்படுகிறது. இதனால் நகர வர்த்தகர்கள், மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக உடப்புஸ்ஸலாவை நகர வர்த்தக சங்கத் தலைவர் நிஸாந்த ஹர்ச குமார, உப தலைவர் கிட்ணன் முத்து குமார்(சசி)சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் புஸ்ப குமார ஆகியோர் ஊடக சந்திப்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது....

உடப்புஸ்ஸலாவை நகரம் மிக பழைமை வாய்ந்த நகரமாகும்.இந்த நகரம் வலப்பனை பிரதேச சபைக்கு வருமான வரி செலுத்தி வருகின்ற போதிலும் வலப்பனை பிரதேச சபை ஊடாக அபிவிருத்திகள் ஏதும் இடம்பெறாமல் புறக்கணிக்கப்பட்ட நகரமாகவே காணப்படுகிறது.

நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு தாராளமான குடிநீர் கிடைப்பதில்லை.நாள் ஒன்றில் காலை நேரத்தில் அரை மணித்தியாலம் மாத்திரமே குடிநீர் வழங்கப்படுகிறது.

இதனால் வீட்டு தேவைகள் உட்பட ஏனைய தேவைகளுக்கு நீரின்றி அசௌகரிகத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

அத்துடன் நகரில் பொது மலசலக் கூடம் ஒன்றில்லை இதனால் நகர வாசிகள் உள்ளிட்ட நகருக்கு அன்றாடம் வருகை தரும் மக்களும் பாதிக்கப்படுவதுடன் நகரில் மறைவிடத்தை தேடி தமது தேவையை நிறைவேற்றும் அவல நிலை உள்ளது.

அதேபோல இந்த நகரின் பிரதான வீதி கடந்த காலங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலம் காபட் இட்டு செப்பனிட்ட போதிலும் உடப்புஸ்ஸலாவ நகரிலிருந்து வெளி பிரதேசங்களுக்கு செல்ல காத்திருக்கும் பயணிகளுக்கு பஸ் தரிப்பிடம் இல்லை. இதனால் வெயில் மற்றும் மழைக் காலங்களில் பயணிகள் அவஸ்தைப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

மேலும் உடப்புஸ்ஸலாவை நகரில் நாள் சந்தை அல்லது வாராந்த சந்தை இல்லாத காரணத்தால் மரக்கறி கொள்வனவு செய்வதில் மக்கள் மிகவும் பாதிப்படைகின்றனர்.

அத்துடன் பொதுவான நூலகம் ஒன்றும் இல்லை.

நகரில் குறுக்கு வீதிகளுக்கு வீதி விளக்குகள் இல்லை. அதேபோல முச்சக்கர வண்டி தரிப்பிடம் மற்றும் பொது வாகன தரிப்பிடம் இல்லை.இது போன்று பல்வேறு குறைப்பாடுகளுடன் காணப்படும் இந் நகரம் தொடர்பில் பிரதேச சபையும் அக்கறை காட்டுவதாக இல்லை.

எனவே தோட்ட மக்கள்,கிராம மக்கள்,வெளி பிரதேச மக்கள் என அதிகமாக வந்து செல்லும் இந் நகரம் அபிவிருத்தியில் அனாதையாக காணப்படுவதால் அரசியல்வாதிகள்,அதிகாரிகள் அக்கறை காட்ட முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.




மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்திட்டத்தின் ஆதவுடன் நடைமுறைப்படுத்திய மொழி உரிமைகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு திட்டம் சம்பந்தமான திட்ட வளர்ச்சி பற்றிய செயலமர்வு கண்டி டெவோன் ஹோட்டலில் மனித அபிவிருத்தி தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கண்டி மாவட்ட மேலதிகச் செயலாளர் ஜே. பீ. யூ. கே ஜயரத்ன கலந்து கொண்டார். அத்தோடு செயற்றிட்ட அதிகாரி திருமதி லோகேஸ்வரி உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். தேசிய சமத்துவமான மொழி மூலத்தைக் கற்றுக் கொள்ள சிங்கள, தமிழ் பாடசாலை மாணவர் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. படங்கள் மாவத்தகம தினகரன் நிருபர்

# ஐக்கிய தேசிய கட்சியின் 76வது வருடாந்த மாநாடு; ஒரு பார்வை



இலங்கை சுதந்திரமடைந்து 76 வருடங்களை அடுத்த வருடத்தில் கொண்டாடவிருக்கும் நிலையில் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் உதயமான முதலாவது அரசியல் கட்சியாக தேசபிதா டி.எஸ். சேனாநாயக்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி அதன் 76ஆவது மாநாட்டை கடந்த வாரத்தில் நடத்தியுள்ளது. இந்த நிலையில் அக்கட்சியின் பயணப்பாதையை மீளாய்வு செய்து பார்ப்பது பொருத்தமுடையதாக இருக்கும் என நம்புகின்றேன்.

இன, மத, மொழி பேதங்களைக் கடந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் பறங்கியர் என அனைத்து மக்களையும் ஒரேகுடையின் கீழ் இணைக்க ஆரம்பிக்கப்பட்டதே இந்த ஐக்கிய தேசியக் கட்சியாகும். ஜனநாயக விழுமியங்களை உள்வாங்கியதாகவே இந்தக்கட்சி பரிணமித்தது. தேசத்தின் சுதந்திரத்திற்காக பங்களிப்புச் செய்த பல தலைவர்கள், இன, மத, மொழி பேதமின்றி ஒன்றாகத்திரண்டு இக்கட்சியை தோற்றுவித்துள்ளனர்.

1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சி கொழும்பில் பாம்கோர்ட் இல்லத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நாடு சுயாதிபத்தியமுள்ள சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. சுதந்திர இலங்கையின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதமராக தேச பிதா டி.எஸ். சேனாநாயக்க பதவியேற்றார். தனது அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவையில் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் என நான்கு சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சரவையை நியமித்தார். தனது கட்சியோ, அரசாங்கமோ இனவாதமில்லாத அனைத்து இனமக்களையும் உள்வாங்கியதான கட்சியாகவும் அரசாங்கமாகவும் இருப்பதை அவர் அன்று உத்தரவாதப்படுத்தினார்.

எமது நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக பௌத்த சிங்கள மக்களே காணப்பட்ட போது தமிழ், முஸ்லிம், பறங்கியர் சமூகங்களையும் இணைத்துக் கொண்டே ஐக்கிய தேசிய கட்சி ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பயணித்தது. அனைத்து மக்களையும் இலங்கையர்கள் என்ற பார்வையிலேயே அக்கட்சி பயணித்தது. இன்றும் கூட அதே சித்தாந்தத்தில் தான் அக்கட்சியின் பயணம் தொடர்கிறது. நாட்டை பல தடவைகள் ஆட்சி செய்த கட்சியாகவே ஐக்கிய தேசிய கட்சி காணப்படுகிறது.

சில தேர்தல்களில் அக்கட்சி தோல்விகளைச் சந்தித்த போதிலும் அத்தோல்விகளால் துவண்டு போகாமல் அடுத்தடுத்த காலங்களில் மீண்டெழக்கூடிய பலத்தை அக்கட்சி பெற்றெடுத்ததை வரலாறு காட்டி நிற்கின்றது



2019ல் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியால் ஒரு ஆசனத்தைக் கூட வென்றெடுக்க முடியாது போனது. அதற்கு மூல காரணம் எதிரணியினரால் முன்னெடுக்கப்பட்ட இனவாத சிந்தனையே.

2019 தேர்தலில் மிக மோசமான பின்னடைவுக்கு ஐ.தே.கவின் உட்கட்சி பூசல்களும் ஒரு காரணமாக அமைந்ததெனலாம். இதற்கு தலைமைத்துவப் போராட்டம் முதற் காரணியாகும். தற்போதைய எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கட்சியிலிருந்து முக்கியமான பலரும் வெளியேறியமை முக்கியமானதாகும். இது மாற்றத்தரப்புக்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தது.

வெற்றி தோல்வியென பல சவால்களை எதிர்கொண்டு ஐக்கிய தேசியக்கட்சி இன்று பவள விழாவைக் கடந்து அதன் பயணத்தை தொடரும் நிலையில் அது ஆரம்பிக்கப்பட்ட செப்டெம்பர் 6 ஆம் திகதி அதன் 76வது மாநாட்டை கொழும்பில் நடத்தியது. ஒரேயொரு ஆசனத்துடன் கூடிய கட்சியின் இந்த மாநாட்டில் யாருமே எதிர்பார்க்காதவகையில் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என நாளா பிரதேசங்களிலுமிருந்து அதன் பேராளர்கள் திரண்டு வந்து சுகததாஸ உள்ளக அரங்கில் கூடியதன் மூலம் கட்சி மீண்டும் புத்துயிர் பெற்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கட்சி பீனிக்ஸ் பறவையாய் மீண்டெழும் பலத்தை பெற்றுக் கொண்டிருக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

பத்தாயிரத்திற்கும் கூடுதலான பேராளர்கள் மண்டபத்தில் நிரம்பியிருந்தனர். எந்தச் சவால் குறித்தும் அலட்டிக் கொள்ளாத தலைமைத்துவப் பண்புடன் கட்சித்தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு இரும்பு மனிதராகவே காணப்பட்டார். தானொரு மக்கள் தலைவன் என்பதை அவரது மனத்திடம் வெளிக்காட்டியதை இங்கு அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

கனவான் அரசியல் செய்வதில் வல்லமை மிக்கவன் என்பதை ரணில் விக்ரமசிங்க சரியான முறையில் வெளிப்படையாகவே காட்டியுள்ளார்.

வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டையே ரணிலின் அரசியல் பயணப்பாதை காட்டி நிற்கின்றது. சலசலப்புகளைக் கண்டு அலட்டிக் கொள்ளாத அடியெடுத்து படியேறும் ஆளுமையே அவரது பயணப்பாதையாகும். ஆட்டம் காணமுடியாத ஆல விருட்சத்தின் ஆணிவேராக தன்னை பலப்படுத்திக்கொண்டு ஜனநாயகத்திற்குள்ளும் ஒரு சர்வாதிகாரம் இருக்கின்றது என்பதை அவர் ஆணித்தரமாக வெளிக்காட்டியுள்ளார்.

இன்று வெளியேறிய, வெளியே நின்று பார்க்கும் சக்திகள் மூக்கில் விரல்வைத்துப் பார்க்கும் வகையில் தன்பணியை தொடர்ந்து கொண்டிருக்கின்றார். தனியொருவனாய் நின்று ஆலமரம் விழாதவகையில் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

கட்சியாளர் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட சமயத்தில் ஐக்கிய தேசிய கட்சி துவண்டு போயிருந்தது. அவரது அரசியல் சாணக்கியத்தை நல்லதொருவியூகமாகப் பயன்படுத்தி கட்சியை மீளக் கட்டியெழுப்புவதில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெற்றி இலக்கைத் தொட்டவர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை உருவாக்கியபோது அன்னாரது அரசியல் பாடத்தைப் பெற்றுக் கொண்டவர் ரணில் விக்ரமசிங்க. ஏன் அரசியல் அரிவரி பாடத்தைக் கூட ஜே.ஆரிடமே ரணில் பெற்றுக் கொண்டார். ஜனநாயக அரசியலிலும் சர்வாதிகாரம் உண்டு என்பதை ஜே.ஆரிடமே அவர் கற்றுக் கொண்டார் என்றால் அது புதுமையான தொன்றல்ல.

பாரியதொரு அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டின் அதிகாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அந்தச் சவாலை தன்னால் வெற்றிகொள்ள முடியும் என்பதை அன்னாரது 76ஆவது மாநாட்டுப் பேருரையின் மூலம் வெளிக்காட்டியிருக்கின்றார.

மாநாட்டின் தொனிப்பொருளான ஒன்றாய் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று அறைகூவலை விடுத்திருக்கின்றார். எம்மிடையே பலகட்சிகள் இருக்கலாம் ஆனால் நாமனைவரும் இலங்கையர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். நாம் ஒரு தாய் மக்களாவோம். இலங்கை மாதாவின் பிள்ளைகள் கட்சி அரசியலை தேர்தலோடு மட்டுப்படுத்திக் கொள்வோம். இன்று வீழ்ந்து போயுள்ள நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபடுவோம் என்ற அழைப்பை விடுத்திருக்கின்றார். இதுதான் ஜனநாயக அரசியல் பண்பு என்பதை சூசகமாக வெளிக்காட்டியிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்த அழைப்பு இன்று நாட்டின் மீது பற்றுக் கொண்டுள்ள அரசியல் சக்திகளை விழிப்படையச் செய்துள்ளது. பலகட்சிகளிலும் இருக்கின்ற அரசியல்வாதிகளையும் அவற்றின் ஆதரவாளர்களையும் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது. மக்கள் மத்தியில் கூட விழிப்புணர்வை ஏற்படுத்தி இருக்கின்றது.

பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் துவண்டு போயுள்ள தேசத்தை, இருள் சூழ்ந்துள்ள நாட்டை மீண்டும் ஒளிபரவச் செய்யக்கூடிய பலமும், சக்தியும், தமது நாட்டுக்கு உண்டு என்பதை ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் 76வது மாநாட்டுப்பேருரை வெளிச்சம்போட்டுக்காட்டி இருக்கின்றது. ரணிலின் ஆழ் மனநம்பிக்கைப் பயணம் நிச்சயம் வெற்றிப் பயணமாக அமையும் என்பதை உறுதியாக நம்பலாம். நாளைய விடியல் நாட்டுக்கான விடிவாக ஒளிபரவும் என்பதே நிதர்சனமானது.

கலாபூஷணம்
எம்.ஏ.எம். நிலாம்...

---

## அரிசி அரசியல் 06

அருள் சத்தியநாதன்

# பெரும்பாலான பஞ்சங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவையே!

உலகின் பெரும்பாலான பசி, பட்டினி, பஞ்சங்கள் இயற்கையின் சீற்றத்தால் உருவானவை அல்ல என்பது அதிர்ச்சி தரக்கூடிய ஒரு உண்மை. அவை மனிதர்களால் உருவாக்கப்படுபவை என்பதை எழுபதுகளில் உணர்ந்த போது மனிதர்கள் இவ்வளவு மோசமானவர்களாக இருக்க முடியுமா என்று கேள்வியே பலரிடமும் எழுந்தது. சூடான், எத்தியோப்பியா, வங்கதேசம் ஆகிய நாடுகளில் உணவுக்கு அல்லாடும் தருணங்கள் உருவான போது வரட்சி அதற்கு காரணம் அல்ல; அந்நாடுகளை ஆண்ட ஆட்சியாளர்களே வறட்சியால் ஏற்பட்ட பஞ்ச நிலை வெகு மோசமானதற்குக் காரணம் என்பது தெரியவந்து.

ஆட்சியாளர்களின் தான்தோன்றித்தனமான செய்கைகள், திட்டங்கள், தன்னை முதன்மைபடுத்தி ஆட்சி செய்ததால் நாடு இயக்கமற்று போதல், மக்களை முதன்மை படுத்தாத ஆட்சியாளர்கள் என்பன நாடுகளில் பஞ்சம் உக்கிரமடைய காரணமாயின.

உணவு பல நாடுகளில் பிரச்சினையாக இருந்திருக்கிறது. பிரதான காரணம், தொலைநோக்குப் பார்வையற்ற, தம்மை முதன்மைப்படுத்திக் கொண்ட ஆட்சியாளர்களின் எதேச்சதிகார முடிவுகள். ஆபிரிக்க நாடுகள் அடிப்படையில் வளம் மிகுந்தவை. கனிய வளம், எண்ணெய் வளம், தாதுக்களின் வளம் கொண்டவை. அதேசமயம் மழையற்ற வரட்சியான கால நிலை கொண்ட சஹாராவை அண்டிய புருண்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, அங்கோலா போன்ற நாடுகள் வரட்சியால் பாதிக்கப்பட்டாலும் பல நாடுகளில் பஞ்சமும் பட்டினியும் ஏற்படுவதற்கு மனிதர்களே காரணம்.

கட்டுப்பாடற்ற சனத்தொகை வளர்ச்சி, யுத்தங்கள், அகதிகளாக இடம் பெயர்தல், இனங்களுக்கு இடையிலான முறுகள் நிலை, ஆட்சிக்கு வருபவர்கள் நிலவள, நீர்வள, சனத்தொகை முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு பதிலாக தமக்கும் தமது குடும்பங்களுக்கும் செல்வத்தை நாட்டை சுரண்டுவதன் மூலம் சேர்ப்பது, அரசியல் காரணங்களுக்காக செல்வந்த நாடுகள் இத்தகைய பாதிக்கப்பட்ட நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வருவது என்பனவற்றை மனிதன் உருவாக்கும் பஞ்சம் பட்டினி நிலைமைகளாகக் குறிப்பிட முடியும். பெரும்பாலும் இத்தகைய நாடுகளில் ஜனநாயகக் கோட்பாடுகள் நிலவுவது கிடையாது. ஜனநாயகம் ஒரு நாட்டில் இல்லை என்றால் மக்களின் கட்டுப்பாட்டில் தலைவர்கள் இல்லை என்பதுதானே அர்த்தம்! குழுக்களின் ஆட்சி, தனிமனிதனின் ஆட்சி என்பன அப்போதுதான் தலை விரித்தாடுகின்றன. ஆபிரிக்க நாடுகள் இயற்கை பொய்த்ததால் பஞ்சம், வறுமையில் வீழ்ந்ததை விட தனி நபர்கள் மற்றும் குழுக்களின் ஆட்சியால் சீரழிந்ததே அதிகம். சிம்பாப்வே ஒரு ஜனநாயக நாடுதான். ரொடீஷியா என்ற நாடே 1979 ஏப்ரல் 18ம் திகதி சிம்பாப்வே என்ற பெயருடன் சுதந்திர நாடானது. அப்போது பிரதமரமான ரொபர்ட் முகாபே 2017வரை பதவியில் இருந்தார். அவர் நடத்திய தேர்தல்கள் அனைத்துமே நியாயமாக நடைபெற்றவை அல்ல. ஆனால், உணவுப் பிரச்சினையையும் இனவாதத்தையும் ஊக்குவித்து அதன் மூலம் வெற்றிகளை இலங்கை அரசியல் கட்சிகள் பெற்றுக் கொண்டனதைப் போலவே, சிம்பாப்வேயில் வாழும் வெள்ளை இனத்தவர்களை உசுப்பேற்றியே தன் பதவியை 38 வருடங்களாக நீடித்து வந்தார் முகாபே. அவர் பதவி விலகியபோது அவர் ஒரு பெரும் பில்லியனர். மக்கள் பரம ஏழைகள்.

இலங்கை முறையாக ஆளப்படவில்லை என்பதை இந்நாட்டின் மோசமான பொருளாதார நெருக்கடி அனைவருக்கும் உணர்த்தியுள்ளது.

1947இல் இந்நாடு சுதந்திரம் அடைந்த போது இந் நாட்டின் உணவுக்கு பிரச்சினை இருந்தது. அதாவது எமது பிரதான உணவான அரிசிக்கு ஆங்கிலேயர் இந்நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னர் நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறவு அடைந்திருந்ததாகவும் அரிசி உற்பத்தியில் ஆங்கிலேயர் அக்கறை கொள்ளாமல் இறக்குமதி செய்வதில் ஈடுபட்டதால் அரிசி உற்பத்தி குறைவடைந்ததாகவும் தகவல்கள் உள்ளன. இதில் உண்மை இருக்கவே செய்கிறது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் உதாசீனம் செய்யப்பட்ட அரிசி உற்பத்தி அதன் பின்னர், எழுபது ஆண்டுகளின் பின்னரும் தன்னிறைவை எட்ட முடியாமற் போனதற்கான காரணம் என்ன என்ற கேள்விக்கு இந்நாட்டை ஆண்ட அனைத்து ஆட்சியாளர்களுமே காரணம் என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டியதில்லை.

அரிசி இலங்கை அரசியலுக்குள் வந்தது இப்படித்தான். மக்கள் தொகை 1950களில் குறைவாக இருந்த போதிலும் உள்ளூரில் போதிய அரிசி உற்பத்தி செய்யப்படவில்லை. அதே சமயம் மூவேளையும் சோறு சாப்பிட மக்கள் பழக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பலரும் வயிறு நிறைய சோறு சாப்பிட வேண்டியிருந்தது. வயிறாற சோறு சாப்பிடாவிட்டால் தூக்கம் வருவதில்லை என இன்றைக்கும் பலர் சொல்லத்தான் செய்கிறார்கள். எனவே குறைந்த விலைக்கு அரிசியை கிடைக்கச் செய்து மூவேளையும் அரிசிச்சோறு சாப்பிடத்தராத அரசை மக்கள் பதவியில் அமர்த்தத்தயாராக இல்லை என்பதை அன்றைய அரசியல் தலைவர்கள் நன்றாகவே உணர்ந்திருந்ததால் அவர்கள் அரிசி அரசியலை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தனர். அது இரண்டு கொத்து அரிசியை 25 சதத்துக்கு அல்லது இலவசமாக வழங்கவே ஆட்சியாளர்களை அல்லது அரசியல் கட்சிகளைத் தூண்டியது. அதிக விலைக்கு அரிசியை இறக்குமதி செய்து மிகக் குறைந்த விலைக்கு, வாக்கு வங்கிகளை பேணும் நோக்கத்தோடு, ஆட்சியாளர்கள் அரிசியை வழங்கி வந்தார்கள். ஆனால் அவர்கள் அந்த அளவுக்கு அரிசி உற்பத்தியில் ஆர்வம் காட்டினார்களா என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது.

1965இல் பதவிக்கு வந்த டட்லி சேனாநாயக்க, நாட்டில் நெல் உற்பத்தியை விஸ்தரிக்க வேண்டும் என்பதில் விசாலமான திட்டங்களை நடைமுறைப்படுத்திய டீ.எஸ். சேனாநாயக்கவின் மகன். 1953 ஹர்த்தாலில் பாதிக்கப்பட்டவர். எனவே விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதில் முனைப்பு காட்டிய அவர், பசுமைப் புரட்சி என்ற பெயரில் விவசாயப்புரட்சிக்கு வித்திட்டார். இளைஞர்களை உள்ளடக்கிய விவசாய படையை உருவாக்கினார். விவசாய உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு டின்மீன் தயாரிப்பு தொழிற்சாலை பேசாலையில் நிறுவப்பட்டது.

1970இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாபெரும் வெற்றி பெற்று பதவிக்கு வந்ததும் டட்லியின் விவசாயத் திட்டங்கள் கைவிடப்பட்டன. விவசாயப் படை ஐ.தே.க காரர்களின் படை என்று சொல்லப்பட்டு கலைக்கப்பட்டது. அவர் காலத்தில் காணி சுவீகரிப்பு, பெருந்தோட்ட சுவீகரிப்பு என்பன மேற்கொள்ளப்பட்டதை விரிவாக இத் தொடரில் வாசித்திருப்பீர்கள். ஏற்கனவே நீடித்துக் கொண்டிருந்த அரிசி இறக்குமதி மற்றும் உள்நாட்டு அரிசி உற்பத்தி தொடர்பில் முறையான திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் அவற்றைப் பாதிக்கக் கூடிய விஷயங்களில் அரசு நாட்டம் செலுத்தியதாலும், எதிர்பாராத ஜே.வி.பி கிளர்ச்சியை அடக்க வேண்டியிருந்ததாலும், இலங்கைக்கு உதவக் கூடிய நாடுகளுடன் நல்லறவு கொள்ளத் தவறியதாலும் ஒரு அரிசி, மா, தட்டுப்பாட்டை இந்நாடு சந்திக்க நேர்ந்தது.

எனினும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் காலத்தில் மக்கள் விவசாயத்தில் ஆர்வம் காட்டத்தொடங்கினர். தரிசு காணிகளில் மரவள்ளி, காய்கறிகள் என்பன விளைவிக்கப்பட்டன. பல சிறு கைத்தொழில் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன. இவை மிகச் சாதாரண மக்களின் வாழ்வாதாரத்துக்கு மிகுந்த ஒத்தாசையாக இருந்தது.

வடக்கில் விவசாயம் செழித்தது. சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்ற உணர்வு மக்களிடைய ஏற்பட்டிருந்த போதிலும் அரசாங்கம் அச் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய பொருளாதாரத் திறனுடன் இருக்கவில்லை. எனவே பாணும், அரிசியும் போதுமான அளவுக்கு கிடைக்கவில்லையே; இறக்குமதி பொருட்களை நுகர்ந்து எவ்வளவு காலமாயிற்று என்ற மக்களின் ஆதங்கத்தை அன்றைய அரசினால் தீர்க்கமுடியவில்லை. அதை ஜே.ஆர். ஜயவர்தன தலைமையிலான ஐ.தே.க நன்கு பயன்படுத்திக் கொண்டது.

ஜே.ஆர். 1977இல் மிக முக்கியமான திருப்புமுனை முடிவுகளை மேற்கொண்டார். நாட்டை திறந்த பொருளாதாரத்துக்கு திறந்து விட்டார்.

வெளிநாட்டு பொருட்களும் முதலீடுகளும் உள்ளே வந்தன. துரித மகாவலித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. புதிய பாராளுமன்றம் உருவானதோடு ஜனாதிபதி முறையை மையப்படுத்திய புதிய அரசியலமைப்பு சட்டம் உருவானது. எல்லாம் சரிதான் ஆனால்,

முன்னைய அரசு காலத்தில் இலங்கையில் உருவான சுதேச கைத் தொழில்கள் போதிய கவனத்தைப் பெறத் தவறின. இறக்குமதி பொருட்களின் தரம் மற்றும் விலைக்கு முன்னால் சுதேச உற்பத்திகளால் நிற்க முடியவில்லை என்பதால் அவை நசிந்து போயின.



1964இல் சீனப் பிரதமர் சூ என் லாய் கொழும்புக்கு விஜயம் செய்தபோது அவர் அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடன் அரிசி இறப்பர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். சீனப் பிரதமருக்கருகே மூக்குக் கண்ணாடியுடன் காணப்படுபவர், பிரதமரின்செயலாளர் பிரட்மன் வீரக்கோன். ஸ்ரீமாவுக்கு பின்புறமாக கோட் அணிந்த பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க..

தற்போது மற்றொரு பொருளாதார மற்றும் உணவு நெருக்கடிக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம்.

பயிரிடுங்கள் என்ற கோஷம் வானளாவக் கேட்கிறது. போஷாக்கு குறைபாடு பெருமளவில் ஏற்பட்டு வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இவை 1970காலப் பகுதியை மீண்டும் நினைவு படுத்துவதாக உள்ளது. 48 ஆண்டுகளின் பின்னரும் இரவில் விழுந்த குழிக்குள் பகலிலும் நாம் விழுந்திருக்கிறோம் என்பதை இது உணர்த்துகிறது.

நாம் மீண்டும் எழுவதற்கான பணிகள் ஜனாதிபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீண்டுவரத்தான் போகிறோம்.

ஆனால் அந்தப் பாதை உறுதியான பொருளாதாரத்தை நோக்கி மட்டுமே இந் நாட்டை இட்டுச் செல்ல வேண்டுமே தவிர மற்றொரு படுகுழிக்குள் அல்ல என்பதில் மிக உஷாராக இருக்க வேண்டியது அவசியம்.

**(அரிசி அரசியல் முற்றுப் பெற்றது)**

## மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் (PGIM)

### கொழும்புப் பல்கலைக்கழகம்

## விண்ணப்பங்கள் / பரிந்துரைகளுக்கான அழைப்பு

## பணிப்பாளர் பதவி

கொழும்புப் பல்கலைக்கழகம், மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் (PGIM) இன் பணிப்பாளர் பதவிக்காக, 1978ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்ட இல. 16 மற்றும் அதன் அடுத்தடுத்த குறித்த திருத்தங்கள் மற்றும் 1980 இன் PGIM கட்டளை இல. 01 மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் விதிகளின்படி 2022 மே 23 திகதியிடப்பட்ட 10/2022 சுற்றறிக்கையின் பிரகாரம் பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள்/ பரிந்துரைகளை அழைக்கின்றது.

விண்ணப்பதாரிகள்/ பரிந்துரைப்பவர்கள் குழு சான்றிதழ் அல்லது மருத்துவ சிறப்புப் பிரிவில் முனைவர் பட்டம் (Phd அல்லது அதற்க சமமான) பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள்/ பரிந்துரைப்போர் இலங்கைப் பிரஜையாகவும் 63 வயதிற்கு குறைவானவர்களாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் 2023 ஏப்ரில் 01 முதல் புதிய நியமனத்தை நிர்வகிப்பதற்கும் வழி நடத்துவதற்கும் தகுதியும், அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். பணிப்பாளர்/ PGIM முழு நேர அதிகாரி, தலைமை நிர்வாக அதிகாரி, மற்றும் கணக்கு அதிகாரி பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும். அவர் PGIM இன் முதன்மை கல்வி அதிகாரி மற்றும் கணக்கு அதிகாரி பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்/ பரிந்துரைகளுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.**

I. பிறந்த திகதி (பிறப்புச் சான்றிதழின் ஓர் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்) மற்றும் தொடர்பு விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பதாரி/ பபரிந்துரைப்பவரின் (உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன்) முழுமையான சுயதரவு.

II. நிறுவனத்தின் வளர்ச்சிக்கான நோக்கினது ஓர் தனிப்பட்ட அறிக்கை

III. பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படின், விண்ணப்பதாரி/ பரிந்துரைப்பவர் அடைவுக்கான முன் மொழிவு எவ்வாறு என்ற ஓர் சுருக்கமான விபரம்.

IV. அலுவலகத்தின் முதல் காலத்தில் செய்த சாதனைகளை எடுத்துக்காட்டும் அறிக்கை

V. ஓர் நியமனம் ஏற்படின் பரிந்துரைப்பவரிடமிருந்து சம்மதத்திற்கான ஓர் கடிதம்

VI. இப்பதவிக்காக அவர் நியமிக்கப்படின் விண்ணப்பதாரி/ பரிந்துறைப்பவரை விடுவிக்க முடியுமா எனக் குறிப்பிட்டு தொழில் தருநரால் ஓர் கடிதம் (ஓர் விண்ணப்பதாரி/ பரிந்துரைப்பவர் அரச துறை, கூட்டுத்தாபனம், நியதிகள் சபை மற்றும் உயர் கல்வி நிறுவனம் தவிர்ந்த மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஆக இருப்பின்)

2022 மே 23ம் திகதிய ஆணைக்குழு சுற்றுநிருப இல. 10/2022இல் தரப்பட்டுள்ள அறிவுருத்தல்களின் பிரகாரம் தேர்வு நடைமுறைகள் இடம்பெறும்.

பஆகுமு சுற்றுநிருபம் மற்றும் ம.பா.பி.ப.நி ஓர் கடடளைகளை பின்வரும் இணைய தளங்களில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம் முறையே. https://www.ugc.ac.lk/index.php?option=com_content&view=article&id=2379%3Acommission-circular-no-102022-appointment-of-the-post-of-director-of-an-institute&catid=185%3A-circulars-published-in-2022-012022-and-above&Itemid=20&lang=en and https://pgim.cmb.ac.lk/ordinance-pgim/ 2022 செப்டம்பர் 26ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் மேற்படி அலுவலகத்தை அடையுமாறு பதிவுத் தபாலில், கொழும்பு 07 பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்த, இல. 160, மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், பிரதிப் பதிவாளருக்க முகவரியிட்டு, ஓர் பொறியிடப்பட்ட உறை/ கடித உறையில் விண்ணப்பங்கள்/ பரிந்துரைகளை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பணிப்பளர் பதவிக்கான விண்ணப்பங்கள்/ பரிந்துரை' எனக் குறிப்பிடுமாறு விண்ணப்பதாரிகள்/ பரிந்துரைப்போர் அறிவுருத்தப்படுகின்றனர்.

மூடப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள்/ பரிந்துரைகள் அல்லது மேற்படி அறிவுருத்தல்களுக்கு அமையாதவைகள் நிராகரிக்கப்படும்.

**பிரதிப் பதிவாளர்**
**மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்த**
**கொழும்பு - 07.**

**11.09.2022**

---

## நலன்புரி நன்மைகள் சபை

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

### விஷேட அறிவித்தல

<u>நலன்புரி நன்மைகள் செலுத்துதல் தொடர்பில் தகுதியான குடும்பம்/நபர்களை கண்டறிதல் - 2022</u>

2002ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 7(1) பிரிவின் பிரகாரம் நலன்புரி நிவாரண பலன்களை செலுத்துதல் தொடர்பில் தகுதியான அனைத்து குடும்பங்களையும்/நபர்களையும் கண்டறிய அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி நீங்கள் அரசின் மூலம் செயற்படும் சமுர்த்தி, முதியோர், அங்கவீனோர், சிறுநீரக நோய் மற்றும் பொது நிதி போன்றவற்றிலோ அல்லது நலன்புரி நன்மைகள் போன்றவற்றின் கீழ் ஏற்கனவே பயன் பெறுபவராக இருப்பின் அல்லது பயன் பெற குடும்பம்/தகுதியானவராயின் கீழ் காணப்பட்ட படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் நீங்கள் நிரந்தரமாக வசிக்கும் வசிப்பிடத்திற்கு தொடர்புடைய கிராம அலுவலர்/சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்/ சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் /முதியோர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட சான்றிதழ்களுடன் நீங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகத்திற்கு 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதிற்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பீ. விஜயரத்ன
தலைவர்/ஆணையாளர்
நலன்புரி நன்மைகள் சபை
1ம் மாடி, புது கட்டிடம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
கொழும்பு 01

தொலைபேசி - 0112484600 நீட்டிப்பு- 4117
தொலைநகல் -0112151482
welfarebenefitboard2016@gmail.com

### மாதிரி விண்ணப்பப் படிவம்

நலன்புரி நன்மைகள் செலுத்துதல் தொடர்பில் தகுதியான குடும்பம்/நபர்களை கண்டறிதல் - 2022

| அலுவலக பாவனைக்கு மட்டும் |
|---|
| |

01. விண்ணப்பிப்போரின் முழுப்பெயர்:-..........................................................
02. விலாசம்:-..........................................................
03. தொலைபேசி இலக்கம் -..........................................................
04. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
 வேறேதும் அடையாள அட்டை இலக்கம் இருப்பின் :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
05. மாகாணம் :- ☐ கிராம அலுவலர் பிரிவு :- ☐ சமுர்த்தி பிரதேசம் :- ☐
 மாவட்டம் :- ☐ பிரதேச செயலக பிரிவு :- ☐
06. நீங்கள்/குடும்பம் ஏதேனும் நலன்புரி நலத்திட்டத்தின் மூலம் பயனடைபவராயின் அந் நலன்புரி நலத்திட்டத்தின் பெயர்
 (1) .................................... தொகை (ரூ.) ☐
 (2) .................................... தொகை (ரூ.) ☐
07. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை ☐
08. நீங்கள் ஏதேனும் நலன்புரி நலத்திட்டத்தில் காத்திருப்பு பட்டியலிலுள்ளவராயின் அத் திட்டம்
 (1) .................................... (2) ....................................
09. நீங்கள் புதிதாக விண்ணப்பிப்பவரா? ஆம் ☐ இல்லை ☐
 நீங்கள் புதிதாக விண்ணப்பிப்பவராயின், விண்ணப்பிக்கும் நலன்புரி நலத்திட்டத்தின் பெயர் :-....................................

என் மூலமாக மேற்படி வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானது என்றும் சரியானது என்றும் இதன் மூலம் உறுதியளிப்பதோடு மற்றும் களத்தரவு சேகரிக்கும் போது தகவலை உறுதி செய்யப்படும் என்றும் தவறான தகவலை வழங்கினால் நலன்புரி நன்மைகள் சபையினால் பயன் ஏதும் கிடைக்கப்பெறாது என்றும் சான்றளிக்கின்றேன்.

.................................... ....................................
விண்ணப்பதாரியின் ஒப்பம் திகதி

மேற்குறிப்பிட்ட விடயங்கள் சரியானது என்று சான்றளிப்பதோடு ...................................., விண்ணப்பத்தை நலன்புரி நன்மைகள் திட்டத்தில் இணைக்க பரிந்துரைகின்றேன்

.................................... ....................................
கிராம அலுவலர்/சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்/ சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் /முதியோர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர் (உத்தியோகபூர்வ இலச்சினை மற்றும் கையொப்பத்தை விண்ணப்பிக்கவும்) திகதி

---

### பாதுகாப்பு அமைச்சு

### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## விலைமனுக்கோரல்

### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கேட்போர்கூட விராந்தையின் விளக்கு கட்டுப்பாட்டமைப்பினை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பரிசோதித்தல்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
**ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE(AUD)/ 04/2022**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கேட்போர்கூட கட்டிட விராந்தையின் தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.09.12** ஆம் திகதியிலிருந்து **2022.10.10** ஆம் திகதி வரை **மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூ.12,500/-** கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் **2022.09.12 முதல் 2022.10.10** ஆம் திகதி வரையான **அலுவலக நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை** சரிபார்க்கலாம் **(தொலைபேசி 0710219449 தொலைநகல் 011-2632430)**
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. **2022.10.11 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு **இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல் 011 2632430, directorlogistics@kdu.ac.lk** மற்றும் **விலைமனுக் கோரலில் www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம்).

**தவிசாளர்**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலான, இலங்கை.**

---

## இலங்கை வங்கி

### ஏல விலைகூறலுக்கான அழைப்பு

வாகனங்கள்/இயந்திர சாதனங்களை விற்பனை செய்வதற்கான
ஏல விலைகூறல் இல.01/2022

**கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை வங்கியின் வாகனங்கள்/இயந்திர சாதனங்களை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட விலைகோரல்கள் கோரப்படுகின்றன.**

இலங்கை வங்கி கடுவெலை வாகன முற்றம்

| Motor Lorry | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| NC LK 1145 | TATA LPT 709 | 2012 |

| Dual Purpose Cab | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| WP PS 9981 | FOTON BJ1010V0JA3-2 | 2012 |

| Motor Car | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| NW KE 5563 | MAZDA 323 | 2000 |

| Motor Coach | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| WP NB 2808 | SUNLONG SLK 6802 | 2012 |

| Three-Wheeler Car | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| WP YQ 8160 | BAJAJ RE 205 | 2011 |

இலங்கை வங்கி கல்முனைக் கிளை வாகன முற்றம்

| Four-wheel Tractor | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| WP RF 5096 | MAHINDRA YOVO 575 DISPS | 2018 |
| EP RF 6363 | MAHINDRA YUVO 575 DISPS | 2017 |
| EP RF 4029 | MASSEY FERGUSON MF-1540 | 2016 |
| EP RY 3888 | TRACTOR TRAILER | 2018 |

இலங்கை வங்கி டாலி வீதி வாகன முற்றம்

| Motor Car | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| NC KU 9387 | AUDI Q5 2.0LT | 2012 |

இலங்கை வங்கி குளியாப்பிட்டிய வாகன முற்றம்

| Motor Lorry | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| NW LO 5588 | ISUZU TPG-NPR85AN ELF | 2015 |

இலங்கை வங்கி புதிய நகரக்கிளை பொலன்னறுவை

| Motor Lorry | | |
|---|---|---|
| VEHICLE NO | MAKE & MODEL | YEAR |
| NC RE 9737 | NEW HOLLAND 4710 | 2016 |

1. 2022 செப்டெம்பர் மாதம் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையில் மேற்குறிப்பிட்ட வாகன முற்றங்களில் வாகனங்களைப் பார்வையிடலாம்.

   ஏல விலைகூறல் ஆவணங்களை 2022.09.22ஆம் திகதியிலிருந்து 2022.09.27ஆம் திகதி வரையில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை தவிர) முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 3.00 மணிக்கிடையில் பிரதான முகாமையாளர் (மாகாண அரவிட்டுப் பிரிவு) 3ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியில் அல்லது செப்டெம்பர் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிக்கிடையில் மேற்குறிப்பிட்ட வாகன வளாகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

   மீளளிக்கப்படாத பண வைப்பாக 2,000/- ரூபாவினை வரிகளுடன் (பெகூட்டு வரியும், தே.க.வரியும்) செலுத்தி ஏல விலைகூறல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. 2022.09.27 ஆம் திகதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஏல விலைகூறல் ஆவணங்கள் இறுதியாக வெளியிடப்படும்.
3. 2022.09.28 ஆம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு ஏல விலைகூறல் ஆவணங்கள் மூடப்படும்.
4. ஏல விலைகூறுவோர் எந்தவொரு வாகனத்திற்குமான விலைகூறலை சமர்ப்பிக்கலாம். அவையனைத்தையும் ஒரே ஆவணத்தில் குறிப்பிட்டு ஒற்றை தபாலுறையில் இட வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஏல விலைகூறலின் இலக்கத்தினையும் திறக்கப்படும் திகதியினையும் குறிப்பிட வேண்டும்.
5. ஒவ்வொரு விலைகூறலினதும் மொத்தப் பெறுமதியில் 5% இற்கும் குறையாத வங்கி வரைவானது (மீளளிக்கப்படும்) விலைகூறல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.
6. முத்திரையிட்டு ஒட்டப்பட்ட விலைகூறல் ஆவணங்களை பிரதான முகாமையாளர் (சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பிரிவு), 14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம், இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது இல.01, இலங்கை வங்கி மாவத்தை, இலங்கை வங்கி தலைமையகத்தின் தரைத் தளத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியினுள் 2022.09.28ஆம் திகதியன்று (விலைகூறல் முடிவுறும் திகதி) முற்பகல் 10.00 (விலை கூறல் முடிவுறும் நேரம்) மணிக்கு முன் இட வேண்டும்.
7. முழுமையற்ற மற்றும் தாமதித்து சமர்ப்பிக்கப்படும் ஏல விலைகூறல்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு தாமதமாகக் கிடைக்கப்பெறும் ஏல விலைக்கூறல்கள் தொடர்பான அஞ்சல் சான்றுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
8. ஏல விலைகூறல் நேரம் முடிவடைந்ததுமே அவை திறக்கப்படும். ஏல விலைகூறுவோர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் (ஒவ்வொரு விலைகூறுநருக்கும் ஒரு பிரதிநிதி) இல் ஏல விலைகூறலில் பங்குபற்றலாம்.
9. ஏல விலைகூறுவோர்/களின் தெரிவானது நிர்வாக சேவைகளுக்கான உதவிப்பொது முகாமையாளரால் ஏல விலைக்கூறல் முடிவுற்ற திகதியிலிருந்து மூன்று வேலை நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.
10. வெற்றிகரமாக தெரிவு செய்யப்பட்ட ஏல விலைக்கூறுவோர்/கள் மிகுதித் தொகையினை செலுத்தி (ஏல விலைக்கூறல் தொகை-வங்கி வரைவுத் தொகை) ஏல விலைகூறுவோரின் தெரிவு அறிவிக்கப்பட்டதிலிருந்து 14 நாட்காட்டி நாட்களுக்குள் இலங்கை வங்கியின் வாகன முற்றங்களிலிருந்து வாகனத்தை அகற்ற வேண்டும்.

**ஏல விலைகூறலை அல்லது அதனது ஏதேனுமொரு பகுதியினை எவ்வித காரணமுமின்றி ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையினை இலங்கை வங்கி கொண்டுள்ளது.**

பிரதான முகாமையாளர் (மாகாண அரவிட்டுத் திணைக்களம்)
3ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமையகம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி : 011-2203436

1975 BOC www.boc.lk
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

Best way to fulfil your Future Dreams
SUNDAY OBSERVER Marriage Proposals
E-mail your advertisements to,
classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 I E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கொழும்பு09, தெமட்டகொட இரண்டு மாடி வீடு பிரதான கொலன்னாவ வீதிக்கு முகப்பாக. 3 படுக்கையறைகள், 2 கழிவறைகள், மாடிகள், கராஜ், மண்டபம், சாப்பாட்டு அறை, சமையலறை, வேலையாள் கழிப்பறை, வெளிப்புறம். 3.16 பேர்ச் வர்த்தக/ குடியிருப்புக்கு பயன்படுத்த முடியும். விற்பனை விலை 42 மில்லியன் (142 இலட்சம்) பேசித் தீர்க்கலாம். 0718349280. 052292

0777438169 கண்டி நகரிற்கு அருகில் ஹொடேல் F/ L/ 11 லைசன் உள்ள 10 அறைக்கு மேல் தற்போது நடத்திச் செல்லப்படும் A/ C, கராஜ், பொருட்களுடன் வீடு குண்டசாலை திகன வீதிக்கு முகப்பாக தற்போது சில கட்டிடங்கள் உள்ளன. மிகப் பெறுமதியான 80 பேர்ச் இடைக்கால பயிருடன் காணி உண்டு. 1 பேர்ச் 12 இலட்சம், தனியார் வைத்தியசாலை, வயோதிபர் , இல்லம், டியூஷன் இற்கு, களஞ்சியத்திற்கு, மொன்டிசூரிக்கு பொருத்தமானது. விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு வங்கிக் கடன் உண்டு/ இல்லை. 077 728214 7 050902

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

18 30 வயதிற்கிடைப்பட்ட விற்பனை உதவியாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம், உணவு, தங்குமிடம் வழங்கப்படும். நியூ வீரசிரி சுப்பர், இந்திகொல்ல, கம்பஹா. 0773544 403. 053308

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

ஐந்து ஏக்கர் தென்னங்காணியில் தங்கி வேலை செய்வதற்கு கமத்தொழில் வேலை தெரிந்த தொழிலாளர்கள் தேவை. கம்பஹா, வெலிவேரிய. 0763279169, 0332259143. 053330

புத்தளம் பயிர் நிலத்தில் தங்கி வேலை செய்யக்கூடிய பயிர்ச் செய்கை பற்றிய அனுபவம் மற்றும் அறிவுடைய முகாமையாளர் தேவை. (இலகு வாகன சாரதி அனுமதிப் பத்திரம் இருந்தால் மேலதிக தகைமையாகும்.) 0765278154, 0707244218. 053328

புத்தளம் பயிர் நிலத்தில் வேலை செய்வதற்கு தொழிலாளர் குடும்பம் தேவை. (இலகு வாகன அனுமதிப் பத்திரம் இருந்தால் மேலதிக தகைமையாகும்.) 0764596563, 0775952208, 0707244218. 053323

### 325 தொழில்துறை பொது

கெஸ்பேவ பண்டாரகம வீதியில் விலங்குப் பண்ணைக்கு வேலைக்கு ஊழியர்கள் தேவை. (தம்பதி அல்லது தனியாக கூடுதல் சம்பளம்). 0712255637, 0711448646, 0112702568. 053152

## காணி/தோட்டம்

### 612 கட்டிட நிர்மாணம்/ பொருட்கள்

கொழும்பு14, கிராண்ட்பாஸ், ஸ்டேஸ் ரோட், இல. 71இல் சுத்திகரித்தல்/ உடைத்து அகற்றுதல் மற்றும் தரை மட்டப்படுத்தலுக்கு தேவை. முன்னேற்பாடுகளின் பின்னர் அலுவலக நேரங்களில் தளத்திற்கு விஜயம் செய்யலாம். தொடர்பு 0 727744244. 052218

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

இராஜகிரிய, அருணோதய மாவத்தையில் மூன்று படுக்கையறைகள், இரண்டு குளியலறைகளுடன் இரண்டு தளங்கள் கொண்ட சகல வசதிகளுடனான மாடி வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ளவும் 0771769247. 052853

வெளிநாடு செல்ல இருப்பதனால் பொரள்ளையில் இரண்டு மாடி வீடு உடன் விற்பனைக்கு. 0718373764. 97/= இலட்சம். 053132

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

களுபோவில, பிரதிபிம்மாராம வீதி முழுமையாக டைல் செய்யப்பட்ட வீடு 2 படுக்கையறை, 1 குளியலறை, ஓய்வறை, சாப்பாட்டு அறை, வேலையாள் கழிப்பறை. மாதாந்தம் 50, 000/ = தரகர்கள் வேண்டாம். 0789359771. 053076

## மணமகன்

கொழும்பில் தமது சொந்த வீட்டில் வசிக்கும் தாரமிழந்த இலங்கை சோனக முன்னணி வர்த்தகர் ஒரு கௌரவமான குடும்பத்தில் மார்க்கப்பற்றுள்ள (சுன்னத் ஜமாஅத்) படித்த, சிறந்த நல்லொழுக்கமுள்ள, விதவை, விவாகரத்து செய்த, திருமணமாகாத (குழந்தைகளுடன் அல்லது குழந்தைகள் அற்ற) 50 வயதிற்குக் குறைந்த ஒரு பெண்ணை தேடுகிறார். முழு விபரங்களுடன் எழுதுங்கள். G186404

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

www.adz.lk
it's what you want

தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 I 011 2 429 368
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845 Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com

போட்டோ குறும் விளம்பரம்



Wagon-R CA-6xxx, 2018, original 50000km, black, full option, auto transmission, zero accident, Bluetooth call/ setup, sub buffers,push start, first owner, Rajagiriya, urgent selling-migration.
076 3 099 205

APARTMENTS FOR RENT
Colombo 03 - Crescat Sea view 3BR 1400 Sq. Ft.
- Astoria Sea view, 2BR 1135 Sq. Ft.
Colombo 02 - Altair Port City view 1820 Sq. Ft.
Colombo 05 - Havelock City 4BR 1700 Sq. Ft.
- Span Tower 3BR 1740 Sq. Ft.
(All are in higher floors with fully furnished)
+94 777 2 582 80




WANTED
නිවසටම පැමිණ මිලට ගනු ලැබේ
Reg. No WLL 5244
Rolex, Omega, Swiss, Branded Watches, Diamond Jewellery, 21K, 18K, 14K, 12K Jewellery Items & Silvers, Old Notes, Antique Furniture
රිදී, ඉතාලි වලින් ගෙන්වන ලද හැදි ගැරුප්පු (Arjanthu) උපරිම මිලට
We buy Pawned Gold Jewellery Items
0776 562 382, 0777 077 333

COMMERCIAL LANDS FOR SALE
- 26 Acres land at Wanathavilluwa. Just opposite Hotel (9 CLOUD RESORT) Rs. 3 mn per Acre
- 4 Acres Land in Colombo. 6km from Port City
- 36p Land with Building facing Thimbirigasyaya main Rd
- 45p Land facing Swasthika Garden Rd - Peliyagoda.
0777 258 280
NO BROKERS OR AGENTS

AVAILABLE FOR IMMEDIATE SALE




Luxury upstair house for sale
6.5 Perches 3200 Sq.Ft.,
Commercial/ Residential,
Respectable Neighbourhood

Unit 1 - Dining/ Living with 2 A/Cs, 2B/R with 2A/Cs, 2 Luxury Baths, Kitchen, Garage & Bath, Remote Roller Gate.
Unit 2 - Living/ Dining, 3 B/R, 3 baths, pantry
50m from Pepiliyana, 1Km to Kohuwala, 1.5Km to Nugegoda
Rs. 45 Million

2 STORIED HOUSE FOR SALE
PEPILIYANA
NUGEGODA





0743 275 066/ 0762 014 091




076 139 4858



நீர்கொழும்பில் STYLISH HOTEL விற்பனைக்கு

லுவிஸ் பிளேஸ் - நீர்கொழும்பு - ஹோட்டல் - விடுமுறை இல்ல பிரதேசத்தில்

மொத்தம் 20 அறைகளுடனான சொத்துக்கள் - சுற்றுலா அமைச்சு அனுமதிப்பத்திரம், 2 மதுபான அனுமதிப்பத்திரம், நீச்சல் தடாகம் மற்றும் Terrace

சொத்துக்களின் தன்மை
3 மாடிகள்
20 படுக்கையறை, 3 Suites உள்ளடக்கம்,
அலுவலக இடவசதி, கார் நிறுத்துமிடம்
கடற்கரைக்கு 50 மீட்டர்

மேலதிக வசதிகள்
பாதைப்பக்கமான கடைகள் உள்ளடக்கம்
உயர்த்தி, ஜெனரேட்டர்
1 பணிப்பாளர் அப்பாட்மன்ட்
தயவு செய்து கவனிக்கவும்: நேரடி கொள்வனவாளர்கள் மட்டும்

பொருளாதார அரசியல்

# அதிக வரிவிதிப்புகளுக்கு மத்தியில் தாமத கட்டணம் தொடரத்தான் வேண்டுமா?



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

**இங்கிலாந்தின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவு உலகம் முழுவதும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் தனது வாழ்நாளில் எழுபது வருடங்கள் பிரித்தானிய மகாராணியாக அதற்குரிய பாரம்பரியங்கள் மற்றும் சம்பிரதாயங்களுடன் வாழ்ந்து முடித்து மறைந்திருக்கிறார் ஒரு காலத்தில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ஜியம் எனப்புகழப்பட்ட பிரித்தானியாவின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பெண்மணி அவர்.**

ஹிட்லர், முசோலினி தொடக்கம் இடி அமின், கடாபி, சதாம் உசைன் மார்க்கோஸ், பின்னசே என்று மிக மோசமான ஆட்சியாளரகள் எனப் பலரை நாம் உலகமுழுவதும் இலகுவில் அடையாளம் கண்டுவிடலாம். ஆனால் இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணி பற்றிய அவ்வாறான குற்றச் சாட்டுகள் எதனையும் காணமுடியவில்லை. அங்கு வெறும் சம்பிரதாயபூர்வமான முடியாட்சி தானே நிலவுகிறது பாராளுமன்றத்திற்குத் தானே ஆட்சி அதிகாரம் உள்ளது. எனவே மகாராணி வெறும் சம்பிரதாயபூர்வமான ஆட்சியாளர் மட்டுமே என்று கருதினாலும் ஒரு பெண்மணி ஏழு தசாப்தங்கள் மக்களின் மரியாதையையும் செல்வாக்கையும் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல. தனது குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக மகாராணி என்ற மட்டத்தில் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகிய போதெல்லாம் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு இடந்தராமல் அரச சம்பிரதாயங்களை மீறாமல் அத்தகைய கடினமான முடிவுகளையும் அவர் எடுக்கத் தயங்கவில்லை. ஒரு முழுமையான மகாராணியாக வாழ்ந்து வயது மூப்பின் காரணமாக அன்னார் மறைந்துள்ள நிலையில் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள இரங்கல் வெறும் சம்பிரதாயபூர்வமானதல்ல. பொது நலவாய நாடுகளின் இராணியாகவும் அப்பெண்மணி கொண்டிருந்த செல்வாக்கின் அடையாளமாகவும் அதைப் பார்க்கலாம். இப்போது வாழ்ந்துவரும் அரசு தலைவர்களுக்கு சிறந்த ஒரு முன்மாதிரியை விட்டுச் செல்லும் தலைவியாகவும் இரண்டாம் எலிசபெத் மகாராணியைக் கருதலாம். ஆட்சியாளர்கள் என்னதான் திமிர் பிடித்து ஆடினாலும் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும். சில நாடுகளின் ஆட்சியாளர்கள் இறந்த போது அந்நாடுகளின் மக்கள் கொடுங்கோலன் தொலைந்தான் திருடன் தொலைந்தான்; கொலைகாரன் ஒழிந்தான் என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்த சம்பவங்களையும் நாம் பார்த்திருக்கிறோம். அத்தகைய ஆட்சியாளர்களும் வரலாற்றில் இடம் பிடிப்பார்கள், எனவே பதவியில் இருக்கும் ஆட்சியாளர்கள் எந்த வழியில் போவதென்பதை சிந்தித்து தேர்ந்தெடுக்க மகாராணியின் மரணம் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் கடந்த வாரம் மின்வெட்டு நேரம் குறைந்திருந்தது. அதே போல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன் காணப்பட்ட வரிசைகள் குறைவடைந்திருப்பதை அவதானிக்க முடிந்தது. இலங்கைக்கு வந்துள்ள எரிபொருள் கப்பல்களுக்கு கட்டணம் செலுத்தப்படாமல் அவை காத்திருப்பதாகவும் செய்தி அறிக்கைகள் கூறுகின்றன. இதனால் எரிபொருளுக்கு தாமதக்கட்டணத்தையும் சேர்த்து செலுத்த வேண்டியுள்ளது. இதுபோல இதற்கு முன்பும் பலதடவைகள் நிகழ்ந்துள்ளன. நிச்சயமாக இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். தற்போது உலக சந்தையில் எரிபொருள் விலைகள் குறைவடைந்து வரும் நிலையில் அதன் நன்மை பொது மக்களைச் சென்றடையாத வண்ணம் எரிபொருளுக்கு அதிக விலையை செலுத்த வேண்டி ஏற்படுகிறது.

பொதுமக்களின் வாழ்க்கைச் செலவில் பல்குழல் பீரங்கித்தாக்குதல்கள் போல எரிபொருள், எரிவாயு, மின்சாரம், நீர், உணவு என அத்தனைகளினதும் விலைகள் பலமடங்கு அதிகரித்து தற்போது வற் வரி அதிகரிப்பு அத்துடன் தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி என்ற புதுவரிகளின் அறிமுகம் என்பன பலமுனைகளில் இன்னும் விலைகளை அதிகரிக்கச் செய்து மக்களை மேலும் கசக்கிப் பிழியக் காத்திருக்கின்றன. இந்நிலையில் தாமதக் கட்டணம் போன்ற நிர்வாகச் சீர்கேடுகளின் சுமைகளையும் மக்களைச் சுமக்க அனுமதிப்பது நியாயமாகாது.



உண்மையில் ஏற்கெனவே துவண்டுபோய் வாழ்க்கையை முன்கொண்டு செல்ல முடியாமல் தவிக்கும் மக்களுக்கு நிவாரணங்களே தேவைப்படுகின்றன. வர்த்தக சகடோட்டத்தின் பொருளாதாரப் பின்னடைவுக் கட்டத்தில் உள்ள நாடுகள் தமது பொருளாதாரத்தை மீண்டும் தண்டவாளத்தில் தூக்கி நிறுத்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அமெரிக்க பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலப்பகுதியில் மக்களின் நாளாந்த செலவுக்காக அந்நாட்டு அரசாங்கம் மிகப் பெருந்தொகையை ஒதுக்கியது. அத்துடன் தனியார் துறை நிறுவனங்களுக்கு ஊக்குவிப்புகளையும் வழங்கியது. அதன் மூலம் பொருளாதாரம் படிப்படியாக வழமைக்குத் திரும்பியது. இலங்கையில் அத்தகைய பொதி எதனையும் வழங்கக் கூடிய நிலையில் கஜானா இல்லை. மக்களில் பெரும் பகுதியினருக்கு உதவிகள் தேவைப்படும் நிலையில் கஜானாவை நிரப்புவதற்காக வரிகளை அதிகரித்து அச்சுமையை மக்களே தாங்க நிர்ப்பந்திப்பது ஜனநாயகமாகாது.

நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பும் போது படிப்படியாக வரி வீதங்களை நியாயமான கால இடைவெளிகளில் உரிய மட்டங்களுக்கு அதிகரிக்க வேண்டும். அப்போது தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மிகக் குறைந்த பாதிப்பகளோடு பொருளாதார மீட்சியை அடைய முடியும். அவ்வாறில்லாமல் பொது மக்களின் வாழ்க்கைச் செலவு நிலைமைகள் குறித்த கரிசனைகளின்றி அரச வருவாய் அதிகரிப்பை மாத்திரமே ஒரே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டால் அது மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மிக மோசமாக வீழ்ச்சியை ஏற்படுத்துவதோடு பொருளாதாரத்தின் உற்பத்தி நடவடிக்கைகளையும் மக்களின் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளையும் மிகத் தீவிரமான வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் ஏற்கெனவே பொருளாதாரம் 2022 இல் 8.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அவ் வீழ்ச்சி மேலும் தீவிரமடையும். மேலே சொன்ன விலை அதிகரிப்புகளால் பொருள் விலைகள் ஏற்கெனவே வானளாவ உயர்ந்து சென்றுள்ள நிலையில் வரி அதிகரிப்புகள் உற்பத்திச் செலவுகளை அதிகரிப்பதால் செலவுப்பக்கத்தில் பணவீக்கம் மேலும் அதிகரிக்கும். உற்பத்தியாளர்களால் அரசாங்கம் நிர்ணயிக்கும் விலைகளில் பொருள்களை சந்தைக்க வழங்க முடியாத நிலை உருவாகும். எனவே தன்னிச்சையாக எடுக்கப்படும் அதிகரிப்புகள் நாட்டில் நன்மையை ஏற்படுத்துவதற்குப் பதில் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும், மக்களுக்கு மூச்சு வாங்குவதற்குரிய கால அவகாசம் வழங்கப்படவேண்டும். மறுபுறம் அரச துறையின் பருமனைக் *(size of government)* குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அரச துறை ஊழியர்களை குறைப்பதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சுகள் இந்த ஆலோசனைகளுக்க முற்றிலும் முரணான நடவடிக்கைகளாகவே தோன்றுகிறது. இவற்றுக்குரிய வளங்கள் வாகனங்கள் பதவிநிலைகள் ஆளணியினர் என்பவற்றை வழங்கத்தான் வேண்டும்! இவற்றை நடத்திச் செல்ல மிகப் பெரியளவு நிதிவளம் தேவை. அரச ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அரசாங்கத்தின் அளவைக் குறைத்து அரச செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் தருணத்தில் அதே அரச ஊழியர்களைக் கொண்ட அமைச்சுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது எவ்வாறு?

> **பொதுமக்களின் வாழ்க்கைச் செலவில் பல்குழல் பீரங்கித்தாக்குதல்கள் போல எரிபொருள், எரிவாயு, மின்சாரம், நீர், உணவு என அத்தனை களினதும் விலைகள் பலமடங்கு அதிகரித்து தற்போது வற்வரி அதிகரிப்பு அத்துடன் தேசத்தை கட்டி எழுப்பும் வரி என்ற புதுவரிகளின் அறிமுகம் என்பன பலமுனைகளில் இன்னும் விலைகளை அதிகரிக்கச் செய்து மக்களை மேலும் கசக்கிப் பிழியக் காத்திருக்கின்றன.**

# 'ரஷ்ய உலகம்' எனும் வெளியுறவுக் கொள்கை ஏற்படுத்தப் போகும் அரசியல் விளைவுகள்



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உலகளாவிய அரசியலின் நாடுகளின் இருப்பும் எழுச்சியும் வலுக்கோட்பாட்டில் தங்கியுள்ளதாக யதார்த்தவாதிகள் விவாதிக்கின்றனர். அதிலிருந்து வளர்ச்சியடைந்த நவயதார்த்தவாதிகள் சர்வதேச உறவுகளில் உள்ள மோதலையும், அராஜக நிலையையும் நவயதார்த்தவாத அணுகுமுறைக்கூடாக தீர்க்க முடியுமென்று கருதுகின்றனர். நவயதார்த்தவாதிகள் அரசியல் என்பது தனித்தொரு ஆதிக்கத்திற்கு உரித்துடைய வடிவம் இல்லை என்றும் இராணுவ கட்டமைப்பினை பார்ப்பது போல் பொருளாதாரம் மற்றும் நிதி நிறுவனங்களையும் நவயதார்த்தவாதம் அல்லது கட்டமைப்பு யதார்த்தவாதம் முதன்மையான அதிகாரத்தின் அடிப்படை என அவர்கள் விவாதிக்கின்றனர். அதற்கமைவாக ரஷ்யாவும் ஐரோப்பாவும் மோதிக் கொள்ளும் சமகால நிகழ்வுகள் நவயதார்த்தவாதத்தின் வடிவமாக அமைகிறதைக் காணமுடிகிறது. இத்தகைய உலகப் போக்கில் ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் ரஷ்ய உலகம் என்ற தொனிப் பொருளில் ரஷ்யாவுக்கான புதிய வெளியுறவுக் கொள்கையை வடிவமைத்துள்ளார். இக்கட்டுரையும் ரஷ்யாவின் உலகம் பற்றிய உரையாடலையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக அமையவுள்ளது.**

முதலில் ரஷ்யாவின் ஜனாதிபதி முன்வைத்துள்ள ரஷ்ய உலகம் என்பதை அவதானித்தல் பொருத்தமானதாக அமையும். அதாவது ரஷ்யா உலகத்தின் பாரம்பரியத்தையும் கொள்கைகளையும் பாதுகாக்க வேண்டும். வெளிநாடுகளில் வசிக்கும் ரஷ்யர்களின் உரிமை மற்றும் நலன்கள் ரஷ்ய கலாசார அடையாளங்களை ரஷ்யக் கூட்டமைப்பு ஆதரவளிக்கிறது. கடந்த 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்தது பூகோள அரசியலுக்கு பேரழிவாகும். முன்னாள் சோவியத் யூனியனது சமாதான வழிமுறையை ரஷ்யா தொடர்ந்து மதிக்கிறது. ஆனால் இதனை மேற்குலக நாடுகள் எதிர்க்கின்றன. சீனா, இந்தியா, மேற்கு ஆசியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளுடனான ஒத்துழைப்பினை ரஷ்யா அதிகரிக்க வேண்டும் என தயாரிக்கப்பட்ட அறிக்கைக்கு புடின் ஒப்புதலளித்துள்ளார்.

மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் அதிருப்தியடைந்துள்ள ரஷ்யா தனது வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் செய்ய திட்டமிட்டுள்ளது. அதிலும் ஆசியாவின் முதன்மை சந்தை வலுவுடைய நாடுகளை நோக்கி உறவினை பலப்படுத்த ரஷ்யா ஆரம்பித்துள்ளது. சீனாவும் இந்தியாவும் ரஷ்யாவின் விளிம்பு நில நாடுகள் என இருதய நிலக் கோட்பாட்டை கட்டமைத்த மைக்கிண்டர் குறிப்பிட்டது போல் புடினின் நகர்வுகள் அமைந்துள்ளன. இதற்கு வலுக்கொடுக்கும்விதத்தில்பலவிடயங்களைரஷ்ய ஜனாதிபதி மேற்கொண்டுவருகின்றார்.

ரஷ்யா, சீனா, இந்தியா இணைந்து பாரிய இராணுவப் பயிற்சி ஒன்றினை நிகழ்த்தியுள்ளன. கடந்த (2020,செப்டெம்பார்) முதலாம் திகதி ரஷ்யாவின் கிழக்கு இராணுவ வலயத்திலுள்ள செர்ஜியேவ்ஸ்கி பயிற்சி மைதானத்தில் வோஸ்டாக் 2022என அழைக்கப்படும் பல்முனை இராணுவ உத்தி மற்றும் செயல்திறன் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏழு நாட்களுக்கு நீடிக்கும் இப்பயிற்சி கூட்டுக் களப்பயிற்சி போர்ப் பயிற்சி இராணுவங்களுக்கிடையிலான தொடர்பு மற்றும் இராணுவ ஒருங்கிணைப்பினை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. அது மட்டுமன்றி இராணுவ செயல்முறைகளை நடைமுறைப்படுத்துதல் புதிய தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பது போன்ற நடைமுறைகளை ஒட்டி பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதனை ரஷ்ய ஜனாதிபதி நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் இராணுவத்தினருடன் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி உரையாடியிருந்தார்.

ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகரில் நடைபெற்ற கிழக்கு பொருளாதார வலய நாடுகளது ஏழாவது மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ரஷ்ய ஜனாதிபதி புடின் அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் ரஷ்யாவின் இறையாண்மையை குலைத்து தங்களது எதேச்சதிகாரத்தை உலகம் முழுவதும் நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிரோக ரஷ்யா தொடர்ந்து போராடும் எனத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும் போது



ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய்யை கொள்வனவு செய்வதற்கு ஆசியாவில் போதிய நாடுகள் உள்ளன. சர்வதேச சந்தையில் ரஷ்யாவின் மசகு எண்ணெய்க்கு அபரிமிதமான தேவையுள்ளது. மேற்குலக நாடுகள் எவ்வளவு முயன்றாலும் ரஷ்ய மசகு எண்ணெய் விற்பனைக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது நோர்ட் ஸ்ட்ரீம் குழாய் வழித்தடம் மூலமான மேற்கத்தேச நாடுகளுக்கான எரிவாயு விநியோகம் தடைப்பட்டதற்கு அந்த நாடுகள் ரஷ்யாவுக்கு விதித்த பொருளாதாரத் தடையினால் குழாயில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை சரி செய்யமுடியாது போயுள்ளது என்றார். ஏறக்குறைய மேற்குலகமே ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தை தடுத்துள்ளதாகவும் ரஷ்யா மீது விதித்த பொருளாதாரத் தடையே காரணம் எனவும் புடின் விவாதித்துள்ளார் எதுவாயினும் புடினின் ரஷ்ய உலகம் எனும் வெளியுறவுக் கொள்கை அதிக மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. அதனை சற்று விரிவாக நோக்குவது அவசியமானது.

முதலாவது, ஏற்கனவே அமெரிக்க டொடரின் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டதுடன் ரூபிளின் சந்தைப் பெறுமானம் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது. கடந்த காலங்களில் டொலருக்கான சந்தைப்பெறுமானம் 80 சதவீதத்திலஜிருந்து 54 சதவீதமாக குறைவடைந்துள்ளது. 2002 இல் நிதி நெருக்கடியின் போது கூட டொலரது வீழ்ச்சி இவ்வாறு அமையவில்லை என்றே பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர். எனவே உக்ரைன் போர் ரஷ்யாவின் பொருளாதாரத்தையும் அதன் நாணயத்தையும் நிமிர்த்தியுள்ளதாகவே தெரிகிறது. இதற்கான அடிப்படை சீனா, இந்தியா போன்ற நாடுகள் ரஷ்ய நாணயமான ரூபிளிலேயே எரிவாயு மற்றும் மசகு எண்ணெய்யை கொள்வனவு செய்துவருகின்றன. அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி ரூபிளில் சக்திவளத்தை கொள்வனவு செய்ய இந்தியா, சீனா முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இரண்டாவது, ரஷ்யப் பொருளாதார எழுச்சியிலேயே ஆசிய, ஆபிரிக்க. மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளுடனான உறவை வலுப்படுத்தும் விதத்தில் ரஷ்யா செயல்பட ஆரம்பித்துள்ளது. அடிப்படையில் மேற்குலகம் கடந்த காலத்தில் பின்பற்றிய வெளியுறவுக் கொள்கையை நோக்கி ஆனால் சற்று தனித்துவத்தோடு ரஷ்யா செயல்பட முனைகிறதைக் காணமுடிகிறது. அதாவது அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் கீழைத் தேச நாடுகள் மீதான ஆக்கிரமிப்பினாலும் சுரண்டலினாலுமே தமது பொருளாதாரத்தை பலப்படுதியுள்ளன. மேற்குலகத்தின் குப்பைத் தொட்டியாகவே கீழைத்தேசம் விளங்கியது. அதாவது மேற்கின் உற்பத்திக் கழிவுகளை கொட்டும் இடமாகவே கீழைத் தேச நாடுகள் காணப்பட்டன. அதனாலேயே மேற்கின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. அதனை ரஷ்யா சீனா, இந்தியா என்பன தமது பிடிக்குள் கொண்டுவரும் பேராட்டத்திலேயே தற்போது ஈடுபட்டுள்ளன. அதில் ரஷ்ய உலகம் எனும் கொள்கை அதிக உத்வேகம் கொண்டதாக அமைந்துள்ளது. கீழைத்தேச நாடுகளுடனான ரஷ்யாவின் நெருக்கம் ரஷ்யப் பொருளாதாரத்தை பலமடையச் செய்யும் என்பதில் அதிக குழப்பம் கொள்ளத் தேவையில்லை. மாறாக ஐரோப்பாவுடனான உறவு பாதிப்படையுமாயின் ரஷ்யாவின் உலகளாவிய அதிகாரம் பாதிப்படையும் என்ற விவாதமும் குறைந்த அர்த்தம் கொண்டதல்ல. கடந்த பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவே உலக அதிகாரத்தின் மையமாக விளங்கியுள்ளது.

மூன்றாவது, ஐரோப்பாவை நோக்கியே அமெரிக்க வல்லரசின் இருப்பு வலுவானதாக காணப்படுகிறது. அதனாலேயே ஐரோப்பாவை சுயமாக இயங்க விடாது அமெரிக்கா செயல்படுகிறது. தற்போது புதிய பிரதமராக ஆட்சிக்கு வந்துள்ள பிரிட்டன் பிரதமர் லிஸ் டிரஸ் அமெரிக்க ஜனாதிபதியுடனேயே தனது முதல் வெளிநாட்டு உரையாடலை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து உக்ரையின் ஜனாதிபதியுடனான உரையாடலை மேற்கொண்டார். அப்படியாயின் பிரிட்டனில் எத்தனை பிரதமர்கள் மாறினாலும் அமெரிக்காவின் அடிமையாகவே பிரிட்டனை வைத்துக் கொள்ளப் போகின்றனர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. ரஷ்யஐரோப்பிய உறவை அமெரிக்கா முற்றாகவே நிராகாரித்ததன் விளைவே இன்றைய ஐரோப்பிய நெருக்கடிக்கு காரணமாகும். அவ்வாறு ஐரோப்பா ரஷ்ய நட்புறவு வலுவடையுமாயின் அமெரிக்காவின் இருப்பு கேள்விக்குரியதாகிவிடும் என்பதை புரிந்துள்ள அமெரிக்கா அதற்கு அமைவாக செயல்படுகிறது.

எனவே ரஷ்யா வகுத்துள்ள புதிய வெளியுறவுக் கொள்கை ரஷ்யாவின் பொருளாதார எழுச்சியை சாத்தியப்படுத்தக் கூடியது. ஏற்கனவே கீழைத்தேச நாடுகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள ரஷ்யாவுக்கு இலாபகரமானதாக அமைவதுடன் கீழைத் தேசங்களது மேற்குலகம் மீதான அதிருப்தியும் ரஷ்யகீழைத்தேச உறரைவ வலுப்படுத்தக் கூடியதாக அமையும். உலக வல்லரசான முன்னாள் சோவியத் யூனியனது இறுதித் தலைவர் மிகையில் கொர்பச்சேவின் மறைவுடன் மீண்டும் ஒரு வல்லரசுவாதத்தை அதே இருதய நிலத்திலிருந்து கட்டமைக்க விளாடிமிர் புடின் முனைகிறார்.

## வாழ்வாதாரமா சேதாரமா 236



தமிழ்க் கவி பேசுகின்றார்

# விழுந்த மாட்டில் குறி சுடுவது எத்துணை சுலபமானது?

மக்களை மாக்களாக வைத்திருக்க பல முறைகளில் பலர் முயன்று வருகிறார்கள். கடுமையான சோதனைகள் ஏற்படும் போது மனிதனின் மனம் தடம்மாறுவது உண்டு. என்ன செய்தும் தான் வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலை வரும்போது எவராலும் முழுமையான அறத்தை கடைப்பிடிக்க முடியாது.

ஒரு காலத்தில் பாரதப் போர் முடிந்து தர்மனுடைய ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அந்த நாட்டுக்கு அரசனான தர்மன் அன்றாடம் தான் உணவு உண்பதற்கு முன் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உணவளித்து அதன் பின்பே சாப்பிடுவது வழக்கம். அந்த நாட்டுக்கு இன்னுமொரு நாட்டு அரசன் வந்திருந்தான். அவனுக்கும் அங்கே விருந்து ஏற்பாடாகி இருந்தது. அந்த வேளையும் தருமன் தான் தருமம் செய்ய ஆயத்தம் செய்தான். இதைக் கண்ணுற்ற அயல் நாட்டுமன்னன் வியப்பாக அட இது தருமன் ஆட்சி செய்யும் நாடல்லவா? இங்கே அன்றாடம் பசியுடன் ஆயிரக்கணக்கானவர்கள் இருப்பது வேடிக்கையாக உள்ளதே? என்று ஆச்சரியப்பட்டான். அப்போதுதான் தருமனுக்கு தனது ஆட்சி மிக மோசமானதாகத் தெரிந்தது. தன் நாட்டு மக்களின் வறுமையை நீக்காமல் அவர்களுக்கு அன்றாட உணவை அளித்து வந்தது பயனற்ற ஒரு செயலாகும். அதுமட்டுமல்ல மக்கள் சுய பொருளாதாரத் தன்னிறைவு அடைவதையும் தடுக்கும் என உணர்ந்தான். இப்படி புராணங்கள் இதிகாசங்களில் வறுமைபற்றிய கதைகள் நிறைய உண்டு. வறுமையைப்போக்க பெரும் யாகங்களைச் செய்ததாகவும் அறிகிறோம்.

நாம் அடைந்துள்ள நெருக்கடியை யாகம் செய்து தீர்க்க முடியாது. அதை தியாகம் செய்தே கடந்தாக வேண்டும். என்னத்தைச் சொல்லி எதைத்தான் உரைத்தாலும் கந்தனுக்குப் புத்தி” எங்கோ இருப்பதாக கிராமமக்கள் சொல்வார்கள். அதேபோலத்தான் இன்றைய முதலாளிகள் இந்த நிலையை பயன்படுத்தி எப்படி சம்பாதிக்கலாம் என்பதிலேயே குறியாக உள்ளார்கள்.

எமது மண்ணிலும், விலைவாசி உயர்வாலும் பொருட்கள் தட்டுப்பாட்டாலும் ஏராளமான மக்கள் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டு வருகிறார்கள். என்னதான் கூலி வேலைக்கான சம்பளம் உயர்ந்தாலும், அந்தப்பணத்தில் அன்றாட உணவுத் தேவையை நிறைவு செய்ய முடியவில்லை. அதே சமயம் உணவுக்கு அப்பாலான தேவைகளாக கல்வி, வீட்டுவசதி, போக்குவரவு, உடை என எல்லாச் செலவுகளும் மிக உச்சத்தில் நிற்கிறது. தனியார் கல்வி நிலையங்களின் கட்டணம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது. அது ஒவ்வொரு வகுப்புக்கும் பாடங்கள் அளவில் மணித்தியாலத்துக்கு இவ்வளவு என்று அமைந்துவிட்டது. இப்படி விலைகள் உச்சத்தில் நிற்கிறது என்பது தவறு. நிற்கிறது என்று சொல்ல முடியாது மேலும் உயர்ந்து கொண்டிருக்கிறது. சோறும் கறியும், பிட்டும் ரொட்டியும் மட்டுமே அவர்களுக்கு உணவாகிறது. ஒரு நாளைக்கு மீன்கறி சாப்பிட விரும்பினால் ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மீனுக்கு மட்டும் ஆயிரம் ரூபாக்கள் தேவை. அதில் போடவேண்டிய சரக்கு வகைகளும் எண்ணை தேங்காய் என வேற’லெவலு’க்குப் போகும்.

இறைச்சி வகைகள் பற்றி சொல்லவே தேவையில்லை. அது இனி ரசம் வைக்கிற அளவுக்குத் தான் வாங்க முடியும். கோழி வளர்ப்பாளர்களுக்கு மிக இக்கட்டான நிலை. தமது நுகர்வுக்கு மட்டும் வளர்த்தவர்கள் இதிலிருந்து தப்பிக் கொண்டார்கள். கொஞ்சமாவது வீட்டு வருமானத்தை எண்ணி வளர்த்தவர்கள், தீவனத்துக்கு செலவிடக்கூடிய நிலையில் இல்லை. என்ன தான் இயற்கை உணவுகளை உண்ணக்கூடிய பிராணிகளாயினும் அவை உண்ணும் தவிடு கிலோ ஒன்று நூற்றிநாற்பது ரூபா. குருணி கிலோ இருநூறு ரூபா. எப்படி வாங்க முடியும் கோழிகளுக்கு்ன தீவனம் கடைகளுக்கு வந்து அவற்றை வீடுகளுக்கு எடுத்துச் செல்லும்போது ஏற்றி இறக்கும் செலவும் கணிசமாக ஏறிவிடுகிறது. தீவனத்தின் பெறுமதியை அந்தச் செலவுடன் சேர்த்தே கணித்தாக வேண்டும் அப்படிப் பார்த்தால் தீவனம் கிலோ முந்நூற்று முப்பதாகிறது. இதையெல்லாம் கணிக்காமல் முட்டையின் விலையை தீர்மானிக்க முடிகிறது என்றால் வேடிக்கையாக இல்லை.

அந்தக்காலத்தில், வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் இப்படித்தான் தோட்டம் போட்டவன் என்னென்ன மரக்கறிகளை உற்பத்திசெய்தாலும் அவற்றுக்கான விலையை ஆங்கிலேயனே தீர்மானித்தானாம். அது ஒரு நாட்டார் பாடலில் வருகிறது.

“ ஊரான் ஊரான் தோட்டத்தில ஒருதன் போட்டானாம் வெள்ளரிக்கா

காசுக்கு ரெண்டு விக்கச்சொல்லி காயிதம் போட்டானாம் வெள்ளக்காரன்.

ஊரான் ஊரான் தோட்டத்தில ஒருத்தன் போட்டானாம் கத்தரிக்கா காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி காயிதம் போட்டானாம் வெள்ளக்காரன்”

இதே நிலைதான் இன்றும், உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய முதலாளிகள் முன்வருகிறார்கள். சென்ற வாரம் வரை பதின்மூவாயிரம் ரூபா விற்ற வெள்ளை நெல் இன்று ஏழாயிரத்து ஐநூறு ரூபாவுக்கு இறங்கிவிட்டது. அது பெரிய வேடிக்கையல்ல. நெல் சேகரிக்க சாக்குகளோ பைகளோ நெருப்பு விலையாம் விவசாயிகள் உழவுயந்திரப் பெட்டியிலேயே நெல்லை ஏந்தி அப்படியே கொண்டு வந்து காயப்போடும் தளங்களில் கொட்டுகிறார்கள். முப்பத்தைந்து நாற்பது ரூபாவுக்கு விற்ற வெற்றுப் பைகள் இன்று நூற்றைம்பது ரூபாவுக்கு ஏகிறியுள்ளது. ஆபத்து அந்தரம் என்றால் கூட ஒரு வெற்று அட்டைப்பெ;ட்டி கொள்வனவு செய்ய முடியவில்லை.

சாதாரணமாக நாம் நினைப்பது போல இல்லை. நாம் பெரும் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம். சேமிப்பு என்பது அறவே இல்லை என்பது அவதானிக்கப்பட வேண்டும் யாரைக்கேட்டாலும் இருப்பிலிருந்து எடுத்து செலவு செய்வதாகத்தான் பேசிக் கொள்கிறார்கள். கடன் கேட்பவர்களும் குறைந்து கடன் கொடுப்பவர்களும் குறைந்து விட்டனர். வீட்டுத்தோட்டம் செய்வதற்கும் எதிர்காலம் தோதாக இல்லை என்பது அச்சமே. வரும் மழைக்காலம் வெள்ளம் சூழப்போவதும் உறுதி. அந்த அளவுக்கு நாம் இயற்கையை குழப்பி விட்டுள்ளோம். பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த குடிசைக் கைத்தொழில்கள் முற்றாக கைவிடப்பட்டுள்ளன கேட்டால் மூலப் பொருட்களின் விலை கட்டுப்படியாகவில்லை. என்றார்கள் முட்டையை வீட்டில் சிறிய அளவு உற்பத்தி செய்பவர்கள் அதை விற்க முடியவில்லை என்கிறார்கள் காரணம் நுகர்வு குறைந்து விட்டது. முட்டை இறைச்சி மீன் என்பவை போலவே மரக்கறிகளின்விலையும் சந்தையில் மிக அதிகம்தான் ஆனால் அந்த விலையில் பாதியளவே உற்பத்தியாளனுக்கு கிடைக்கிறது. மீதியை இடைத்தரகர்களான வியாபாரிகள் எடுத்துக் கொள்கின்றனர்.



“ஆளுவாரும் அழுவாரும் தன் கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லயாம்” இது யாருக்கு என்கிறீர்களா லீசிங்கில் வாகனம் பெற்றுக் கொடுபபோருக்கும் வட்டிக்கடைகளுக்கும்தான். இப்பொழுது அண்மைக்காலங்களில் எந்த வட்டிக்கு வழங்கும் நிறுவனங்களும் மீட்கப்படாத அடகு நகைகளை ஏலம் விட்டதாக தெரியவில்லை அதற்கு மாறாக, குறைந்த நகைக்கு பெருந் தொகை தருவதாக வாக்களிக்கும் நிறுவனங்களும் உங்களால் மீட்க முடியாத நகைகளை நாம் மீட்டுத்தருகிறோம் எனற விளம்பரங்களும் கண்ணில்படுகின்றன. விழுந்த மாட்டில் குறிசுடுவது போல இதுவும் நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் அதுதான் உண்மை.

# மல்லிகைத்தீவின் துயரம் நீங்குகிறது நீண்டகால குடிநீர் கனவு நனவாகின்றது!

அம்பாறை மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய மல்லிகைத்தீவு கிராமத்தின் நீண்ட நாள் தேவையாகவும், பிரச்சினையாகவும் இருந்து வந்த குடிநீர் பிரச்சினை இன்று நிறைவுக்கு வருகிறது.

ஆம் ஏறக்குறைய 5000 ஏக்கர் வயல் நிலப்பகுதியின் மத்தியில் அமைந்திருக்கின்ற தனித் தமிழர் வாழும் மல்லிகைத்தீவு கிராமத்திற்கு குடிநீர் இல்லாத துயரம் நீண்ட காலமாக வதைத்து வந்தது. குடிநீரில் நஞ்சு கலந்து பல மரணங்களையும் சந்தித்தது இக்கிராமம்.



இந்த இக்கட்டான நிலையில் மக்கள் கிணறுகளை அமைத்து கிணற்று நீரினை பயன்படுத்தி வந்தனர்.

மேலும் , 90 தமிழ்க் குடும்பங்களைக் கொண்ட மல்லிகைத்தீவு கிராமத்தின் நீர் த் தேவைக்காக கிழக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் சம்மாந்துறை பிரதேச சபையின் ஊடாக ஜெய்க்கா (Jica) நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக 2013 ஆம் ஆண்டு ஒரு பெரிய கிணறு அமைக்கப்பட்டு அந்தத் தண்ணீர் ஒரு தண்ணீர் தாங்கிக்கு ஏற்றப்பட்டு ஒவ்வொரு வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டது.






இந்நிலையில் நிலத்தடி நீர் கிராமத்தை சூழவுள்ள விவசாய காணிகளுக்கு பயன்படுத்தப்படும் இரசாயன கிருமி நாசினிகள் காரணமாக பழுதடைந்து அதனை பயன்படுத்தும் மக்கள் சிறுநீரக பாதிப்புக்கு ஆளாகி வந்த வந்தனர். பலரும் மரணமடையத் தொடங்கினர்.

இதனை அறிந்த பிரபல சமூக செயற்பாட்டாளரும், சம்மாந்துறை பிரதேச சபை உப தவிசாளரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாவட்ட அமைப்பாளருமான வெ.ஜெயச்சந்திரன் களத்தில் இறங்கினார். உடனடி தீர்வாக சம்மாந்துறை பிரதேச சபையின் ஊடாக தண்ணீர் தாங்கிகளை பெற்றுக் கொடுத்து பவுசர் மூலம் குடிநீரை விநியோகம் செய்ய வழிவகுத்தார்.

அத்துடன் இவ்விடயத்தை பல இடங்களுக்கும் அறிவித்து ஊடகங்களிலும் பதிவு செய்தார்.

இதனை அறிந்த கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் தங்கள் அமைப்பினூடாக தண்ணீர் தாங்கிகளை வழங்கி உதவினர்.

மேலும் குறித்த விடயம் சம்பந்தமாக துறை சார்ந்த அமைச்சர்கள் முதல் துறை சார்ந்த அதிகாரிகள் வரை அனைவரிடமும் எடுத்துச் சென்றனர்.

ஒரு கட்டத்தில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபாய ராஜபக்ஷ "கம சமூக பிளிசந்தர" (ஊருடன் கலந்துரையாடல்) எனும் நிகழ்ச்சிக்காக அம்பாறை மாவட்டத்தின் உகன பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட லாத்துக்கல பிரதேசத்திற்கு வந்த போது அந்த இடத்தில் தமிழராக பேசிய ஒரே நபர் ஜெயச்சந்திரன் என்பதனை மறுக்க முடியாது.

அங்கு மல்லிகைத்தீவு பிரதேசத்தின் குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாகவும், சிறுநீரக செயலிழப்பு நோய் தாக்கம் சம்பந்தமாகவும் எடுத்துரைத்தார்.. அவ்விடத்திலேயே அன்றைய ஜனாதிபதி மல்லிகைத்தீவு பிரதேசத்தின் குடிநீர் பிரச்சினையை நிவர்த்தி செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அதன் பயன் "கம சமக பிளிசந்தர" அதாவது 'ஊருடன் கலந்துரையாடல்" நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்தார் ஜனாதிபதி.

அதன் பயனாக இன்று மல்லிகை தீவு கிராமத்தின் குடிநீர் விநியோக வேலைத்திட்டம் நிறைவடையும் நிலையில் இருப்பதுடன், இன்னும் ஓரிரு தினங்களில் இந்த கிராமத்தின் மொத்த 90 குடும்பங்களுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட உள்ளது.

அத்துடன் தனித் தமிழர் வாழும் மல்லிகைத் தீவு பிரதேசத்தின் குடிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக அதிகமானோர் அக்கறை செலுத்தினர்.அவர்கள் அனைவருக்கும் நன்றிகள் என உப தவிசாளரும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான வி.ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

முயற்சி திருவினையாக்கியுள்ளது. மல்லிகைத்தீவு கிராம மக்கள் இனி மகிழ்ச்சியான வாழ்க்கையை மேற்கொள்வார்கள் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

நீரின்றி அமையாது இவ் உலகு.

வி.ரி.சகாதேவராஜா ...

காரைதீவு குறூப் நிருபர்

# தமிழ் இலக்கிய உலகில் மாத்தளையின் பெயரை அழுத்தமாக பதியவைத்த மாத்தளை பெ. வடிவேலன்

மலையக சிறுகதைத் துறையில் தன் ஆளுமைமிக்க முத்திரையினைப் பதித்து எழுத்தின் வளத்தால் கடல் கடந்த நாடுகளிலும் கௌரவம் பெற்ற மாத்தளை பெ.வடிவேலன் தனது 75 வது அகவையை நிறைவுசெய்திருக்கின்றார்.

மலையக இலக்கிய ஆளுமைகளில் ஒருவரான இவர் இலக்கியத்தை ஒரு சமுதாயப்பணியாக சிரமேற்கொண்டு எழுத்துத்துறைக்கு தன்னை அர்ப்பணித்தவர். காலாதிகாலமாக பல்வேறு வகையான சுரண்டல்களுக்கும் இன ஒடுக்குமுறைக்கும் உட்பட்டு துன்பத்தை நித்தியமானதாகக் கொண்ட மலையக பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் அவலம் தோய்ந்த துயர வாழ்வையும் அவர்கள் முகங்கொடுத்து வருகின்ற சொல்லொணா பிரச்சினைகளையும் உலகிற்கு எடுத்துக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டதே அவரின் அரைநூற்றாண்டு கால எழுத்துப்பணி.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்காலத்தில் (1969) ஆம் ஆண்டு மாணவர் ஆசிரியர் பரீட்சையில் சித்திபெற்று மாணவஆசிரியராக பணியாற்ற தொடங்கியவர்.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், வீரகேசரி பத்திரிகையுடன் இணைந்து நான்காவது மலையக சிறுகதை போட்டியில் ‘பிஞ்சு உலகம்’ என்ற சிறுகதையை எழுதி முதல் பரிசை பெற்று எழுத்துத் துறைக்குள் பிரவேசித்து இன்று வரை எழுதி வருகின்றார்.

இந்திய வம்சாவளி மலையக மக்கள் தனித்துவமான ஒரு இனக்குழுமமாக அங்கீகரிக்கப்பட்டு, அவர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட்டு ஏனைய இனக்குழுமங்களுடன் சமத்துவமான அந்தஸ்தை பெறுவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என்ற நியாயபூர்வமான கோரிக்கையை வலியுறுத்துவதில் மாத்தளை வடிவேலனின் கலை இலக்கியப் பணிகள் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளன.

மாத்தளை மாவட்டத்தில் நோர்த் மாத்தளை பெருந்தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட வடிவேலனின் படைப்புக்களின் முக்கிய நோக்கம் பல்வேறு கொடுமைகளுக்கும் ஆளான பெருந்தோட்ட மலையக மக்களின் வாழ்வை இலக்கியத்தில் பதிவு செய்துவிட வேண்டும் என்பதேயாகும்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டதாரி, ஆசிரியர், அதிபர், இந்து சமய பண்பாட்டு காலாசார அதிகாரி, மலையக கலை இலக்கிய, சமய மரபுகளின் ஆய்வாளர், மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபை உறுப்பினர், ஆன்மீக சொற்பொலிவாளர் என பன்முக பரிமாணங்களைக் கொண்ட பல புலமை வாய்ந்த ஒரு ஆளுமையாக இன்றும் விளங்குபவர் மாத்தளை வடிவேலன்.





மலையகத்தில் இடம்பெற்ற பல்வேறு சாகித்ய விழாக்களிலும், அருள்நெறி விழாக்களிலும், ஆலய மகோற்சவங்களிலும், பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட அவரை கலாசார அமைச்சு ‘இலக்கியச்செம்மல்’ மற்றும் ‘கலாபூ~ணம்’ என்ற விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், வீரகேசரியும் இணைந்து நடத்திய 4வது மலையக சிறுகதைப்போட்டியில் அவரது 'பிஞ்சு உள்ளம்” என்ற சிறுகதைக்கு முதலாம் பரிசை வழங்கி கௌரவித்தது. என். எஸ். எம் ராமையா, தெளிவத்தை ஜோசப், இரா. சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன் இச்சிறுகதையை தெரிவுசெய்தனர்.

அது மாத்திரமல்ல, பதுளை பத்திரிக்கை முன்னோடி கலையொளி முத்தையா பிள்ளை ஞாபகார்த்தமாக மு.நித்தியானந்தன், எச்.எச் விக்கிரமசிங்க இணைந்து நடாத்திய மலையக சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதைக்கு இரண்டாவது பரிசும், துரைவி பதிப்பக உரிமையாளர் அமரர் துரைவிசுவநாதன், தினகரன் பத்திரிகை நடாத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியிலும், உதயன் பத்திரிகை தனது வெள்ளி விழாவையொட்டி நடாத்திய சிறுகதைப் போட்டியிலும் இவர் பரிசும் பாரட்டையும் பெற்றார்.

மலையக சிறுகதை தொகுப்புக்கள் பலவற்றில் வடிவேலனின் சிறுகதைகள் தாராளமாக இடம்பெற்றிருந்தாலும் 2012 ஆம் ஆண்டில் பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடாக வந்த 20 சிறுகதைகள் அடங்கிய 'அட்சய வடம்” என்பதே அவரது முதலாவது தனிச் சிறுகதைத் தொகுப்பாகும்.

மலையக பெருந்தோட்ட மக்கள் தமிழர்கள் என்ற வகையிலும் அவர்களில் அதிகப் பெரும்பாலானவர்கள் உழைக்கும் மக்கள் என்ற வகையிலும் அனுபவித்த இழப்புக்களை பொருளாகக் கொண்ட இந்த தொகுப்பு தமிழ் இலக்கிய உலகினால் பெரிதும் பாராட்டப்பட்டது.

இலங்கையில் வெளிவரும் வார இதழ்கள் மற்றும் சஞ்சிகைகளில் பரவலாக வெளிவந்த மாத்தளை மாவட்டச் சூழலை மையமாகக் கொண்ட வடிவேலனின் பல கதைகள் புகழ்பெற்ற எழுத்தாளர்களான பண்ணாமத்துக் கவிராயர், கே.எஸ்.சிவகுமாரன், மற்றும் ஏ.வி.பி. கோமஸ் ஆகியோரினால் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. விமல் சுவாமிநாதன் இவரது சிறுகதைகளை சிங்கள மொழி பெயர்த்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வுப்பணியைப் பொறுத்தவரை, மலையக கலைகள், சமய மரபுகள் போன்ற துறைகளில் காத்திரமான பங்களிப்புகளைச் செய்த மாத்தளை வடிவேலன் 30 ஆண்டுகளுக்கு முன்னரே எழுதிய 'மலையக பாரம்பரிய கலைகள்” (1992) என்ற நூலை வெளியிட்டார்.

தமிழத்திலிருந்து தமிழக மக்கள் புலம்பெயர்ந்த இடங்களுக்கெல்லாம் தங்களுடன் கூட்டிச்சென்ற ஒரு திராவிட தெய்வமான மாரியம்மன் குறித்து வடிவேலன் எழுதிய 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்” என்ற ஆய்வுநூல் (1997 டிசம்பர்) கலையொளி முத்தையா பிள்ளை ஞாபகர்த்தமாக மு.நித்தியானந்தன், எச். எச் விக்கிரமசிங்க ஆகியோரால் இரா. சிவலிங்கத்தின் முன்னுரையுடன் வெளியிடப்பட்டது. மலையக நாட்டார் வழக்காற்றியல் பற்றிய தேடலையும் தனது பணிகளில் ஒன்றாக கொண்டு இயங்கியவர் மாத்தளை வடிவேலன்.

தமிழகத்தில் இருந்து இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்த போது தங்களது நாட்டாரியல் பண்பாடுகளையும் கொண்டு வந்தனர்.



(26 பக்கம் பார்க்க)

எச். எச் விக்கிரமசிங்க...






## கீறலாய் தூறலிடும் கவலை..

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

கவலை கொள்ள
எல்லோராலும் முடிகிறது
ஆனால்
அந்தக் கவலையை மறைக்க
எல்லோராலும் முடிவதில்லை...

சிலர் அழுது வெளிப்படுத்த
சிலர் கோவமாக வெளிப் படுத்த
சிலர் பேசி வெளிப் படுத்த
சிலர் பேசாமலே வெளிப்படுத்த
சிலர் உடைந்து வெளிப்படுத்த

ஒற்றைக் கவலை
பக்கம் பக்கமாய்
கீறல் போட்டு
தூறலாய் சிதற

கவலையை
கண நொடியும் காட்டாமல்
கடந்து செல்வோரைக் காண்கையில்
இதுவல்லவா வரமென்று
நினைக்கத் தோன்றுகிறது
மெய்யாய்...

இத்தனைக்கும்
எனக்கோர் ஆசை
கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது

எத்தனை பெரிய கவலையையும்
காட்டிக் கொள்ளாமல்
சில நொடிகளையேனும்
கடந்து விட வேண்டும் அவ்வளவே...

## போராடும் உள்ளங்கள்



தரு. தங்கம்
ரக்குவானை

மனம் வீசும் தேயிலையே...
மதிக்கப்படும் 'டொலர்'
இடுப்பில் ஈரத்துணி
மேனி எங்கும் இரத்த துளிகள்...

அட்டைகளின் சேட்டைகள்
அங்கமெல்லாம் தொங்குது...
மிருகங்களின் சீற்றங்களும்
குளவிகளின் ரீங்காரத்தில்
மத்தியிலும் உயிருக்காக...
போராடி...
கஸ்டப்பட்டு உழைக்கின்றோம்
'டொலருக்காக'...
உணர்வுகள் சாகும் வரை
போராடும் உள்ளங்கள்...

## ஏக்கத்தின் குரல்

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

ஏதும் அறியா குழந்தை போல
தனிமை தீண்டலிற்கு இறையானேன்
தனிமை தலை வருடி எனை அணைக்க
உன் நினைவில் வழி தேடி பயணமானேன்!

என் பயணமதில் உனை காண
விழி எல்லாம் வழி கொண்டேன்
நினைவெல்லாம் உனை விதைத்து
நிம்மதி தேடி அலைகிறேன்!

சோகங்கள் யாவும் கரு மேகங்களாய்
எனை மட்டும் சூழ
சோவென கொட்டும் மழைஇணை
எனதிரு விழிகளில் உணர்ந்தேன்!

உனை நினைய்யது
ஓர் நிமிடமும் எனதில்லை
உனை நினைத்து ஏங்கும்
வலிகளின் நடுவே
திகைத்து துடிக்கும் என் இதயம்
ஓய்வெடுக்க முன்
நீ எனதருகில் வருவாயோ!

## துரோகம்

அருளானந்தம் ஞா, பிரகாஷ்
கந்தப்பளை

வாழ்க்கையில் சிறந்த பாடங்களை
கற்று தருகிறது
துரோகம்....

எவரையும் அதிகமாக நம்ப
வேண்டாம்
யாரிடமும் அதிகம்
பாசம் காட்ட
வேண்டாம்
நமக்கு தெரிந்த
முகமே முதலில்
துரோகத்தை
காட்டி விடும் ....

ஒவ்வொரு நண்பர்களுக்கும்
ஒவ்வொரு தேவை
ஆகையால் யாரையும் நம்ப
வேண்டாம் ....

நண்பர்களின் துரோகம் ஈட்டி
போன்றது அது
குத்தும் போது
சுகமாகத்தான்
இருக்கும் சில
நொடியில் தான்
தெரியும் அதன் வலி....

நம் பிரச்சினைகளை
கடவுளிடம் மட்டும்
சொல்ல வேண்டும்
அவர் மட்டுமே நம்
கஷ்டங்களை
யாரிடமும் சொல்லி
சிரிக்க மாட்டார் ....

நம்மை நம்பியவரை
ஏமாற்றியதற்கு
பெயர் தந்திரமோ
திறமையோ கிடையாது அதற்கு
பெயர்தான் நம்பிக்கை துரோகம் .....



## மண்ணின் கண்ணே!

ஏறாவூர் தாஹிர்

பெண்ணே, பெண்ணே!
பெறுமதிமிக்க
மண்ணின் கண்ணே!
விடிவிளக்கெரிதலும்
உன்னால்தான்!
விறகடுப்பெரிதலும்
உன்னால்தான்!
கறை, கறல் போதலும்
உன்னால்தான்!
கட்டெறும் போய்தலும்
உன்னால்தான்!
எனவே நீ எல்
LAMP பெண்ணே!
எனினும் நீ
மண்ணின் கண்ணே!

வெயிலில் நாங்கள்
காய்தலும், மாய்தலும்,
மழையில் நின்று
நனைந்து தோய்தலும்
'கியூ' வரிசைகளில்
கிறு,கிறுப் படைதலும்,
முன், பின் தள்ளி
மூர்ச்சை அடைதலும்,
மயங்கி வீழ்ந்து
மண்டை உடைதலும்,
சண்டை பிடித்து
சட்டை கிழிதலும்...
உனக்காகத்தான் கண்ணே!
எனவே, நீ எல்
LAMP பெண்ணே!
எனினும் நீ
மண்ணின் கண்ணே!



## முடிவு தேடி

பாரதி மைந்தன்
முல்லைத்தீவு

முடிவை தேடி
முடியாத பயணம்
கனவு வாழ்வில்
காலங்கள் ஓட்ட

தடைகள் வந்தும்
தடுத்தே நிற்க
கேள்வி தினமும்
கேட்டே நடக்க

பாதை தேடி
பயணம் தொடர
நாடகமாய் வாழ்க்கை
நாளும் கடக்க

விடை தேடியும்
வினாவாய் மாற
புயலாய் மாறியது
புதிரான வாழ்வும்

அன்பைத் தேடி
அலைந்தே திரிய
வேசம் போட்டே
வேடிக்கை காட்ட

உள்ளம் எல்லாம்
உணர்வை ரசிக்க
கதைகள் பேசியே
காதல் ஆனதே

குடும்ப வாழ்வில்
குழப்பம் வந்திட
மகிழ்ச்சி இன்றியே
மனதும் வாடுதே

இன்பம் இன்றியே
இதயம் வாடிட
துன்பம் நாளும்
துணிவைத் தருதே

முயற்சி செய்தும்
முடியாத பாதை
முடிவு இன்றியே
முன்னேற துடிக்குதே

படிப்பு என்றே
பட்டம் பெற்றிட
வேலை இன்றியே
வேடிக்கை ஆனதே

மரணம் கூட
மாயம் செய்யுதே
வாழ்க்கை நாளும்
வசந்தம் தேடுதே

முடிவு காண
முயன்றிடும் வாழ்வு
பாதை நீண்டே
பாரில் செல்லுதே



## உண்மைத் திங்கள்

ரதிதேவி, மானிப்பாய்

உண்மைத் திங்கள்
உதிக்கும் வானில்
நீயும் நானும்
உள்ளக் கிணற்றில்
கொதிக்கும் நிலவின்
விம்பம் தானும்

ஆழி ஆடி அடங்கிய
இரவோடு இடிந்த வானமே
துடிக்கும் சுவரின் இடுக்கிலும்
துளிராய் மூச்சும்
துளி தேனுக்காய்

மடிக்கும் ஆடையோடு சிறைபட்ட
வாசம் போல நான்
உந்தன் மார்பில் அணைக்கையில்
வீழ்ந்தேன் மண்ணில் நிழலென

## வரிசையில் வந்த காதல்

என்.கே. வேணி,
பலாங்கொடை

முதன் முதல்
பெற்றோல்
வரிசையில் உன்னைக்
கண்டேன்
மறுநாள் மண்ணெய்ணைய்
வரிசையில் கண்டு
வரிசையில் கண்டு
கண்களால் பேசிக்
கொண்டோம்
மூன்றாம் நாள்
எரிவாயு
வரிசையில் நீ
இருவரும்
கதைத்து நட்புக்
கொண்டோம்

கடைசியாக கடவுச்
சீட்டு பெறும் வரிசையில்
நாமிருவரும் சந்தித்து
நம் காதலை
உறுதிப்படுத்திக் கொண்டோம்
இருந்தும் இங்கு
நாம் இருந்தால்
திருமணம் முடிந்தும்
வரிசையிலே நின்று
நம் வாழ்வு கருகிவிடும்
அயல் நாட்டுக்கு
சென்று ஆனந்தமாய்
வாழ்வோம் அன்பே



## மகிழ்வு கொள்வீர்

கெ.தர்மகுலராசா
திருகோணமலை

பள்ளி செல்லும் பாலகரே
பாங்குடன் நடந்து கொள்ளுங்கள்
எள்ளி நகை யாடுவார்
எதையுஞ் சட்டை செய்யாதீர்
பள்ளி "பன்சல்" ஆலயம்
பணிவாய்ச் சென்று பணியுங்கள்
அள்ளி குறையா அறிவை
அவைகள் தந்து நிற்குமே

ஒழுக்க முயர்வாய்க் கொள்வீர்
ஒப்பிலை யதற்கு உலகில்
விழுப்ப மதனால் பெருகும்
விருப்பாய் வாழ்வு அமையும்
குழப்பம் இல்லா மனதை
குறியாய் வைத்துக் கொள்ளும்
அழகாய்த் தெரியும் அகிலம்
அதனால் மகிழ்வு கொள்வீர்



## மெல்லச்சாகிறது மனிதம்

வினாயகமூர்த்தி அபிவர்ணா
முல்லைத்தீவு

விளை நிலமெல்லாம்
மனை நிலமாகி
வளமாய் வாழ்வதாய்
நினைப்பவர் இங்கே
மழை வளமெல்லாம்
மண்ணும் மறந்திட

மரங்களை அழிக்கும்
பகைவரும் இங்கே
கரங்களை உயர்த்திப் பலம்
கொடு தோழா
வருகின்ற காலம் வளமாய்
அமைக்க

மதத்தின் பெயரால்
மனங்கள் சிதைபட
வாழ்வின் வேர்கள் ஆட்டம்
காணுது

உறக்கம் உனக்கு இனியும்
வேண்டாம்
உந்தனை உணர்ந்து
விழித்தெழு தோழா
மனிதம் இங்கே புனிதம் ஆவது
உன்னால் நிகழ்ந்திடும்
உணர்வாய் இனிமேல்

## புகழ் பரப்பி புதுமை செய்

அன்புடன் நதுநசி

திசை எட்டும்
எட்டும் வகை
உன் புகழ் பரப்பு

ஆல் போல்
கிளை தாங்கிட
துணை வேர் தேடு

பனை போல்
உயர்ந்து நீ
வளர்ந்திட முயல்

முயல் போல்
அழகாகி வாழ்ந்திட
கற்று விடு

மா போல் நீ
கல்லெறி தாங்கி
நித்தம் காய்த்திடு

மதுரமரம் போல்
அகல வேர் பரப்பி
மண் பற்றிக் கொள்

தாமரை போல்
நீர் நின்று
ஒளி கண்டு மலர்

புலி போல்
பசிக்கு மட்டும்
உண்டிட பழகு

தனி மனிதர்
உன் செயல்
அறிந்திட செய்

பல தனி மனிதர்
சேர்ந்திங்கு கூட்டம்
ஆகி போகும் பார்

உன்னை இழக்காத
பற்றுக் காட்டு
இந்த சமூகம் மீது

உன்னை இன்றி
பெருமை இல்லை
என்ற நிலையில் வாழ்

வளம் வாழ
துணை வரும்
பயன் எல்லாம் பெறு

தடையாகும் வழமை
எல்லாம் மாற்று
புதுமை ஆக்கு

உன் புகழ் பரவும்
தானே இங்கே
திசை எட்டும்

## மொறட்டுவை பல்கலைக்கழகம்
## பல்கலைக்கழக அனுமதிகள் – 2021/2022 கல்வியாண்டு

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அழைத்தல்

i. கட்டடக் கலைஞர் பட்டம்
(Architecture Degree (B.Archi)
ii. வடிவமைப்பு பட்டம்
(Design Degree (B.Des)
iii. இயற்கை கட்டிடக் கலைஞர் பட்டம்
(Landscape Architecture Degree (B.L.A)
iv. பெஷன் வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு அபிவிருத்தி பட்டம்
(Fashion Design & Product Development Degree (B.Des. (FD&PD)
v. தகவல் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம்
(Information Technology & Management (Bsc. IT&M)

மேற்படி விடயத்திற்காக விண்ணப்பிக்க விரும்புகின்ற விண்ணப்பதாரிகள் உத்தேச பட்டப் படிப்பின் கீழ் ப.மா.ஆ. கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் மொறட்டுவை பல்கலைக்கழக இணையதளம் http://www.uom.lk இல் காணப்படும் ஒன்லைன் விண்ணப்பத்தை நிரப்புமாறு கேட்கப்படுகின்றனர்.

மேற்படி பட்டப் படிப்புக்காக விண்ணப்பிக்க தேவைப்படும் மேலதிக தகவல்களை பெற மொறட்டுவை பல்கலைக்கழக இணையதளம் http://www.uom.lk இற்கு விஜயம் செய்யுங்கள்.

சம்பந்தப்பட்ட ஆவணங்களுடனான ஒன்லைன் விண்ணப்பங்களை 2022.09.28 பி.ப. 6.00 மணிக்கு அல்லது அதற்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இறுதி நேரத்தின் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
இணையதளம் admissions@uom.lk (எந்த தெளிவு படுத்தல்களுக்கும்)

**பதிவாளர்**
**மொறட்டுவ பல்கலைக்கழகம்**
**கட்டுபெத்த, மொறட்டுவ.**
**05.09.2022**

## இலங்கை துறைமுக அதிகார சபை
## அறிவித்தல்
### வருடாந்த/ மூன்றாண்டுக்கான தனிநபர் உரிமம் (RPU) வழங்கல் (2023)

கொழும்பு/ காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு நுழைவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையின் வருடாந்த உரிம அலுவலகத்தினால் 2023ஆம் ஆண்டிற்காக வழங்கப்படும் வருடாந்த தனிநபர் உரிமம் (RPU) 2023 ஜனவரி 01ஆம் திகதி முதல் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருடாந்த உரிமம் 2023.01.01 முதல் 2023.12.31 வரையான ஒரு வருடத்திற்கு மாத்திரம் செல்லுபடியாகும் வண்ணம் மற்றும் மூன்றாண்டுகளிற்கான உரிமம் 2023.01.01 முதல் 2025.12.31 வரையான 03 ஆண்டுகள் செல்லுபடியாகும் வண்ணம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த அல்லது மூன்றாண்டு கால தனிநபர் உரிமம் (RPU) பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்திருக்கும் அனைத்து உரிமம் பெற்றவர்களும் தம் உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்களை 2022.11.30ஆம் திகதிக்கு முன்னர், கொழும்பு 01, லோட்டஸ் வீதிக்கு அண்மையிலுள்ள கெனல் முற்றத்திலுள்ள வருடாந்த உரிம அலுவலகத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

அவ்வாறே, இதற்காக நிகழ்நிலைமுறைமை (Online) மூலம் https://www.slpa.lk/port-Colombo/online-entry-permits) என்ற இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள 2022ஆம் ஆண்டிற்கான செல்லுபடியாகும் வருடாந்த தனிநபர் உரிமப் பத்திரம் (RPU) 2022.12.31ஆம் திகதியின் பின்னர் செல்லுபடியாகாது என்பதுடன், அவர்களிற்கு வழங்கப்படுள்ள வருடாந்த தனிநபர் உரிமப்பத்திரம் (RPU) 2023ஆம் ஆண்டிற்காக புதுப்பிக்கப்படாதிருப்பின், அத்தினத்தின் பின்னர் அவர்கள் துறைமுகத்தினுள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படும்.

உரிய நேரத்தில் தம் உரிமப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து வருடாந்த தனிநபர் உரிமப்பத்திரம் உடையவர்களின் கவனத்திற்கு இத்தால் முன்வைக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கீழ்க்காணப்படும் தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும். 0112389942, 0112483167, 0112483485

**பணிப்பாளர் (பாதுகாப்பு)**
**பாதுகாப்புப் பிரிவு**
**இலங்கை துறைமுக அதிகார சபை**
**2022.09.10ஆம் திகதி**

## கொழும்பு பல்கலைக்கழகம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலை பீடத்திற்கு 100 கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் AHEAD/NCB/ELTAELSE/FOA/2021/03-R**


1. AHEAD செயற்றிட்ட கிரயச் செலவிற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையிடமிருந்து கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலை பீடத்திற்கு 100 கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் ஆகியவற்றின் ஒப்பந்தங்களுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழே விபரிக்கப்பட்டவாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலை பீடத்திற்கு 100 கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக கொழும்பு-03, கொழும்பு பல்கலைக்கழகம், திணைக்கள பெறுகை குழுவின் (உயர் மட்டம்) தலைவர் தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. விலைமனுதாரர் இலங்கையில் ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவத்தை உரிய துறையில் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு பல்கலைக்கழகம், AHEAD செயற்றிட்டம் பெறுகைக்கான பிரதி பணிப்பாளர் (தொடர்பு இல.: 011-2595953/011-2559638) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் விலைமனுக்கோரல் ஆவணங்களை பல்கலைக்கழக இயக்கம் தொழில்நுட்ப செயலகத்திலிருந்து (OTS) 2022-09-12ஆம் திகதி முதல் 2022-10-05ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது ஆவணங்களை பரீட்சிப்பதற்காக பல்கலைக்கழகத்தின் http://cmb.ac.lk/procurements என்ற இணையத்தை நாடலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு பல்கலைக்கழக AHEAD செயற்றிட்டம் பெறுகைக்கான பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். மீளளிக்கப்படாத கட்டணத்தை 505170600013 என்ற இலக்கத்தை பயன்படுத்தி பல்கலைக்கழக பிரதான சேகரிப்பு கணக்கிற்கு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் பணத்தை வரவு வைக்கலாம். ஆவணங்களை 2022-09-12ஆம் திகதி முதல் 2022-10-05ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரையும் கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் பின்வரும் முகவரிக்கு 2022.10.06ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைத்தல் வேண்டும். பின்வரும் அட்டவணையில் கூறப்பட்டவாறு ''கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலை பீடத்திற்கு 100 கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் AHEAD/NCB/ELTAELSE/FOA/2021/03-R'' என்ற சொற்களையும் உரிய தொடர்பீட்டு இலக்கத்தையும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.
8. அனைத்து விலைமனுக்களுடனும் நிபந்தனையற்ற, இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடிய 2023-01-03ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் மத்திய வங்கியில் பதிவு பெற்ற எந்தவொரு வர்த்தக வங்கியிலிருந்தும் பின்வரும் அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (பயன்பெறுநர் - துணை வேந்தர் - கொழும்புப் பல்கலைக்கழகம்)

| வகை | உருப்படி | விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|---|
| கணனிகள் | கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலை பீடத்திற்கு 100 கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | 150,000.00 |

9. விலைமனுக்களை கொழும்பு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 'கேள்விப் பெட்டியில்' உள்ளிடல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு இறுதித் திகதிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2022-10-06ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர், உடனடியாகவே விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**94, குமாரதுங்க முனிதாச மாவத்தை,**
**கொழும்பு-03.**




**Repeat Your ad For Better Offers**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகார சபை
# விலைமனுக்கோரல்

கொழும்பு -07, ரீட் மாவத்த, குதிரைத்திடல் அருகில் அமைந்துள்ள கடையறைகள் கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள கடை அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள் கோரல்

1. கீழ்க்காணும் கடை அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் வருமான கேள்விச் சபை (சிறிய) இனால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இடம் | கடை அறை இலக்கம் | மாடி | தரைப் பிரதேசம் (சதுர அடி) | அடிப்படை மாதாந்த வாடகைத் தொகை (ரூ.) | பிணை முறி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| கொழும்பு -07 ரீட் மாவத்த குதிரைத்-திடல் அருகில் கடை அறைகளுடன் கட்டிடம் | MS 1B | கீழ் மாடி | 1720 | 300,000.00 | 180.000.00 |
| | MS 05 | மேல் மாடி | 2767 | 280,000.00 | 170,000.00 |

2. இக் கடைகளை மாதாந்த வாடகை அடிப்படையில 05 வருட காலத்திற்கு ஒதுக்கப்படும் மாதாந்த வாடகை தொகைக்காக வழங்கப்பட்டுள்ள அடிப்படை விலைமனுக்களுக்கு மேற்பட்ட கேள்வியை கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. ஒரு விண்ணப்பதாரிக்கு கடை அறைக்காக சமர்ப்பிக்க முடிவது ஒரு விண்ணப்பம் மட்டுமே.
4. ஆர்வம் காட்டுகின்றவர்கள் ஒவ்வொரு விற்பனை நிலைய அலகிற்கும் மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ள அடிப்படை மாதாந்த வாடகை பெறுமதிக்கு மேல் அவர்களது கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கடை அறைக்காக வழங்கப்படும் அதி கூடிய கேள்வித்தொகை 05 வருட கால எல்லைக்கு கடை அறையின் மாதாந்த வாடகையாகக் கொள்ளப்படும்.
6. சித்திகரமான கேள்விதாரரால் மீளளிக்கப்படாத அடிப்படைத் தொகையாக 03 மாத வாடகைக்கு சமமான தொகையை குறித்த வரியுடன் செலுத்துதல் வேண்டும்.
7. மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பாக 03 மாத வாடகைக்கு சமமான தொகையை சித்திகரமான கேள்விதாரரால் செலுத்தப்படல் வேண்டும்.
8. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு குறித்த விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை மீளளிக்கப்படாத ரூ. 10,000/- தொகையை (குறித்த 15% பெறுமதி சேர் பெறுமதியின் அடிப்படையில் வரி (VAT) உற்பட) செலுத்தி பத்தரமுல்ல 'செத்சிரிபாய' 8ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவிலிருந்து 2022 செப்டம்பர் 12 முதல் 2022 செப்டம்பர் 30ம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம் மேலும் அக் கால எல்லைக்குள் கேள்வி விண்ணப்பங்களை இலவசமாக பரீசித்துப் பார்க்கலாம்.
9. விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2022 ஒக்டோபர் 04ம் திகதி மு.ப. 11.00 இற்கு முடிவடைவதுடன் மாநகர அபிவிருத்தி அதிகார சபை நிதிப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரி அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு இதற்காக சமுகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.
10. இது பற்றிய மேலதிக தகவல்கள் அல்லது தெளிவு படுத்தல்கள் தேவைப்படின் பத்தரமுல்ல 'செத்சிரிபாய' கட்டம் 1, 8ம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை, சொத்து முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி பிரிவு (தொ. பே. 011-2875921, 011 2875916-20, 071-2798593, நீடிப்பு 2960 - 2968) அலுவலக நேரங்களில் காலை 9.00 முதல் பி.ப. 3.00 வரை விசாரிக்கலாம்.

**தலைவர்,**
**வருமான கேள்விச் சபை (சிறிய),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை.**

## தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
# பெறுகை அறிவித்தல்
### உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஒன்றிணைந்த வெகுஜன மற்றும் சமூக ஊடக பிரசாரத்தின் மூலம் பணியாளர்கள் பணம் அனுப்புவதை ஊக்குவித்தலுக்கான முன்மொழிவுகளை அழைத்தல்

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஒன்றிணைந்த வெகுஜன மற்றும் சமூக ஊடக பிரசாரத்தின் மூலம் பணியாளர்கள் பணம் அனுப்புவதை ஊக்குவித்தலுக்கு நிறுவனங்கள் மற்றும் முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள தரப்பினர் அவர்களின் விலைமனுக்களுடன் முன்மொழிவு விபரங்கள் மற்றும் இது தொடர்பிலான சேவைத் திட்டங்களை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடிதஉறையில் இட்டு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா கட்டணத்தை 2022-09-12ஆம் திகதி முதல் 2022-10-03ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணிக்கிடையில் செலுத்தி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் நிறுவனத்தின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப் பிரதி மற்றும் புகைப்படப் பிரதியொன்றையும் சமர்ப்பித்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

விலைக்கோரலுடன் முன்மொழிவுகள் மற்றும் சேவைத் திட்டங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஒன்றிணைந்த வெகுஜன மற்றும் சமூக ஊடக பிரசாரத்தின் மூலம் பணியாளர்கள் பணம் அனுப்புவதை ஊக்குவித்தலுக்கான முன்மொழிவுகளை அழைத்தல்'' எனக் குறிப்பிட்டு 2022-10-03ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைமை அலுவலகத்தின் 2ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022-10-03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறும் என்பதுடன் அதன் பின் சமூகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் தலைமை அலுவலகத்தின் 2ஆம் மாடியில் மூடப்பட்டு உடன் திறக்கப்படும். எந்தக் காரணத்தையும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடர்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பெறுகை முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2887585, தொலைநகல்: 0112880564)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த,**
**பத்தரமுல்ல.**

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

*அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்.*

சுகாதார அமைச்சு

SPMC இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

# பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்ய விரும்பும் அரசாங்க திணைக்களங்கள், அரசாங்கத்திற்கு உரித்தான வியாபார நிறுவனங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள், உள்ளூர் முகவர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வியாபார அமைப்புக்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனைத்து விண்ணப்பங்களும் இந்த அறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

**A – வழங்க வேண்டிய பொருட்கள்**

01. அலுவலக காகிதாதிகள் மற்றும் கணனி காகிதாதிகள்
02. மின்சார உபகரணங்கள்
03. இலத்திரனியல் உபகரணங்கள்
04. கட்டிட பொருட்கள் மற்றும் கனரகப் (ஹாட்வெயார்) பொருட்கள்
05. உருக்குத் தளபாடங்கள்
06. அலுவலக உபகரணம் (கணனிகள் போன்றன)
07. கணனி மென்பொருள் (Computer Software)
08. உள்நாட்டு மென்பொருள் மற்றும் இணைதள வடிவமைப்பு (Local Software & Website Creators)
09. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்
10. ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள்
11. பிளாஸ்டிக் கொள்கலன்கள், பிளாஸ்டிக் கரண்டிகள், தக்கைகள், திருகு மூடிகள் (ஸ்குறூ கெப்), அழுத்தும் மூடி மற்றும் அப் (வோடிங்) (உணவுத் தரம்)
12. பொலித்தின், பொலித்தின் பைகள், அச்சடிக்கப்பட்ட செலுலோஸ் பிலிம்கள், அச்சடிக்கப்பட்ட அலுமினிய பொயில், அலுமினிய பைகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட ஸ்சிரிங் ஸ்லீவ்ஸ் (உணவு தரம்)
13. பீவீசீ பொயில்கள் / பீவீ டீசீ பொயில்கள்
14. பீவீசீ ஒட்டும் டேப்கள்
15. பொதியிடுவதற்கான ஒட்டும் பசை
16. சீருடைகள் மற்றும் மேஸ்கள் போன்றன
17. துவாய்கள் (பெரியது மற்றும் சிறியது)
18. காலணிகள் - கறுப்பு மற்றும் வெள்ளை (கன்வெஸ்)
19. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்
20. டயர்கள் மற்றும் டியூப்புக்கள்
21. V பெல்டுக்கள் (Vbelts)
22. நியுமட்டிக் உதிரிப்பாகங்கள் (Pneumatic spares)
23. தீயணைப்பு இயந்திரங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், காஸ் முகமூடிகள் (goggles) இறப்பர் கையுறைகள் (rubber gloves)
24. துணி கையுறைகள் (cloth gloves) , துணி முகக் கவசகங்கள் (cloth masks) போன்றன.
25. சவர்க்காரம், சுத்திகரிப்பான்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்கள் (தும்புத் தடிகள், மொப்கள், சலவைத் தூள்கள் போன்றன)
26. பால் மா, தேயிலை, பிஸ்கட்கள் போன்றன
27. சீனி (உணவு தரம்) அதி சுத்தமான சுத்திகரிக்கப்பட்ட சீனி (மருந்து உற்பத்திக்காக)
28. சமைக்கப்பட்ட உணவு வழங்குனர்கள் (மதிய உணவு, காலை உணவு மற்றும் இரவு உணவு)
29. ஈதைல் மதுசாரம் 96%
30. மருந்தாக்கல் மூலப் பொருட்கள் (தற்போது கையிருப்பு வைத்திருக்கும் வழங்குநர்கள்)
31. Pharmaceuticals Reference standards
32. சிலிக்காஜொல் தனி பெக்கேற் மற்றும் சிலிக்கா ஜெல் பெக்கெற் ரோல் ஆக
33. அச்சடிக்கப்பட்ட நெளிவுள்ள பெட்டிகள்
34. அச்சடிக்கப்பட்ட அட்டைப் பெட்கள்
35. அச்சடிக்கப்பட்ட பொருட்கள் (லேபல்கள், சிறிய பிரசுரங்கள், ஸ்டிக்கர்கள் போன்றன)
36. வெல்டிங் உபகரணம் மற்றும் துணைப்பாகங்கள்
37. வளிச்சீராக்கிகளுக்கான உதிரிப்பாகங்கள்
38. இயந்திராதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
39. வெள்ளியிரும்பு போல்டுக்கள் மற்றும் நட்டுக்கள் (Stainless steel bolts & nuts)
40. பெயாரிங்குகள் (Bearings)
41. Oil seal & "O" rings
42. மோட்டார் கார்களுக்கான பட்டரிகள்
43. அச்சடிக்கப்பட்ட அலுமினியம் பொயில்கள் (Printed Aluminum foils)
44. அச்சுப்பொறி ரிபன்கள், டோனர்கள், கார்ட்ரிச்கள் (Toner/cartridges)
45. ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்கள்
46. ஸ்டிக்கர் லேபல் ரோல்

**B – வழங்க வேண்டிய சேவைகள்**

01. மோட்டார் வாகன திருத்தவேலைகள்
02. வாகனங்களை சேவிஸ் செய்தல்
03. வாகன தகர வேலைகள், ஸ்பிரே நிறப்பூச்சு, body நிர்மாணம் மற்றும் upholstery வேலைகள்
04. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்
05. பொருட்களை போக்குவரத்து செய்தல்
06. பயணிகள் போக்குவரத்து
07. வேன்கள், லொறிகள், கார்கள் போன்றவற்றை வாடகைக்கமர்த்துதல்
08. சுங்கப் பொருட்களை அகற்றல் மற்றும் அனுப்புதல் (clearing and forwarding)
09. காப்புறுதி
10. களஞ்சியப்படுத்துவதற்காக கொள்கலன்களை வாடகைக்கமர்த்துதல்
11. மின்சார நிறுவல்கள் மற்றும் திருத்தவேலைகள்
12. குழாய்கள், வடிகாலமைப்பு மற்றும் அதுசார்ந்த சேவைகள்
13. தொழிலாளர் ஒப்பந்தங்கள்
14. தச்சு வேலை மற்றும் பான்ரி கப்போட் வேலைகள்
15. சீருடைகளைத் தைத்தல்
16. அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டுதல்
17. வருடாந்த அறிக்கைகளை வடிவமைத்தல் மற்றும் அச்சடித்தல்
18. பாதுகாப்பு மற்றும் தீயணைக்கும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
19. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
20. மத்திய வளிச்சீராக்கி முறைமை, ஸ்பிலிட் வகை வளிச்சீராக்கிகள் மற்றும் குளிர்சாதனங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள்
21. வாகன வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
22. ஆய்வுகூட உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
23. மோட்டார் ரீவைண்டிங்
24. உருக்கு கட்டமைப்புகள், வேல்டிங், இயந்திர பாகங்களை நிரப்புதல் மற்றும் fitting வேலைகள்
25. கணனிகள் மற்றும் துணைப்பாகங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
26. மின்னியல் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
27. இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
28. தராசுகளின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்
29. கட்டிடங்களுக்கு நிறப்பூச்சு பூசுதல்
30. பீடை ஒழிப்பு வேலைகள்
31. சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைகள்
32. வாடகைக்கு களஞ்சியசாலை வழங்குதல் (இரத்மலானைக்கு அருகாமையில்)
33. அலுமினியக் கட்டமைப்பாளர்கள்
34. இரும்பு மற்றும் வெள்ளை இரும்பு வேலைகள்
35. சிவில் மற்றும் குழாய் வேலைகள்
36. காலை உணவு மற்றும் மாலை தேநீர் வேளைக்கான சிற்றுண்டிகளை வழங்குதல்

**மாதிரி விண்ணப்பப் படிவம்**
**2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்**

1. வியாபாரப் பெயர் மற்றும் முகவரி :
2. பதிவிலக்கம் மற்றும் திகதி :
3. உரிமையாளர்களின் பெயர் மற்றும் முகவரி :
4. நீங்கள் பதிவு செய்ய விரும்பும் அம்சம் :
5. தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்கள் :
6. வியாபார கொடுக்கல் வாங்கலுக்கு இயைபான வங்கியின் பெயர் மற்றும் கணக்கிலக்கம் :
7. 2022ஆம் ஆண்டில் சேவை வழங்கப்பட்ட கம்பனிகள், அரசாங்க திணைக்களங்கள், நியதிச்சட்டசபைகள்/ கூட்டுத்தாபனங்களின் பட்டியல் :
8. கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்படும் கடன் வசதி :
   (அ) காலஎல்லை :
   (ஆ) பெறுமதி :

கையொப்பம்: ..........................................
பதவி: ..........................................
திகதி: ..........................................

சகல விண்ணப்பங்களையும் தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்களை பதிவு செய்தல்-2022'' என குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2022 நவம்பர் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் ஒவ்வொரு அம்சத்திற்கும் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 (ஆயிரம்) ரூபாவை ''அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்'' என்ற பெயரில் காசோலை மூலம் அல்லது ரொக்கப் பணமாக கூட்டுத்தாபனத்தின் கணக்கிடல் பிரிவிற்கு செலுத்தலாம்.

ஒவ்வொரு பொருள் / சேவை வகைக்காகவும் வெவ்வேறான விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அவைகளை ஒரே கடிதவுறையில் இட்டு அனுப்பலாம்.

மேலதிக விபரங்கள் ஏதுமிருப்பின், திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 2637574/ 2635353).

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம், இரத்மலானை.**

## சர்வகட்சி அரசு அமைக்கும் கலந்துரையாடலில்...

(03ஆம் பக்கத் தொடர்)

**கே: பொதுஜன பெரமுன கட்சியை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன. இதன் உண்மைத் தன்மையை விளக்க முடியுமா?**

பதில் : பல மாவட்டக் கூட்டங்களை நடத்தினோம். கடைசியாக களுத்துறை மாவட்டக் கூட்டத்தை நடத்தினோம். அதற்கு முன்னர் பதுளை மற்றும் இரத்தினபுரி கூட்டங்களை நடத்தினோம். வாரம் முழுவதும் அனைத்து மாவட்டங்களையும் சரியாக திட்டமிட்டு இருந்தோம். இருப்பினும், நான் அதை மறுமலர்ச்சிக் கூட்டங்கள் என்று அழைக்க விரும்பவில்லை. எங்கள் கட்சி அமைப்பை வலுப்படுத்தும் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்க விரும்புகிறேன். உண்மையில், அது உண்மையில் செயலிழக்கும் போது நாம் அதை புதுப்பிக்க வேண்டும். எனது கருத்து ஒரு கட்சி என்ற வகையில், நாங்கள் எதற்கும் தாழ்வாக இல்லை, ஆனால் எங்களது கட்சியின் பொறிமுறையை பலப்படுத்த வேண்டும்.

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளனர். இதனை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

பதில்: முதலில், பாராளுமன்றத்தில் சுயேச்சைக் குழுக்கள் இல்லை. நீங்கள் ஆட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் பாராளுமன்றம் பரிசீலிக்கப்படுகிறது. பாராளுமன்ற முறைமையின் கருத்தின்படி, சுயேச்சைக் குழுக்கள் உருவாக முடியாது. முழு பாராளுமன்ற அமைப்பும் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியை அடிப்படையாகக் கொண்டது.

**கே: இந்தத் தருணத்தில் தேர்தலை நடத்துமாறு ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வேறு சில பிரிவினர் விடுத்த கோரிக்கையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: இந்த நெருக்கடியான சூழ் நிலையிலிருந்து தேவையற்ற நன்மைகளைப் பெறலாம் என்று சிலர் நினைக்கலாம். பொருளாதார நெருக்கடி கட்டுப்பாட்டுக்குள் வந்ததும், அதன் பிறகு தேர்தலை நடத்துவது குறித்து முடிவு செய்யலாம். எப்படியிருந்தாலும், இந்த நேரத்தில் நாங்கள் தேர்தலை ஊக்குவிக்கவில்லை. எவ்வாறாயினும், ஒரு கட்சி என்ற வகையில் நாங்கள் தேர்தலுக்கு அஞ்சவில்லை. எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்க தயாராக உள்ளோம்.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

# பெறுகை அறிவித்தல்

## விவசாய விஞ்ஞான பீடத்திற்கு ஆய்வுகூடத் தளபாடங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்

**(SUSL/SU/ NCB/LF/2022/002AI)**

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்திற்கு ஆய்வுகூடத் தளபாடங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையில் மேற்கொள்ளப்படும்.
2. விலைமனுதாரர்கள் இலங்கையில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் உள்நாட்டு தளபாடங்கள் மற்றும் ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட தளபாடங்களுக்கு இலங்கை ரூபாயில் மற்றும் இறக்குமதி செய்வதற்கு ஒன்றில் இலங்கை ரூபாயில் அல்லது ஐ.அ டொலர்களில் (USD) விலைகளை கோருதல் வேண்டும்
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நிதியாளர் / வழங்கல்கள் (தொடர்பிலக்கம்: 045-2280311) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2022-09-12ஆம் திகதி முதல் 2022-10-04ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வழங்கல்கள் பிரிவில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. சிரேஷ்ட உதவி நிதியாளர் / வழங்கல்கள் அவர்களுக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம் அல்லது மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியவுடன் வழங்கல் பிரிவினால் விலைக்கோரல் ஆணங்களின் மென் பிரதி (Soft Copy) வழங்கப்படும். மீளளிக்கப்படாத 12,500.00 ரூபாவை ஒன்றில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக சிறாப்பரிடம் ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும் அல்லது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தினால் பலாங்கொட இலங்கை வங்கிக் கிளையில் பேணப்படும் 000002246976 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். விலைக்கோரல் ஆவணங்களின் மென் பிரதிக்காக மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியமையை உறுதி செய்வதற்கு **suslsupplies@gmail.com** எனும் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பவும். சிறாப்பருக்குச் செலுத்தியதற்கான பண வைப்புப் பற்றுச்சீட்டு அல்லது வங்கி வைப்புப் பற்றுச்சீட்டை விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களை 2022-09-12ஆம் திகதி முதல் 2022-10-04ஆம் திகதி வரை பி.ப. 3.00 மணி வரையில் கொள்வனவு செய்யலாம்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2022-10-05ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் சிரேஷ்ட உதவி நிதியாளர், வழங்கல் கிளை, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிஹுல்ஓய எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்திற்கு ஆய்வுகூடத் தளபாடங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் - SUSL/SU/ NCB/LF/2022/002AI - 05-10-2022" என்று தயவு செய்து குறிப்பிடவும்.
6. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு முகவரியிடப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| வகை | தொடர் இல. | உருப்படிகள் | அளவு (எண்ணிக்கை) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|
| *Laboratory Furniture* | | | | |
| **Agriculture Biology Lab** | | | | |
| Package 1 | 1 | Island Bench | 3 | 115,000.00 |
| | 2 | Wall Bench - I | 1 | |
| | 3 | Wall Bench - II | 1 | |
| | 4 | Sink Table | 1 | |
| | 5 | Demonstration Table | 1 | |
| | 6 | Safety Shower with Eye wash | 1 | |
| **Crop Technology Lab** | | | | |
| Package 2 | 1 | Main working Bench | 3 | 123,000.00 |
| | 2 | Wall Bench -1 | 1 | |
| | 3 | Demonstration Table | 1 | |
| | 4 | Sink Table | 1 | |
| | 5 | Safety Shower with Eye wash | 1 | |
| **Food Chemistry Lab** | | | | |
| Package 3 | 1 | Main working Bench - I | 2 | 112,000.00 |
| | 2 | Main working Bench - II | 1 | |
| | 3 | Wall Bench - I | 1 | |
| | 4 | Wall Bench - II | 1 | |
| | 5 | Demonstration Table | 1 | |
| | 6 | Safety Shower with Eye wash | 1 | |
| **Livestock Lab** | | | | |
| Package 4 | 1 | Center Table -I | 1 | 120,000.00 |
| | 2 | Center Table -II | 1 | |
| | 3 | Wall Bench - I | 1 | |
| | 4 | Wall Bench - II | 1 | |
| | 5 | Wall Bench - III | 1 | |
| | 6 | Demonstration Table | 1 | |
| | 7 | Safety Shower with Eye wash | 1 | |
| **Agriculture Engineering- Soil/ Chemistry Lab** | | | | |
| Package 5 | 1 | Main Center Table | 2 | 158,000.00 |
| | 2 | Working Bench | 1 | |
| | 3 | Instrument Table | 1 | |
| | 4 | Wall Bench - I | 1 | |
| | 5 | Demonstration Table | 1 | |
| | 6 | Chemical Storage (Polypropylene) | 1 | |
| | 7 | Safety Shower with Eye wash | 1 | |
| | 8 | Fume Cupboard - 1200mm width | | |
| **Tissue Culture & Biology Lab** | | | | |
| Package 6 | 1 | Main Center Table | 2 | 70,000.00 |
| | 2 | Wall Bench - I | 1 | |
| | 3 | Wall Bench - II | 1 | |

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-09-29ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தின் சபை அறையில் இடம்பெறும்.
8. விலைமனுக்களை முடிவுறுத்தல் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் 5ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது (வழங்கல் கிளை) சிரேஷ்ட உதவி நிதியாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
9. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2022-10-05ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வழங்கல் கிளை, சபை அறையில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்.**

## எதிரி நாடுகளை அச்சுறுத்தும்...

(06ஆம் பக்கத் தொடர்)

இந்திய கடல்சார் வரலாற்றில் பிரமாண்டமான போர்க் கப்பலாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு போரில் முக்கிய பங்காற்றிய இந்தியாவின் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலின் நினைவாக அதன் பெயரே இந்தப் போர்க்கப்பலுக்கும் சூட்டப்பட்டுள்ளது. தற்போது பாதுகாப்பிற்கு வலு சேர்க்கும் வகையில் இரண்டு விமானம் தாங்கி போர்க் கப்பல்கள் இந்திய கடற்படையில் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையில் ஏற்கெனவே ஐ.என்.எஸ். விக்ராந்த் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் இருந்தது. இங்கிலாந்திடம் இருந்து வாங்கப்பட்ட இந்தக் கப்பல், இந்திய கடற்படையில் கடந்த 1961 முதல் 1997 ஆம் ஆண்டு வரை பணியாற்றியது. 1971 ஆம் ஆண்டு நடந்த பாகிஸ்தான் போரில் இந்தக் கப்பல் முக்கிய பங்காற்றியது. ஐ.என்.எஸ். விக்ராந்த் கப்பல், பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட பின், 2002 முதல் 2012 ஆம் ஆண்டு வரை அருங்காட்சியகமாக இருந்தது. அதன்பிறகு பயனற்ற நிலைக்குச் சென்றதால், கடந்த 2014_ 15 இல் இந்தக் கப்பல் உடைக்கப்பட்டது. இதையடுத்து, இந்திய கடற்படையில் அதே பெயரில் புதிய விமானம் தாங்கிக் கப்பலை சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, உள்நாட்டிலேயே அத்தகைய கப்பல் தயாரிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடியால் நாட்டுக்கு அக்கப்பல் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

கப்பலில் பயன்படுத்தப்பட்ட இரும்பு மூன்று ஈபிள் கோபுரங்களுக்குச் சமமானது. கப்பலில் பயன்படுத்தப்படும் மின்சாரம் கொச்சி நகரின் பாதியை ஒளிரச் செய்யும்.

சமஸ்கிருத வார்த்தையான விக்ராந்தில் உள்ள 'வி' தனித்துவமான அல்லது அசாதாரணமான ஒன்றைக் குறிக்கிறது. 'க்ராந்த்' ஒரு திசையில் முன்னேறுவதைக் குறிக்கிறது. சுதந்திரப் போர் மற்றும் 1971 போரில் முக்கிய பங்கு வகித்த நாட்டின் வீரர்களின் பெயரால் இது அழைக்கப்படுகிறது.

INS விக்ராந்த், 'ஜயேம சம் யுதி ஸ்ப்ருதா' எனும் ரிக்வேத வரிகளை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அது "எனக்கு எதிராகப் போரிடுபவர்களை நான் வெல்கிறேன்" என்று பொருள்படும்.

மேம்பட்ட மென்பொருளைப் பயன்படுத்தி கப்பலின் விரிவான பொறியியலை மேற்கொண்டு, விமானம் தாங்கிக் கப்பலின் அளவுள்ள ஒரு கப்பலை முழுமையாக 3D மாதிரியாக வடிவமைத்து, 3D மொடலில் இருந்து உற்பத்தி வரைபடங்கள் எடுத்து கப்பல் கட்டப்பட்டது. இப்படி 3D மொடல் வைத்து தயாரிப்பது இந்தியாவிலேயே இதுவே முதல் முறை ஆகும்.

இந்த கப்பல் கட்டுமானத்தின் மொத்த செலவு இந்திய நாணயத்தில் சுமார் 23,000 கோடி ஆகும்.

விக்ராந்தில் தரையிலிருந்து வான்வழி நடுத்தர தூரம் தாக்கும் ஏவுகணைகள் (MRSAM) பொருத்தப்பட்டுள்ளன. பெண் அதிகாரிகளுக்கான பிரத்தியேக அறைகளை கப்பல் உள்ளடக்கியது.

கப்பலில் உள்ள அனைத்து கேபிள்களும் மொத்தம் 2,600 கி.மீ நீளம் கொண்டது என்று வடிவமைப்பாளர் கட்டடக் கலைஞர் மேஜர் மனோஜ் குமார் தெரிவித்தார். கப்பலின் உள்ளே இரண்டு சத்திரசிகிச்சை தியேட்டர்கள் கொண்ட முழு செயல்பாட்டு மருத்துவ வளாகம் உள்ளது. குறைந்தது 2,000 ஊழியர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு சமையலறை உள்ளது.

இது ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட MiG29K போர் விமானம் மற்றும் Kamov31 முன்னெச்சரிக்கை ஹெலிகொப்டர்களையும் சுமந்து செல்லும். உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அட்வான்ஸ்ட் லைட் ஹெலிகொப்டர்கள் (ALH) மற்றும் அமெரிக்க பாதுகாப்பு நிறுவனமான லாக்ஹீட் மார்ட்டின் தயாரித்த MH60R மல்டிரோல் ஹெலிகொப்டர்களையும் சுமக்கும் தன்மை கொண்டது.

சமஸ்கிருத வார்த்தையான விக்ராந்த், என்பதற்கு தைரியமானவர் என்பது பொருள். அதன் தோற்றத்தை பகவத் கீதை உட்பட பல்வேறு நூல்களில் காணலாம். இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானம் தாங்கி போர்க்கப்பல் (IAC1) ஐஎன்எஸ் விக்ராந்தாக கடற்படையில் சேர்க்கப்பட்டது ஒரு முக்கியமான தருணத்தைக் குறிக்கிறது.

**வீடு விற்பனைக்கு**

பொரலஸ்கமுவ மாலனி புலத்சிங்கள மாவத்தை இரண்டு பிரதான பாதைகளுக்கிடையில், முழுமையாக கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு உண்டு.
3 PHASE மின்சாரம், இரண்டு றோலர் கேட் கொண்ட 3 மாடி கட்டிட வீடு
( 200 Meter for bellanvila Walking track )
Contact: 0773903929 / 0714317870

# உளச்சார்புப் பரீட்சை

## தகவல் முறைமைகள் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம்

## கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி (UCSC) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடம்

கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி (UCSC) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடம் ஆகியவற்றினால் நடாத்தப்படும் தகவல் முறைமைகள் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான (கல்வியாண்டு 2021/2022) உளச்சார்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணைய வழியே (online) சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 23 ஆம் திகதி செப்டம்பர் மாதம் 2022 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்**
**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரி**
11.09.2022

தினகரன் வாரமஞ்சரி
Education
சிறப்பு விளம்பர அநுபந்தம்
☎ : 0112 429 339, 0777 270 076

# உலக அங்கீகாரம் பெற்ற டொக்டராக மாறுங்கள்...

**ஆர்மேனியாவில் 06 வருட மருத்துவப் பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடித்த பிறகு உங்களால் அரசாங்க பதிவு செய்யப்பட்ட மருத்துவராக முடியுமா?**

ஆம், நீங்கள் ஒரு டொக்டராக வேலை செய்து மாதம் 1500 - 2000 டொலர்கள் சம்பாதிக்கலாம்.

மேலும் வேலையில் இருக்கும் போது நீங்கள் ERPM, AMC, PLAB அல்லது USMLE இல் நேரடியாக தேர்வுகளை எதிர்கொள்ளலாம்.

ஏனெனில் மேலே உள்ள தேர்வுகளுக்கான வகுப்புகளை நீங்கள் செய்துள்ளீர்கள்.

**கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஆர்மேனியாவில் உள்ள யெரெவன் மாநில மருத்துவப் பல்கலைக்கழகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்கள் என்ன?**

இலங்கை மருத்துவ கவுன்சில் (SLMC) மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மற்றும் ஒரு மாணவர் ERPM உடன் பட்டப்படிப்பை முடித்தவுடன், அவர் / அவள் இலங்கையில் மருத்துவத் தொழிலில் சேர முடியும். மேலும், இது ஐரோப்பாவின் முதல் 100 பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும் என்பதோடு, ஆர்மேனியாவில் உள்ள சிறந்த மருத்துவப் பல்கலைக்கழகமாகும், மேலும் 6 ஆண்டு பட்டப் படிப்பை முழுவதும் ஆங்கில வழியில் படிக்க உதவுகிறது.

**YSMU மருத்துவ பட்டப்படிப்பு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த மற்ற நாடுகள் யாவை?**

தற்போது, ஐக்கிய இராச்சியத்தின் பொது மருத்துவ கவுன்சில் (GMC), அவுஸ்திரேலிய மருத்துவ கவுன்சில் (AMC) அமெரிக்க மருத்துவ சங்கம் (AMA) மற்றும் கனடாவின் மருத்துவ கவுன்சில் (MCC) போன்ற முன்னணி நாடுகளில் உள்ள மருத்துவ கவுன்சில்கள் YSMU மருத்துவ பட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளன. மேலும், ஐரோப்பிய ஒன்றியம் (EU), வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளுக்கான கல்வி ஆணையம் (ECFMG) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO) போன்ற முன்னணி நிறுவனங்கள் 1920 இல் தொடங்கப்பட்டு 102 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான யெரெவன் மாநில மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு அனுமதி அளித்துள்ளன.

**YSMU மூன்றாம் ஆண்டு முதல் ERPM, AMC, USMLE மற்றும் PLAB படிப்பு திட்டங்களை இலவசமாக வழங்குகிறதா?**

ஆமாம், அது செய்கிறது. ERPM, AMC, USMLE மற்றும் PLAB பட்டப் படிப்பு திட்டங்கள், முழுமையான பாராட்டு அடிப்படையில் நடத்தப்படுகின்றன. கூடுதலாக, QIB வளாக முதலாவது ஆண்டிலிருந்து இணையத்தில் இலவசமாக பிரெஞ்சு மொழியைக் கற்பிக்கிறது.



**ஒரு வருடத்திற்கு தங்குமிடக் கட்டணமாக 600 அமெரிக்க டொலர்கள் மட்டுமே செலவழிக்க வேண்டும் என்பது உண்மையா?**

ஆமாம், அது உண்மை தான். YSMU ஒரு மாநிலப் பல்கலைக்கழகம், மேலும் இது வளாகத்தில் தங்கும் வசதிகளை காலை உணவுடன் வழங்குகிறது.

மேலும், ஆர்மேனியாவில் வாழ்க்கைச் செலவு மிகக் குறைவு, மேலும் ஒருவர் மாதத்திற்கு ரூ.25>000/= ஐக்கொண்டு அன்றாடச் செலவுகளை சமாளிக்க முடியும்.

**மருத்துவ ஆய்வுகளுக்கு எத்தனை மருத்துவமனைகள் உள்ளன?**

பல்கலைக்கழக வளாகத்திற்குள் நான்கு மருத்துவமனைகள் உள்ளன, மேலும் 72 மருத்துவமனைகள் YSMU மாநில பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அவை நவீன கருவிகளைக் கொண்டுள்ளன.

**உதவித்தொகை மற்றும் கடன்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றன?**

ஞஐடீ வளாகத்தின் மேற்பார்வையின் கீழ், சர்வதேச உயர்கல்வி புலமைப்பரிசில் மையம் அவர்களுக்கு அறிவுத் தேர்வு (IQ சோதனை) மற்றும் Z-core முடிவுகள் மற்றும் பிற குறிப்பிட்ட காரணிகளைக் கருத்தில் கொண்டு புலமைப் பரிசில்களை வழங்குகிறது.

(கடந்தகாலத்தில் உதவித்தொகை வென்றவர்கள் பற்றிய விவரங்களுக்கு www.youtube/qibcampus ஐப் பார்வையிடவும்)

இலங்கையின் உயர்கல்வி வரலாற்றில் முதன்முறையாக மருத்துவரான பின்னர் (12 வருட மீளச் செலுத்தும் காலத்துடன்) அதனை திருப்பிச் செலுத்துவதற்கான கடன் திட்டத்தை அரச வங்கியொன்று அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதி நம் நாட்டின் சாதனை படைத்த மாணவர்கள் தங்கள் உயர்கல்வி கனவை அடைய உதவுகிறது. www.qib.queensia.com ஐப் பார்வையிடவும் மற்றும் செப்டம்பர் 07, 2022 அன்று அல்லது அதற்கு முன் பதிவு செய்யவும்.



**கடந்தகாலங்களில் புலமைப்பரிசில் வென்றவர்களில் வைத்தியர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், தலைமைச் செவிலியர் உத்தியோகத்தர்கள், முன்னணி வர்த்தகர்களான மாணவர்களின் பெற்றோர்கள் இருப்பது உண்மையா?**

ஆம் உள்ளனர்.

QIB வளாகம் குழந்தைகளுக்கும் ஒட்டுமொத்த நாட்டிற்கும் வழங்கும் இந்த பாராட்டத்தக்க சேவையைப் பற்றி தெரிந்துகொள்ள அவர்களிடம் கேட்போம்.

"முதல் ஆண்டில் பாடக் கட்டணத்தில் 35% உதவித்தொகையை வழங்கியதற்காக QIB வளாகத்திற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மேலும், 102 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட முன்னணி மாநிலப் பல்கலைக்கழகங்களில் ஒன்றில் எனது குழந்தை படிப்பதை ஒரு பாக்கியமாக கருதுகிறேன். ஆர்மேனியா.

குறிப்பாக கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையின் போது, எந்தத் தடையுமின்றி எங்கள் குழந்தைகளின் படிப்பை எளிதாக்குவதில், QIB வளாகத்தின் நிர்வாகமும் மற்ற அதிகாரிகளும் வழங்கிய சேவையை நான் பாராட்டுகிறேன். மாணவர்களுக்கு வசதிகளை வழங்குவதில் ஒப்பந்த வரம்புகளைத் தாண்டியும் கடமைகளைச் செய்வதில் அவர்களின் அர்ப்பணிப்பையும் விடாமுயற்சியையும் நான் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

**டொக்டர் வினீதா கல்தெரா**

"கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையில் எங்கள் குழந்தைகளின் படிப்பைத் தொடர லுளுஆரு உடன் ஒருங்கிணைத்து QIB வளாகம் வழங்கும் சேவையை நாங்கள் பாராட்டுகிறோம்.

குழந்தைகளின் திறமை மற்றும் அறிவை அடிப்படையாகக் கொண்டு ஞஐடீ வளாகம் வடிவமைத்த மருத்துவ பட்டப்படிப்பு மிகவும் வெற்றிகரமாக உள்ளது. இதன்போது 35% உதவித்தொகை பெறுவதை நான் பெரிதும் மதிக்கிறேன். மேலும், மூன்றாம் ஆண்டு முதல் ஈஆர்பிஎம் தேர்வுக்கு மாணவர்களை வழிநடத்துவதையும் நான் பெரிதும் மதிக்கிறேன்".

**டொக்டர் எம்.என்.எம். ஷிப்ரி**

"எங்கள் குழந்தைகளின் கல்வி வசதிக்காக 20% உதவித்தொகையை வழங்கியதற்காகவும், எல்லாவற்றையும் உன்னிப்பாகத் திட்டமிடுவதன் மூலம் எங்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்கியதற்காகவும் QIB வளாகத்திற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

மேலும், எதிர்காலத்தில் எனது பிள்ளையின் கல்வியை ஆர்மேனியாவில் பூரணப்படுத்த உங்கள் நிறுவனம் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் அர்ப்பணிப்புடன் செய்யும் என்று நம்புகிறேன்.

**கலாநிதி சந்துனி சிறிமான்ன மற்றும் பேராசிரியர் மஞ்சு ஸ்ரீமான்ன**

"நாங்கள் குறிப்பாக QIB வளாகத்திற்கு எங்கள் அங்கீகாரத்தை வழங்க விரும்புகிறோம், மேலும் ஆர்மேனியாவில் உள்ள யெரெவன் மாநில மருத்துவ பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டம் பெறுவதை நாங்கள் ஒரு பாக்கியமாக கருதுகிறோம்."

**எம்.எம்.எஸ். பாத்திமா ~ அரச பாடசாலை ஆசிரியை**

"எனது பிள்ளையின் மருத்துவராகும் கனவை நனவாக்கிய QIB வளாகத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எங்கள் குழந்தைகளின் எதிர்கால லட்சியங்களையும் தன்னம்பிக்கையையும் உச்சத்திற்குக் கொண்டு செல்வதற்கு, 15 மதிப்பெண்களை வழங்கியதற்கும் உதவித்தொகை வழங்கியதற்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

தற்போதைய கொவிட்-19 தொற்றுநோய் சூழ்நிலையில் இணையத்தில் படிப்பதன் மூலம் எங்கள் பிள்ளைகளின் நேரத்தையும் முயற்சிகளையும் நிர்வகிக்க முடிந்ததை பெற்றோர்களாகிய நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்."

**செப்டம்பர் 2022 உட்சேர்ப்புக்கு நீங்கள் எவ்வாறு பதிவு செய்யலாம்?**

www.qib.queensia.com இல் உள்நுழைந்து பதிவு செய்யலாம். www.youtube/qibcampus ஐப் பார்வையிடுவதன் மூலம் கடந்தகால உதவித்தொகை வென்றவர்கள் பற்றிய விவரங்களைப் பெறலாம்.

மேலும், 0787 855 855 என்ற எண்ணில் திருமதி. ஏரந்தியையும், 0718 468 568 என்ற எண்ணில் திரு. ரஞ்சித்தையும் அல்லது 0755 468 568 என்ற எண்ணில் திருமதி.சேதனாவையும் தொடர்பு கொள்ளலாம் அல்லது www.queensia.com /www.qibcampus.com இல் உள்நுழைவதன் மூலம் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

**~ நலீஃப் கிட்சில்**




தினகரன் வாரமஞ்சரி

# Education

சிறப்பு விளம்பர அநுபந்தம்

☎ : 0112 429 339, 0777 270 076

## ஆறு உயர் பெறுபேற்றாளர்களுக்கு

# இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் புலமைப்பரிசில்

**க.பொ.த உயர்தரத்தை வெற்றிகரமாக முடித்த மாணவர்கள் உலகளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்படும் கணக்காளர்களாக மாறுவதற்கான அவர்களின் தொழில்சார் கனவுகளை அடைய உதவுவதற்காக, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் நுழைவு மட்டத்திற்கான இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியது. 2021 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் அந்தந்த மாவட்டங்களில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்கள் அல்லது எந்தவொரு பாடத்திலும் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்கள் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கலாம்.**

2021 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் நாட்டின் முதல் பத்து பேரில் இடம்பிடித்த இலங்கையின் அதிதிறமைமிக்க சாதனையாளர்கள் ஆறு பேருக்கு, உலகளாவிய ரீதியாக மதிக்கப்படும் பட்டயக் கணக்காளர்களாக மாறும் அவர்களது வாழ்நாள் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (CA Sri Lanka) புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

முழுமையாக நிதியளிக்கப்படும் ஐந்தாண்டு புலமைப்பரிசில் பெற்றவர்களுள் தீவளாவிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த ரஷினி துல்யா டயஸ், தீவளாவிய ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த யசங்கீ ஷக்யா வெகடபொல, தீவளாவிய ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட விசாகா வித்தியாலயத்தின் இமந்தி தனுதர மதனசிங்க, தீவளாவிய ரீதியில் ஆறாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட டி. எஸ். சேனநாயக்க வித்தியாலயத்தின் தினுல சமதித் குணரத்ன, தீவளாவிய ரீதியில் ஏழாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட றோயல் கல்லூரியின் மிஹான் திமத் திலகரத்ன மற்றும் தீவளாவிய ரீதியில் எட்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் டொனா குலனி ருவன்யா குலதுங்க ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

நிறுவக ஆளுகைக்குழு உறுப்பினர் திரு. நுவான் விதானகே, பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி துலானி பெர்னாண்டோ மற்றும் மாணவர் விவகார பணிப்பாளர் திருமதி லக்மாலி பிரியங்கிகா ஆகியோர் முன்னிலையில் நிறுவகத்தில் நடைபெற்ற விழாவில் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் தலைவர் திரு. சஞ்சய பண்டாரவினால் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

அதேவேளை, க.பொ.த உயர்தரத்தை வெற்றிகரமாக முடித்த மாணவர்கள் உலகளாவிய ரீதியில் எதிர்பார்க்கப்படும் கணக்காளர்களாக மாறுவதற்கான அவர்களின் தொழில்சார் கனவுகளை அடைய உதவுவதற்காக, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் நுழைவு மட்டத்திற்கான இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களையும் அறிமுகப்படுத்தியது. 2021 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் அந்தந்த மாவட்டங்களில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்கள் அல்லது எந்தவொரு பாடத்திலும் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்கள் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

நாட்டில் கணக்கியல் கல்விக்கான விருப்பத்துக்குரிய தெரிவாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இளநிலைப் பட்டயக் கணக்காளர் (ACA) என்ற அதன் மிகமுக்கிய தராதரத்துடன், பரந்த அளவிலான தராதரங்களை வழங்குகிறது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் தகுதிபெற்ற பட்டயக் கணக்காளர்களின் சேர்க்கைகளில் தவிசாளர்கள், பங்காளர்கள், முகாமைப் பணிப்பாளர்கள், நிதிப் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள், பிரதம நிதி அதிகாரிகள், பொது முகாமையாளர்கள், நிதி ஆலோசகர்கள் மற்றும் கணக்காய்வு முகாமையாளர்கள் எனப் பரந்துபட்ட வகையில் உள்நாட்டிலும் உலகளவிலும் உயர்மட்ட நிறுவனங்களில் உள்ள உயர் பதவிகளில் உள்ளனர்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித்திட்டம் மூன்று ஏறுவரிசையில் வழங்கப்படுவதுடன், மேலும் வேலைவாய்ப்பு மற்றும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒரு நிதி நிபுணராக வெற்றிகரமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் ஒவ்வொரு மட்டத்திலும் மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட தகைமையைப் பெறுகின்றனர். பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித் திட்டத்தைப் பின்பற்றும் மாணவர்கள், நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி மட்டமாகிய Strategic Level மட்டத்தை நிறைவு செய்த பின்னர்,இளநிலைப் பட்டயக் கணக்காளராக வெளியேறுவதற்கான தெரிவு காணப்படுவதுடன், மாற்றாக, Corporate Level மட்டத்தை நிறைவு செய்த பின்னர் சான்றுபெற்ற கூட்டுவணிகக் கணக்காளராகவோ அல்லது Business Level மட்டத்தை நிறைவு செய்த பின்னர் சான்றுபெற்ற வணிகக் கணக்காளராகவோ தகைமை பெற முடியும்.

சர்வதேச தராதரங்கள் மற்றும் திறன்களை ஏற்பிசைவு மற்றும் மதிப்பீடு செய்வதற்காக, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித்திட்டம் ஐக்கிய இராச்சியத்தின் தேசிய தகவல் நிலையத்தினால் உறுதிசெய்யப்பட்டிருப்பதுடன், இது இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித் திட்டத்தின் இளநிலைப் பட்டயக் கணக்காளர் தராதரமானது முதுமாணிப் பட்டத்திற்கு சமமானது எனவும், சான்றுபெற்ற கூட்டுவணிகக் கணக்காளர் தராதரம் இளமாணிப் பட்டத் தரத்துடன் ஒப்பிடக்கூடிய தகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது, இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித் திட்டத்தின் தகுதி பெற்ற பட்டயக் கணக்காளர்கள் அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு, தென்கிழக்கு ஆசியா மற்றும் தெற்காசியா உள்ளடங்கலான 40க்கு மேற்பட்ட நாடுகளில் பணிபுரிகின்றனர்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்யும் மாணவர்கள் ஒரே நேரத்தில் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் தராதரத்துடன், உலகின் பழமையான மற்றும் மிகவும் மதிப்புமிக்க கணக்கியல் அமைப்புகளில் ஒன்றான இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் (ICAEW) உறுப்புரிமையையும் பெற்றுக்கொள்ள முடியும். ICAEW தராதரமானது இன்று உலகில் உள்ள மிகவும் மேம்பட்ட கற்றல் தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாக இருப்பதுடன்,மேலும் இது வணிகம், நடைமுறை மற்றும் பொதுத்துறை ஆகியவற்றில் உலகம் முழுவதும் மதிப்பு மிக்கதாகக் காணப்படுகிறது, இதன் மூலம் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்களுக்கு இரட்டைத் தராதரங்கள் காரணமாக இரட்டிப்பு வெற்றி மற்றும் மேம்பட்ட உலகளாவிய நகர்திறனை வழங்குகிறது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளைப் பெற்ற எந்தவொரு மாணவருக்கும் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிகழ்ச்சித் திட்டத்தின் நுழைவாயில் திறந்திருக்கும்.






# தொழிற்கல்வியின் அவசியம்



**'உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு'**

**'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாட வளந்தரும் நாடு'**

என்று ஒரு நாட்டின் பெருமையையும், ஒரு நாடு இருக்க வேண்டிய முறைமையையும் கூறுவார் திருவள்ளுவர். நாம் நாடிச் செல்லாமல், அனைத்து வகைச் செல்வங்களும் நம்மை நாடி வருவதே சிறந்த நாடு என்கின்றார் அவர்.

செய்யும் தொழிலே தெய்வம் “அந்தத் திறமைதான் நமது செல்வம் “என்று தொழிலின் இன்றியமையாமையை உணர்த்திப் பாடினார். இத்தொழிற்கல்வி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

### தொழிற்கல்வி என்றால் என்ன?

நாம் வாழும் வழியை தெளிவுபடுத்தும் கல்வியை நூற்கல்வி என்றும், தொழிற்கல்வி என்றும் இரு வகைப்படுத்தலாம். செய்முறைப் பயிற்சி ஏதுமின்றி நூல்களின் வழியாகப் பெறும் அறிவினை நூல்கல்வி என்று கூறலாம். ஏதேனும் ஒருவகைத் தொழில் செய்வதற்கு வேண்டிய பயிற்சி அளிக்கும் கல்வியைத் தொழிற்கல்வி என்று கூறலாம்.

### வாழ்க்கைக் கல்வி அல்லது தொழிற்கல்வி

வேலை வாய்ப்பைத் தேடுபவனும, வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க எண்ணுபவனும் வெறும் ஏட்டுப் படிப்பை மட்டும் பயிலக் கூடாது. ஏனெனில், “ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது“ என்பதை உணர்ந்து வெறுங்கல்வியை விட வாழ்க்கைக் கல்வி அதாவது, வாழ்க்கைக்குத் தேவையான தொழிற்கல்வியைப் பயிலுதல் வேண்டும். மேலும், ஒரு தொழிலைச் செய்யும் போது அதற்குத் துணையான சில உபதொழில்களையும் மேற்கொள்ள வேண்டும்.

“வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று“ -

என்பதற்கேற்ப ஒரு தொழிலைச் செய்து கொண்டே மற்றொரு தொழிலையும் செய்வது, ஒரு யானையைக் கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பதற்குச் சமம் என்கிற வள்ளுவரின் சொல்லை மறவாது பின்பற்றினால் வேலைவாய்ப்பும் பெருகும். வேலையின்மையும் ஒழியும். பொருளும் சேரும். சேர்க்கும் பொருளை தீமையில்லா வழியில், சேர்க்கும் திறமறிந்து சேர்க்க வேண்டும். இதனையே குறளும்,

**'அறன்ஈனும் செல்வமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்'** என்று உரைக்கின்றது.

### கல்வி முறையில் மாற்றம்

**'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றை யவை'**

என்று தெய்வப்புலவரும், “உட்பொருளை அறியாமல் பகவானை அடையும் பொருட்டு செய்யும் சாஸ்திரப் பயிற்சியை விட சாத்திரங்கள் மூலம் கிடைக்கும் ஞானம் அதாவது கல்வி சிறந்தது“ என்று கிருஷ்ண பரமாத்மா தன்னுடைய கீதையிலும் கூறுகின்றனர். இங்கு ஞானம் அல்லது கல்வி என்றால் சத்சங்கத்தாலும், சாத்திரப் படிப்பாலும் உண்டாகும் அறிவு என்று பொருளாகின்றது.

**'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'**

என்று ஔவையும் கல்வியின் சிறப்பை விளக்குகின்றார். எனினும், தற்போது நமது மாணாக்கர்கள் மற்றும் இளைஞர்கள் கற்கும் கல்வியானது மெக்காலே கல்வி எனப்படும் மனப்பாடக் கல்வியே ஆகும். இக்கல்வியில் சில நன்மைகள் இருப்பினும், அதிகளவில் தீமைகளே இருக்கின்றன. முதலில் இது முழுமையான தன்னம்பிக்கை உடைய ஒரு மனிதனை உருவாக்கும் கல்வியே அல்ல. வெறும் எதிர்மறைக்கல்வி ஆகும்.

சுயசிந்தனை இல்லாதவனால், பிற வேலை வாய்ப்புக்களைப் பெறவோ, சுயவேலை வாய்ப்புக்களை உருவாக்கவோ இயலாது. ஏனவே, வேலை வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்ட சிறந்த கல்வி முறை வருதல் வேண்டும். நாம் அதனை முயன்று உருவாக்கல் வேண்டும். இது மிகப்பெரும் திட்டம் என்ற போதிலும் இதனை நாம் உருவாக்கியே தீர வேண்டும். இக்கல்வி முறையில் மாற்றத்தைக் கட்டாயம் கொண்டு வர வேண்டும். இத்தகைய மாற்றத்திற்கு தொழிற்கல்வி மிக மிக அவசியம்.

இளமைக்காலத்திலேயே நமக்குத் தேவையான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கற்றோமானால் அத்தொழிலில் நாம் நல்ல திறமை பெறுவோம். வாழ்க்கைக்குத் தொழில் தேவையே என்ற ஏக்கம் நீங்கும் கவலையின்றி வாழலாம். நாடும் நலம் பெறும். எனவே, நாம் தொழிற்கல்வி கற்றுச் சிறந்து வாழ்வோமாக!.




Start in Sri Lanka, transfer to Deakin University later.

Deakin Sri Lanka Office:
070 100 2001

deakin.edu.au

Deakin University CRICOS Provider Code: 00113B


தினகரன் வாரமஞ்சரி **Education** சிறப்பு விளம்பர அநுபந்தம்
☎ : 0112 429 339, 0777 270 076

# உள்ளூரில் ஆரம்பித்து அவுஸ்திரேலியாவின் டீக்கின் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறலாம்






Deakin பல்கலைக்கழகம் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்களுக்கு தனியார் மற்றும் பொதுத் துறைகளில் இலங்கையின் முன்னணி உயர்கல்வி வழங்குநர்களுடன் விரிவான பங்காளித்துவங்களைக் கொண்டுள்ளது. பெரும்பாலான கூட்டாண்மைகள் முன் கற்றலுக்கான அங்கீகாரம் (RPL) ஆகும், இது அவுஸ்திரேலியாவின் டீக்கின் பல்கலைக்கழகத்திற்கு கற்கையை தொடர்வதற்கு முன் உள்ளூரில் கற்கைநெறியை ஆரம்பிக்க உங்களை அனுமதிக்கிறது.

**டீக்கின் பல்கலைக்கழகத்துக்கான திட்டம் என்றால் என்ன?**

டீக்கின் பல்கலைக்கழக திட்டம் மாணவர்கள் இலங்கையில் தங்களுக்கு விருப்பமான பட்டப்படிப்பைத் தொடங்கவும் ஆஸ்திரேலியாவில் படிப்பை முடிக்கவும் அனுமதிக்கிறது.

RPL என்பது முந்தைய படிப்பின் அங்கீகாரம் ஆகும், இது டீக்கினில் நீங்கள் படிக்க வேண்டிய பாடங்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம், இது உங்கள் பட்டப்படிப்பை குறுகிய காலத்தில் முடிக்க அனுமதிக்கிறது. வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அளவு நீங்கள் தேர்ந்தெடுத்த பாடநெறி மற்றும் பிரதான பாடங்கள் என்பனவற்றைப் பொறுத்து அமையும், மேலும் இவை தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான பாடங்கள் மற்றும் தொழில்முறை அங்கீகாரத் தேவைகளுக்கு ஏற்ப மாறுபடலாம். டீக்கின் விண்ணப்பத்தின் போது RPL ஐ முறையாகத்

தீர்மானிப்பது முடிவுறும். பரிமாற்றத் தகுதி பெற, நீங்கள் செட் (தர புள்ளிகளின் சராசரி) GPA தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

**பரிமாற்ற (திட்டம்) விருப்பம் ஏன் நல்ல யோசனை?**

பல பெற்றோருக்கு, தங்கள் குழந்தையின் முதிர்ச்சி மற்றும் குறிப்பாக ஒரு வெளிநாட்டு நாடு போன்ற புதிய சூழலில் சமாளிக்கும் திறன் பற்றிய கவலை இருக்கலாம். இலங்கையில் உள்ள டீக்கின் பங்குதாரர் நிறுவனத்தில் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் இளம் மாணவர்கள் உணர்ச்சிபூர்வமாக முதிர்ச்சியடைவதற்கும், அருகிலுள்ள குடும்பத்தின் ஆறுதல் மற்றும் வழிகாட்டுதலில் பள்ளி முதல் பல்கலைக்கழக அளவிலான படிப்பு வரை செல்வதற்கும் நேரத்தை வழங்குகிறது. ஒரு

திட்டனூடாகப் படிப்பது மாணவர்களை "ஆழமான முடிவை நோக்கி" தூக்கி எறியப்படுவதைப் போல இல்லாமல் படிப்படியாக சுதந்திரம் மற்றும் நம்பிக்கையை உருவாக்க உதவுகிறது. இது மாணவர்களுக்கு அவஸ்திரேலியாவின் டீக்கின் நகரில் கற்பதற்கான சுமூகமான மாற்றத்தை அளிக்கும், மேலும் அவர்கள் கல்வியில் சிறப்பாகச் செயல்படவும், அவுஸ்திரேலியாவில் அவர்களின் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கவும் அனுமதிக்கும்.

மற்றொரு காரணம் செலவு. ஒரு குறிப்பிட்ட திட்டத்தினூடாகப் படிப்பது குறிப்பிடத்தக்க சேமிப்பைச் செய்ய அனுமதிக்கும். எங்கள் டீக்கின் பங்காளி கற்கை நிறுவகம் ஒன்றில் ஒரு வருடம் படித்தால், டீக்கின் கல்விக் கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவுகளில் சுமார் AUD 55,000 ஐ (ஆண்டுக்கு) சேமிக்க முடியும்.

(20ஆம் பக்கம் பார்க்க...)


ක්‍රීඩා හා යෞවන කටයුතු අමාත්‍යාංශය
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
Ministry of Sports and Youth Affairs

SLTC
Research University



விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் வீர வீராங்கனைகளுக்காக உயர் கல்வி புலமைப் பரிசில் திட்டம்...

2022 செப்டெம்பர் நுழைவுக்காக விண்ணப்பியுங்கள்

இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் SLTC (PVT) Ltd ஆதரவுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டு வெற்றிகளைப் பெற்றிருக்கும் வீர, வீராங்கனைகளுக்காக செயற்படுகின்ற முழுமையான புலமைப்பரிசில் தட்டதிற்காக தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு www.sltc.ac.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும்.

இங்கு தரப்பட்டுள்ள கற்கை நெறிகளில் 24 பட்டப்படிப்பு கற்கைகளின் கீழ் முழுமையான 20 உயர் கல்வி புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

- ♦ பொறியியல் பீடம்
- ♦ தொழில்நுட்ப பீடம்
- ♦ வர்த்தக பீடம்
- ♦ கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப பீடம்
- ♦ இசை பீடம்
- ♦ விஞ்ஞான பீடம்

குறைந்தபட்ச தகைமை

- க.பொ.த. உயர் தரம் அல்லது அதற்கு இணையான பரீட்சையில் ஒரே தடவையில் அனைத்துப் பாடங்களிலும் சாதாரண சித்தியை பெற்றிருத்தல்.
- 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் அந்தப் பரீட்சைக்காக தோன்றி இருத்தல்.
- கடந்த 05 ஆண்டு காலத்தில் விளையாட்டில் ஈடுபட்டிருத்தல் மற்றும் SLTC (Pvt) Ltd இனால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 2022 செப்டெம்பர் 20

விசாரணைகளுக்கு

Lakshan Madusanka
Development Officer
Ministry of Sports and Youth Affairs
dev11@moys.gov.lk
(94) 77 923 8462

Thanura Abeywardene
Consultant, Sports & Excersise Science
SLTC Research University
thanuraa@sltc.ac.lk
(+94) 70 7466466

ஒன்லைனில் விண்ணப்பிப்பதற்கு QR குறியீட்டை Scan செய்யவும்

More Info: www.moys.gov.lk

www.sltc.ac.lk | 0112 100 500

தினகரன் வாரமஞ்சரி

# Education

சிறப்பு விளம்பர அநுபந்தம்

☎ : 0112 429 339, 0777 270 076

## உயர்தர பரீட்சையின் பின் என்ன செய்யலாம்?

**உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்தபின் ஏற்படும் உணர்வானது சுவாரஸ்யமானதும், சுதந்திரமானதுமாகும். நிஜத்தில் 13 வருடகாலமாக மிகப்பெரும் பரீட்சைக்கு தயாராகி, அதனை நிறைவு செய்தபின் ஏற்படும் சுதந்திர உணர்வு வார்த்தைகளினால் விபரிக்க இயலாத ஒன்றாகும். அப்படிப்பட்ட மிகப்பெரும் பரீட்சையை முடித்த பின்பு, நமது எதிர்காலம் எதை நோக்கியதாக அமையப்போகிறது? நாம் எதிர்காலத்தில் என்னவாகப் போகிறோம்? எனும் தடுமாற்றம் உருவாவதினை தவிர்க்க முடிவதில்லை.**



பாலர் பருவம் தொடங்கி இளமைக்கால வயது வரை பள்ளிக்கூடத்திலேயே அடைபட்டிருந்த மாணவர்கள் தமது உயர்தரப் பரீட்சை முடிந்ததும் தமது பூரண சுதந்திரத்தை அனுபவிக்கத் துடிப்பதில் தவறேதுமில்லை. ஆனால், அந்த சுதந்திரத்தினை தவறான வழிகளில் பயன்படுத்தி நமது வளமான எதிர்காலத்தை நாமே பாழாக்கிவிடாமல் இருப்பதில் உறுதியாகவிருப்பது அவசியமாகிறது. அப்படியாயின், நமது வாழ்வின் அடுத்த கட்டத்தினை தீர்மானிப்பது என்கிற சந்தேகம் எல்லோருக்குள்ளும் எழுகிறது. இதற்கான விடையை தேட முன்பு, நம்மை நாம் சற்றே ஆசுவாசப்படுத்தி கொள்ளுவதும், தயார்படுத்தி கொள்ளுவதும் அவசியமாகும்.

### உயர்தர பரீடசையின் பின்பு செய்யக்கூடியவை

பரீட்சை முடிந்ததும், சிலர் சுதந்திரமாகவிருக்கவே முதலில் தீர்மானிக்கிறார்கள். எனவே இந்த நேரத்தில், நீங்கள் செய்ய நினைக்கும் விடயங்களை முதலில் சிறியதாக பட்டியல் போட்டுக் கொள்ளுங்கள். பரீட்சை காரணமாக செய்ய முடியாத சில வி'யங்களை செய்ய முயற்சி செய்யுங்கள். இது அடுத்த கட்டத்தை நோக்கி உங்களை தயார் செய்துகொள்ள முதல் ஆசுவாசப்படுத்திக்கொள்ள உதவும். இந்த பட்டியலை தயார்செய்ய பெரிதாக உங்களை குழப்பி கொள்ளாதீர்கள். மிகச்சிறிய அளவில் கீழ் கூறியவாறு ஆரம்பியுங்கள்.

### தவறவிட்ட திரைப்படங்களை பார்வையிடுங்கள்

உயர்தர பரீட்சை காரணமாக, நீங்கள் பார்க்க விரும்பியும், பார்க்கத் தவறவிட்ட நல்ல திரைப்படங்களையும் தெரிவுசெய்து, அவற்றினை பார்வையிட தொடங்குவதிலிருந்து உங்கள் பட்டியலை ஆரம்பியுங்கள். இவ்வாறு, நீங்கள் தவறவிட்ட சின்ன சின்ன விடயங்களை அனுபவிப்பதிலிருந்து உங்கள் அடுத்த கட்டம் நோக்கிய நகர்வை ஆரம்பியுங்கள்.

### பயணங்கள், சுற்றுலாக்களை திட்டமிடுங்கள்.

உயர்தர பரீட்சையின் பின்பு, உங்கள் பாடசாலை நண்பர்களை நீங்கள் சந்திப்பது அரிதாகிவிடும். உங்கள் வாழ்க்கை திட்டமிடல் காரணமாக, பலரை நீங்கள் சந்திக்க முடியாமலே போகக்கூடும். எனவே, அவர்களுடன் மறக்கமுடியாத பயணத்தை ஒழுங்கு செய்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு மறக்கமுடியாத அனுபவத்தினை சுமந்து செல்ல உதவியாகவிருக்கும்.

### குறுகிய வேலைவாய்ப்பு (Internship) ஒன்றுக்கு செல்லுதல்

உயர்தர பரீட்சை முடிவுக்கு பின்னதாக, உங்கள் வாழ்க்கையை முடிவு செய்யும் இன்னுமொரு கல்வியைத்தொடர முன்னதாக, ஏதேனும் சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபட முயற்சி செய்யுங்கள். இது உங்களுக்கான தொழில் ஆர்வத்தை அதிகரிக்க உதவுவதுடன், எதிர்காலத்தை நோக்கிய திட்டமிடலுக்கும் உதவும்.

### புதியவற்றினை படியுங்கள்

நீங்கள் முன்பு கூறியதுபோல, உயர்கல்வியைத் தொடர்ந்து ஒரு வேலையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு மட்டும் சிந்திக்காமல், புதிதாக ஏதேனும்

அறிவினை பெற்றுக் கொள்ளுவதற்காகவோ அல்லது புதிதாக ஏதேனும் ஒன்றினை அறிந்துகொள்ளுவதற்கான முயற்சியிலோ ஈடுபடுங்கள்.

ஆங்கிலம் மற்றும் கணனி தொடர்பான கல்வியறிவுத் திறன்களை மேம்படுத்துவதற்கு இதனைவிட சிறந்த நேரம் அமையாது. உயர்தர கற்கைநெறியின் அழுத்தத்தில் கணனிக் கல்வி தொடர்பிலும், ஆங்கில கல்வியறிவு தொடர்பிலும் கவனத்தை செலுத்த தவறியவர்களுக்கும், குறித்த அறிவினை மேலதிகமாக மேம்படுத்த விரும்புபவர்களும் இது மிகச்சிறந்த காலமாக அமையும்.

ஆங்கில கல்வியினை கற்றுக்கொள்ள விரும்புபவர்கள் அல்லது ஆங்கில கல்வித்தகைமையை மேம்படுத்திக்கொள்ள முன்னணி ஆங்கிலமொழி கற்கை நிறுவனங்களில் இணைந்துகொள்ளுவது பயனுள்ளதாகும். இங்கு, தரமான ஆங்கிலக் கல்வியறிவை பெற்றுக்கொள்ளுவதுடன், புதிய நண்பர்களையும் தேடிப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான கல்வி நிலையங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் கல்வித்தகைமையும், அனுபவமும் உங்களது அடுத்த கட்ட வாழ்க்கை தரத்துக்கு மிகவும் பயனுள்ளதாகவும், உத்தரவாதம் வழங்குவதாகவும் அமைவதுடன், நீங்கள் செலுத்துகின்ற பணத்துக்கு மேலதிகமான பயனை தருகின்ற கல்வியாகும் அமையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு மேலே கூறிய, புதியவற்றை நிச்சயமாக முயற்சி செய்யுங்கள். இதன்மூலமாக, உங்கள் வாழ்க்கைக்கு நிறையவே அனுபவங்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். பழையதிறமைகளை விட்டுவிட்டு வாழ்க்கையில் மீளெழுந்து வர. இந்த தேடலும், புதிய முயற்சிகளும் உங்கள் ஆளுமை வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகவிருக்கும். அது உங்கள் உயர்தர கல்விக்கு பின்னதான எதிர்காலத்தை முடிவு செய்வதில் ஒரு நல்ல முதல் படியாக இருக்கும்.

LAKE HOUSE
Concept & Design by
Advertising Supplements Department
☎ : 0112 429 339, 0777 270 076
Coordinated by - S.Prasath

## உள்ளூரில் ஆரம்பித்து அவுஸ்திரேலியாவில்...

(19ஆம் பக்கத் தொடர்)

**டீக்கின் பல்கலைக்கழகத்தின் பங்காளிகள் மற்றும் திட்டங்கள்**

* ANC கல்வி நிறுவகம் (ANC) உயிரியல் மருத்துவ விஞ்ஞானம், பொறியியல் விஞ்ஞானம்
* ஆசிய பசிபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (APIIT) - வர்த்தகம், ஐ.வு
* அவஸ்திரேலிய வணிக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (ACBT) - வணிகம், வணிகப் பகுப்பாய்வு, வர்த்தகம்
* வணிக முகாமைத்துவ நிறுவகம் (BMS) உயிரியல் மருத்துவ விஞ்ஞானம்
* CICRA - சைபர் பாதுகாப்பு
* இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆ∴ப் ஹெல்த் சயின்சஸ் (IIHS) உயிரியல் மருத்துவ விஞ்ஞானம், தாதியம், உடற்பயிற்சி மற்றும்
* விளையாட்டு அறிவியல் (இரட்டை பட்ட தேர்வுகள்)
* லைசியம் கல்வி நிறுவகம் - வர்த்தகம், வணிகம், வணிக பகுப்பாய்வு, விளையாட்டு முகாமைத்துவம்
* நெஷனல் இன்ஸ்டிடியூட் ஆ∴ப் பிசினஸ் மேனேஜ்மென்ட் (என்ஐபிஎம்)
* வர்த்தக பகுப்பாய்வு, ஐடி, மென்பொருள் பொறியியல்
* ப்ரொஸ்பெக்ட்ஸ் அகாடமி - கல்வி (முன்பள்ளி), உளவியல் விஞ்ஞானம்
* கொழும்பு ரோயல் கல்வி நிறுவகம் (RIC) - உயிரியல் மருத்துவ விஞ்ஞானம், பொறியியல், சுற்றுச்சூழல் பொறியியல், சுற்றுச்சூழல் அறிவியல்
* இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) கட்டுமான முகாமைத்துவம், இணைய பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், பொறியியல், தாதி, உளவியல் விஞ்ஞானம்
* இலங்கை தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (SLTC) - செயற்கை நுண்ணறிவு, கணினி அறிவியல், சைபர் பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மென்பொருள் பொறியியல்.
* மொரட்டுவ பல்கலைக்கழகம் - கட்டிடக்கலை (முதுகலைப் பட்டப்படிப்பு)
* ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - முதுகலை பட்டங்கள் மற்றும் கூட்டு ஈடுபாடு.

இலங்கையில் டீக்கின் பங்காளிகள் பற்றிய கூடுதல் தகவல்களை இங்கே பெறலாம்
https://www.deakin.edu.au/international-students
choosing-yourdegree/institutional-partners-in-sri-lanka

டீக்கின் பங்காளிகள் கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் அனைவரும் அந்தந்த துறைகளில் தலைவர்கள். டீக்கின்

பல்கலைக்கழகத்தின் கூட்டாளர் நிறுவனங்களின் நெறிமுறைகள் டீக்கின் பல்கலைக்கழகத்தின் சொந்த நிறுவனங்களுடன் ஒத்துப்போகின்றன. டீக்கினின் பாதையில் அனைவருக்கும் தடையற்ற மாற்றத்தை வழங்க அதன் கூட்டாளர்கள் மற்றும் பல்கலைக்கழகம் என்பன உறுதிபூண்டுள்ளனர்.

இலங்கையில் டீக்கின் பாத்வே கூட்டாண்மை பற்றிய கூடுதல்

தகவலுக்கு, 0701002001 என்ற எண்ணில் டீக்கின் இலங்கையின் மூத்த கூட்டாண்மை ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளவும். அல்லது மின்னஞ்சல் வழியாக srilanka@deakin.edu.au என்ற மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும்

டீக்கின் பல்கலைக்கழக CRICOS வழங்குநர் குறியீடு: 00113B

**புத்தசாசன மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**கிராமியக் கலைகள் நிலையம்**

**நடனம், இசை, சித்திரம்/ சிற்பக் கலைக்கான புதிய மாணவர்கள் இணைப்பு**

**க.பொ.த உயர் தரம் சித்திபெற்றவர்களுக்கு**

- நடனம் - தேசிய தொழில் தகைமை NVQ 5/6 உயர் டிப்ளோமா கற்கை (காலம் - 03 வருடங்கள்)
- இசை - ஓர் ஆண்டு சான்றிதழ் கற்கை
- சித்திரம்/ சிற்பம் - ஓர் ஆண்டு சான்றிதழ் கற்கை



**க.பொ.த சாதாரண தரம் சித்திபெற்றவர்களுக்கு**

- நடனம் - தேசிய தொழில் தகைமை NVQ 4 சான்றிதழ் கற்கை (காலம் - 1½ வருடம்)
- இசை - தேசிய தொழில் தகைமை NVQ 4 சான்றிதழ் கற்கை (காலம் - 1½ வருடம்)

**நிபந்தனைகள்**

- அனைத்து கற்கைகளும் முழு நேர கற்கைகளாகும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் 16 – 25 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் நடைமுறை பரீட்சை ஒன்றின் பின் இணைக்கப்படுவதோடு, பரீட்சைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.



**விண்ணப்பங்களை அனுப்புதல்**

- தமது சுயவிபரக்கோவை, கல்வித் தகைமை மற்றும் சிறப்பு தேர்ச்சிகள் தொடர்பிலான விபரங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு அனுப்ப முடியும்.
- கூகுள் விண்ணப்பப் படிவத்தை (GOOGLE FORM) பூர்த்தி செய்து, விண்ணப்பிக்க முடியும். (கீழுள்ள Whatsapp இலக்கத்தின் ஊடாக கூகுள் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்)
- விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி 2022.09.23 ஆகும். அன்றைய திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பத்தை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கையின் பெயரை தெளிவாக குறிப்பிட வேண்டும்.



முகவரி - பணிப்பாளர், கிராமியக் கலைகள் நிலையம், பெலவத்த, பத்தரமுல்லை.
விசாரணைக்கு - 0112786716 / Whatsapp - 0753418888
E-Mail - folkartcentersrilanka@gmail.com

கல்வி அமைச்சு

# வாழ்க்கைதொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்



# மாணவர்கள் பதிவுசெய்தல் 2022

## விண்ணப்பங்கள் கோரல்

NVQ மற்றும் A/L இரண்டிற்கும் முன்னணி அரசு பல்கலைக்கழகம் திறந்திருக்கும்.

## இளங்கலை பட்டப்படிப்புகள்

Mechatronics Technology
Building Services Technology
Manufacturing Technology
Construction Technology and Resource Management

Software Technology
Multimedia & Web Technology
Network Technology

Food Process Technology
Industrial Management Technology
Film & Television Production Technology
Hotel Management
Quantity Surveying
Media Arts Production Technology

English Language Teaching
Education Technology
Translation Studies

* NVQ (SL) 5/6 அல்லது அதற்கு சமமான கல்வித்தமையினை பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கும் தகுதியினை பெறுவர். 2022 க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்கள் கவனத்தில் கொள்ளப்படுவார்கள்.

விண்ணப்பங்களுக்கான இறுதிதி திகதி : 2022 அக்டெர்பர் 11 ஆம் திகதி

விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை பல்கலைக்கழக இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்
வாழ்க்கை கைத்தொழில் பல்கலைக்கழகம்,
இல - 100,
கந்தவல, இரத்மலானை.

மாணவர் உதவி இலக்கம்: 0112 630 701
தொலைநகல்: 011-2630707

www.uovt.ac.lk

0112 630 777

inquiries@uovt.ac.lk

You Tube
University of Vocational Technology ( offiicial )

More details

11th September 2022

# கேள்வி அறிவித்தல்

**Bid Reference: COL/DC/228/11/2017-Eqp**

## இந்திய உயர் ஸ்தானிகராலயம்
## கொழும்பு, இலங்கை

ஹட்டன் பூல் பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு உபகரணங்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கு புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள்/ விநியோகஸ்தர்கள்/ வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2022 செப்டெம்பர் 12ஆம் திகதி முதல் 2022 ஒக்டோபர் 03ஆம் திகதி வரை www.hcicolombo.org எனும் இந்திய உயர் ஸ்தானிகராலய இணையதளத்திலிருந்து கேள்விமனு ஆவணத்தை தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

விலைக்கோரலுக்கு முன்னைய கூட்டம் 2022 செப்டெம்பர் 21ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மற்றும் அனைத்து பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களையும் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2022 ஒக்டோபர் 03ஆம் திகதியன்று பி.ப. 3.00 மணியாகும். விலைமனுதாரர்கள் பிரிதிநிதிகளின் முன்னிலையில் 2022 ஒக்டோபர் 03ஆம் திகதியன்று பி.ப. 3.30 மணிக்கு தொழில்நுட்ப விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு 011-2395007 / 0774611332 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

**Daily News**

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# பெறுகை அறிவித்தல்

### துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல் 2022/2023

1. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கொள்முதல் குழுவின் தலைவரினால் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் **2022/2023 ஆம் ஆண்டிற்கான துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை** வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விபரங்களும் மனு ஆவணத்தில் குறிப்பிடப்படும். மனுக்களை சமர்பிக்கும்போது மனுப்பாதுகாப்பு கட்டணமாக **ரூ.100,000.00** ஐ செலுத்துதல் வேண்டும்.
2. **மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய** நடைபெறும்.
3. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் **276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள அலுவலக கட்டிடத்தில், ஹன்தானை (கண்டி) மற்றும் கதிரான (நீர்கொழும்பு) இல் அமைந்துள்ள அதிர்வெண் சோதனைச் சாவடிகள் மற்றும் கொக்காவிலில் அமைந்துள்ள தொலைக்காட்சி / வானொலி ஒலிபரப்பு நிலையத்திற்காக ஒருவருட காலத்திற்கான** துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல்.
4. அதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் **பணிப்பாளர் (நிர்வாகம்), நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரியில் அல்லது **011-2689345** எனும் தொலைபேசிக்கு அழைப்பதன் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதுடன் **2022.09.12** ஆம் திகதி தொடக்கம் **2022.09.26** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.02.00** மணி வரை நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவில் மனு ஆவணங்களை பரீசிலனை செய்வதன் மூலம் மனு தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.
5. இதற்காக ஆர்வமுள்ள மனுதாரர்கர் **மீள் செலுத்தப்படாத ரூ.1,000.00** கட்டணத்தை செலுத்துவதன் மூலம் **2022.09.30** ஆம் திகதி மணிமுதல் **பி.ப.03.00** வரை நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவில் முகவரி அச்சிடப்பட்ட அஞ்சல்தாள் மூலம் சமர்ப்பித்து பூரணபடுத்தப்பட வேண்டிய மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
6. மனுக்கள் **2022.10.03** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது **அதற்கு முன்னர் கிடைக்குமாறு நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதன் மூலமாகவோ அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். மனு அடங்கிய கடிதஉறையின் மேல் இடது பக்க மூலையில் **"துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல் 2022/2023"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இம்மனுக்கோரல் தொடர்பாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

தலைவர்,
சிரேஷ்ட கொள்முதல் குழு,
இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு.

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## கமத்தொழில் அமைச்சு

**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)**

# பெறுகை அறிவித்தல்

### பொது தனியார் பங்குடைமையை வலுப்படுத்துவதன் மூலம் விதை மற்றும் நடுகைப் பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த ஒரு விரிவான திட்டத்தை தயாரிப்பதற்கான ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவு செய்தல்

### SAPP/PRO/CONS2022/23

கமத்தொழில் அமைச்சின் கீழ் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டம் (SAPP) நடைமுறைப்படுத்தப்படுகிறது மற்றும் இது இலங்கை அரசாங்கத்தினாலும் சர்வதேச விவசாய அபிவிருத்திக்கான நிதியத்தினாலும் (IFAD) கூட்டாக நிதியளிக்கப்பட்டுள்ளது. போட்டித்திறன். வணிக ரீதியிலான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அமைப்புகளில் ஈடுபட்டுள்ள 57,500 சிறு உடமையாளர் குடும்பங்களின் வருமானம் மற்றும் உணவின் தரத்தை நிலையாக உயர்த்துவதே திட்ட வளர்ச்சியின் நோக்கமாகும். பொது, தனியார் மற்றும் உற்பத்தியாளர் பங்குடைமை (4Ps) மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் (GOSL) முன்னுரிமைகளை அடைய SAPP திட்டம் கருவியாக உள்ளது.

சிறந்த ஆலோசனை நிறுவனம் கமத்தொழில் திட்டத்தைத் தயாரிப்பதில் சாதனைப் பதிவை நிரூபித்திருக்க வேண்டும் மற்றும் இதேபோன்ற வேலையைப் பற்றிய நல்ல புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பு விதிமுறையில் (TOR) குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய துறையில் குறைந்தபட்ச தகுதி மற்றும் அனுபவம் கொண்ட குழுவை ஆலோசனை நிறுவனம் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆர்வமுள்ளவர்கள் www.sapp.lk எனும் எங்கள் வலைத்தளத்தில் குறிப்பு விதிமுறைகளைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். (தொடர்புடைய குறிப்பு விதிமுறைகளைப் (TOR) பதிவிறக்கம் செய்ய 'பதிவிறக்கம்' தலைப்பு மற்றும் 'கொள்முதல' துணைத் தலைப்பைப் பார்க்கவும்). 2022 செப்டெம்பர் 26ஆம் திகதி பிற்பகல் 2.30 மணி அல்லது அதற்கு முன் உங்கள் தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவை (குறிப்பு விதிமுறைகளின் (TOR) பிரகாரம் தொடர்புடைய விவரங்களுடன் முழுமையான விண்ணப்பத்தை) பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் / நேரடியாக ஒப்படைக்கவும். நீங்கள் விண்ணப்பிக்கும் பணியின் பெயரை உறையின் மேல் இடது மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயத் தலைப்பில் குறிப்பிடவும். தலைவர், ஆலோசகர்கள் பெறுகைக் குழு திட்டங்கள் (CPCP) சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டம், இல. 214/A, நாவல வீதி, ராஜகிரிய

மேலும் விவரங்களுக்கு, பெறுகை நிபுணரை 011-2448031 எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது gamini@sapp.lk என்ற மின்னஞ்சலில் வேலை நாட்களில், மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டம் (SAPP),**
**இல. 214/A, நாவல வீதி,**
**ராஜகிரிய.**

**Repeat Your Ad For Better Offers**

## கல்வி அமைச்சு
## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

### சுத்திகரிப்புச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்காகக் கேள்வி கோரல் – 2022/2023

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம். மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் ஆணமடுவ தொழில்நுட்பக் கல்லூரி போன்றவற்றிற்கு 2022.12.01 முதல் ஒரு வருட காலத்திற்கு சுத்திகரிப்புச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் தேவைப்பாடுகளைப் பூரணப்படுத்தும் அங்கீகாரம் பெற்றுள்ள கேள்விதாரர்களிடமிரந்து மாத்திரம் கொழும்பு -10, தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2022.09.28 அன்று மு.ப. 10.30 வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்படும்.

| கேள்வி இலக்கம் | வேலை விபரம் | கேள்விப் பிணையம் ரூபா |
| --- | --- | --- |
| DTET/14/07/04/2022 | சுத்திகரிப்புச் சேவைகளை நடைமுறைப்படுத்துதல் 2022/2023 | 110,000.00 |

1. கேள்விப் பிணையமானது மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வணிக வங்கியொன்றிலிருந்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. மீளளிக்கப்படாத ரூபா 3.500/- இற்கான தொகையை மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையின் கணக்கு இலக்கம் 176-1001-3-9026228 என்ற கணக்குக்கு 'பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்' என்ற பெயரில் செலுத்தி 2022.09.12 முதல் 2022.09.26 வரையான காலப் பகுதியில் வார வேலை நாட்களில் மு.ப. 9.30 - பி.ப. 2.30 இடைப்பட்ட காலப்பிரிவில் எந்த நேரத்திலும் பற்றுச்சீட்டை தொழில்நுட்பவியல் உதவிச் சேவைப் பிரிவில் சமர்ப்பித்து பெறுகைப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விகளைச் சமர்ப்பிக்க முன்னர் திணைக்களத்தின் வளாகம் மற்றும் ஏனைய வளாகங்களைப் பரீட்சித்துப் பார்த்து இதற்கான தெளிவைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கேள்வி ஆவணங்களை திணைக்களத்திற்கு நேரில் சமுகமளித்து அல்லது இணையத்தளத்தில் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
4. கடந்த 03 ஆண்டுகளிற்குக் கிட்டிய வருடாந்த வர்த்தக நிதிப்புரள்வு பொதுவாக 16 மில்லியன் ருபாவாக இருத்தல் வேண்டும்.
5. கேள்விப்படிவங்களை வழங்கல் 2022.09.26 அன்று பி.ப. 2.30 இற்கு முடிவுறுத்தற்படும்.
6. கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் இறுதித்தினம் மற்றும் நேரம்: 2022.09.28 அன்று மு.ப. 10.30
7. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கேள்வி ஒன்றை அல்லது பல கேள்விகளை அல்லது அனைத்து கேள்விகளையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
த.பெ. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

தொலைபேசி இல. 011 2327008
தொலைநகல் இல. 011 2424977
இணையம்: www.dtec.gov.lk

POSTGRADUATE INSTITUTE OF ARCHAEOLOGY
PGIAR University of Kelaniya

## தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாறு

### விண்ணப்பங்கள் கோரல் – 2022/ 2023 கல்வி ஆண்டு

**தொல்பொருளியல்/மரபுரிமை/ கலை வரலாறு/ அருங்காட்சியகவியலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (01 – வருடம்)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட இளமாணிப் பட்டம் அல்லது
2. தொழில்முறை அல்லது வேறு அதுபோன்ற தகைமை (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
3. பாடத்துடன் தொடர்புபட்ட குறிப்பிடத்தக்க அடைவுகளுடன் குறைந்தது 10 ஆண்டுகள் நிலையான செயற்பாட்டு அடிப்படையிலான அனுபவம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

**நினைவுச்சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் மரபுரிமை முகாமைத்துவத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (01 – வருடம்)**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட இளமாணிப் பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
2. தொழில்முறை அல்லது வேறு அதுபோன்ற தகைமை (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
3. பாடத்துடன் தொடர்புபட்ட குறிப்பிடத்தக்க அடைவுகளுடன் குறைந்தது 10 ஆண்டுகள் நிலையான செயற்பாட்டு அடிப்படையிலான அனுபவம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

**தொல்பொருளியல் விஞ்ஞான முதுமாணி பட்டம் (02 – வருட கற்கை பணி மற்றும் ஆய்வு நிகழ்ச்சி)**

1. வகுப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டதான தொல்பொருளியல் விசேட இளமாணிப் பட்டம் அல்லது
2. திறமைச் சித்தியுடன் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததுடன் எந்த ஒரு துறையிலும் இளமாணிப் பட்டம் அல்லது
3. PGIAR மூலம் வழங்கப்படும் தொடர்புடைய பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவில் திறமைச் சித்தி அல்லது
4. PGIAR மூலம் வழங்கப்படும் தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவில் சாதாரண சித்தி மற்றும் தொல்பொருளியல் அல்லது மரபுரிமை முகாமைத்துவம் அல்லது அருங்காட்சியகம் அல்லது கலாசார சொத்துக்களை பாதுகாத்தலில் (சுவரோவியங்கள் அல்லது கலைப்பொருட்கள்) 03 ஆண்டுகள் தொழில்முறை துறை அனுபவம்.

**தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாற்றில் (கற்கை பணிகளுடன் ஆராய்ச்சி மூலம்) முதுமாணிப் பட்டம் (02 வருட ஆராய்ச்சி நிகழ்ச்சி)**

1. இயைபுடைய பாடம் ஒன்றில் இளமாணிப் பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
2. PGIAR மூலம் வழங்கப்படும் தொடர்புடைய பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கையில் சித்தி அல்லது
3. தொழில்முறை அல்லது வேறு அதுபோன்ற தகைமை (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது

**தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாற்றில் தத்துவமுதுமாணி (MPhil) பட்டம் (02 வருடங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சி)**

1. வகுப்பு இரண்டு மேல் அல்லது அதற்கு மேற்பட்டதாக தொடர்புடைய பாடம் ஒன்றில் விசேட இளமாணிப் பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
2. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு ஆண்டு முதுமாணி பட்டம் (ஆராய்ச்சி அல்லது சிந்தனை அல்லது கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
3. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு ஆண்டு முதுமாணி விஞ்ஞான பட்டம் (கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

**தொல்பொருளியல்/ அருங்காட்சியகவியல்/ மரபுரிமை/ கலை வரலாற்றில் கலாநிதி (PhD) பட்டம் (03 – வருடங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சி)**

1. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு வருடங்கள் தத்துவமுதுமாணி (ஆராய்ச்சி) பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
2. தொடர்புடைய பாடம் ஒன்றில் இரண்டு வருடங்கள் கலை முதுமாணி (சிந்தனை அல்லது ஆராய்ச்சி அல்லது கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) அல்லது
3. தொடர்புடைய துறை ஒன்றில் இரண்டு வருடங்கள் விஞ்ஞான முதுமாணி (கற்கை பணி மற்றும் ஆராய்ச்சி) பட்டம் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).

மொழி ஊடகம்: **சிங்களம் மற்றும் ஆங்கிலம்.**
2022.11.04ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.
விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு **www.pgiar.kln.ac.lk** என்ற முகவரிக்கு பிரவேசிக்கவும்.

**விசாரணைகள்:** உதவிப் பதிவாளர் (கல்வி), PGIAR/ தொ.: 011-2667885, 011-2694151
**மின்னஞ்சல்:** arpgiar@kln.ac.lk

**பணிப்பாளர்**
**தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவகம்**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 28

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| | 10 | 11 | 12 | 13 | |
| 14 | 15 | 16 | | 17 | 18 |
| | 19 | | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ...............................................
வகுப்பு ...............................................
தொலைபேசி இல ...............................................
பாடசாலை பெயர் ...............................................
வதிவிட முகவரி ...............................................
...............................................

............................... ...............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) தேங்காயின் இளமைப் பருவம் இது. உள்ளே நிரம்பியுள்ள இனிமை நிறைந்த பானம் சுவை மிகுந்தது.
(08) வட்டமொன்றின் விட்டத்தின் அரைப்பங்கு நீளம் இது. அதாவது வட்டத்தின் மையப்புள்ளியையும், பரிதியையும் இணைக்கும் நேர்கோடு. (தலைகீழான சொல்)
(10) புரியாத சொற்களுக்கு அர்த்தம் அறிய வேண்டுமானால், இப்புத்தகத்தில்தான் தேட வேண்டும்.
(14) பெற்றோருக்கு மிகுந்த அன்புக்குரியவள் இவள்.
(17) கவிதை, கவிஞர் ஆகிய அர்த்தங்கள் தருகின்ற சொல்.
(22) எழுத்தாளர்கள் படைக்கும் இலக்கியம் இது. இதனை வாசிப்பது சிறுவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.
(24) பறவைகளின் சிறப்பான அங்கம் இது.

**மேலிருந்து கீழ்**

(01) செவிகளால் கேட்டு இரசிப்பது.
(03) முன்னிலை, பன்மை பெயர்ச்சொல்.
(05) நீரின் பௌதிக வடிவங்களில் இதுவும் ஒன்று. மேலெழுந்து சென்று காற்றில் கலந்து விடும். (தலைகீழான சொல்)
(08) அமர்ந்து கொள்வதற்கான தளபாடம். (தலைகீழான சொல்)
(10) நானே வல்லவன் என்ற தற்பெருமை கொண்ட ஆணவத்தைக் குறிக்கும் மற்றொரு சொல்.
(18) சமையலுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுவது. கிராமங்களில் இன்றும் இதன் பயன்பாடு உள்ளது.
(20) குற்றவாளிகளையும், சந்தேக நபர்களையும் தடுத்து வைக்கும் இடம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 27

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) மாரி (03) கோழை (05) சிற்பம் (11) பாரி
(14) அலை (17) வனம் (20) மான் (22) கறுவா

**மேலிருந்து கீழ்**

(01) மாம்பழம் (02) பரி (04) மழை (08) அரிசி
(14) கவலை (16) மாலை (20) வான்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 26

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம்.ஸஹ்றீஸ்,**
தரம் 04,
அல்மதீனா வித்தியாலயம்,
மருதமுனை.
**2. வி. துவிசாலினி,**
தரம் 05, இராமகிருஷ்ன மெ.பாடசாலை,
காரைதீவு.
**3. ஸீனத் தஹானி சாட்,**
தரம் 10B, க/பதியுதீன் மகளிர் கல்லூரி,
தென்னக்கும்புர வீதி,
கண்டி.
**4. அக்லா செரீப்,**
தரம் 9, ஹேமமாமாளி பெண்கள் கல்லூரி,
மாளிகாவத்தை.
**5. பஹ்மா,**
தரம் 08A, பென்ஹில் கல்லூரி,
கம்பளை.
**6. எம்.எச்.சி.என் ஸம்றா**
தரம் 10C, மாறை/அறபா தேசிய பாடசாலை,
வெலிகம.
**7. சாரான் அப்துல் றகீம்,**
தரம் 05, அல்- அமான் மு.ம.ம வித்தியாலயம்,
மினுவாங்கொடை.
**8. கு. துவாரகன்,**
தரம் 05E, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
பெரியநீலாவணை.
**9. அப்லல் அஹமத்,**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
துல்ஹிரிய.
**10. பிரனுகா பிரசாந்த்,**
தரம் 03S, மட்/வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை,
மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 28
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத் துணை**

**தெளிவுரை :**
வரும்போது பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லாது அறம் செய்யின், அதுவே நம் இறுதிக்காலத்திலும் இறவாத்துணையாம்.


# வாய்ப்பை நழுவ விடாதீர்கள்

ஒரு அழகான இளைஞன் விவசாயி ஒருவனின் மகளை திருமணம் செய்ய விரும்பி, அவனிடம் சென்று அனுமதி கேட்டான். அதற்கு அந்த விவசாயி அந்த இளைஞனைப் பார்த்து சொன்னான், இளையனே நீ என் மகளை மணக்க விரும்பினால், நான் வளர்க்கும் மூன்று காளைகளை அடுத்தடுத்து அவிழ்த்து விடுவேன். அதில் ஏதாவது ஒன்றின் வாலை நீ தொட்டால் போதும், என் மகளை மணமுடிக்க சம்மதிக்கிறேன் என்று சொல்ல அவனும் ஏற்றுக் கொண்டான்.

மாடுகள் அடைக்கப்பட்டிருந்த தொழுவத்தின் கதவுகள் திறந்தது. முதலில் ஒரு மாடு வந்தது. மிகவும் முரட்டுத்தனமான தோற்றம் கொண்ட அந்த மாடு சீறியபடி பாய்ந்து வந்தது. அதைப் பார்த்த இளைஞன் வாலைப் பிடிக்கத் தயங்கி அடுத்த மாட்டைப் பார்க்கலாம் என்று விட்டு விட்டான். சிறிது நேரத்தில் அதை விடப் பெரிய மாடு வெளியே ஓடி வந்தது. பார்க்கவே பயங்கரமான தோற்றம். அவனை முட்டி மோதி கொல்வதற்காக கடும் வேகத்துடன் ஓடி வந்தது. இளைஞன் அச்சப்பட்டு இதுவும் வேண்டாம். மூன்றாவதைப் பார்க்கலாம் என்று முடிவு செய்து வேகமாக ஓடி பாதுகாப்பான இடத்தில் நின்று கொண்டான். ஓடி வந்த மாடு அதே வேகத்தில் வேலிக்கு வெளியே ஓடிச் சென்றது.

மூன்றாவது முறையாக கதவு திறக்க, அப்போது வெளியே வந்த மாட்டைப் பார்த்த இளைஞன் முகத்தில் புன்சிரிப்பு வந்தது. அவன் வாழ்க்கையில் பார்த்ததில் இதுவே மிகவும் பலவீனமான மாடு. எலும்பும் தோலுமாய் பார்ப்பதற்கே பரிதாபமாக ஓட முடியாமல் ஓடி வந்தது. இந்த மாட்டை விடக் கூடாது. இதைத் தான் நான் பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்து அதன் வாலைத் தொடத் தயாராக இருந்தான். மாடு அருகில் வந்ததும், ஒரு தாவு தாவி மாட்டின் வாலைத் தொடப் போனான். ஆனால், அதிர்ச்சி அடைந்தான்.

ஆம். அந்த மாட்டுக்கு வால் இல்லை. பிள்ளைகளே நமது வாழ்க்கையும் இப்படித் தான். அது பல வாய்ப்புகளை நமக்கு வழங்குகிறது. சில வாய்ப்புகள் எளிதாகத் தோன்றலாம். சில வாய்ப்புகள் கடுமையாக இருக்கலாம். எனவே, வாய்ப்பை நழுவ விடாதீர்கள்!



# இவ்வார மழலை



**ஜே. சாஷனா**

ஜெயபிரதாப் / துஷாந்தினி,
விவேகானந்தா வீதி, கொழும்பு 13



## தெரிந்து கொள்வோம்

குதிரையின் மேல் வீரர்கள் அமர்ந்து இருக்கும் சிலைகளை நிறுவும் விடயத்தில் ஒரு மரபு இருக்கிறது. குதிரையின் நான்கு கால்களும் கீழே ஊன்றி இருந்தால், அந்த வீரன் இயற்கையாக மரணம் அடைந்தான் என்று பொருள். குதிரையின் ஒரு கால் தூக்கிய நிலையில் இருந்தால், அந்த வீரன் போரில் காயம் அடைந்து, பிறகு இறந்தவன் என்று அர்த்தம். முன்னங்கால்கள் இரண்டும் தூக்கிய நிலையில் இருந்தால், அந்த வீரன் போரில் வீர மரணம் அடைந்தவன் என்று அர்த்தம். இனி குதிரை சிலைகளைப் பார்த்தால் இதையும் கவனியுங்கள்.

## சிறுவர் சித்திரங்கள்





**சி. ஹரேன் விஷால்**
தரம் 7D, பம்பலப்பிட்டி இந்து கல்லூரி,
கொழும்பு 04




**எஸ். விஷ்ணுகா**
தரம் 5, கிங்ஸ்டன் கல்லூரி,
கொழும்பு 15



**சி. வைஷாலி**
தரம் 11, இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு 06.

## சிறுவர் கதை

# நேர்மையின் பரிசு



பாடசாலையில் புதிதாக மாணவன் ஒருவன் சேர்க்கப்பட்டான். பிஞ்சுபோன சப்பாத்தும் கிழிந்த புத்தகப்பையுடனும் இருப்பதைக் கண்டு சக மாணவர்களும் அவனை கிண்டல் செய்தார்கள்.

ஒருநாள் ஆசிரியர் தனது ஆயிரம் ரூபா பணத்தை மேசையில் வைத்தவர் திரும்ப எடுக்காமல் மறந்து சென்றுவிட்டார். இதைக்கண்ட மூன்று மாணவர்கள் அந்த பணத்தை எடுத்து யாரிடமும் சொல்லாமல் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர். இதை பார்த்த ஏழைச்சிறுவனோ ஆசிரியரிடமே இந்த பணத்தை ஒப்படைத்து விடுங்கள். இது அவரின் முக்கிய தேவைக்கான பணமா இருக்கலாம் என கூறினான். நீ இதை சொன்னால் நீதான் திருடினாய் என்று நாங்கள் சொல்வோம். யாரிடமும் சொல்லாமல் இருப்பது உனக்கு சிறந்தது என அவனை மிரட்டினார்கள்.

ஆசிரியர் வீடு போனதும் தனது மனைவிக்கு வைத்திய செலவிற்காக வைத்திருந்த காசு எங்கேயோ தொலைந்துவிட்டது என பல இடங்களிலும் தேடினார் கிடைக்கவில்லை. மறுநாள் பாடசாலை வந்து சக ஆசிரியருடனும் பணம் காணாமல் போன விடயம் பற்றி கவலையோடு பேசினார். இதை கண்ணுற்ற ஏழை சிறுவனோ வீட்டில் தான் தினமும் கஷ்டப்பட்டு சாப்பிடாமல் சேர்த்து வைத்த உண்டியல் பணத்தை இழக்கமனமின்றி சிறிது இமை மூடாது பார்த்துவிட்டு மறுநாள் பாடசாலையில் பணம் சேர்த்த உண்டியலை ஆசிரியரிடம் கொடுத்தான். இந்தாங்க சேர், இதில் நான் சேமித்த காசு இருக்கு இதை எடுத்துக்கொண்டு உங்கள் மனைவியை குணப்படுத்துங்கள் என்று சொன்னான்.

இதைப் பார்த்த ஆசிரியர், மிகவும் மகிழ்ச்சியடைந்து 'உன்னுடைய இந்த நல்லமனசு யாருக்கும் வராது.' நீ கஷ்டத்தில் இருந்து கொண்டு அடுத்தவருக்கு உதவ நினைத்தாயே உண்மையில் நீதான் சிறந்த மாணவன் என சக மாணவர்கள், ஆசிரியர்கள் முன் அவனை பாராட்டிவிட்டு இந்த உண்டியலை நீ வைத்துக்கொள். இன்று நான் சம்பளம் எடுத்துவிட்டேன் என தனது சம்பளத்தில் வந்த பணத்தில் ஐயாயிரம் ரூபாவை அவனுக்கு கல்வி கற்பதற்கு அன்பளிபாய் கொடுத்தார்.

பணத்தை பங்கிட்டுக் கொண்ட மூன்று மாணவர்களும் ஆசிரியரிடம் பணத்தை கொடுத்து தாங்கள் செய்த செயலுக்காக மன்னிப்புக் கேட்டனர். அந்த ஏழைச் சிறுவனை தன் நண்பனாக ஏற்றுக்கொண்டார்கள்.

ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து... நல்ல மனப்பாங்கு எப்போதும் நம்மை கைவிடாமல் உயர்வைத் தரும். எல்லோரும் நல்ல மனதோடு வாழ பழகிக்கொள்ளுங்கள் எனக் கூறினார்.

**மஜினா உமறுலெவ்வை**
மாவடிப்பள்ளி.

# அறிந்திராத உண்மைகள்

- ஒரு ஆண் நெருப்பு கோழியால் ஒரு சிங்கத்தை போல் கர்ஜிக்க முடியுமாம்.
- இங்கிலாந்தில் கிறிஸ்மஸ் தினத்தன்று நொறுக்குத்தீனி சாப்பிடுவது சட்டப்படி குற்றமாகும்.
- நீர் யானைகள் கோபப்பட்டால் அதன் வேர்வை சிகப்பாகும்.
- நாம் தும்மும்போது நமது இதயம் 1 மில்லி செக்கண்ட் நேரம் நிற்குமாம்.
- சில இன பறவைகள் இறந்த பறவைகளுக்கு இறுதிச்சடங்கு நடத்தும்.
- அமேசன் காடுகளில் 400 மில்லியன் மரங்கள் இருக்கிறது.
- நாய்களால் 250 வார்த்தைகள் மற்றும் சைகைகளை புரிந்து கொள்ள முடியும்.
- உலகில் 11வீதமான மக்கள் இடது கை பழக்கம் உள்ளவர்கள்.
- விண்வெளியில் வீரர்கள் அழ முடியாது. அங்கு புவி ஈர்ப்பு விசை இல்லை.
- ஒருவருக்குத் தொடர்ந்து 69 வருடமாக விக்கல் வந்துள்ளதாம்.
- கோல்ட் மீன்கள் 3 நிமிடங்கள் மட்டுமே ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளும்.

## மிகப் பெரிய பாறை



உலகிலேயே மிகப்பெரிய பாறை ஆஸ்திரேலியாவில் உள்ளது. 'உலுறு' என்ற இப்பிரமாண்ட பாறை 114 மாடி கட்டடத்தை விடவும் உயரமானது.

மஞ்சரி விளையாட்டு

# சாதிக்குமா இலங்கை?

பங்களாதேஷ் 184 ஓட்டங்களை நிர்ணயித்தபோதும் துரத்தி அடித்தார்கள், ஆப்கானிஸ்தான் 176 ஓட்டங்களை விதித்தபோதும் மைதான சாதனையாக அதனை விரட்டி வென்றார்கள், பலம்மிக்க இந்தியா 174 ஓட்டங்களை இலக்காக்கியபோதும் அதனை அடைந்தார்கள்... இலங்கை அணிக்கு இப்போது முழு நம்பிக்கை வந்துவிட்டது.

ஆசிய கிண்ணத்தை ஆப்கானிடம் மோசமாக தோற்று ஆரம்பித்த இலங்கை வாழ்வா சாவா போட்டியில் பங்களாதேஷை வீழ்த்தி, பின்னர் சுப்பர் போர் சுற்றில் மீண்டும் ஆப்கான் பின்னர் இந்தியாவை தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு நுழைந்தது. இலங்கை அணி இரண்டுக்கு மேற்பட்ட அணிகள் மோதும் டி20 அல்லது ஒருநாள் போட்டித் தொடர் ஒன்றில் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவது கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாக பெரும் கனவாக இந்தது.

அதுவெல்லாம் சங்கக்கார, மஹேல காலத்துடன் முடிந்துவிட்டது என்று புலம்பிய ரசிகர்கள் ஏராளம்.

இலங்கை அணி இரண்டுக்கு மேற்பட்ட அணிகள் பங்கேற்ற டி20 தொடர் ஒன்றில் இறுதிப் போட்டிக்கு முன்னெறி இருப்பது கடந்த எட்டு ஆண்டுகளில் இது முதல் முறையாகும். கடைசியாக 2014 இல் பங்களாதேஷில் நடந்த டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை இறுதிப் போட்டியில் இந்தியாவை எதிர்த்தாடி கிண்ணத்தையும் வென்றது ஞாபகம் இருக்கும்.

எனவே, இந்த ஆசியக் கிண்ணப் போட்டி இலங்கை அணிக்கு முக்கியமான ஒன்று. பெரிதாக எதிர்பார்ப்பு இன்றி போட்டிகளுக்குச் சென்றாலும் இப்போது கிண்ணத்தை வெல்லும் என்று பெரிய எதிர்பார்ப்பு வந்துவிட்டது.

இன்று (11) டுபாயில் நடைபெறும் ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி பாகிஸ்தானையே எதிர்த்தாடவுள்ளது.

பாகிஸ்தானும் இந்தத் தொடரின் ஆரம்ப சுற்றில் இந்தியாவிடம் தோற்றதற்கென்ன சுப்பர் போரில் பழிதீர்த்து, ஆப்கானையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. பந்துவீச்சு பலம், துடுப்பாட்டத்தில் நினைத்தால் சிக்ஸர் விளாசும் அதிரடி என்று நல்ல கலவையுடன் பாகிஸ்தான் களமிறங்கப்போகிறது.

எனினும் இலங்கை அணி போட்டிகளை எதிர்கொள்ளும் போக்கு மற்றும் தந்திரம் எல்லாம் முன்னரே தீர்க்கமாகத் திட்டமிட்டதாகவே தெரிகிறது. குசல் மெண்டிஸை ஆரம்ப வீரராக உயர்த்தி, ஆரம்பத்தில் வந்த தனுஷ்க குணதிலக்கவை மத்திய வரிசைக்கு இறக்கியதாகட்டும் பந்துவீச்சாளர்களை கச்சிதமாக பயன்படுத்தி இறுதி ஓவர்களில் எதிரணிக்கு அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுக்காமல் பார்த்துக்கொண்டதாகட்டும் எல்லாமே கச்சிதமாக இருக்கிறது.

இது அனைத்தும் தற்செயலானதாக எடுத்துக்கொள்ள முடியாது. முன் திட்டமிடலில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது தெரிகிறது.

என்ன திட்டம் வகுத்தாலும் மைதானத்தில் வீரர்கள் திறமையை காட்டினால் தான் வெற்றி. அது சரியாகப் பொருந்திப் போனதால் தான் இலங்கை அணி இறுதிப் போட்டி வரை முன்னேறி இருக்கிறது.

இந்த ஆசிய கிண்ணத் தொடருக்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் சபை நடத்திய அழைப்பு டி20 லீக் போட்டி இலங்கை அணிக்கு நன்றாக உதவி இருக்கிறது. குறிப்பாக இலங்கை அணியில் ஒளிந்து விளையாடிய குசல் மெண்டிஸ் தனது திறமையைக் காட்ட இந்தத் தொடர் பெரிதும் உதவி இருக்கிறது.

அழைப்புக் கிண்ணத்தில் குசல் மெண்டிஸ் அதிக ஓட்டங்களை பெற்றவராக இருந்தார். அவர் தனது 4 போட்டிகளிலும் 2 அரைச்சதங்களோடு 206 ஓட்டங்களை பெற்றார். ஓட்ட சராசரி 68.66 ஆக இருந்தது. அதில் விளையாடி விட்டு நேராக விமானம் பிடித்து ஐக்கிய அரபு இராச்சியம் வந்த குசல் மெண்டிஸ் அதே உத்வேகத்துடன் இருக்கிறார்.

அதேபோன்று அழைப்புக் கிண்ணத்தில் சோபித்த மஹீஷ் தீக்ஷனவும் ஆசிய கிண்ணத்தில் சிறப்பாக பந்துவீசி வருகிறார்.

எனவே ஆரம்ப வீரர்களாக பத்தும் நிஸ்ஸங்க மற்றும் குசல் மெண்டிஸ் சிறப்பாக ஆடி வருவதோடு சரித் அசலங்கவை தவிர்த்துப் பார்த்தால் அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் சோபிக்கிறார்கள். துஷ்மந்த சமீர பொடுபோக்கான ஆட்டத்தை தவிர்த்துக் கொண்டால் அவர் இரண்டாவது வரிசைக்கு பொருத்தமானவரே.

மத்திய வரிசையில் பானுக்க ராஜபக்ஷ மற்றும் அணித்தலைவர் தசுன் சானக்க தனது வேலை என்ன என்பதை புரிந்து துடுப்பெடுத்தாடுகிறார்கள். தொடர்ந்து சகலதுறை வீரர்களான வனிந்து ஹசரங்க மற்றும் சாமிக்க கருணாரத்ன துடுப்பாட்டத்தில் அவசியமான நேரத்தில் தேவையான துடுப்பாட்ட வீரர்களாக செயற்பட்டால் இலங்கை துடுப்பாட்ட வரிசையை அசைக்க முடியாது.

இலங்கை பந்துவீச்சில் சுழற்பந்து பற்றி கவலையில்லை. வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன இருக்கிறார்கள். ஹசரங்க இந்தத் தொடரில் இன்னும் தனது ஆட்டத்திற்கு முழுமையாகத் திரும்பாதபோதும் எதிரணிக்கு அவர் எப்போதும் சவாலாகவே இருப்பார். போட்டியில் சேகமாக ஓட்டங்கள் குவிக்க முயலும் ஆரம்ப மற்றும் கடைசி ஓவர்களிலும் தீக்ஷன எதிரணி துடுப்பாட்ட வீரர்களை தடுமாறச் செய்து வருகிறார்.

இந்தத் தொடர் ஆரம்பித்தது தொடக்கம் இலங்கை வேகப்பந்து வரிசை தான் பலவீனமாக இருந்தது. முன்னணி வீரர் துஷ்மந்த சமீர கடைசி நேரத்தில் காயத்தால் வெளியேறியதால் அனுபவமற்ற வேகப்பந்து வீச்சாளர்களுடனேயே களமிறங்க வேண்டிதாயிற்று.

என்றாலும் இடது கை வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க பெறுமதி மிக்க வீரராக உருவெடுத்து வருகிறார் என்பது இந்தியாவுக்கு எதிரான சுப்பர் போர் போட்டியை பார்த்தால் நம்பிக்கை வருகிறது. விராட் கொஹ்லியை போல்டாக்கியது, அதிடியாக ஆடி வந்த ரிஷாப் பாண்டை வெளியேற்றியது என்று அவரின் பந்துவீச்சு அபாரமாக இருந்தது.

அசித்த பெர்னாண்டோ சற்றுத் தடுமாற்றத்துடன் இருக்கிறார். என்றாலும் சாமிக்க கருணாரத்ன மற்றும் தசுன் சானக்க வேகப் பந்தில் இருக்கும் ஓட்டையை அடைக்கும் அளவுக்கு தேர்ச்சியானவர்கள்.



எனவே ஆசிய கிண்ணத்தை வெல்லும் அளவுக்கு தகுதி படைத்ததாகவே இலங்கை இருக்கிறது. என்றாலும் கடந்த போட்டிகளைப் பார்க்கும்போது ஆசிய கிண்ணத்தில் நாணய சுழற்சி என்பது முக்கிய பங்காற்றி வருகிறது.

ஹொங்கொங் ஆட்டங்களைத் தவிர்த்து இரண்டாவது துடுப்பெடுத்தாடிய அணிகளே வெற்றி பெற்றுள்ளன. ஆடுகளமும் துடுப்பாட்ட வீரருக்கு சாதகமாக இருந்தாலும் பந்து அதிகம் மேலெழாத தன்மை மற்றும் சுழலும் போக்கு ஆட்டத்தை வேறு பக்கம் திசை திருப்பக் கூடும்.

இவைகளைத் தாண்டி இன்று இலங்கை சாதித்தால் அது இலங்கை அணிக்கு புதிய திருப்பமாக இருக்கப் போகிறது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

# விடுகதை விளையாட்டு



2D, D5, A2, C4, D என்று தொடரும் குறியீடுகளின் அர்த்தம் என்னவாக இருக்கும். அது ஒன்றுமல்ல நீங்கள் போகப்போகும் அடுத்த விமான ஆசனத்தின் இருக்கை எண் என்று கிரிக்கெட் வர்ணனையாளர் ரசல் ஆர்னல்ட் நகைச்சுவையாகக் கூறுகிறார். இல்லை, இல்லை அது சீட்டிழுப்பு இலக்கம் என்கிறார் இங்கிலாந்து முன்னாள் வீரர் இயன் பெல்.

உண்மையில் இது கேளிக்குறியதல்ல. இந்த குறியீடுகளால் பங்களாதேஷ் ரசிகர்கள் கடுப்பாகிவிட்டார்கள். ஆசிய கிண்ணத்தில் இலங்கைக்கு எதிரான தீர்க்கமாக குழுநிலைப் போட்டியில் இந்தக் குறியீடுகளை இலங்கை அணி பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் பயன்படுத்தியதே, அந்தப் போட்டியில் தோற்ற பங்களாதேஷுக்கு கோபம் வரக் காரணம்.



இது கிரிக்கெட்டின் நியாயத் தன்மைக்கு சரியில்லை, ஒழுக்கமில்லாத வேலை... என்று பங்களாதேஷ் ரசிகர்கள் சமூக ஊடகங்களில் வேதம் ஓத ஆரம்பித்தார்கள்.

இம்முறை ஆசியக் கிண்ணப் போட்டியில் அனைவரும் தலையை பீய்த்துக்கொள்ளும் ஒன்றான இந்த குறியீட்டின் மூலம் தகவல் அனுப்பும் முறையே மாறிவிட்டது.

இலங்கை அணி மைதானத்தில் இருக்கும் போது அரங்கில் கணினியும் கையுமாக இருக்கும் இலங்கை அணியின் கணினி பகுப்பாய்வாளர், பிராத் நவரத்னம் வெள்ளை நிற அட்டையில் ஆங்கில எழுத்தும் இலக்கமும் கொண்ட குறியீடுகளை மைதானத்தில் இருக்கும் இலங்கை வீரர்களுக்கு தென்படுமாறு வைக்கிறார். அந்தக் குறியீட்டுக்கு அருகில் பயிற்சியாளர் சில்வர்வுட்டும் இருக்கிறார். இது சில்வர்வுட்டின் வேலை என்பது எல்லோருக்கும் தெரியும்.

அந்தக் குறியீடுகளைப் பார்க்கும் எல்லோருக்கும் இருக்கும் மிகப் பெரிய பிரச்சினை அது என்ன சொல்ல வருகிறது என்பதுதான். போர்களில் என்றால் குறியீட்டு செய்திகளை அவிழ்த்து உடைத்து தெரிந்து கொள்வதற்கென்றே ஆட்கள் இருப்பார்கள். அவர்களுக்கு ‘கோட்பிரேக்கர்’ என்று பெயர். அப்படி கோட்பிரேக்கர்களை எதிரணிகள் பயன்படுத்தும் அளவும் கிரிக்கெட் என்பது போர் அல்ல.

உண்மையில் என்னதான் குறியீடுகள் சொல்கின்றன. அதற்கு பயிற்சியாளர் சில்வர்வுட்டே பதலளித்திருக்கிறார்.

“இது ஒன்றும் ரொக்கெட் விஞ்ஞானம் இல்லை. இது துடுப்பாட்ட வீரர் ஒருவர் குறிப்பிட்ட நேரத்தில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது என்ன செய்வது சிறந்தது என்று அணித் தலைவருக்கு வெறும் ஆலோசனை வழங்குகிறது. இப்போதெல்லாம் பல அணிகளும் இதனைச் செய்கின்றன. உண்மையில் இது மிக எளிமையானது. இது அணித்தலைவருக்கு பயன்படுத்த முடியுமாக ஆலோசனை வழங்குவது மாத்திரமே. அவர் எவ்வாறு தலைமை செய்ய வேண்டும் என்று கூறுவதல்ல. பக்கத்தில் இருந்து ஆலோசனை வழங்குவது மாத்திரமே” என்று சில்வர்வுட் கூறுகிறார்.

சில்வர்வுட் இந்த வேலையைச் செய்வது இது முதல் முறையல்ல. அவர் முன்னர் இங்கிலாந்து பயிற்சியாளராக இருந்தபோதும் இவ்வாறான குறியீட்டு முறைகளை பயன்படுத்தி இருக்கிறார்.

2020இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடந்த டி20 தொடரில் இங்கிலாந்து பயிற்சியாளராக சில்வர்வுட் மைதானத்தில் இருக்கும் வீரர்களுக்கு இவ்வாறு குறியீட்டு செய்திகளை அனுப்பியது பற்றி அப்போது பெரிதாகப் பேசப்பட்டது.

போட்டியின் குறிப்பிட்ட நேரத்தில் ஆடுகளத்தை எப்படி அமைப்பது, துடுப்பாட்ட வீரரை கட்டுப்படுத்துவது, பந்துவீச்சாளரை எப்படி பயன்படுத்துவது போன்ற அலோசனைகளை வழங்குவதை தவிர உண்மையில் இந்தக் குறியீடு வேறு எதனை பெரிதாகச் சொல்லிவிடப் போகிறது.

> **போட்டியின் குறிப்பிட்ட நேரத்தில் ஆடுகளத்தை எப்படி அமைப்பது, துடுப்பாட்ட வீரரை கட்டுப்படுத்துவது, பந்துவீச்சாளரை எப்படி பயன்படுத்துவது போன்ற அலோசனைகளை வழங்குவதை தவிர உண்மையில் இந்தக் குறியீடு வேறு எதனை பெரிதாகச் சொல்லிவிடப் போகிறது.**

கிரிக்கெட்டில் மைதானத்தில் இருக்கும் வீரர்களுக்கு செய்திகளை அனுப்புவது தொன்று தொட்டு நடக்கும் ஒன்று. பெரும்பாலும் தண்ணீர் போத்தலுடன் வரும் மேலதிக வீரரே அவ்வாறான செய்திகளை கொண்டு செல்பவர்களாக இருப்பார்கள். அந்த செய்திகளைப் பெறுவதற்காகவே இடை நடுவில் வீரர்களுக்கு தாகம் கூட வரும்.



ஆனால் நவீன கிரிக்கெட் அவசரமானது. அதிலும் டி20 போட்டிகளை குறிப்பிட்ட நேரத்துக்குள் முடிக்க வேண்டும் என்று கடுமையான கட்டுப்பாடுகள் இருக்கும். எனவே மைதானத்திற்குள் அடிக்கடி தண்ணீர் போத்தல்களை கொண்டு போக முடியாது. எனவே அதற்கு மாற்றான வழிகளை கண்டறிவது பயிற்சியாளர்கள் வேலையாக மாறிவிட்டது.

“அணி களத்தடுப்பில் ஈடுபடும் போது மாத்திரமே இந்த முறை பயன்படுத்தப்படுகிறது. இந்த முறை எப்படி செயற்படுகிறது என்று எனக்குத் தெரியாது. எந்த பந்துவீச்சாளர் எப்போது பந்துவீச வேண்டும் என்பதைக் கூறுவதாக இருக்கும் என்று நினைக்கிறேன். பின்னர் அது பற்றி முடிவெடுப்பது அணித் தலைவரின் கைகளிலேயே இருக்கிறது” என்கிறார் சிம்பாப்வே முன்னாள் அணித்தலைவர் அன்டி பிளவர்.

தற்போது பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் சுல்தான் முல்தான் அணிக்கு பயிற்சியாளராக செயற்படும் பிளவர், பௌண்டரி எல்லை வழியாக அணித் தலைவருக்கு செய்தி அனுப்பும் முறை ஒன்றை பயன்படுத்தி இருந்தார்.

என்றாலும் 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் அப்போதைய தென்னாபிரிக்க அணித்தலைவர் ஹான்சி குரொன்சே மற்றும் அந்த அணியின் பயிற்சியாளர் பொப் வுல்மர் செய்த வேலை பெரும் சர்ச்சைக்குக் காரணமானது.

மைதானத்தில் இருக்கும் குரோன்சேவுடன் தொடர்புகொள்ள வுல்மர் ‘இயர்போன்’ தொழில்நுட்பத்தை பயன்படுத்தினார். அதுவும் யாருக்கும் தெரியாமல் இந்தியாவுடனான முதலாவது போட்டியில் இதனை பயன்படுத்தியதை தொலைக்காட்சி வர்ணனையாளர்கள் அவதானிக்கும் வரை யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

பின்னர் இந்தியா ஆரம்பத் துடுப்பாட்ட விரர்களான சவ்ரவ் கங்குலி மற்றும் சச்சின் டெண்டுல்கர் இதனை அவதானித்து நடுவர்களுக்கு தெரியப்படுத்த, அது போட்டி நடுவரிடம் செல்ல, போட்டி நடுவருக்கும் என்ன செய்வது என்று தெரியாமல் ஐ.சி.சியிடம் நேரடியாக விளக்கம் கேட்க பெரும் குழப்பமாகிவிட்டது.

இப்படி இயர்போன்களை பயன்படுத்துவது எந்த விதியையும் மீறவில்லை என்று அப்போது ஐ.சி.சி கூறிவிட்டது. ஆனாலும் பிரச்சினை முடியவில்லை. இந்த முறை நியாயத்தன்மை அற்றது என்று ஐ.சி.சி வெளிப்படையாகவே சொல்லிவிட்டது.

குரொன்சே இயர்போனுடன் அந்தப் போட்டி முழுவதும் மைதானத்தில் இருந்தபோதும் அதிருப்பதிகள் அங்கங்கே வெளிப்பட்டன. அரங்கில் இருந்த ரசிகர்கள் கூட கூட்டமாக கூச்சல் போட்டார்கள்.

அந்தப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது. பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டிலும் புதிய தொழில்நுட்பத்தை வரவேற்று பேசினார் வுல்மர். என்றாலும் பிரச்சினை முற்றியபோது இவ்வாறான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு ஐ.சி.சி தடை விதித்தது.

சில்வர்வுட்டின் மூலோபாயம் வுல்மர் அளவுக்கு மோசமானது அல்ல. ஐ.சி.சி விதி மீறல் எதனையும் அது செய்யவில்லை. எல்லோருக்கும் வெளிப்படையானதாகவே அது இருக்கிறது. ஒன்றே ஒன்று அந்தக் குறியீட்டில் என்ன கூறப்படுகிறது என்பது இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்கவைத் தவிர யாருக்கும் தெரியவில்லை. எதிரணி, போட்டி விதிகள், ஒழுக்கம், நேர்மை ஒரு பக்கமிருக்க இது ஒரு புதிரை விடுவிக்கும் அளவு ஆர்வத்தையே சராசரி ரசிகர்களுக்கு ஏற்படுத்துகிறது.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# காத்திருந்த கண்கள்

அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் விஜி இன்னும் கூட படுக்கையை விட்டெழும்பவில்லை. அவள் அம்மா தேநீர்க் கோப்பையுடன் அவளருகில் வந்து "விஜியம்மா நேரமாகல்ல இன்னுமா தூக்கம் வருது" உங்கப்பாவும் எழும்பி குளித்து முடித்து சந்தைக்குப் போக தயாராகிட்டார்.." என்றாள்.

"ஓ மை கோர்ட்" நல்லாவே தூங்கிட்டேன்." என்றவள் துள்ளிக் குதித்தெழுந்து தேனீரைப் பருகிக் கொண்டே "மம்மீ இன்னைக்கு என்ன ஸ்பெஷல்?" என்றாள். பின்னர் அம்மாவை கட்டிப் பிடித்து "இச்" சென அவள் கன்னத்தில் இதழ் பதித்துவிட்டு குளியலறையை நோக்கி புள்ளிமானாய் துள்ளி ஓடினாள்.

விஜி இருபது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் இளநங்கை. பணக்கார வீட்டுச் சீமாட்டி. பரமசிவம் பாக்கியவதி தம்பதிகளின்; ஒரே பிள்ளை. கல்யாணம் முடித்து ஐந்து வருடங்களாக குழந்தைப் பாக்கியம் இன்றி கோயில் கோயிலாக பிரார்த்தனை பண்ணியதன் பலனாய் விஜி பிறந்தாள்.

அவள் சுதந்திரப் பறவை போல் பறந்து திரித்தாள். மூன்று தலைமுறைக்கு வைத்துக்கொள்ளும் அளவுக்கு சொத்து சுகம் இருந்தாலும் தொழில் செய்ய அவள் ஆசைப்பட்டாள். தந்தையின் செல்வாக்கில் தனியார் நிறுவனமொன்றில் தட்டெழுத்தாளராய் பதவி பெற்றுக் கொண்டாள். அவளை ரசிக்கும் அலுவலக ஆண்களில் சதீஸ{ம் ஒருவர்.

சதீஸ் அதே நிறுவனத்தின் கிளை அலுவலகத்தில் விற்பனைப் பிரதிநிதியாக தொழில் பார்த்தான். ஆரம்பத்தில் தொழில் ரீதியாக இருவரிடத்திலும் ஏற்பட்ட நட்பு நாளடைவில் காதலாய் மலர்ந்து மணம் வீசியது. அலுவலக விடுமுறை நாட்களில் வெளியே சுற்றித் திரிந்தார்கள். இதுபோல் அன்றும் ஒரு விடுமுறை நாளாய் இருந்தது.

காலை வேளையிலேயே குளித்து முடித்து விலையுயர்ந்த சாரியொன்றை உடுத்திக் கொண்டு காலை உணவுக்கு வந்தபோது அம்மா சிடுசிடுத்தாள். ஆனால் "அவ போயிட்டு வரட்டுமே தொந்தரவு கொடுக்காதே" என்று அப்பா அவளுக்காக பரிந்து சொன்னபோது "தேங்ஸ் டெடீ, குட் பாய் மம்மீ" என்று கூறிவிட்டு சிட்டாய்ப் பறந்து அந்தப் பூங்காவின் நுழைவாயிலில் நுழைந்த போது, அவளுக்காக காத்திருந்த சதீஸ் "வெல்கம் டார்லிங்". என வரவேற்றான்.

அவள் கரத்தைக் கோர்த்துக் கொண்டு நடந்த போது அந்த பூங்கா வனத்தில் இவர்களும் பூக்களாய்ப் பரிணமித்தார்கள். அங்கே காணும் இடமெல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாக காதலர்கள் சங்கமித்திருந்த போது, சதீஸின் உள்ளமும் அந்த நிலமைக்கு ஆளாக துடித்தது. அந்த பரந்த பூங்காவில் அவனுக்கென பிடித்திருந்த அடர்ந்த பூஞ்செடிகள் காணப்பட்ட அந்த இடத்துக்கு அவளை கூட்டிச் சென்றான்.

அவன் நோக்கம் புரியாது எவ்வித சலனமுமின்றி வெகுளியாய் அவளும் அந்த இடத்தில் அமர்ந்த போது, அவனும் அவளை நெருங்கியே அமர்ந்து கொண்டான். அவள் கையை எடுத்து தன் மார்பில் வைத்துக் கொண்டான். அவள் மெய் சிலிர்த்தாள். பின் அவள் கரத்தில் மென்மையாக முத்தமிட்டான். அவள் சட்டென்று கைகளை இழுத்துக் கொண்டு விலகினாள். "ஏன் விஜி" பிடிக்கலையா?".. "இல்லை என்னைக் கல்யாணம் செய்துக்குருவீங்களா" என்றான் பளிச்சென்று. "எம்மேல இன்னுமா நம்பிக்கை இல்ல?" என அவன் வழமை போல கேட்டபோது "நிறையவே இருக்குது" ஆனா.. ஆனா" என இழுத்தாள். "அப்போ ஏன் பயப்பிடுற?" என்றவன், அவளை இழுத்து தன்னோடு சேர்ந்து இருக்கமாய் அனைத்துக் கொண்டான். அவன் அணைப்பிலிருந்து விலகவும் முடியாது" விலகவும் விரும்பாது அவள் அடங்கிப் போனாள். அவள் கைகள் தைரியம் பெற்றன.

அவளின் லேசான தயக்கங்கள் முறியடிக்கப்பட்டன. அவளும் கூட முழுக்க முழுக்க அவனுடைய ஆளுமையில் இருந்தாள். அந்த அழகிய பூங்காவனத்தில் வண்ண வண்ண பூக்கள். தேன் உண்ணும் வண்டுகளின் ரீங்காரம் ஏதோ ஒரு புதிய இசை விருந்தை படைப்பது போலிருந்தது. சதீஸ{க்கும் விஜிக்கும் அந்த இசைவிருந்து இன்பமூட்டியது.

இதுபோல் பல தடவைகள் அவர்களின் சந்திப்புக்கள் மலர்களோடு மலர்களாக சங்கமித்தன. சதீஸ் விரும்பாத சந்தர்ப்பங்களில் கூட விஜி அவனைக் கட்டாயப்படுத்தி இன்பத்தில் மூழ்கினாள். ஆனால் அவள் இன்பத்திற்கு வெகு விரைவாக காலம் தடைபோட்டது. இன்பத்தின் விளைவுகளை இயற்கை அவளுக்கு உணர்த்தியது. அவளுக்கே அது ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும் அவள் எதற்கும் அஞ்சாமல் தன்போக்கிலே போய்க் கொண்டிருந்தாள்.

அன்றும் வழமை போல அலுவலகத்தில் கடமையில் இருக்கும்போது அவளுக்கு லேசாக தலை சுற்றுவது போலிருந்தது. தொடர்ந்து சோர்வு, மயக்கம், குமட்டல் என்று தொடர்ந்து கொண்டிருந்தது.

அவள் செய்வதறியாது தவித்தாள். ஒருவாறு தன்னை சுதாகரித்துக் கொண்டு சதீஸ{க்கு தொலைபேசி அழைப்பெடுத்தாள். அவன் தொழில் விடயமாக வேறூர் போயிருப்பதாக தகவல் கிடைத்தது. வேறு வழியின்றி தோழி ஒருத்தியின் உதவியோடு பெண் டொக்டர் ஒருவரை நாடினாள்.

அவளை பரிசீலித்த டொக்டர் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "உங்க ஹஸ்பெண்டும் வந்திருக்காரா?" என்று கேட்டார். அவள் தடுமாறிப் போனாள். "என்ன டொக்டர் சொல்றீங்க" எனக்கு இன்னும் கல்யாணமே ஆகல்ல.

"அவள் கூறியதைக் கேட்ட டொக்டர் ஆச்சரியம் மேலிட "அப்போ எப்படியம்மா நீ கர்ப்பமாகியிருக்க முடியும்?" என்றதும் அவள் அதிர்ந்து போய் மயக்கமுற்றாள்.

அவள் மீண்டும் சுய நினைவுக்கு திரும்பி கண்விழித்து பார்த்தபோது மருத்துவமனை கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தாள். "இப்ப என்னடீ செய்யப் போற.. உங்க வீட்டுக்கு கோல் போட்டு விசயத்த சொல்லிடவா?.."

"வேணாம்.. வேணாம் கொஞ்சம் பொறு" என்று அவள் சதீஸின் மொபைலுக்கு கோல் எடுத்தாள். அதுவும் இயங்கவில்லை. அதற்கிடையில் டொக்டரும் வந்துவிட்டார்.

"என்னம்மா இவங்க வீட்டுக்கு விஷயத்தைச் சொல்லிட்டீங்களா?" தோழி அசடுவழிய.. "இன்னும் இல்ல டொக்டர்" என்றதும். "ஏன் என்னை டிஸ்சார்ச் பண்ண மாட்டீங்களா?" என விஜி வியப்போடு கேட்கவும்

"எப்படியம்மா முடியும்.. ஹை பிரஷர், ஹாட் வேற வீக்.. ரெண்டு மூனு நாளாகுமே.." என்றார் மருத்துவர்.

"விஜி உங்க வீட்டு நம்பரைக் கொடு" என்று தோழி கேட்கவே வேறு வழியின்றி அவளும் கொடுக்க, தோழி, வீட்டுக்கு விடயத்தைத் தெரிவித்தாள். சற்று நேரத்தில் அப்பாவும் அம்மாவும் பதறி அடித்துக்கொண்டு வந்தார்கள். "என்னம்மா.. என்ன ஆச்சு?" பெரிசா ஒன்னும் இல்லபா பயப்படாதீங்க" சாதாரண காய்ச்சல் தான்".

"டாக்டரை சந்திக்கவா.." "வேணாமப்பா எல்லா சரியாயிடும்"

இரண்டு நாட்களில் அவள் உடல் தேறியது. மருத்துவமனையில் இருந்து நேராக சதீஸின் அலுவலகத்துக்குப் போனாள். அங்கு அவன் இருக்கவில்லை. கையடக்க தொலைப்பேசியும் இயங்கவில்லை.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. வேறு வழியின்றி வீட்டை அடைந்தாள். பெற்றோரிடம் உண்மையைச் சொன்னதும், அப்பாவும் அம்மாவும் கலங்கிப் போனார்கள்.

"சரி நடந்தது நடந்து போச்சு" அந்தப் பையனுக்கே கட்டி வச்சுடலாம்" என்ற முடிவோடு சதீஸை எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தார்கள்.

எப்படியோ விடயத்தை தெரிந்து கொண்ட சதீஸ் தலைமறைவாகிவிட்டான். "விஜி என்னம்மா செய்யிறது. பேசாம கருவைக் களைச்சுடுவோமா" என்ற பெற்றோரின் முடிவை திராகரித்த விஜி,

"வேணாம்பா.. அவன் எங்க போயிடுவான்.. என்னைக்காவது மாட்டாமலா போயிடுவான். என்னவானாலும் சரி, இந்தப் புள்ளைக்கு நான்தான் தகப்பன்னு ஒருநாள் என் காலில விழத்தான் போகிறான். அதுவரை என் வயிற்றில் சுமந்த இந்த சிசுவை பெற்று வளர்த்து பெரிய ஆளாக்காமல் நான் விடமாட்டேன்.. அதுவரைக்கும் நீங்க ரெண்டு பேரும் எனக்கு ஒத்தாசையாக இருந்தாப்போதும்" என்று கூறி முடிக்க அவர்களுக்கும் அது சரியெனப் பட்டது.

மாதங்கள் பத்து வேகமாக கடந்து சென்றிருந்தன. விஜி ஒரு அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவள் அப்பாவும் அம்மாவும் எல்லாம் ஆண்டவன் செயல் என்று இறைவன் மீது எல்லா பாரத்தையும் போட்டுவிட்டு காலத்துக்காக காத்திருந்தார்கள்.

இப்போதெல்லாம் விஜி தொழிலுக்கும் போகாமல் தன் பிள்ளையை வளர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தாள். பிள்ளை சுதனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்ந்து பெரியவனான். அவனை நல்லதொரு உயர்தரப் பாடசாலையிலேயே கல்வி கற்க அனுப்பி வைத்து விட்டு மீண்டும் அவள் அலுவலகம் புறப்பட்டாள்.

அவள் அப்பாவும், அம்மாவும் எல்லா விசயத்திலும் அவளுக்கு ஒத்தாசையாகவே இருந்தார்கள். மகன் சுதனும் விறுவிறுவென வளர்ந்து கல்வியிலும் சிறந்து விளங்கி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பீடத்துக்கு தெரிவானான். விஜிக்கும் அவள் பெற்றோருக்கும் எல்லையில்லா ஆனந்தம்.

வருடங்கள் வேகமாக உருண்டோடின. சுதன் இப்போது ஒரு மருத்துவர். தன் அம்மாவையும், தாத்தா, பாட்டியையும் தான் கடமைப் புரியும் அந்த வைத்தியசாலை அமைந்துள்ள நகரப் பகுதிக்கே கூட்டிச் சென்று ஒரு பிரமாண்டமான வீடொன்றில் குடியேற்றினான்.

ஒரு நாள் தன் வீட்டுக்கு முன்னால் "அம்மா பசிக்குது ஏதாவது சாப்பிட இருந்தா தாங்க" உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும்" என்று யாரோ யாசகம் கேட்பது போல் இருந்தது. "யாரென்று தெரியல்ல பாவம்" என்று எண்ணிக் கொண்டே விஜி வாசல் கதவை திறந்தாள்.

அங்கே பரட்டைத் தலையோடும் முகமெல்லாம் தாடி, கிழிந்த கந்தல் உடைகளோடும் ஒரு யாசகன் அங்கே நிற்பதைக் கண்டாள்.

ஒரு கால் இல்லாததால் ஊன்றுகோலின் துணையோடு நின்று கொண்டிருந்தான். விஜிக்கு அவனைப் பார்க்க ரொம்பவும் பாவமாக இருந்தது.

"இருப்பா வாரேன்" என்று வீட்டுக்குள் ஓடியவள் "அம்மா"அம்மா.. யாரோ ஒரு பிச்சைக்காரன். "பார்க்க பாவமா கெடக்கு" ஏதாவது சாப்பாட பார்சல் பண்ணுங்க. நான் சுதனுடைய பழைய உடுப்புகள் எடுத்துக்கொண்டு வாரேன்" என்றாள்.

சற்று நேரத்தில் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியில் போய் அந்த யாசகனிடம் நீட்டும் போது, அவன் இவளை உற்று நோக்கினான்.

"நீங்க.. நீ... நீ விஜி இல்ல விஜி என்னை உனக்கு ஞாபகம் இல்லையா" நான் தான்நான்தான்" என்றவன் அப்படியே மயக்கம் போட்டு விழுந்தான். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஆனால், அந்தக் குரலை எங்கேயோ கேட்ட ஞாபகமும் இருந்தது. உடனே அவனை வீட்டு வேலையாட்களின் துணையோடு சுதன் வேலை செய்யும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றாள். மகனிடம் நடந்தவற்றைக் கூறினாள். அந்த யாசகனை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து பரிசோதனை செய்தார்கள். விஜியும் சுதனும் அவன் பக்கத்திலேயே நின்றார்கள். சற்று நேரத்தில் அவனுக்கு நினைவு திரும்பியது. அவன் கண்கள் விஜியின் முகத்தையே உற்று நோக்கின.

"விஜி என்னத் தெரியல்ல" நான் தான் சதீஸ்" என்றதும் அவளும் திடுக்கிட்டாள். அவளுக்கும் தலை சுற்றுவது போல் இருந்தது. சுதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"விஜி" உனக்கு நான் செய்த துரோகத்துக்கு என்னை ஆண்டவன் நல்லாவே தண்டிச்சுட்டான். இந்த இறுதி நேரத்திலாவது உன்னை சந்திக்க ஒரு வாய்ப்பைக் கொடுத்த அந்த ஆண்டவனுக்கு நன்றி சொல்லுறேன்.." அவன் என்னென்னவோ சொல்லிக் கொண்டே போனான். ஆனால் விஜியின் காதுகளுக்குள் அவை எதுவுமே நுழையவில்லை. அவள் பிரமை பிடித்தவள் போல் அப்படியே சிலையாய் நின்றாள்.

"டொக்டர் என்னை டிஸ்சார்ஜ் பண்ணிடுங்க. ஒரு உத்தமிக்கு நான் செய்த துரோகத்துக்கு பிராயசித்தமா இன்னும் என் வாழ்க்கையில் என்னென்ன அனுபவிக்க இருக்கோ தெரியல்ல".

இந்த உயிர் இந்த உடம்பை விட்டு போகும் வரை அதையெல்லாம் சந்தோஷமா அனுபவிக்கணும்.. என்னை விட்டுடுங்க" உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும்" உங்கள் காலில விழுந்து வணங்குவதாக எண்ணி என்னை விட்டுடுங்க" என்று கதறினான் சதீஷ்.

"அவர் டாக்டர் இல்ல" உங்க மகன் "உங்க மகன்" விஜி பேச எத்தனித்தாலும் வார்த்தைகள் வெளிவரவில்லை. அவள் சுதாகரித்துக் கொண்டு "எல்லா விசயங்களையும் வெளியில் போய் பேசிக்கலாம்.. முதல்ல அவரை டிஸ்சார்ஜ் பண்ணி நம்ம வீட்டுக்கே கூட்டிக் கிட்டுப் போவோம்.." விஜி சொல்ல மகனும் செய்தான். அந்த மனிதரை கைத்தாங்கலாகப் பிடித்து தன் காரிலே ஏற்றிக் கொண்டான். உடன் விஜியும் ஏறிக் கொண்டாள்.

வீட்டை அடைந்ததும் இருவரும் கைதாங்களாக சதீஸை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்கள். அவன் பிரமித்துப் போனான். "இது டொக்டர் வீடா?" என்றதும்.

"அவர் டாக்டர் இல்ல" என் அன்பு மகன்" நம்ம அன்பு மகன்" அவன் ஆச்சரியம் மேலிட சுதனை பரிவோடு தொட்டுத் தழுவினான்.


கண்ணீர் ஆறாகப் பெருகியது. "என் மகனின் தந்தையை என்றாவது இந்த உலகுக்கு காட்டு ஆண்டவனே" என்று இறைவனிடம் நான் தினமும் வேண்டுவேன். என் பிரார்த்தனை வீண் போகவில்லை."

விஜி அப்படிக்கூற சதீஸ{ம் சுதனும் ஆளுக்கு ஆள் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டார்கள். "இவரோ என் அப்பா அப்பா.." அவன் அடிப்படியே சதீஸை கட்டி அணைத்துக் கொண்டான். அந்த வீடே அன்று மங்களகரமாய் காட்சி அளித்தது.


ஓவியம்: தவம்

பசறையூர்
ஏ.எஸ். பாலச்சந்திரன் ...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 39



திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................

.............................. ..............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 39
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 39

**இடமிருந்து வலம்**

(01) நுட்பம் - மேலோட்டமாகத் தெரியாத நிலை.
(04) ஒரு தமிழ் மாதம்.
(06) மீன் பிடிப்பதற்கும் பயன்படுகிறது.
(07) ஈரத் தன்மை அற்றது, காய்ந்தது. (குழம்பியுள்ளது)
(08) கொதிப்பு, வலிப்புத்தன்மை.
(10) மகிழ்ச்சி.
(11) நூல்.
(14) ஏழ்மை நிலை.
(15) தாம்பாளம். (குழம்பியுள்ளது)
(16) வேவு பார்த்தல்.
(17) நாட்டின் மக்கள் தொகை அடிப்படையிலான நிர்வாகப் பிரிவுகளுள் ஒன்று.
(18) வெளிச்சம் திரும்பிவிட்டது.
(19) மனதில் எழும் வருத்தம். (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(01) வெப்பம்.
(02) காலடிப்பதிவு.
(03) விளங்கிக்கொள்ள முடியாமல் வியப்படையும் நிலை.
(04) கடைப்பிடிக்கும் வழி.
(05) குறைந்த எண்ணிக்கை.
(08) யானை.
(09) இலங்கையிலுள்ள ஒரு மாவட்டம்.
(10) மானமுள்ளவர்களுக்கு உதாரணமாக சொல்லப்படும் விலங்கு.
(12) வருடுதல்.
(13) பாலைவனக் கப்பல். (குழம்பியுள்ளது)
(16) தேகம்.
(18) காற்று மேல்நோக்கி வீசுகிறது.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 38

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) புதல்வன் (04) விதி (06) துவி
(07) கும்மி (08) மைல் (09) சமர்
(10) இளவேனில் (11) கோதுமை (14) வரி
(15) மாம்பழம் (18) சர்க்கரை (20) நாடு
(21) புதையல்

**மேலிருந்து கீழ்**

(01) புதுமை (02) தவில் (03) வள்ளல்
(04) விம்மல் (05) திமிர் (07) சகுனி
(10) இமை (11) கோரிக்கை (12) துவரை
(13) ஈழநாடு (15) மார்பு (16) பகல்
(17) நாம் (19) சதை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 37

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். கனகரத்தினம்,**
975,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.

**2. எம்.எச்.எம். பாஸி,**
இல. 02,
கும்புக்கந்துரை,
ரஜவெல்ல.

**3. வி. பாலேந்திரா,**
15/2 B,
தயா வீதி,
வெள்ளவத்தை.

**3. ஏ.டபிள்யூ. நியாஸ்,**
A 29/5,
சமித்திய வீதி,
மாவனெல்லை.

**4. ஆர. ஞானச்சந்திரன்,**
இல. 40,
முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

**5. ஏ.எல். ஜலீல்,**
61/1ஏ/1,
மஹபுத்கமுவ,
கொட்டிகாவத்தை.

**6. எப்.ஆர்.ஏ. ஷக்கூர்,**
145,
குனேபன மடிகே,
மடவளை பஸார்.

**7. என்.எஸ். ரஜீவ்,**
பிரதேச செயலகம்,
முசலி,
மன்னார்.


**8. யுஸ்ரி அஹமட்,**
236/1,
குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

**9. எம். பாசிர்,**
70, கண்டி வீதி,
ஹாலி எல.

**10. எம். சுப்ரமணியம்,**
இல. 07,
பாடசாலை வீதி,
ஜயந்திபுரம்,
மட்டக்களப்பு.

★ ★ ★

# வாரபலன்



28.08.2022 - 03.09.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/202g 2) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் வருவது யோகம் தான். பிள்ளைகளுக்கு உத்தியோகம் கிடைக்கும். பெண் பிள்ளைகளின் சுபசடங்குகளில் இருந்துவந்த தடை அகலும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. சுபகாரியங்கள் நடத்தும் வாய்ப்பு உருவாகும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 6,10.

## ரிஷபம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் 6ம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். சுக ஸ்தானத்திற்கு வரும்போது நல்ல காரியங்கள் பல இல்லத்தில் நடைபெறும். உத்தியோகத்தில் உயர் பதவிகள் வந்து சேரும். ஆரோக்கியம் சீராக மாற்று, மருத்துவம் கைகொடுக்கும். பயணங்கள் பலன் தரும். வீடு, இடம் வாங்கும் யோகம் வாய்க்கும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 8,9.

## மிதுனம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 5 ,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் அவர் சகாய ஸ்தானத்திற்கும் வரும்போது பிள்ளைகள் வழியில் சுப விரயம் ஏற்படும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் இருந்த தடைகள் மாறும். வீட்டிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்க முன்வருவீர்கள். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 10, 11.

## கடகம்

ஆவணி 16ம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 4 ,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் தனது வீட்டிற்கு வரும்போது அசையாச் சொத்து வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும். வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 1,12.

## சிம்மம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022)சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உங்கள் ராசியிலேயே இருப்பதால் தொழில் வளம் சிறக்கும். எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வார். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 3,4.

## கன்னி

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 12ஆம் இடத்துக்கு வரும் பொழுது குடும்ப பச்சுமை கூடும். குடியிருக்கும் வீட்டால் சில பிரச்சினைகள் உருவாகும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள் .சகோதரர் வர்க்கத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். வெளிநாட்டு வணிகம் செய்பவர்களுக்கும் பங்குச்சந்தையில் ஈடுபட்டவர்களும் கவனமாக செயல்படுங்கள். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 5,6.

## துலாம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள்

துலாம்

ராசிக்கு அதிபதியான சுக்கிரன் லாப ஸ்தானத்தில் லாபாதிபதி சூரியனுடன் இணைவதால் பொருளாதார நிலை உயரும். புதிய திருப்பங்கள் ஏற்படும். புனித பயணம் அதிகரிக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் பலவும் நாடி வரும் நேரமிது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். வெளிநாட்டில் இருந்து நீங்கள் எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரலாம்.அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 8,9.

## விருச்சிகம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022)சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். 7 , 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே குடும்ப வருமானம் உயரும். வாழ்க்கை துணைக்கு தொழில் அல்லது வேலை அமைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். தங்கம் வாங்குவதில் தனி கவனம் செலுத்துவீர்கள். புதிய தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

## தனுசு

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 6 ,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் உங்கள் ராசிநாதன் குருவிற்கு பகை கிரகமாகும். சூரியனோடு இணையும் சுக்கிரனால் நற்பலன்கள் கிடைக்கும். புதிய வேலை கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். இல்லத்தில் மங்கல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பணிபுரியும் இடத்தில் பதவி உயர்வுடன்கூடிய மாறுதல்கள் வரலாம். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 9,10.

## மகரம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 5 ,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன். அஷ்டமாதிபதி சூரியனுடன் இணையும் போது சுபகாரியங்கள் நடைபெறும். தொழிலை விரிவு செய்யும் முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். வீடு கட்டும் முயற்சியில் இருந்த தடை அகலும். பாகப் பிரிவினையில் உங்களுக்கு எதிர்பார்த்த பலன் கிடைக்கும். சுய தொழில் தொடங்கும் எண்ணம் மேலோங்கும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 4,10.

## கும்பம்

ஆவணி 16 ஆம் திகதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார் உங்கள் ராசிக்கு 4 ,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் சுகஸ்தானத்திற்கு வரும்போது யோகம் தான். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பச்சுமை கூடுதலாக இருந்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும். அலுவலகத்தில் கேட்டிருந்த சலுகைகள் கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம்.அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 5,6.

## மீனம்

ஆவணி 16 ஆம் தேதி (01/09/2022) சிம்ம ராசியில் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார். உங்கள் ராசிக்கு 3 ,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 6ம் இடத்திற்கு வருவது யோகம்தான். தொட்டது துலங்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். எதிர்பாராத நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள் நடைபெறும். இழப்புகளை ஈடுகட்ட புதிய வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் பணி நிரந்தரமாக வாய்ப்பு உண்டு.அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 8, 9 .

# துன்பப்படுவோருக்கு உதவும் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம்



அநுராதா யஹம்பத்



தெய்வேந்திரன்

சமூகப் பணியென்பது தொழில்வாண்மைசார்ந்தது. சமூகமாற்றத்தினை மேன்மைப்படுத்துவது. மக்களின்நலன்களைமேன்மைப்படுத்துவது. சமூகநீதிமற்றும் மனிதஉரிமைகள் என்பனவற்றைப் பேணுவது போன்ற விடயங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

நமது நாட்டைப்பொறுத்தவரை சமூக சேவை அமைச்சும். அதன் கீழ் செயற்பட்டுவரும் சமூக சேவைத் திணைக்களமும். மேற்கூறிய கருத்துக்களை அளவு கோலாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன. நலிவுற்ற மக்களை சமூகத்திற்கு பாரமற்றவர்களாகவும், தேசிய ரீதியில் இவ்வாறானவர்களின் துன்பங்களை குறைக்கும் நோக்கிலும் செயற் திட்டங்களை வடிவமைத்து செயற்பட்டு வருகின்றன.

கிழக்கு மாகாண சபையின் கீழ் மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை ஆகிய மாவட்டங்கள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 15 மில் மக்கள் வாழ்கிறார்கள். கிழக்கு மாகாண சபையின்கீழ் மாகாண சமூகத் திணைக்களமும் மாவட்ட மட்டத்தில் மாவட்ட சமூக சேவைத் திணைக்களமும் செயற்பட்டு வருகின்றன. இத்திணைக்களத்திற்கு பணிப்பாளராக ஏ.ஜி.தெய்வேந்திரன் பணியாற்றி வருகிறார்.

கிழக்கு மாகாண சபை தமது மாகாணத்தில் நலிவுற்ற, இயலாமை கொண்ட, தங்கி வாழும் நபர்களுக்கு மாதாமாதம் நிதியுதவிகளை செய்து வருகிறது

இது பொது சன மாதாந்தக் கொடுப்பனவு என்று அழைக்கப்படுகிறது. இதற்குள் நோயாளர்களும் அவர்களில் தங்கி வாழ்வோரும், சிரேஷ்ட பிரஜைகளும் அவர்களில் தங்கி வாழ்வோரும், மாற்றுத் திறனாளிகளும் அவர்களில் தங்கி வாழ்வோரும். விதவைப் பெண்களும் அவர்களில் தங்கி வாழ்வோரும், கணவர்களினால் கைவிடப்பட்ட பெண்களும் அவர்களில் தங்கி வாழ்வோரும், பெற்றோர்களின் பராமரிப்பை இழந்த 18 வயதுக் கீழப்பட்ட பெண்களும் என வகைப்படுத்தப்பட்டுள்ள இவ்வாறானவர்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் 73559 என புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இவர்களுக்கு வழங்கப்படும் உச்சக்கட்ட தொகை நபரொருவருக்கு ரூபா. 500 ஆகும்.

அடுத்ததாக அதிக பாதிப்பையும் உடல் உபாதைகளையும் அனுபவிக்கும் நோயாளர்களுக்கும் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. அது புற்று நோய், தொழுநோய், தலிசீமியா, சிறுநீரக நோய், காச நோய் போன்ற நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றது. இது 1624 பேருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதுவும் உச்சக்கட்ட தொகை ரூபா 500 என வரையறை செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபை சுய தொழிலில் ஈடுபட்டு வருபவர்களுக்கும், சுய தொழில் முயற்சியிவ் இறங்கி சம்பாதிக்க ஆர்வம் காட்டுவோருக்கும். உதவி வழங்கி வருகின்றது.

அது எவ்வாறெனில், புதியவர்களுக்கு அத்தொழிலை ஆரம்பிக்கவும், ஏற்கனவே அத்தொழிலை ஸ்தாபித்திருப்பவர்களுக்கு அதே தொழிலை மேலும் விரிவு படுத்தவும் நிதியுதவி வழங்கி வருகின்றது.

இது ஒரு வரவேற்கத் தக்க செயற்பாடு, பிரயோசனம் நிறைந்தது. ஒருவர் சுய சம்பாத்தியத்தை தேடிக் கொண்டால் இன்னருவரில் தங்கியிருக்கவோ, தயவை நாடவோ தேவையில்லை. இதனையே, அறிஞர் "ஸ்ரோப்" (Stroup) சமூகப்பணி "மக்கள்தங்கள்தேவைகளைத்தாங்களேநிறைவுசெய்துகொள்வதுஅல்லதுசிக்கல்களைத்தாங்களேஎவ்வாறுவென்று முன்னேறுவதுஎன்பதற்குவழிகாட்டுவது" என்று கூறுகிறார். இதனை கவனத்தில் எடுத்து எமது மாகாண சபை செயற்படுவதாக எண்ணத் தோன்றுகிறது. இதனடிப்படையில் 347 பேர் இவ் உதவு தொகையைப் பெற்றுள்ளனர். இத் தொகை 30 ஆயிரம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இதனை பகுதிபகுதியாகவோ அல்லது முழுமையாகவே நன்மை பெறுநர் பெற்றுக்கொள்ள முடியும்

இப்போதைய பொருட்களின் விலையை கருத்திற் கொண்டால் இத்தொகை போதுமானதாயிருக்கப்போவதில்லை. இத்தொகையை உயர்த்த சமூகசேவைத் திணைக்களத்தின் பணிப்பாளரும், செயலாளரும் நடவடிக்கையெடுக்க வேண்டும் . அல்லது பொருத்தமான முயற்சியாளர்கள் வங்கிகளிலிருந்து கடனைப் பெறுவதற்கு வழிவகைகளை செய்ய வேண்டும்

அடுத்ததாக தற்செயலாக ஏற்படும் அனர்த்தங்களுக்கு கிழக்கு மாகாண சபை நிவாரணம் வழங்குவதை வழக்கமாக கொண்டிருக்கிறது. இயற்கை சில வேளைகளில் சீற்றம் கொண்டு விடலாம் அது பலமான பாதிப்பை ஏற்படுத்திவிடும். மக்களின் நலனே மகத்தானது என அரச அமைப்புக்கள் செயற்படும்போது இவ்வாறான விடயங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்தியே ஆகவேண்டும்

இவ்வாறான அனர்த்தங்களை பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இயற்கையாலும், காட்டு யானைகள் ஏனைய விலங்குகளாலும் ஏற்படும் பயிர்ச் சேதம், திடீரென ஏற்படும் தீ விபத்தினால் வீட்டுக்கு ஏற்படும் சேதம், இதைத்தவிர சூறாவளியால் வீட்டுக்கு, அல்லது குடிமனைக்கு ஏற்படும் சேதம், அதே மாதிரியாக தொடர் மழையால் அல்லது வெள்ளத்தினால் குடிமனைக்கு அல்லது வீட்டுக்கு ஏற்படும் சேதம், இடி மற்றும் மின்னலினால் வீட்டுக்கு ஏற்படும் சேதம், இயற்கை அனர்த்தத்தினால் ஏற்படும் சேதம், மரணச் சடங்கிற்கான செலவு, சில சந்தர்ப்பங்களில், பெற்றோர்களுக்கோ அல்லது பாதுகாவலர்களுக்கோ போதிய வருமாமின்மை ஏற்பட்டால் அவர்கள் தங்களது பிள்ளைகளை சிறுவர் இல்லத்தில் சேர்க்க முற்படுவர் ஏலவே கூறப்பட்ட சேதங்கள் ஏற்படும்போது அதற்கு உடனடி நிவாரணம் தேவைப்படுகிறது. அதனை கருத்தில் எடுத்து இதற்கான நிவாரணத் தொகையை கிழக்கு மாகாண சபையின் சமூக சேவைத் திணைக்களம் வழங்கி வருகிறது. அதில் பயிர் அழிவுக்கு ரூபா 10,000மும் மரணச்சடங்கிற்காக ரூபா15,000மும், வீட்டுச் சேதத்திற்காக ரூபா 20,000மும் வழங்கப்படுகிறது. அனேக சந்தர்ப்பங்களில் இத்தொகை போதாமல் இருக்கலாம். அத்தொகை கூட்டப்பட வேண்டும் என்ற எண்ணம் திணைக்களத்திற்கு இருப்பதாகவும், அதனை நிவர்த்தி செய்ய போதிய நிதி ஒதக்கீடு இல்லாதிருப்பதாகவும் அறிய முடிகிறது. காலப் போக்கில் இது சாத்தியமாகலாம். இந்த 2022ம் ஆண்டில் மாத்திரம் இவ்வாறான கொடுப்பனவுகள் 35 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. இந் நிதியுதவியினால் அவர்கள் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டிருக்கிறார்கள்

நிரந்தர அல்லது பாரிய நோயினால் பாதிப்புக்குள்ளாகியிருப்பவர்கள் பொருத்தமான வைத்திய சேவையைப் பெறுவதற்காக தங்கள் இருப்பிடங்களை கடந்து பல மைல்தூரத்திற்கு செல்ல வேண்டியிருக்கிறது அவ்வகையான நோய்களையும் அதற்கான வைத்திய வசதிகளையும்பெற தூர இடங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதையும் இங்கு உதாரணத்திற்கு எடுப்பது பொருத்தமானதாக இருக்கும். நீரிழிவு காரணமாக அவயவங்களை இழந்தோர். மூளை முடக்குவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்கள். தங்களது நோய்க்கான வைத்திய சேவையைப் பெறுவதற்கு அல்லது வைத்திய சேவையைப் பெற்று குணமடைந்த பின்னர் மாதாமாதம் கிளினிக்குக்கு சமூகம் கொடுப்பதற்கு போக்குவரத்துச் செலவு தேவையாக இருக்கிறது. கிளினிக்குக்கு போகாவிட்டால் உரிய வைத்தியவசதியை பெறமுடியாது. அதனால், அவர்களது நோயின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு இருக்கும், சில வேளைகளில் அது மரணத்தைக்கூட தந்து விடலாம். இவைகளை தவிர்ப்பதற்காகவே. இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மாதாமாதம் வழங்கப்படும் இத்தொகையின் உச்ச எல்லை ரூபா 1500ஆகும். இவ்வாறு கொடுப்பனவை பெறுவோர்களின் எண்ணிக்கை 3145 ஆக இருக்கிறது. இவ்வாறு கிழக்கின் சமூக சேவைத் திணைக்களம் வழங்குவதால் அனேக உயிர்கள் காவு கொள்ளப்படுவது தவிர்க்கப்படுகிறது.



மேலே கூறப்பட்ட பாதிப்புகளைவிட, மூளைவளர்ச்சியற்ற, கடுமையான நிரந்தர நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு இரண்டுவகையில் உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. வைத்திய வசதிக்கு மாதாமாதம் ரூபா 1000மும், போசாக்கான உணவைப் பெறுவதற்கு ரூபா 3000மும் வழங்கப்படுகிறது. இவ்வாறான கொடுப்பனவுகள் 720 பேருக்கு வழங்கப்படுவதாக திணைக்களத்தின் அறிக்கைகள் காட்டுகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களை கிழக்கு சமூக சேவைத் திணைக்களம் வழங்கிருகிறது. மாற்றுத்திறனாளிகள் தங்களது நாளாந்த வாழ்க்கையை துன்பங்களை சுமந்து கொண்டே வாழ்ந்து வருகிறார்கள். அவர்ளுக்கு வழங்கப்படும் உபகரணங்களால் அவர்களது நாளாந்த துன்பங்கள் குறைத்து வருகிறன. இது மூக்குக் கண்ணாடி, சக்கர நாற்காலி, கொமட் என 12 வகைகளை உள்ளடக்கியிருக்கின்றன. 209 பேருக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் இருக்கும் வீட்டில் அணுகும் வசதியை அமைத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. இது மாற்றுத் திறனாளியின் சொந்த வீடாகவோ அல்லது பெற்றோரின் வீடாகவோ இருக்க வேண்டும். வாடகை வீடாயின் 5 வருடங்களக்கு அந்த வீட்டில் குடியிருப்பதற்குரிய ஒப்பந்தத்தை மாற்றுத்திறனாளி செய்திருப்பது அவசியம். வென்னைப்பிரம்பு. சக்கர நாற்காலி, முச்சக்கர வண்டி பயன்படுத்துவோர் இவ்வசதிகளைப் பெறுவர். இதற்கான கொடுப்பனவாக ரூபா 15000 வழங்கப்படும். இதனை இரண்டு கட்டங்களாக பெறலாம். இவ்வாறான வசதிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை 45 ஆகும்

தனி நபர்களினாலும். தன்னார்வ தொண்டு நிறுவனங்களினாலும் நடாத்தப்படும் முதியோர் இல்லங்கள், அங்கு தங்கியிருக்கும் முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் தங்கியிருக்கும் இல்லங்கள், மாற்றுத்திறனாளிகளுடைய குழந்தைகள், பகல் பாடசாலைகளுக்கு வரும் மாற்றுத் திறனாளிகளின் குழந்தைகள் என்போரை பராமரிப்பதற்கான கொடுப்பனவு, வழங்கப்படுகிறது. இதில் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு ரூபா 50ம் மாற்றத்திறனாளிகளுக்கு ரூபா 100ம், முதியோர் இல்லங்களில் தங்கியிருக்கும் முதியோருக்கு மாதமொன்றுக்கு 500ம் உணவுக்காக வழங்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக இவ்வாறானவர்களின் எண்ணிக்கை 476 ஆகும். இவர்களுக்கு இவ்வாறு உதவிகள் வழங்கப்படும்போது அவை முழுமையான, செறிவான உதவியாக இல்லாவிட்டாலும் ஒரு ஆதரவாகவேனும் இருக்கிறதே என எண்ணத் தோன்றுகிறது

இவ்வாறு பராமரிக்கப்படும் இல்லங்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் 5 இருக்கிறது. இற்றைவரை இதுபோன்ற இல்லங்கள் அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. அனால், அங்கு இவ்வாறான இல்லங்களுக்கு தேவைகள் இருப்பதாக தெரிகிறது.

சமூக சேவைத்திணைக்களம் சுகாதா அமைசின் ஒரு அங்கம் அதன் பணிப்பாளர் திருமதி முரளீதரன் சமூக சேவையில் ஆர்வம் நிறைந்தவர். இதனை அனேகர் அறிந்துள்ளனர். அதேபோன்று பணிப்பாளருக்கும் இத் தன்மைகள் பொருந்தும். இதைவிட எமது ஆளுநர் நலிவுற்ற, இயலாமைகொண்ட மகளின்மேல் இரக்கம் உடையவர். ஆகையால் இவர்கள் கொடுப்பனவுத் தொகைகளை உயர்த்த அக்கறை காட்ட வேண்டும் என்ற கோரிக்கை மக்களால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

எஸ்.எஸ்.தவபாலன் ...
புளியந்தீவு குறூப் நிருபர்

## தமிழ் இலக்கிய உலகில் மாத்தளையின்... (13ஆம் பக்கத் தொடர்)

மலையக மக்களின் அரசியல், தொழிற்சங்க, சமூக, பொருளாதார வரலாறு பற்றிய நூல்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. ஆயினும், அந்த மக்களின் நாட்டாரியல் பண்பாடு, அதன் தனித்துவம் பற்றிய நூல்கள் குறைவாகவே வெளிவந்திருக்கின்றன. வடிவேலன் மலையக நாட்டார் வழக்கியல் பற்றிய தேடலை முன்னெடுத்து அந்த மக்களின் பாரம்பரிய கலைச்செல்வங்களான கூத்துக்கள், இலக்கியங்கள், பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய முதலாவது நூலை வெளியிட்டு பெருமை சேர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மாத்தளையின் ஜீவநதியான கார்த்திகேசு தனது குறிஞ்சி பதிப்பகம் ஊடாக வெளியிட்ட அவருடைய அந்து நூலே 'மலையக பாரம்பரிய கலைகள்" என்பதாகும்.

"இரு நூறு ஆண்டு கால சமூக வாழ்க்கையில் விடாமுயற்சியுடன் எதிர்நீச்சல் போட்டு தனிமனிதன் அடைந்த கல்வி முன்னேற்றம், சமூகத்தில் சில பிரிவினர் பெற்ற பொருளாதார உயர்ச்சியும் மலையகத்தில் உண்டென்பது உண்மையெனினும், முழு சமூகத்தினதும் ஒட்டு மொத்த வாழ்வை நோக்குமிடத்து மனசாட்சியுடைய எவராலும் மனநிறைவு கொள்ளமுடியாது. இலங்கையில் மாதச்சம்பளம் இன்றி ஆகக்குறைந்த தினக்கூலியைப் பெறுபவர்கள் மலையக தோட்டத் தொழிலாளர்கள் ஆகும்.

மலையக சமூகத்தில் முடிவின்றி தொடரும் அவலங்களையே எனது படைப்புக்கள் பிரதிபலிக்கின்றன.

இவற்றில் இருந்து ஒதுங்கி இலக்கியம் படைக்கமுடியாது" என்று அட்சய வடம் என்ற தனது சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு எழுதிய என்னுரையில் மாத்தளை வடிவேலன் குறிப்பிட்டிருக்கிறார். இது அவர் தனது சமூகத்தின் நல்வாழ்வில் கொண்டிருக்கும் பற்றையும், அவர்களின் விமோசனத்துக்காக உழைக்க வேண்டும் என்ற அவரின் இலட்சியத்தையும் பறைசாற்றி நிற்கிறது. தெளிவத்தை ஜோசப் தனது அறுபது ஆண்டு காலத்திற்கும் அதிகமான கால இலக்கியப் பணியின் மூலமாக பதுளை தெளிவத்தை தோட்டத்தை இலக்கிய உலகில் எவ்வாறு அழுத்தமாக பதியவைத்தாரோ அதேபோன்று மாத்தளையின் பெயரை கடந்த ஐம்பது ஆண்டு காலத்திற்கும் மேலாக பதியவைத்து பெருமை சேர்த்திருப்பவர் மாத்தளை வடிவேலன். அவருடைய சமூக பிரக்ஞையுடனான இலக்கியப் பணி தொடரவும் மாத்தளை அன்னை முத்துமாரி அம்பிகையின் அருட்கடாட்சத்தோடு அன்னையின் திருவருளால் பூரண சுகத்தோடு நீடுழி வாழவும் எமது வாழ்த்துக்கள்.

# இலங்கையில் Walton வர்த்தகநாமத்தை அறிமுகப்படுத்தியுள்ள Softlogic

Softlogic Holdings PLCயின் முழுமையான உரிமையாண்மையின் கீழான ஒரு துணை நிறுவனமான Softlogic Retail Pvt Ltd நிறுவனமானது இலங்கையின் முன்னணி நுகர்வோர் இலத்திரனியல் மற்றும் தளபாட சில்லறை வலையமைப்புக்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருவதுடன், அண்மையில் உலகப் புகழ்பெற்ற பல்தேசிய நுகர்வோர் இலத்திரனியல் வர்த்தகநாமமான Walton உடன் இணைந்து Walton வர்த்தகநாம தொலைக்காட்சி சாதனங்களை இலங்கைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

Walton என்பது ஒரு முன்னணி இலத்திரனியல் சாதனங்கள் வர்த்தகநாமமாகும். இது ஐரோப்பா, ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவை உள்ளடக்கிய 40க்கும் மேற்பட்ட சர்வதேச சந்தைகளில் கிடைக்கிறது.

இலங்கையில் வர்த்தகநாமத்தை அறிமுகப்படுத்துவது Walton இன் சாதனை இலக்குகளில் ஒன்றாக உள்ள "Go Global 2030" என்ற இலக்கை அடைவதற்கும் 2030 ஆம் ஆண்டளவில் சிறந்த இலத்திரனியல் வர்த்தகநாமங்களில் ஒன்றாக மாறுவதற்கும் வழிவகுக்கும். ஆரம்ப கட்டத்தில் Softlogic நிறுவனம் Walton 32 அங்குல



LED தொலைக்காட்சியை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

ஒரு வலுவான தேவை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் வெகுஜன சந்தைப் பிரிவை இலக்காகக் கொண்டு இது அறிமுகப்படுத்தப்படுகிறது. இது விரைவில் பெரிய திரை LED தொலைகாட்சிகளுக்கும் நீட்டிக்கப்படும். Walton 32அங்குல LED தொலைகாட்சி உயர் பிரிதிறன் (High Definition HD) தொழில்நுட்பத்துடன் வெளிவருகிறது. இது புதிய பாணியிலான ஒடுக்கமான சாய்வு வடிவமைப்புடன் பார்வையாளர்களுக்கு உயர் தரமான பட அனுபவத்தை வழங்குகிறது. இது தயாரிப்புக்கு ஒரு ஒப்பனை அழகியல் தோற்றத்தை சேர்ப்பிக்கிறது.

நாடு முழுவதும் அமைந்துள்ள 200 க்கும் மேற்பட்ட Softlogic மற்றும் Softlogic MAX காட்சியறைகளிலும், Softlogicஇன் மின்வர்த்தக தளமான www.mysoftlogic.lk இலும் தயாரிப்பு கிடைக்கும்.

# செலான் கடனட்டைகளுடன் சௌகரியமான முறையில் ஆசிரி வைத்தியசாலை கட்டணங்கள் செலுத்தும் வசதி




விசேட இலகு தவணை கொடுப்பனவு (EPP) திட்டத்தினூடாக ஆசிரி வைத்தியசாலை குழுமத்தின் வைத்தியசாலைக் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இலகுவாக்கும் வகையில் ஆசிரி வைத்தியசாலை குழுமத்துடன் செலான் வங்கி கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது. அன்புக்குரியவர் சுகயீனமடைவதால் ஏற்படும் அழுத்தத்தை புரிந்து கொண்ட அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, வாடிக்கையாளர்களுக்கு வைத்தியசாலை கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிவாரணத்தை வழங்குவதற்காக முன்வந்துள்ளது. இதனூடாக அவர்களுக்கு இந்த நெருக்கடியான காலப்பகுதியில் அத்தியாவசிய தேவைகளுக்காக அத்தியாவசிய அட்டையினூடாக மனநிம்மதியை பெற்றுக் கொள்ள முடியும்.

எந்தவொரு ஆசிரி வைத்தியசாலையிலும் செலான் கடனட்டையை பயன்படுத்தி கொடுப்பனவை மேற்கொள்ளும் செலான் கடனட்டை வாடிக்கையாளர்களுக்கு விசேட இலகு தவணை கொடுப்பனவு (EPP) திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். 6 மாத காலப்பகுதிக்கு 0% வட்டியில்லாத முறையில் மீளச் செலுத்தும் வசதி வழங்கப்படும். ஆகக்குறைந்தது ரூ.50,000 முதல் ஆகக்கூடியது ரூ. 1 மில்லியன் வரை பெறுமதியான கட்டணப் பட்டியல் பெறுமதியைக் கொண்ட வாடிக்கையாளர்கள், கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டு ஏழு வேலைநாட்களுக்குள் 0112008888 எனும் ஹொட்லைன் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விசேட இலகு தவணை கொடுப்பனவு திட்டத்துக்கு மாற்றிக் கொள்ள முடியும். வட்டியில்லாத இந்த இலகுமுறை மீளச் செலுத்தல் வசதியினூடாக, வாடிக்கையாளர்களுக்கு தமது செலவை படிப்படியாக செலுத்தக்கூடியதாக இருக்கும். இந்த வசதி 2022 டிசம்பர் 31ஆம் திகதி வழங்கப்படும். இந்த வசதியினூடாக, செலான் வங்கியினால் அட்டைதாரர்களுக்கு தமது அன்புக்குரியவர்களின் நெருக்கடியான காலப்பகுதியில் மேற்கொள்ளும் மொத்தக் கொடுப்பனவுகளின் போது தொடர்ச்சியான நிவாரணம் வழங்கப்படும்.

# வாழ்க்கையை ஸ்மார்டாகக் கையாள தீர்வு தரும் Phoenix



பல்வேறுபட்ட சந்தை பிரிவுகளுக்கு ஏற்ற பொருட்களை வழங்கிடும் Phoenix, அதன் தொழிற்துறை அளவிலான Crates மற்றும் Palletகளை அறிமுகப்படுத்தியது. இது குறிப்பாக பரந்தளவிலான பொருட்களை வசதியாகவும் பாதுகாப்பாகவும் கையாளும் நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டு தயாரிப்பு செய்யப்படுகிறது. Phoenix Crates மற்றும் Pallets வாழ்வினை ஸ்மார்ட் ஆகவும் தடையற்ற ரீதியில் இலகுவாக கையாளுவதற்கு தீர்வாகவும் அமையும்.

நிறுவனமானது 2022ஆம் ஆண்டுக்கான Crates மற்றும் Palletகளின் பட்டியலை வெளியிட்டது. இது கிடைக்கக்கூடிய தயாரிப்பு தெரிவுகளை முழுமையாகக் கொண்டுள்ளது. விவசாயம் மற்றும் கால்நடைகள், உணவு மற்றும் குடிபான வகைகள், கடல்சார் தொழில் போன்ற பல்வேறு தொழிற்துறைகளின் கிடங்கு (Warehouse) மற்றும் போக்குவரத்து செயற்பாடுகளை மேம்படுத்த இந்த பாரிய உற்பத்தித் தெரிவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

தமது வாடிக்கையாளர்களுடன் இணைந்து அவர்களுக்காக தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட நிலையான மற்றும் வட்டச்சுழற்சி தீர்வுகளையும் உருவாக்குகிறது. வட்டச்சுழற்சி பொருளாதாரத்தில் 12 வருடகால அனுபவத்துடன் விளங்கும் Phoenix, வாடிக்கையாளர்கள் பாவித்த மற்றும் சேதமடைந்த crateகளை அதன் பாவனை கா லம் முடிந்த பின்னர் சேகரிக்கின்றனர். பின்னர் புதியவற்றை தயாரிக்க, பழைய crateகளை நொறுக்கி, கிருமிநீக்கம் செய்யப்பட்டு பிளாஸ்டிக் கழிவினை பூஜ்ஜியமாக்கி அல்லது சுற்றுச் சூழலுக்கு வெளியிடாமல் முற்றிலும் மூடிய வளையத்தை உருவாக்குகிறது.

இலங்கையில் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு வர்த்தக நாமங்களில் ஒன்றான Phoenix, 43 வருடங்களுக்கும் மேலான பாரம்பரியத்தை அனுபவித்து வருவதுடன், வாழ்க்கைக்காக வடிவமைக்கப்பட்டுள்ளவை என்பதுடன் அன்றாட வாழ்வில் சிறந்த பங்காளியாகவும் விளங்குகின்றது.

# தக்சிலா கல்லூரி மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் றைனோ



கம்பஹா மாவட்டத்தில் காணப்படும் பழமையான பாடசாலைகளில் ஒன்றான தக்சிலா கல்லூரி 2021 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் போது பரவலாக பேசப்பட்டிருந்தது. பரீட்சை இடம்பெற்ற காலப்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக, சேதமடைந்த கட்டடத்தில் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

பொது மக்கள் மற்றும் ஊடகங்கள் இணைந்து இந்தப் பாடசாலையின் நிலையை வெளி உலகுக்கு கொண்டு வந்திருந்தனர். இதனை கவனத்தில் கொண்ட றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட், பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களின் தேவையைக் கவனத்தில் கொண்டு, நாட்டின் நெருக்கடியான சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல், தம்மாலான பங்களிப்பை வழங்க முன்வந்திருந்தது.

அறுபது மாணவர்களுடன், 1992 ஆம் ஆண்டு ஜுன் 12 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் தற்போது 2250 மாணவர்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பயில்கின்றனர். எவ்வாறாயினும், அப்பாடசாலை அண்மையில் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்ததுடன், தமது வாழ்க்கையின் முக்கியமான திருப்புமுனையான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு முகங்கொடுத்திருந்த மாணவர்களையும் பாதிப்பதாக அமைந்திருந்தது. றைனோ நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரின் தலைமைத்துவத்தின் கீழ், பாடசாலையின் பாதிப்படைந்த கட்டடத்தை புனருத்தாரணம் செய்து, மாணவர்களுக்கு பாதுகாப்பான பயிலும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஹைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லமிடெட் முகாமைத்துவ பணிப்பாளரான ஈ.ஜே. ஞானம் கருத்துத் தெரிவிக்கையில், "நாட்டின் சிறுவர்களும் இளைஞர்களும் மாற்றத்தின் முன்னோடிகளாக திகழ்கின்றனர் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்." என்றார்.

# சர்வோதய டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் பிஎல்சி முதல் காலாண்டில் போற்றத்தக்க சாதனை



சர்வோதய டெவலப்மென்ட் ஃபைனான்ஸின் வைப்புத்தளம் 2022 மார்ச் தொடக்கம் 2022 ஜூன் வரை 10.1% ஆல் அதிகரித்துள்ளது.

சமீபத்தில் நாட்டில் ஏற்பட்ட அனைத்து சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் நிறுவனத்தின் மொத்த சொத்துக்கள் ஓரளவு வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. 2022 ஜூன் 30 இல் முடிவடைந்த காலாண்டில் சர்வோதய டெவலப்மென்ட் ஃபைனான்ஸின் மொத்த வருமானம் ரூபா 559.84 மில்லியனாக காணப்பட்டது.

இது 202122 நிதியாண்டின் தொடர்புடைய காலத்தில் காணப்பட்ட ரூபா 397.34 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 40.9% வளர்ச்சியாகும். காலாண்டிற்கான தேறிய செயற்பாட்டு வருமானம், முன்னைய காலாண்டில் காணப்பட்ட ரூபா 235.65 மில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 288.82 மில்லியனாக, அதாவது 22.6% ஆல் அதிகரித்துள்ளது. நிதிச்சேவைகள் மீதான வரிக்கு முன்னைய செயற்பாட்டு இலாபமானது ஒரு வருடத்திற்கு முன்பு ரூபா 47.90 மில்லியனாக இருந்த நிலையில், தற்போது 55.8% ஆல் அதிகரித்து ரூபா 74.62 மில்லியனாக காணப்பட்டது.

வரிக்கு முன்னைய இலாபம், முந்தைய ஆண்டின் முதல் காலாண்டில் காணப்பட்ட ரூபா 28.36 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 59.8% ஆல் அதிகரித்து ரூபா 45.30 மில்லியனாக இருந்தது.

202122 நிதியாண்டின் 1 ஆவது காலாண்டில் பெறப்பட்ட ரூபா 15.73 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 202223 நிதியாண்டின் முதல் காலாண்டில் 115.0% வரிக்குப் பின்னைய இலாப வளர்ச்சியுடன் ரூபா 33.83 மில்லியனை சர்வோதய டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் எட்டியுள்ளது.

# வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 1.5 பில். பதிவு செய்துள்ள செலான்

செலான் வங்கி 2022 ஜூன் 30 திகதியுடன் முடிவடைந்த ஆறு மாத காலத்திற்கான வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 1,504 மில்லியனை பதிவு செய்துள்ளது. 2021ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2,105 மில்லியன் வரிக்குப் பின்னரான இலாபத்தை வங்கி பெற்றிருந்தது. இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து இதுவரை அனுபவித்திராத மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள இக் காலப்பகுதியில் அதிலும் குறிப்பாக இரண்டாம் காலாண்டில், மிகவும் சவால்மிக்கதும் பாதகமானதுமான களநிலைமைகளுக்கு மத்தியிலும் கூட செலான் வங்கி இவ்வாறானதொரு நிதிப் பெறுபேற்றை பதிவு செய்துள்ளமை பாராட்டத்தக்க அடைவாக நிதிசார் ஆய்வாளர்களால் நோக்கப்படுகின்றது.





2022 ஜூன் 30ஆம் திகதியுடன் முடிவடைந்த 6 மாதங்களில், வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 10,971 மில்லியனில் இருந்து ரூபா 16,851 மில்லியனாக அதிகரித்தது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது இது 53.60மூ வளர்ச்சியாகும்.

முதலாம் அரையாண்டு காலப்பகுதியில் வங்கியின் தேறிய கட்டண அடிப்படையிலான வருமானமானது ரூபா 2,180 மில்லியனில் இருந்து ரூபா 2,776 மில்லியனாக 27.36?% அதிகரித்தது. வரவு அட்டை மற்றும் கடனட்டையுடன் தொடர்புபட்ட வருமானம், இலத்திரனியல் வங்கிச் சேவை மூலமான தரகு வருமானம், வைப்புக்கள் மீதான சேவைக் கட்டணங்கள், வெளிநாட்டு பணவனுப்பல்கள் மீதான தரகு வருமானம் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு வங்கியின் தேறிய வட்டி வருமானம் அதிகரிக்க பிரதான காரணியாக அமைந்த அதேநேரத்தில், மேற்குறிப்பிட்ட வருமானங்கள் பிணையங்களுடன் தொடர்புபட்ட வருமானம், கடன்கள் மற்றும் முற்பணங்களுடன் தொடர்புடைய வருமானம் ஆகியவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் எதிரீடு செய்யப்பட்டன.

# அலியான்ஸ் வருடாந்த விருது விழாவில் விற்பனையாளர்களுக்கு பாராட்டு




அலியான்ஸ் லங்கா, 2022 ஆகஸ்ட் 16 ஆம் திகதியன்று மொனார்க் இம்பீரியலில் நடைபெற்ற அலியான்ஸ் வருடாந்த விருது வழங்கும் விழாவில் 2021 ஆம் ஆண்டின் சிறந்த விற்பனைப் பணியாளர்களைப் போற்றிப் பாராட்டியுள்ளது.

இந்த ஆண்டு, "வளர்ச்சியின் சிறகுகள்" என்ற தொனிப்பொருளின் கீழ் விருதுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

நிறுவனத்தின் தலைமைத்துவ அதிகாரிகளின் பங்கேற்புடன் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் இந்நிகழ்வில் அலியான்ஸ் ஆசிய பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த வெளிநாட்டு பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

157 விற்பனையாளர்கள் தங்கள் முயற்சிகளுக்காக விருதுகளைப் பெற்றனர். வெற்றிக் கிண்ணங்கள், சான்றிதழ்கள் மற்றும் பணப் பரிசுகள் உள்ளிட்ட பரிசுகளுடன். இரண்டு சம்பியன்ஷிப் பட்டங்கள் முறையே ஆயுள் காப்புறுதிப் பிரிவில் நிஹால் ஷெரிடன் பெர்னாண்டோ, பொதுக் காப்புறுதிப் பிரிவில் வினோக கேஷவ சபாநாயக்க ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைவர் அலன் ஸ்மீ கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிட்டெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி கானி சுப்ரமணியம் "இன்று, எமது விற்பனை அணிகளில் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட உறுப்பினர்களின் சிறந்த பங்களிப்பை நாம் கௌரவிக்கிறோம்.

உலகளாவிய தொற்றுநோய் காரணமாக மிகவும் சவாலான ஆண்டாக அமைந்த 2021 ஆம் ஆண்டில் அவர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை இந்நிகழ்வு போற்றிப் பாராட்டுகிறது என்று குறிப்பிட்டார்.




என். சரவணன்


# கொழும்பு வணிக மையமான வரலாறு – II

1890ஆம் ஆண்டு ஏ.டபிள்யு பிளேட் (A. W. A. Plate) புகைப்படக் கலைத்துறை (Plate & Co) என்கிற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

அதுபோல பெர்சி போயிஸ் (Percy Bois) என்பவரால் 1891ஆம் ஆண்டு கொழும்பில் Bois Bros. & Co என்கிற பொது வர்த்தகர்கள் மற்றும் தரகு முகவர் நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது.

கிளாஸ்கோவை தலைமையகமாகக் கொண்ட பின்லே நிறுவனம் ( Finlay Muir & Co) இராணி வீதியில் 10 இலக்கத்தில் கிளையொன்றை 1893 ஆண்டில் அமைத்துக் கொண்டது. தோட்டத்துறையில் இறங்கிய அந்த நிறுவனம் அத்தோடு தொடர்புடைய ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலும் ஈடுபட்டது. மிகப் பெரிய நிறுவனமாக வளர்ந்திருந்த இந்த நிறுவனம் இந்தியாவில் கல்கத்தா, பம்பாய், கராச்சி போன்ற இடங்களில் எல்லாம் கிளைகளைக் கொண்டிருந்தது.

ஸ்மித், ஃபின்லே (W. M. Smith, James Smith Finlay) ஆகியோரால் 1883 ஆண்டு கொம்பனி வீதியில் ஆரம்பிக்கப்பட்ட மருந்துகள், ஔடத சேமிப்புக் கிடங்கு கொழும்பில் (இலங்கையில் என்றே சொல்ல முடியும்) ஔடத நிறுவனத்தின் தோற்றமாகக் (Colombo Apothecaries' Co Ltd) கொள்ள முடியும். இலங்கைக்கு புகைப்படகாலையை தொழில் ரீதியாக அறிமுகப்படுத்த்தியதாக கருதப்படுகின்ற பார்டின் (Partin) என்பவரால் 1860களில் ஆரம்பிக்கப்பட்ட புகைப்பட நிறுவனம் பின்னர் ஸ்கீன் (Skeen) மூலம் வாங்கப்பட்டு பின்னர் அது பெரிய புகைப்பட நிறுவனமாக விரிவாக்கப்பட்டு உலகளாவிய ரீதியில் அறியப்பட்ட நிறுவனமாக எழுந்தது. இலங்கை பற்றிய பல நினைவுகளை அன்று ஸ்கீன் நிறுவனம் எடுத்த புகைப்படங்கள் தான் இன்றும் சாட்சியாக வைத்திருக்கின்றது.


புறக்கோட்டை

லிப்டன் நிறுவனமும் (Lipton & Co Ltd) இந்த நாட்டில் வணிக விவகாரங்களில் இறங்கிய மிகப்பெரிய நிறுவனம். இலங்கையின் தேயிலையை உலகெங்கிலும் கொண்டு சேர்த்த அந்த நிறுவனம் நாட்டின் பல தேயிலைத் தோட்டங்களின் உரிமையைக் கொண்டிருந்தது. பெரும் பல்தேசிய வர்த்தக வலையமைப்பைக் கொண்டிருந்த அந்த நிறுவனத்தின் தலைமையகம் பிரின்ஸ் வீதியில் இருந்தது. பிரிட்டிஷ் பிரஜையான தோமஸ் லிப்டன் (Thomas Lipton) அதன் உரிமையாளராக இருந்தார். 1905ஆம் ஆண்டிலேயே ஹப்புத்தளை மாவட்டத்தில் மட்டுமே 2101 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட தோட்டத்தைக் கொண்டிருந்த இந்த நிறுவனம் 1389 ஏக்கர் நிலத்தில் தேயிலை விளைச்சலை செய்திருந்தது. கீனபிட்டிய தோட்டத்தில் 187 ஏக்கரில் 145 ஏக்கரில் சாகுபடி செய்தது. ஓஃபீல்ட் தோட்டத்தில் அவர்கள் கொண்டிருந்த 452யக்கரில் 242 ஏக்கர் நிலத்தில் தேயிலை சாகுபடி செய்தது. 1365ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருந்த புஸ்ஸல்லாவ தோட்டத்தில் இருந்து 866 ஏக்கரில் சாகுபடி செய்தது. 1905 ஆம் ஆண்டளவில் மொரவக் கோறளையில் அவர்களுக்கு இருந்த 852 ஏக்கர் நிலத்தில் 663 ஏக்கர் தேயிலை சாகுபடி செய்தது.

கொழும்பு கோட்டை இவ்வாறு வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களின் மையமாகவும், தலைமையகமாகவும் வளரத் தொடங்கிய வேளை 1895 அளவில் புறக்கோட்டைப் பகுதி சுதேசிய வியாபார நிறுவனங்களின் மையமாக ஆகத் தொடங்கியது என கைகர் குறிப்பிடுகிறார். அங்கு இருந்த பெரும்பாலான சிறிய கடைகள் தென்னை ஓலைக் குடிசைகளாகவும், மடுவங்களாகவும் காணப்பட்டன. திறந்த வெளியில் அவர்களின் வியாபாரம் நடந்தது. எனவே இத்தகைய குடில்களைக் கொண்ட சந்தை அமைப்பு"பஜார்" (Bazar) என்று அழைக்கப்பட்டது என்கிறார் பேராசிரியர் கைகர்.

1869 ஆம் ஆண்டு தொன் கரோலிஸ் ஹேவா வித்தாரண முதலிக்குச் சொந்தமான Don Carolis & sons Co என்கிற நிறுவனம் தொடங்கப்பட்டது. புறக்கோட்டையில் மிகவும் பழமையான நிறுவனங்களில் இதுவும் ஒன்று. பிற்காலத்தில் பௌத்த மறுமலர்ச்சியின் தந்தையாக அறியப்படும் அநகாரிக்க தர்மபாலாவின் தந்தை இவர். இதே சமகாலத்தில் 1875 இல் என். எஸ்.பெர்னாண்டோ நிறுவனம் 1891 இல் ஆதர் ஜே.பெர்னாண்டோ நிறுவனம், 1879 இல் டபிள்யு டீ கரோலிஸ் நிறுவனம் மற்றும் 1856 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்த மரிக்கார் நிறுவனம் போன்றனவற்றையும் குறிப்பட வேண்டும். இந்த நிறுவனத்தின் உரிமையாளர்களாக இருந்தவர்கள் அவற்றை பெரும்பாலும் குடும்ப நிறுவனமாகவும், பிரபுத்துவ அந்தஸ்தையும், பெரிய பங்களா வீடுகளையும் கொண்ட பணக்காரர்களாகவும் கொழும்பில் அறியப்பட்டிருந்தார்கள்.

காலனித்துவ காலத்தில் உருவாகிய கொலோனியல் ஹோட்டல் (Galleface Hotel), கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டல், கல்கிசை ஹோட்டல் என்பவற்றையும் மறத்தலாகாது.

18 இன் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உருவாக்கப்பட்ட கோல்பேஸ் ஹோட்டல் 1894 இல் முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இதன் மேலாண்மை முற்றிலும் ஐரோப்பியர்களின் கைகளிலேயே இருந்தது. இலங்கையின் மறுமலர்ச்சி காலத்தில் வாஸ்து முறைப்படி இது கட்டி முடிக்கப்பட்டது. ஹோட்டலில் உணவு மண்டபமானது கடலோரத்தைப் பார்த்தபடி நீளமான வெளிவிறாந்தை அப்போது பலரைக் கவர்ந்திருந்தால் ஹோட்டல் ஆங்கிலேயர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானதாக இருந்தது. மேலும் அங்கு ஒரே நேரத்தில் 350 பேர் உணவு உண்ணக் கூடிய தாராள வசதி இருந்தது. இதைவிட 54 x 25 அடி பரப்பளவில் 17 அடி உயரமான இன்னொரு உணவு மண்டபமும் போல் ரூம் மண்டபமும் அங்கு இருந்தது. பில்லியர்ட்ஸ் விளையாட்டு மண்டபம், பெரிய பியானோவைக் கொண்ட மது அருந்தும் மண்டபமும் அங்கே இருந்தது. இலங்கையில் நீச்சல்குளத்துடன் கட்டப்பட்ட முதல் ஹோட்டலும் கூட.

ஆரம்பத்தில் இங்கே வாரத்துக்கு இரண்டு முறை குயர் இசை நிகழ்த்தப்பட்டது. இலங்கையில் அவ்வாறு தொடங்கப்பட்ட முதல் ஹோட்டல் இது. தொங்கப்பட்ட காலத்தில் இருந்தே மின்சாரம் மூலம் இயங்கும் லிஃப்ட் இங்கே இருந்ததும் பலரைக் கவர்ந்ததாக இருந்தது. அதுபோல மின் விளக்குகள் இங்கே காண முடிந்ததால் மிகவும்அதி சொகுசு ஹோட்டலாக பிரபலமடைந்திருந்தது. இந்த ஹோட்டல் அப்போதே இருநூறுக்கும் மேற்பட்ட குளியலறைகளுடன் கூடிய சொகுசு அறைகளைக் கொண்டிருந்தது. இலங்கையிலேயே மிகவும் விசாலமான பெரிய சமையலறை இந்த ஹோட்டலில் தான் இருந்தது. ஹோட்டலுக்கு வருபவர்களை பல விசேட அம்சங்களுடன் வரவேற்றார்கள். அவர்களின் வசதிக்காக குதிரை வண்டிகளும், மோட்டார் கார் வசதிகளையும் உடனடியாக செய்து கொடுக்கும் வசதியைக் கொண்டிருந்தது ஹோட்டல்.

கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டல் (Grand Oriental Hotel GOH) கொழும்பு துறைமுகத்திற்கு எதிரில் அமைந்துள்ள மிகவும் முக்கியமான ஒரு ஹோட்டல். விமானங்கள் இல்லாத அந்த காலத்தில் இந்து சமுத்திரத்தின் வாயிலாக இலங்கைத் தீவுக்கு வந்திறங்குபவர்கள் கொழும்பு துறைமுகத்தில் இறங்கியதும் எதிரில் அமைந்திருப்பது, இந்த ஹோட்டல் என்பதால் பல மேற்தட்டு வர்க்கத்தினர் நேரடியாக வந்து தங்கும் ஹோட்டலாக இது இருந்தது. அருகிலேயே கவர்னர் மாளிகையும் இருந்ததால் மிகவும் செல்வாக்கான ஹோட்டலாக பிரசித்தம் பெற்றிருந்தது. உலகப் புகழ் பெற்ற இலக்கியவாதி எண்டன் செகோவ் கூட இங்கே தங்கி சென்றிருக்கிறார். மிகவும் உயர் தரத்தில் பேணப்பட்டிருந்த இந்த ஹோட்டலில் 1895 அளவில் அதிகளவு ஜெர்மானியர்கள் தங்கியிருந்ததாக பேராசிரியர் கைகர் குறிப்பிடுகிறார்.

இந்த ஹோட்டல் 1832 இல் உருவாக்கப்பட்டிருந்தது என்பதையும் கவனிக்க வேண்டும். டன்ஸ்டால் (W. A. Tunstall) என்கிற கட்டிடக் கலைஞரால் வடிவமைக்கப்பட்ட இக்கட்டிடம் ஸ்டீவன்ஸ் கிரெக்சன் மற்றும் ரால்ப் மெக்டொனால்ட் (Stevens Gregson, Ralph Mcdonald) என்கிற நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்டது. அதாவது இலங்கையில் அரசியல் யாப்பு, பாராளுமன்ற முறை போன்றன எல்லாம் அறிமுகமாவதற்கு முன்னர் கட்டப்பட்டது. அதாவது 180 வருடங்கள் கடந்துவிட்டன. பிற்காலத்தில் இந்த ஹோட்டலின் வழியாக எழுந்த கட்டிடங்களும், பாதையும் அதன் இருப்பிடத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டது. மேலும் பல போட்டி ஹோட்டல்கள் கொழும்பில் உருவாகத் தொடங்கிவிட்டன. இறுதியில் 1960 களில் இந்த ஹோட்டலில் பெயர் தி தப்ரோபேன் (Thaprobane) என்று பெயர் மாற்றம் கண்டது.

இந்த ஹோட்டலும் மின் விளக்குகள் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பகால ஹோட்டல் என்று கூற முடியும். குறிப்பாக ஆடம்பர விருந்து நிகழ்வுகளில் மின் விளக்குகள் ஒளிர விடப்பட்டன. 154 அறைகளைக் கொண்ட ஐந்த ஹோட்டலில் 300 பேர் ஒரே நேரத்தில் உணவு உண்ணும் மண்டபம் இருந்தது.


கிராண்ட் ஓரியண்ட் ஹோட்டல்



கல்கிசை ஹோட்டலின் உருவாக்கத்துக்குப் பின்னாலும் சுவாரசியமான கதை உண்டு. கொழும்புக்கு வெளியில் மக்கள் செறிவற்ற அழகான அமைவிடத்தைக் கொண்ட கிராமியப் பகுதி அது. “மவுன்ட் லெவினியா” என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பட்ட இந்த பகுதி பிரித்தானியர் இலங்கைக்கு வந்த ஆரம்ப காலப்பகுதியில் பாறை மேடுகளால் ஆன கரையோரப் பிரதேசமாக இருந்தது. ஆரம்பத்தில் இங்கே ஒரு சொகுசான ஆஸ்பத்திரி ஒன்று கட்டப்பட்டது. ஆனால் 1805 அளவில் அது இடித்து அகற்றப்பட்டது. பின்னர் காலனித்துவ செயலாளரின் பணிப்பின் பேரில் அங்கே ஒரு பெரிய பங்களா கட்டப்பட்டது. டச்சு கட்டிடக்கலை அம்சத்துடன் அந்த கட்டிடம் எழுப்பப்பட்டது. அப்போதைய ஆளுநர் தோமஸ் மெயிற்லன்ட் இந்த பங்களாவுக்கு “கிராமிய இல்லம்” என்று பெயர் வைத்தார். அது 1813 ஆம் ஆண்டு 30,000 பவுண்கள் செலவழிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது.

இதைவிட இன்னோர் கதையுமுண்டு சிங்கள சமூகத்தில் ஒடுக்கப்பட்ட சாதியாகவும் விளிம்புநிலை சாதியாகவும் கருதப்படுகிற ரொடி சமூகத்தைச் சேர்ந்த லோவினியா என்கிற ஆடலழகியை காதலித்த ஆளுநர் அப்பெண்ணின் நினைவாக வைத்த பெயர் “மவுன்ட் லெவினியா” என்று கொள்ளப்படுகிறது. அவருக்குப் பின்னர் 1841 இல் ஆளுநருக்கான கொழும்பு மாளிகையில் ஆளுநர் வசிக்கத் தொடங்கியதும் இந்த பங்களா ஏலத்துக்கு விடப்பட்டது. 1862 இல் இது மீண்டும் ஏலத்துக்கு விடப்பட்ட போது ஹோட்டல் நிறுவனமொன்று அதைக் கொள்வனவு செய்து ஹோட்டலாக இயங்கத் தொடங்கியது. இரண்டாம் உலக யுத்த காலப்பகுதியில் இந்த ஹோட்டல் காயமடைந்த படையினரை பராமரிப்பதற்காகவும், போர்த் திட்டங்களை வகுப்பதற்கான கூட்டங்களை நடத்தும் இடமாகவும் இயங்கியது.

இவ்வாறு கொழும்பு தலை நகரம் ஒரு வாணிப நகராக உருப்பெற்று வந்த அதே வேளை அந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கான உறுதியான வங்கிக் கட்டமைப்பும் வலுப்பெறத் தொடங்கியது. வங்கிக் கட்டமைப்பு முதற்தடவையாக இலங்கையில் உருவான காலம் 1828 எனலாம். முதலாவதாக கொழும்பில் வங்கி தொடங்கப்படவில்லை. கண்டியில் Bank of Kandy என்கிற பெயரில் தனியார் வங்கியொன்றை ஜெரோனிஸ், லூயிஸ் பீரிஸ் என்கிற இருவரால் தான் தொடங்கப்பட்டது. அப்போது கோப்பி பயிர்ச்செய்கை வளர்ச்சியுற்று இலங்கையின் பிரதான வருவாய்க்கான இடத்தை எட்டிக்கொண்டிருந்தது. கோப்பித் தோட்ட முதலாளிகள் தமது வர்த்தக நடவடிக்கைகளை கையாள்வதற்காக பலமான வங்கிக் கட்டமைப்பின் தேவையை உணர்ந்தார்கள். ஆனால் இந்த வங்கி இரு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கவில்லை.

அதனால் இலங்கையின் ஆரம்பகால வர்த்தக வங்கியாக நாம் கொள்வது 1841 இல் கொழும்பில் உருவாக்கப்பட்ட இலங்கை வங்கியைத் (Bank of Ceylon) தான். வில்லியம் தொம்சன் என்கிற பிரித்தானிய வர்த்தகரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வங்கி 25 லட்ச பவுண்கள் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது. வங்கியின் பிரதான காரியாலயமும் நிர்வாகக் குழுவும் லண்டன் நகரில் இருந்து தான் இயங்கியது. கோப்பி பயிர்ச்செய்கையின் வளர்ச்சியின் காரணமாக கண்டியிலும் 1843ஆம் ஆண்டு ஒரு கிளை நிறுவப்பட்டது. ஆனால் கோப்பி பயிர்ச்செய்கையின் வீழ்ச்சியின் காரணமாக இந்த வங்கி பெரும் நெருக்கடியை எதிர்கொண்டது. இதேவேளை பம்பையில் தலைமையகமாகக் கொண்டு கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் கிளைகளைக் கொண்டிருந்த “பேங்க் ஒப் வெஸ்டர்ன் இந்தியா” (Bank of Western India) என்கிற வங்கியும் இந்த நெருக்கடியை சமாளிக்க முடியாது தவித்தது.

இறுதியில் “பேங்க் ஒப் வெஸ்டர்ன் இந்தியா” 1845ஆம் ஆண்டு “ஓரியண்டல் வங்கி” (Oriental Bank) என்று பெயர் மாற்றம் கண்டது. அந்த வங்கி 1851 வருடத்தில் இலங்கை வங்கியையும் இணைத்துக் கொண்டு “ஓரியண்டல் பேங்க் கோப்பரேஷன்” (Oriental Bank Cooperation) என்கிற ஒரு வங்கியை உருவாக்கிக் கொண்டது. இலங்கையில் பணத்தை விடுவிக்கக் கூடிய அதிகாரத்தைக் கொண்டிருந்த வங்கியாக இது தான் உருவானது. இதன் பின்னர் “மேர்கண்டைல் பேங்க் ஒப் இந்தியா, லண்டன் என்ட் சைனா” (Mercantile Bank of India, London & China) என்கிற வங்கிக்கு அந்த அதிகாரம் கைமாற்றப்பட்டது. இந்த வங்கி 1854 இல் தனது பெயரை மேகர்ன்டைல் பேங்க் ஒப் இந்தியா (Mercantile Bank of India) என்று மாற்றிக் கொண்டது.


கோல்பேஸ் ஹோட்டல்

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு நெஷனல் பேங்க் ஒப் இந்தியா (National Bank of India) என்கிற வங்கி 1862இல் இருந்து இயங்கத் தொடங்கியது அது போல லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு “சார்டர்ட் பேங்க் ஒப் இந்தியா, அவுத்திரேலியா அன்ட் சைனா” (Chartered Bank of India Australia & China) என்கிற வங்கி 1853 இல் இருந்து இயங்கத் தொடங்கியது. 1865 இல் “ஹாங்காங் என்ட் ஷாங்காய் பேங்கிங் கோப்பரேஷன்” (Hongkong & Shanghai Banking Cooperation) என்கிற வங்கி ஆரம்பிக்கப்பட்டது. ஹாங்காங்கில் அது தலைமை காரியாலயத்தைக் கொண்டிருந்தது. மேலும் லண்டனை தலைமையகமாகக் கொண்டு 1892 ஆண்டு மெர்கன்டைல் பேங்க் ஆஃப் இந்தியா (Mercantile Bank of India) என்கிற வங்கியும் ஆரம்பிக்கப்பட்டது.

1856ஆம் ஆண்டில் அரசாங்கம் பணத்தாள்களை விடுவிப்பதை நிறுத்தியதாலும் நிர்வாகச் சிக்கல்களாலும் “ஓரியண்டல் பேங்க் கோப்பறேஷன்” வங்கி வீழ்ந்தது. இந்த காலப் பகுதியில் கோப்பி பயிர்ச்செய்கை இலங்கையில் அழிவை எட்டிக்கொண்டிருந்ததால் ஏனைய வங்கிகள் பலவற்றின் இருப்பும் முடிவுக்கு வந்தது. வங்கிகள் பல சோகமான முடிவைத் தேடிக்கொண்டன.

1932 ஆம் ஆண்டு ஜோர்ஜ் ஈ த சில்வாவின் ஆலோசனையின் பேரில் “வங்கி ஆணைக்குழு” ஒன்றை அமைக்க அரசாங்க சபை அனுமதியளித்தது. அதன் பிரகாரம் இலங்கை வங்கியை தோற்றுவிப்பதற்காக 1938ஆம் ஆண்டு 53ஆம் இழக்க கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1939 ஆம் ஆண்டு ஜுலை 26ஆம் திகதி இலங்கையின் வங்கியின் முதலாவது இயக்குனர் சபை கூடியது. அவ்வங்கியின் முதலாவது கொழும்பு கிளை 1942ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

1950 ஆண்டு ஓகஸ்ட் 28 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது. 1832 இல் இலங்கைசேமிப்பு வங்கியும், 1883 இல் தபால் சேமிப்பு வங்கியும், 1962 இல் மக்கள் வங்கியும் உருவானது.

இலங்கையில் வங்கி கட்டமைப்பு பற்றி நாம் உரையாடும் போது ஆங்கிலேயர்களால் வங்கிக் கட்டமைப்பு அறிமுகபடுத்தப்படுவதற்கு முன்னரே இலங்கையில் குறிப்பட்டளவு வங்கி போன்ற நடவடிக்கைகள் இயங்கி வந்தன. இந்த விடயத்தில் செட்டியார்களின் பங்கையும் அவர்களின் நடவடிக்கைகளையும் மறந்துவிடமுடியாது. இந்தியாவிலிருந்து வந்து பணத்தை வட்டிக்கு கொடுத்து பட்டுவாடா செய்யும் முறைமையை ஒரு வணிகமாக மேற்கொண்டவர்கள் செட்டியார்கள். கொழும்பு மட்டுமன்றி நாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம் இவர்களின் சேவை இருந்தது. கொழும்பு மையைப் பகுதியில் செட்டியார்களின் ராஜ்ஜியம் ஒரு காலத்தில் தளைத்தோங்கி இருந்தது. செட்டியார் தெருவின் உருவாக்கமே அதன் பின்னணியில் அமைந்தது தான்.

1954 ஆம் ஆண்டு இலங்கை வங்கி ஆணைக்குழுவின் அளிக்கப்பட்ட சாட்சியங்களின் படி செட்டியார்கள் இலங்கையின் தரகு சந்தையில் முதலிட்டிருந்த தொகை ஆயிரம் லட்சத்தையும் தாண்டும் என்கிற விபரம் பதிவானது. தமது வர்த்தக நடவடிக்கைகளுக்காக செட்டியார்களின் பலமான சங்கம் கூட இயங்கி வந்தது.

கொழும்பை ஒரு அரசியல் மையமாக மட்டுமன்றி, வாணிப, வர்த்தக, சிவில் சந்தை மையமாகவும் ஆக்கியதன் பின்னால் உள்ள வரலாற்று வழித்தடத்தை இவ்வாறானவற்றுக்கூடாகத் அறிந்துகொள்ளமுடியும்.

# உலக சுற்றுலா தினம் அறுகம்பேயில்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

இலங்கையின் எழில்மிகு உல்லாச புரியாக விளங்கும் அறுகம்பேயில் இவ்வருட உலக சுற்றுலா தினத்தை இம்மாதம் 29ம் திகதி விமரிசையாகக் கொண்டாடுவதற்கான எல்லா ஒழுங்குகளையும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனம் என்பன இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

இதுதொடர்பாக விரிவாக ஆராயும் மகாநாடு மாவட்ட செயலக கேட்போர் கூட்டத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.,எம்.எ. டக்ளஸ் தலைமையில் சுற்றுலாவோடு தொடர்பான அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், முப்படை பிரதானிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.



அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.,எம்.எ. டக்ளஸ் இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனதின் தலைவர் எ.எம்.ஜெளபர்ஆகியோர் திணைக்கள தலைவர்கள் மத்தியில் உரையாற்றும்போது...(படங்கள்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனதின் தலைவர் எ.எம்.ஜெளபர் இந்நிகழ்வையொட்டி கடற்கரையை துப்பரவாக்கும் பணி பல்வேறு அமைப்புளால் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகத் தெரிவிதார்.

மின் விளக்குகள், பதாதைகள், அறிவுறுத்தல், எச்சரிக்கை பலகைகள் போன்றவைகளை காட்சிப்படுத்துவது தொடர்பாக விளக்கப்பட்டு உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. கூழுனை பறவைகள் வனவிலங்குகள்சரணாலய அனுமதி மற்றும் போக்குவரத்து வசதிகள், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உணவு இலவசமாக வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜெளபர் தெரிவித்தார். பாரம்பரிய உணவுவகை கண்காட்சி, நெசவுக்கைத் தொழில் அடைந்துள்ள முன்னேற்றங்களை வெளிப்படுத்தும் காட்சிக் கூடங்களும் மற்றும் இசைக்கச்சேரி போன்றனவும் அறுகம்பே பாலதிற்கு அருகாமையில் அமைந்துள்ள வளாகத்தில் ஒழுங்கு செய்யப்படும் எனவும் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 செப்டெம்பர் 11 ஞாயிற்றுக்கிழமை

# குள்ள மனிதர்களின் கிராமம்





பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டி இருக்கும் ஈரான் கிராமத்தில் இருக்கும் வீடுகளை பார்த்தால் அதிர்ச்சி அடைவீர்கள். வீட்டின் உயரம் சராசரி மனிதர் ஒருவரின் உயரத்தில் இடுப்பு வரைதான் இருக்கும். கதவுகள் சின்னதாக கூரை 140 சென்டிமீற்றருக்குக் குறைவாகவே இருக்கும். ஒன்றிரண்டு வீடுகள் இப்படி இருந்தால் பரவாயில்லை கிராத்தில் இருக்கும் வீடுகள் அனைத்துமே இவ்வாறு தான் இருக்கும்.

1500 ஆண்டுகள் பழைமையான பாரசீகர் காலத்தில் இருந்து இருக்கும் மகூனிக் என்ற இந்த கிராமத்தை குள்ளர்களின் கிராமம் என்றே அழைக்கிறார்கள். ஆய்வாளர்களும் அதனை மறுக்கவில்லை.

இந்த கிராமத்தின் பூர்வீகக் குடிகள் ஆப்கானில் இருந்து குடியேறியவர்கள். நெருங்கிய உறவினர்கள் இடையே திருமணம், ஊட்டச்சத்து இல்லாத மோசமான உணவுப் பழக்கம், பாதரசம் கலந்த நீரை குடித்து வந்ததால் கிராமத்தில் இருப்பவர்கள் சராசரியை விடவும் உயரம் குறைவானவர்களாக இருந்திருக்கிறார்கள்.

அதாவது சராசரி மனிதனின் உயரத்தை விடவும் மகூனிக் கிராமத்தில் வாழ்ந்த 70 வீதமானவர்கள் அரை மீட்டர் குள்ளமானவர்களாம். பல நூற்றாண்டுகளாக இந்த கிராமத்தில் வசித்த மக்கள் நவீன நாகரிகத்துடன் தொடர்பின்றியே வாழ்ந்திருக்கிறார்கள். இந்தப் பிராந்தியம் வரண்ட, பாழடைந்த, மலட்டு பூமியாக இருக்கிறது. இங்கே பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதும் கால்நடைகளை வளர்ப்பதும் கடினமானது.

இதனால் தானியம், பார்லி மற்றும் ஜுஜுபி என்ற பேரிச்சம் பழத்தை மாத்திரம்தான் பயிரிட முடியும்.

இதனால் இங்குள்ள மக்கள் எளிய சைவ உணவுகளைத் தான் சாப்பிட்டு உயிர் பிழைத்தார்கள். இதுவே அங்குள்ள மக்களின் உயரம் காலப்போக்கில் குறைவதற்கு காரணமாகி இருக்கிறது.

எனினும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இந்த கிராமத்திற்கு வீதிகள் வந்து அண்டைய கிராமங்கள் மற்றும் நகரங்களுடன் தொடர்பு ஏற்பட்ட பின் நிலைமை மாறி இருக்கிறது. மக்களுக்கு தொழில் வாய்ப்புகள், நல்ல உணவுகள் கிடைக்க ஆரம்பித்தன.

இப்போது இந்த பண்டைய கிராமம் ஒரு கண்காட்சி இடமாகவே மாறிவிட்டது. குள்ளமான மக்களை அங்கே காண முடியாது.

# ஒற்றை சிறுநீரகத்துடன் வாழும் கிராமம்



கடன் தொல்லையால் அவதிப்படும், வேலையற்ற நூருத்தீனுக்கு தமது குடும்பத்திற்கு உணவளிப்பது பெரும்பாடு. அவருக்கு தனது சிறுநீரகம் ஒன்றை விற்பதைத் தவிர வேறு வழியில்லை. தனது அன்றாட வாழ்வை நடத்துவதற்காகவே உடல் உறுப்பை விற்பது அப்கானில் இன்று சகஜமாகிவிட்டது.

இந்த வழக்கத்தை மேற்கு மாகாணமான ஹராத்தின் இன்ஜீல் கிராமத்தில் பரவலாகக் காணலாம். அதற்கு "ஒரு சிறுநீரக கிராமம்" என்று புனைப்பெயர் கூட இருக்கிறது.

"எனது குடும்பத்திற்காக நான் இதனைச் செய்தேன்" என்று ஈரான் எல்லையில் இருக்கும் அந்த கிராமத்தைச் சேர்ந்த நூருத்தீன் கூறுகிறார். "எனக்கு வேறு வழியிருக்கவில்லை" என்கிறார்.

பல தசாப்த போர்கள், தலிபான்களின் ஆட்சி என்று ஆப்கான் பொருளாதாரம் சீரழிந்துவிட்டது. எனவே, உடல் உறுப்பு வர்த்தகம் அங்கே களைகட்டி இருக்கிறது. ஆனால், சிறுநீரகம் ஒன்று 1,500 டொலர்களுக்குக் குறைவாகவே விலைபோகிறதாம்.




இன்ஜீல் கிராமத்தில் தான் உச்சம். கிராமத்தில் இருக்கும் கிட்டத்தட்ட ஒவ்வொரு வீட்டிலும் ஒருவரேனும் தனது சிறுநீரகம் ஒன்றை விற்று சாப்பிடுகிறார்கள்.

20 வயதான அசிசா மூன்று குழந்தைகளின் தாய். தனது சிறுநீரகத்தை விற்க வாங்குபவர் ஒருவரை தேடி வருகிறார். அது முடியாத பட்சத்தில் ஒரு வயது மகளை விற்கப்போவதாகக் கூறுகிறார். சந்தையில் பெட்டிக் கடை வைத்திருக்கும் அசிசாவின் கணவர் தினத்துக்கு 1.50 டொலர் (544 ரூபா) தான் சம்பாதிக்கிறார்.

இப்போது ஆப்கானின் கதை இது தான். அங்கே போனால் இவ்வாறான கதைகளை வீட்டுக்கு வீடு கேட்கலாம்.

# குட்டை நெட்டையான கதை



உலகில் ஒரே ஒருவர் குள்ளமானவராகவும் மிக உயரமானவராகவும் இருந்திருக்கிறார். அவரது பெயர் அடம் ரெய்னர். ஆஸ்திரிய–ஹங்கேரியில் 1899 இல் பிறந்த ரெய்னர் மிகச் சிறிய, மெல்லிய, பலவீனமான சிறுவனாகவே இருந்தார். 1917இல் தனது 18 வயதில் அவரது உயரம் 4 அடி 0.25 அங்குலமாகவே இருந்தது. அடுத்த ஆண்டு உயரத்தை அளந்தால் 3 அடி 7.9 அங்குலம் குறைந்திருந்தார். இதனால் அவர் இரண்டாம் உலகப் போரில் பங்கேற்கும் தகுதியை இழந்தார்.

வயது வந்த ஒருவர் 4 அடி 10 அங்குலத்துக்குக் குறைவாக இருந்தால் அவர் குள்ள மனிதன் என்று வரையறுக்கப்படுகிறார். அதன்படி ரெய்னரும் எல்லோராலும் குள்ள மனிதனாகவே பார்க்கப்பட்டார்.

ஆனால் ஒருசில ஆண்டுகளில் நிலைமை தலைகீழாக மாறியது. ரெய்னர் தனது 20 மற்றும் 30 வயதுகளுக்கு இடையே அதிரடியாக உயர ஆரம்பித்தார். அவர் ஆண்டுக்கு சராசரியாக 3.16 அங்குலம் அளவு உயர்ந்துகொண்டே போனார். 1932ஆம் ஆண்டு தனது 32 ஆவது வயதில் ரெய்னரின் உயரம் 7 அடி 2 அங்குலமாக இருந்தது. அவரது உடல் கோளாறு ஒன்றே இவ்வாறு அசாதாரணமாக உயர்வதற்குக் காரணம் என்று மருத்துவர்கள் பின்னர் கண்டறிந்தார்கள்.





அவரது வேகமான வளர்ச்சி பலம் சேர்க்கவில்லை. நாளுக்கு நாள் பலவீனமாகத் தெரிந்தார். கடைசியில் அவர் இயங்க முடியாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டார்.

அவர் 1950ஆம் ஆண்டு தனது 51 ஆவது வயதில் மரணித்தார். மரணிக்கும்போது அவரது உயரம் 7 அடி 8 அங்குலமாக இருந்தது.

# பேய்கள் உலாவும் உல்லாச உலகம்!



(கடந்த வாரத் தொடர்)

திருடினாலும் தோயோலிடம் ஒரு நியாயம் உண்டு. அதிகமாகப் பணத்தை எடுக்காது. பெரிய பொருள்களைத் தூக்காது. உங்கள் பணப் பையில் ஆயிரம் ரூபா வைத்திருந்தாலும் ஐம்பது ரூபாவை மட்டும் அலேக்காகத் தூக்கிவிடும்.

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு வீட்டில் தங்கி இருந்தேன். அந்த வீட்டில் மாலை ஆனால் போதும். டுக்கு டுக்கு டுக்கு என ஓயாமல் குண்டு விளையாடும் சத்தம். பயம் எல்லாம் கிடையாது. ஆனால் படு எரிச்சலாக இருக்கும். சத்தம் எங்கிருந்து வருகிறது என்று இரவெல்லாம் கண்விழித்து சுவரில் காது வைத்துக் கேட்ட அனுபவம் எல்லாம் உண்டு.

முதலில் ஒரு அறையிலிருந்து சத்தம் வருவது போல இருக்கும். அங்கே போய் பார்த்தால் சமையறைக்கு சத்தம் கடந்து போய் விடும். சரி என்று சமையலறையில் போய்ப் பார்த்தால் மேல் மாடிக்கு சத்தம் போய் விடும்.

ஏன் இப்படி சத்தம் போடுகிறது? வீட்டில் பணம் இருந்தால், தோயோல் சந்தடி தெரியாமல் பணத்தை எடுத்துக் கொண்டு போய் விடும். ஏவிவிட்ட பொருள் கிடைக்காத பட்சத்தில் அதிருப்தியில் தனது இருப்பைக் காட்டிக்கொள்ள இது செய்யும் எரிச்சலூட்டும் காரியம்தான் இந்த கோலி குண்டு விளையாட்டு. இதனை திசை திருப்ப பிரபலமான செயல்களில் ஒன்று பச்சை பயறுகளைத் தூவி விடுவது. அவற்றைத் தரையில் தூவி விட்டு விட்டால் திருட வரும் தோயோலுக்கு வந்த காரியம் மறந்து கடலைகளைப் பொறுக்க ஆரம்பித்து விடுமாம். குட்டி தானே அதனால் விளையாட்டு புத்தி. விடிந்ததும் வேலை முடியாமல் வந்த இடத்துக்கே திரும்ப போய்விடுமாம்.

## போச்சோங்

போச்சோங் என்பது கொஞ்சம் பயமுறுத்தகூடிய பேய் தான். இது நடந்து செல்ல கூடியது அல்ல. உடல் முழுவதும் கட்டி வைக்கப்பட்டுள்ளதால் சீன பேய் போல குதித்து குதித்து தான் செல்லும் அல்லது உருண்டு செல்லும். அது மட்டுமல்லாமல் ஒரு கூரையிலிருந்து இன்னொரு கூரைக்கு தாவக்கூடிய ஆற்றலும் அபார வேகத்துடன் கண்முன் கடந்து செல்லுவதும் உண்டு. இதற்குத் தோயோல் போன்று எஜமானர்கள் கிடையாது.

இரவு நேரங்களில் நெடுஞ்சாலைகளிலும் நிசப்தமான இடங்களிலும் காரோட்டுபவர்களுக்கு தான் இந்த அனுபவங்கள் நடந்துள்ளன. வேகமாக காரோட்டிக் கொண்டு செல்லும் போது சட்டென்று ஒரு உருவம் சாலையின் குறுக்காகக் கடந்து சென்றால் ஒரு கவன சிதறல் ஏற்படும் அல்லவா? அதுதான் இந்தப் பொச்சோங்கின் வேலை. அதாவது நமது கவனத்தைச் சிதறடிப்பது. சில நேரங்களில் அமைதியாக சிலைப்போலே வீதியோரங்களில் நிற்பதும், காரின் முன் மின்னல் வேகத்தில் கடந்து செல்வதும் ஒரு புற வீதியின் மரக்கிளையினின்று இன்னொரு புறத்துக்குத் தாவுவதும் காரோட்டிகளை பயமுறுத்தவ செய்வதற்கான யுக்திகள். இதனால் பல நேரங்களில் வீதி விபத்துக்கள் ஏற்பட்டிருகின்றன. உடல் உயிர் சேதங்களும் நிகழ்ந்துள்ளன.இதற்குப் பின் இன்னொரு கதையும் உள்ளது. அதாவது உடலைச் சுற்றியிருக்கும் அந்தத் துணிக்குள் ஏகப்பட்ட பணமும் நகைகளும் இருக்குமாம். யார் இந்தப் போச்சோங்கின் அரட்டல் மிரட்டலுக்குப் பயப்படாமல் அதை எதிர்கொள்கிறார்களோ அவர்களுக்குத்தான் அந்தப் புதையல் கிடைக்கும் என ஒரு கதையும் உண்டு. இந்தப் போச்சோங் திருடர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என வைத்துக்கொள்ளலாம். ஆனால் உண்மையில் நடப்பது வேறு. போச்சோங் பேய்கள் கிடைக்காமல் திருடர்களே போச்சோங் பேய்களாக மாறிவிடுவதும் உண்டு. குறிப்பிட்ட ஊரில் அருகாமையில் திருடர்கள் திட்டம் போட்டுப் போச்சோங் போல உடையுடுத்தி நடுநிசியில் அந்த இடத்தைத் தாண்டி செல்பவர்களை பயமுறுத்தி பொருட்களை அபகரிப்பது நிறைய நிகழ்ந்துள்ளது. வாய்ப்பு வரவில்லையென்றால் அதை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற பொன்மொழியெல்லாம் திருடர்களுக்கும் பொருந்தும் தானே.



**நள்ளிரவு வேளைகளில் வீதிகளிலும் நெடுஞ்சாலைகளிலும் நிசப்தமான இடங்களிலும் காரோட்டி செல்பவர்களுக்கு பேயின் அட்டகாசங்களை கண்டு உணரக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக வாய்த்திருக்கும்**

## லங்சுயீர்

இது மிகவும் பயங்கரமானது என்று தான் சொல்ல வேண்டும். இவள் ஒரு பெண். பல உருவங்களை எடுக்கக்கூடியவள். மனித உருவத்திலும் இருப்பாள். இரத்தம் உறிஞ்சக்கூடியவள். பேயாய் மாறுவதற்கு முன் இவளின் பேறுகாலத்தின்போது இறந்தவள் எனவும் எனவே எந்த வீட்டில் கர்ப்பிணிகள் இருக்கிறார்களோ அவர்களின் சிசுக்களை கர்ப்பத்திலேயே தின்றொழிப்பவள் எனவும் பலவாறாகக் கூறப்படுகிறது.


மனித உருவில் இருக்கும் போது இவள் மிகவும் அழகான ரூபம் கொண்டிருப்பாள். நாம் அறிந்த மோகினி வகையறா. ஆண்களுக்கு இவளைப் பார்த்ததுமே காமம் மேலேறுமாம். இவளும் அவர்களை மயக்கி தனியிடங்களுக்கு அழைத்துச் சென்று வசமாக மாட்டிய ஆண்களுடன் உறவு வைத்துக் கொண்டபின் அசந்திருக்கும் வேளையில் இவளின் சுய உருவெடுத்து அவர்களின் இரத்தத்தை உறிஞ்சி கொன்று விடுவாளாம். இப்படியும் லங்சுயீர் பற்றிய கதை உண்டு.

மனித உருவில் அழகு தேவதையாக இருக்கும் இவளின் சுய உருவம் அகோரமாக காட்சியளிக்கும். உடலை விட்டு தனியாகக் குருதி வழியும். நீண்ட பற்களோடும் நீண்ட பரட்டை தலையோடும் இருக்கும் இவளுக்கு உடல் இருக்காது. வெளியே தொங்கிக்கொண்டிருக்கும் நாக்கு, இருதயம் குரல்வளை குடல் என குருதி சொட்ட சொட்ட அந்தரத்தில் மிதப்பாள். அவளுக்குத் தேவையானபோது இரத்தம் கிடைக்கவில்லை என்றால் யாரையும் கொல்ல துணிபவள்.

மலாய்க்காரர்களின் பாரம்பரிய வீடுகள் தரையிலிருந்து கொஞ்சம் மேலெழும்பி தடித்த தூண்களின் மேல் கட்டப்பட்டிருக்கும். இயல்பாகவே நதிக்கரையோரங்களிலும் கடல் அருகாமையிலும் வீடு கட்டுவது என்பது பரம்பரை மீனவர்களான மலாய்க்காரர்களின் வழக்கம். அதன் காரணம் மழைக்காலங்களில் பெருக்கெடுக்கும் வெள்ளத்தின் போது உடைமைகள் அடித்துக் கொண்டு போகாதவாறு அப்படி ஒரு கட்டிட யுக்தியை சமயோசிதமாகப் பயன்படுத்தி இருந்தார்கள். வீட்டின் தரைகளை மரப்பலகைகள் வைத்துதான் கட்டுவார்கள். முன்பெல்லாம் மலாய் சமுதாயத்தில் பேறுகால பெண்களுக்கு வீட்டிலேயே பிரசவம் பார்ப்பது வழக்கம்.

(தொடரும்)

# மதுரையில் மலேசியா எழுத்தாளர்களின் நூல்கள் வெளியீடு








மலேசியா ஊடகவியலாளரும் எழுத்தாளரு மான பொன் கோகிலம் நிறுவியுள்ள இயல் பதிப்பகம் தயாரித்துள்ள மலேசியா எழுத்தாளர்க ளின் ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா (03.09.2022) அன்று தமிழ்நாட்டில் மதுரை உலகத் தமிழ்ச் சங் கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் (பொறுப்பு) முனைவர் ப. அன்புச்செழியன் தலைமையில் மலேசியா எழுத்தாளரகள் உமாதேவி வீராசாமி, பத்மநாதன் பரசுராமன், ஏகே.ரமேஷ், சுமித்ரா அபிமன்னன், யோகாம்பிகை ஆகியோரின் நூல்கள் வெளியிடப்பட்டன. நிகழ்வில் தனவணி கன் மாத இதழின் ஆசிரியர் வி.என்.சிடி.வள்ளி யப்பன் சிறப்புரையாற்றினார்.

கவிஞர் அமிர்தம் சூரியா, மலேசியா சுல்தான் கல்வியியல் பல்கலைக்கழக முதன்மை விரியு ரையாளர் முனைவர் இளங்குமரன் ஆகியோர் நூல்கள் குறித்து கருத்துரைகளை வழங்கினர்.

முன்னதாக பொன் கோகிலம் அனைவரையும் வரவேற்க, ஜான்சிராணி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்ட மலேசியா படைப் பாளர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசாக இனிய நந்தவனம் ஆசிரியர் நந்தவனம் சந்திர சேகரன் இனிய நந்தவனம் வெள்ளி விழா மலர் வழங்கி சிறப்பித்தார்.

# கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் பொதுக் கூட்டம்







கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் (2022 - 2023) ஆம் ஆண்டிற்கான ஆண்டு பொதுக் கூட்டம் கொள்ளுப்பிட்டி. பகத்தல வீதி" அன்பு இல்லத்தில் மன்றத்தலைவி குமுதரஞ்சனி - நந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நடப்பு வருடத்திற்கான நிர்வாகக் குழு தலைவியாக திருமதி. பத்மினி கந்தசாமி (2022-2023) தெரிவுசெய்யப்பட்டார், செயலாள ராக மஞ்சுளா பாலசந்திரனும், பொருளாளராக தமயந்தி ஸ்ரீ லஜயனும் தெரிவு செய்யப்பட்ட னர். நிகழ்வில் Maathini 13ஆவது இதழ் வெளியிடப்பட்டது. முதல் பிரதியை போசகர் ஜமுனா கணேசலிங்கத்திற்கு குமுதரஞ்சனியும், சிறப்புப் பிரதிகளை தலைவி பத்மினி கந்தசாமி, வனஜா தவயோகராஜா ஆகியோர் சிறப்பு அங்கத்தவர்களுக்கும் வழங்கினர். தொடர்ந்து புதிய தலைவிக்கான அறிமுக உரையை சாந்தி பாலசுப்பிரமணியமும், புதிய போசகர் நீலா தயாபர னுக்கான உரையை ஜமுனா கணேசலிங்கமும் நிகழ்த்தினர். தொடர்ந்து மாதினி இதழ், அங் கத்தவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது, கலந்து கொண்ட அங்கத்தவர்கள் புதிய நிர்வாகக் குழுமத்துடன் இணைந்து எடுத்துக்கொண்ட படத்தினையும் காணலாம்.

## மெல்ல நகர்ந்து கொல்லும் வாழ்வு

நன்றேநலமே.
நின்று வாழும்
மனதோடு நடந்திட
தொன்று தொட்டு
கேட்டு பேசும்
பழக்கம் உண்டு.
இருந்தும் மனது
வாடி நெகிழும்
இழிவும் உண்டு.

தனித்து விட்டு
ஒதுக்கி வைத்து
புகழ்ந்து பேசலாமோ?
அப்படி ஒரு
சொந்தமும் எனக்கு
சுற்றமும் உண்டு.
விலக்கிட விலகாத
உறவாக இருப்பதிலும்
விலகிடல் நன்றே!

மனதால் நொந்து
மனதை தேற்றும்
தனிமை கொண்டேன்.
இனிமை என்று
இனியும் சொல்ல
எதுவும் இல்லை.
ஆனாலும் இருக்கிறேன்.
இறந்து விடும்
அந்த இனிய நாளுக்காக.

படைத்தவன் என்று
ஒருவன் இருந்தால்
அழித்திடும் வரை.
சேர்ந்து வாழ்ந்து
சோகம் பகிர்ந்து
பேசிட விருப்பம்.
உறவை மதித்து
உணர்வை புரிந்து
சிரித்து வாழ்ந்திடவும்.

எத்தனை பெரிய
சந்தோசம் வந்தாலும்
அடுத்த நொடி மறையும்.
எனக்கென யாரும்
இல்லாத இந்த உலகில்
எப்படி வாழ்ந்திடுவோ?
உதவிடு உன்னை
தாங்கிட வருவார்
இறைவன் என்பார்.

இன்றளவும் உதவிட
உதைத்தார் என்னை
இறைவன் எங்கே?
ஏக்கத்தோடு வாழ்வு
ஏறெடுத்துப் பார்க்க
பிடிக்காத வகையில்.
மெல்ல நகர்ந்து
கொல்லும் வகை
கவலை தான் எனக்கு.

அன்புடன் நதுநசி

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



"டெய்லி உங்க வீட்டுப் பக்கம் நடந்து போறப்ப கமகமன்னு சாம்பார் வாசனை வருதே... உங்க மனைவி அவ்ளோ நல்லா சமையல் பண்ணுவாங்களா...?"

"அட நீங்க வேற... அவளுக்கு ரசம் கூட வைக்கத் தெரியாது. சும்மா சாம்பார் வாசனை வர்ற ஒரு செண்ட் பாட்டிலை வாங்கி வச்சிக்கிட்டு தெருப் பக்கம் அடிச்சி விடுறா..."

"நீ செய்த குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயா?"

"முடியாது எசமான். போன தடவை ஒப்புக்கிட்டப்ப தண்டனை குடுத்துட்டீங்களே!"





"நான் ஒவ்வொரு தீபாவளிக்கும் நகை வாங்கும்போது செய்கூலி, சேதாரம் இல்லாம பார்த்துதான் வாங்குவேன்."

"அப்படியா, எங்க வாங்குவீங்க?"

"மாமனார் வீட்டுலதான்!"

"நான் கண்ட பகல் கனவு பலிச்சுடுத்து."

"என்ன கனவு கண்டீங்க?"


"வேலை போற மாதிரி கனவு கண்டேன். மனேஜர் ஒபிஸ்வ ஏன் தூங்கினேன்னு சொல்லி என்னைத் தூக்கிட்டாரு"





"ஒண்ணாம் திகதி பிறந்தா முதலாளி டான்னு சம்பளம் போட்டுருவாரு!"

"ஐய்யய்யோ! நான் அஞ்சாம் திகதியில்ல பிறந்தேன்!"



"அஞ்சு தலைமுறையா எப்படி வைத்தியம் பார்க்கிறீங்க?"

"பொலிஸ் பிடிச்சிருந்தா, போன தலைமுறையிலேயே விட்டிருப்போம்!"



**கண்டக்டர்:** யோவ் டிரைவர், நான் மூணுமுறை விசிலடிச்சும் வண்டி நிக்கலையே ஏன்?

**டிரைவர்:** அட போய்யா, நான் ஆறுமுறை பிரேக் அடிச்சே வண்டி நிக்கலை, நீவேற.



ஆளுங்கட்சி அமைச்சர்களை மையமாவெச்சு ஒரு படம் எடுக்கப்போறேன்!"

"படத்தின் பேரு?"

"குனிந்து நில்!"

"ஏண்டா கல்யாணம் வேணாங்கிறே... யாரையாவது காதலிக்கிறியா? சொல்லித் தொலையேன்?"

"ஆமாம்மா! நான் காஜல் அகர்வாலை லவ் பண்றேன்!"



"ஏண்டா! நீ பரீட்சையில பாஸாயிட்டா சைக்கிள் வாங்கித் தர்றேன்னு சொல்லியும் பாஸாகலியே! என்னடா பண்ணிக்கிட்டு இருந்தே!"

"சைக்கிள் விட கத்துக்கிட்டு இருந்தேம்ப்பா!"



# கலையுலகில் சாதிக்கத் துடிக்கும் புகைப்படக் கலைஞன் நடிகன் "சுபாஸ் அமர்"



சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக குறும்பட இயக்குவதில் ஒளிப்பதிவாளராக, புகைப்படக் கலைஞராக மற்றும் நடிகராக சாதனை படைத்து வரும் பிரபலமான இளம் கலைஞர் சுபாஸ் அமர். நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த இளம் ஒளிப்பதிவாளர், நடிகரும் ஆவார்.

**● உங்களை பற்றி ஒரு சிறிய அறிமுகம் தாருங்கள்?**

எனது பெயர் சுபாஸ் நான் எழில் மிகுந்த நுவரெலியாவில் வாழ்ந்து வருகின்றேன். நுவரெலியா பிரதான நகரில் AmooR என்ற பெயரில் கலையகம் (Studio) ஒன்று நடத்தி வருகின்றேன்

**● குறும்படம் இயக்கும் போது ஒளிப்பதிவாளராக இயங்க வேண்டும் என்ற ஆர்வம் எப்போது தோன்றியது?**


பாடசாலை செல்லும்போதே புகைப்படம் எடுக்கும் ஆர்வம் அதிகமாக இருந்தது. அது மட்டுமல்லாமல் விழிப்புணர்வுகளுக்கான காணொளிகளை YOUTUBE யினூடாக பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன்

**● இதுவரை எத்தனை குறும்படங்கள், பாடல்கள் இயக்கியுள்ளீர்கள்?**

14 பாடல்கள் 4 குறும்படங்களை இயக்கி நடித்துள்ளேன் மற்றும் 7 பாடல்கள் ஒளிப்பதிவு செய்துள்ளேன் இவைகளின் மன்னிப்பாயா , உயிராய் நீ , என்ன சொல்ல , டி3 , நீயும் பெண்தானா , சண்டகாரி , மறையாதே பெண்ணே, வெயிட் பண்ணவா போன்ற சிறப்பானது

**● இறுதியாக நீங்கள் இயக்கி வெளிவந்த பாடல் பற்றி சொல்லுங்கள் ?**

ஈறமை சாரலில் (Eeramai Saaralil) என்பது நான் நீண்ட நாட்களாக எடுத்தே ஆகவேண்டும் என்று காத்திருந்து எடுத்த பாடல், இதில் எனது நண்பர்களை இணைத்து எடுத்த பாடல் என்பது முக்கிய அம்சமாகும். அத்தோடு இறுதியில் எடுத்த முதல்




காதல் பாடலாகும்.

**● உங்களை ஒளிப்பதிவாளராக இயக்க தூண்டிய ஒரு காரணி ?**

பாடசாலை செல்லும்போது ஆர்வம் இருந்தது. இருந்தாலும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க யாரும் இருக்கவில்லை. அத்தோடு அதற்கான தேவையான கருவிகளும் என்னிடம் இருக்கவில்லை. இத்துறைக்கு வருவதற்கு எனக்கு பல துன்பங்களை சந்திக்க நேறிட்டது. அதை எவ்வாறு கையாள வேண்டும் அதில் இருந்து உருவாகிய எண்ணம் தான் குறும்படங்களினூடாக சமூகத்திற்கு தெளிவு படுத்த வேண்டும் என்பதாகும்.

**● நீங்கள் கெமரா சிறப்பாக பயன்படுத்துகின்றீர்கள் இந்தக் கலையை எங்கே கற்றீர்கள்?**

இதற்கு முழு காரணம் டணியல் அண்ணாதான். அவர்தான் எனக்கு எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்ற அனைத்து விடயங்களையும் கற்றுத் தந்திருக்கிறார். இவ்வாறான காட்சியமைப்புகளுக்கும் , புகைப்படத்திற்கும் அவர்தான் காரணம்.

**● இத்துறையை முறைப்படி கற்றுள்ளீர்களா ? அல்லது சுயமாக கற்றவைகளா?**

ஆம் முறைப்படி கற்றவை இல்லை எனது முயற்சியில் சுய முயற்சியில் கற்றவை இருந்து அதிகமாக YOUTUBE மற்றும் இணையதளத்தில் தேடி கற்றவைதான்.

எனது ஊரில் நடக்கும் அனைத்து கலைநிகழ்வுகளும் என்னூடாகத்தான் நடைபெறும். அங்குதான் நான் இயக்கிய பல கலைநிகழ்வுகளை அரங்கேற்றி ஒரு இயக்குநரானேன். அதன் பிறகு நான் பார்த்த திரைப்படங்களை வைத்துத்தான் இயக்குகிறேன். இன்றும் ஒவ்வொரு படத்திலும் நான் பல அனுபவங்களை




பெற்றிருக்கிறேன் ஆனால் இத்துறையில் இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும் அம்சங்கள் ஏராளம்

**● உங்களது இந்தத் துறையின் சாதனையில் உங்கள் பெற்றோரின் பங்களிப்பு?**

இதில் அதிக பங்கு என் அப்பாவுக்கே உண்டு. எனது விருப்பத்திற்கு




எதிராக எதையும் கூற மாட்டார் , பாடசாலை காலத்தில் இருந்து இன்று வரை எனது விருப்பப்படி வாழ்ந்து வருகிறேன். அப்பா , அம்மாவின் ஆசி பெற்று செல்லும் அனைத்து விடயங்களுமே எனக்கு வெற்றிதான். 'உனக்கு எது பிடிக்கிறதோ அதை செய்' என்று கூறுவார்கள் இன்று வரை என்னுடைய சந்தோஷத்துக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார் அப்பா. அவர்தான் என் வாழ்வின் முதல் வெற்றி.

**● உங்களுக்கு சினிமாவில் ஒளிப்பதிவாளராக ஆகும் சந்தர்ப்பம் வந்தால் என்ன செய்வீர்கள்?**

என்ன இப்படி ஒரு கேள்வி? வாய்ப்புகள் கிடைத்தால் நிச்சயம் சாதிப்பேன் மலையகத்தின் ஒருவர் சார்பில்..

**● இத்துறையில் சாதிக்க விரும்பும் இளம் வயதினருக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

உங்களுக்கு அதிகம் ஆர்வம் உள்ளததை விருப்பத்துடன் செய்யுங்கள். எமது சமூகத்தை பொருத்த வரையில் இத்துறையை குறைத்தே எடை போடுகிறார்கள்.( போட்டோ புடிக்கிறவர், வீடியோ எடுக்கிறவர் ) அவ்வளவுதான் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மிக குறைவாக உள்ளது. இத்துறையில் சாதிக்க இருக்கின்றவர்கள் தொடர்ந்தும் முயற்சி செய்யுங்கள்.. என்றோ ஒரு நாள் இத்துறையில் உயர்ந்து இருப்பீர்கள்.

**● உங்கள் அடுத்த படைப்பு எப்போது வெளிவரும்?**

அடுத்த படைப்பு ஒரு திரைப் படம் வெளியீடு செய்வதற்கு தயாராகி உள்ளோம். இப்போது 100% இற்கு 60% வீதமான ஏற்பாடுகள் நிறைவுக்கு வந்துள்ளன. வெளியீடு தொடர்பான தகவல் சீக்கிரம் அறிவிப்போம் , இத்திரைப்படத்திற்கு நடிப்பு திறன் உள்ள ஆண் , பெண்களுக்கு வாய்ப்பும் வழங்க உள்ளோம். தகுதி உள்ளவர்கள் என்னை தொடர்பு கொள்ளவும். முகபுத்தகத்தில் (Subash Amoor )

**● உங்களது படைப்புகளுக்கான முதலீடு எப்படி கிடைக்கின்றன?**

இதுவரை கிடைத்தது இல்லை , யாரும் எனக்கு உதவியதும் இல்லை. என்னுடன் நடிப்பவர்களுக்கு கூட என்னுடைய செலவில்தான் அனைத்தும் செய்வேன். நான் எடுத்த படைப்புக்கள் யாருடைய தலையீடுமின்றி எடுத்தவையே.

மலையகத்தில் நான் இக்குறும்படங்கள் , பாடல்கள் எடுக்க எத்தனையோ பேரிடமும், எத்தனையோ அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் சென்று உதவி கேட்டிருக்கிறேன். அவர்கள் 'உங்களுக்கு என்ன அடையாளம் இருக்கிறது, எதற்காக நாங்கள் கொடுக்கவேண்டும்' எ ன்றெல்லாம் சொல்வதை கேட்டிருக்கிறேன். நிறைய அவமானங்களை பெற்றிருக்கிறேன்.

ஆனால் இப்போது நான் உணர்கிறேன் அடையாளம் உள்ளதை....

நான் சமூக மாற்றத்துக்காகவும் எனது ஆசைக்காகவும் தான் குறும்படங்கள் , பாடல்களை இயக்குகிறேன்.

**● உங்களது இந்த வெற்றிக்கு காரணம் யார்? உங்களது நன்றிக்குரியவர்கள் யார் யார்?**

ஆம். எனது அன்பான மனைவி சாலினி. அனைத்து வெற்றியிலும் என் வலது கையாக நின்று என்னை முன்னோக்கி வழி நடத்தியவர். தொடர்ந்தும் எனது படைப்புக்களுக்கு ஊக்கம் தந்து பாராட்டக்கூடிய அப்பா, அம்மா, அண்ணா, தங்கை மற்றும் நெருக்கமான நண்பர்கள் தான் .

**● இளம் வயதில் சில அடைவுகளை தொட்டுவிட்டீர்கள். இதற்கு திறமை தவிர வேறு எது காரணங்கள் இருக்கின்றனவா?**

ஆமாம் எப்போதும் நம்புகின்ற இறைவனின் அன்பு, நண்பர்களின் ஊக்கம் மற்றும் எனது முயற்சி.

நேர்காணல்
செல்வராஜ் திவாகரன்...
நானுஓயா

# திருமலை இலக்கிய ஆளுமைகளின் ஒன்றுகூடல்



















கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒரு பொழுதில் ஒன்று கூடுவோம் நிகழ்ச்சி திட்டத்தின், திருகோணமலை மாவட்ட பெண் இலக்கிய ஆளுமைகளுடனான ஒன்றுகூடல் 2022.09. 03ஆம் திகதி, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. சமூக அசைவியக்கத்தின் பங்குதாரர்களான, பல்துறைசார் மூத்த மற்றும் இளந்தலைமுறை ஆளுமைகளால் காத்திரமான நிகழ்வுகள் அரங்காடல் செய்யப்பட்டன. இவ்வாறன தொடர் ஒன்றுகூடல்களின் அவசியம் அனைவராலும் உணரப்பட்டது.

# கவிதாயினியாக பவனி வரும் திருமதி பவானி சச்சிதானந்தன்



இலங்கையில் பிரபல்யம் பெற்று வரும் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் திருமதி பவானி சச்சிதானந்தன். இவர் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகள் வெ ளி வந்த காலத்தில் இருந்து கவிதை, சிறுகதை ஆகியவற்றை எழுதி வருகின்றார். இவர் எழுத்தாளராகவும் கவிதாயினியாகவும் கட்டுரையாளராகவும் விளங்குகின்றார். கலை இலக்கிய உலகில் தனக்கென ஒரு களத்தை அமைத்துக் கொண்டு பவனி வருபவர் திருமதி பவானி சச்சிதானந்தன். அவர் தன்னைப் பற்றிய கூறிய கருத்துக்கள் இதோ

நான் கணவர், மகன் மற்றும் மகளுடன் சுய தொழில் செய்து இல்லத்தரசியாக வத்தளையில் வசிக்கின்றேன் .

இல 65 போலகல வீதி ,வெரல்லகம ,கண்டி என்ற முகவரியில் திரு திருமதி துரைசாமி ராமாயி தம்பதியினருக்கு அன்பு மகளாய் பிறந்து வளர்ந்து பல்கும்புற பாடசாலையில் கல்வி கற்றேன் என்பதை பெருமிதமாகக் கூறிக் கொண்டு தொடர்கிறேன் .

தாய் தந்தையினரின் ஆசீர்வாதத்தைப் பெற்று பெருமையுடன் 1990 ல் எழுத்துத்துறையில் பிரவேசித்தேன்.

எனது முதல் சிறுகதை "சந்தேகம் "என்ற தலைப்பில் 08.07.1990 ல் சிந்தாமணி வார இதழில் வெளிவந்தது .

அதனைத் தொடர்ந்து வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளும் எனது பலவாறான சிறுகதைகள் , கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றை பிரசுரித்து ஊக்குவித்தன.





04.07 .1999 ல் "வாழ நினைத்தால் "எனும் சிறுகதையை சிறந்த கதையாக தெரிவு செய்த தினகரன் வார மஞ்சரி பணத்தை பரிசாக வழங்கியது .

அதே போன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் பலவாறான நிகழ்ச்சிகளிலும் எனது ஆக்கங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன. குறிப்பாக "பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரியில்" அறிவிப்பாளர்கள் ராஜேஸ்வரி சன்முகம் அம்மா, புவனலோஜினி நடராஜசிவம் அம்மா இருவரும் எனது பல கட்டுரைகளையும் கவிதைகளையும் சிறுகதைகளையும் வாசித்தார்கள் . வானொலியில் குன்றின் குரல் நிகழ்ச்சியில் எனது பல நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டன .

அதன் பிறகு வத்தளையை வாழ்விடமாகக் கொண்ட நான் நீண்ட காலமாக எழுத்துத் துறையில் பிரவேசிக்காமலேயே இருந்து விட்டேன்.

மீண்டும் தொடரலாம் என ஆசைப்பட்டு விரும்பி இரண்டு வருட காலமாக எழுதி வருகிறேன்.

இலண்டனில் இருந்து வெளிவரும் மு.தயாளன் ஐயாவின் மாதாந்த இதழான "சிறுகதை மஞ்சரி" யில் எனது கதைகள் வெளிவருகிறது. இந்த இதழ் "பதவி "எனும் கதையை சிறப்பு கதையாக தெரிவு செய்ததில் மகிழ்ச்சியே .

இந்தியாவில் சந்திரசேகரன் சகோதரரின் "இனிய நந்தவனம் "இதழில் எனது கதைகள் வெளிவருகின்றன.

கனடாவில் நாகமணி லோகேந்திரலிங்கத்தின் "உதயன் " பத்திரிகையிலும் எனது ஆக்கங்கள் வெளிவருகின்றன. அதில் இலங்கை சிறப்பிதழை நேரில் கையளிக்க பெற்றுக் கொண்டதில் மகிழ்ச்சியே .

அதே போன்று முகநூல் வாயிலாக இந்தியாவில் தனலெட்சுமி சகோதரியின் ரோசாக் கூட்டம் மற்றும் கவிதைச் சாரல் சங்கம், ஐந்திணை தமிழ்ச் சங்கம் , கவிதைத் தளம் ,தேன் மழைச் சாரல், சிவப்புச் சூரியன் போன்ற பகுதிகளிலும் எனது முன்னூறுக்கும் மேலான ஆக்கங்களுக்கு வெற்றிச் சான்றதழ் பெற்றுள்ளேன்

ரோசாக் கூட்டத்தில் "வாழ்நாள் சாதனையாளர் விருது" பெற்றதில் மகிழ்ச்சியடைகின்றேன் .

அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவையும் ஆக்கங்களைப் பதிவிட்டு வெற்றிச் சான்றிதழ்கள் வழங்கி பெருமைப் படுத்துகின்றது . இது எல்லாமே எனது எழுத்துத் துறையை மேலும் மேம்படுத்திக் கொள்ள துணையாகவே உள்ளன . தொடர்ந்து கூடிய விரைவில் கவிதை தொகுதியையும் சிறுகதை தொகுப்பையும் வெளியிட திட்டமிட்டுள்ளேன் .வாசிப்பு மனிதனை முழுமையாக்கும் என்ற உண்மையில் வெற்றி கண்ட நான், இன்னும் இன்னும் புதிய படைப்புகளை படைத்திடவே முயல்கின்றேன் .

எனது வீட்டார் பெற்றோர் சகோதர சகோதரிகள் நட்பு உள்ளங்கள் அனைவருக்கும் நன்றி கூறிடும் மகிழ்ச்சியோடு, இந்த வாய்ப்பைத் தந்த தினகரன் "செந்தூரம் "பகுதி கே.ஈஸ்வரலிங்கத்துக்கும் நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

ஆர்.எம்.கோபால்.
மானிப்பாய்.

**கேள்வி:** ஒருகாலத்தில் தோல்விப் படமாக அமைந்த உலக நாயகன் கமலின் "ஆளவந்தான்' படம் மீண்டும் புதிய பரிணாமத்தில் வெளி வரப்போகிறதாமே...?

**பதில்:** ஆமாம் ..கமலின் 'விக்ரம்' பட வெற்றிக்கு பிறகு அவரது பழைய படங்களுக்கும் மவுசு வந்திருக்கிறது. இந்த வரிசையில் 2000ஆண்டில் வெளிவந்த 'ஆளவந்தான்' எனும் திரைப்படம் மீண்டும் டிஜிட்டல் முறையில் மறு உருவாக்கம் செய்து வெளியிட தயாராகி வருகிறது. தற்போது மேலும் முப்பரிமாண தொழில்நுட்பத்தையும் புகுத்தி புதிய வடிவில் 'ஆளவந்தான்' வெளிவர இருக்கிறது. இந்த திரைப்படம் நவம்பர் 7ஆம் திகதி உலக நாயகன் கமல்ஹாசனின் பிறந்த நாள் பரிசாக வெளிவரும் என்று எதிபார்க்கப்படுகிறது. 2 கே கிட்ஸ் ரசிகர்களின் வேண்டு கோளுக்கிணங்க மீண்டும் வெளிவரும் 'ஆள வந்தானுக்கு வசூல் ரீதியான ஆதரவு கிடைக்குமெனறு திரையுலக வணிகர்கள் அவதானிக்கிறார்கள்.



எம் மாகிரட்
எலபடகம.

**கேள்வி:** நடிகை தமன்னா ஆபாசப் படங்களில் நடித்து வருகிறாராமே . உண்மையா..?

**பதில் :** நடிகை தமன்னாவுக்கு தமிழில் மட்டுமல்லாமல்



எந்த மொழியிலும் படவாய்ப்புகள் இல்லை என செய்திகள் பரவியது. அதை மறுக்கும் வகையில் இயக்குநர் நெல்சன் திலிப் குமார் இயக்கத்தில் சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த நடிப்பில் தயாராகிவரும் 'ஜெய்லர்' படத்தில் ஒரு சிறிய வேடத்தில் நடிக்க ஒப்பந்தமாகி யிருக்கிறார். இந்நிலையில் அவர் 'லாஸ்ட ஸ்டோரீஸ்' என்ற புகழ்பெற்ற வலைதள தொடரில் இரண்டாம் பாகத்தில் கதையின் நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்தத் தொடரில் ஆபாச காட்சிகள். அதிகம் உள்ள தொடர் என்றாலும் இதற்கான வரவேற்பு அதிகம். இதனால் கூடுதல் ஊதியத்துடன் நடிக்க நடிகை தமன்னா சம்மதம் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகி இருக்கிறது.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# ஐஸ்வர்யா ராய் போல ஆஷிதா சிங்



**90கள்** மற்றும் 2000களின் ஹிந்தி பாடல்கள், உரையாடல்கள் மற்றும் பலவற்றின் ரீல் வீடியோக்கள் நிறைந்துள்ளன. ஆஷிதா தனது சமீபத்திய இன்ஸ்டாகிராம் வீடியோவில் குச் குச் ஹோதா ஹை திரைப்படத்தில் இருந்து கஜோலின் வரிகளில் ஒன்றை பாடி உள்ளார்.

ஆஷிதாவைப் ஐஸ்வர்யா ராய் பச்சனைப் போலவே எளிமையாகவும் அழகாகவும் இருக்க விரும்புகிறாள். 'உலக அழகி' பட்டம் வென்ற பின்னர், ஐஸ்வர்யா ராய் 'இருவர்' படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகம் ஆனார். 'ஜீன்ஸ்', 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' போன்ற படங்களிலும் நடித்தார்.

பின்னர் இந்தி சினிமாவில் நடிக்கத் தொடங்கி, அங்கு உச்ச நட்சத்திரமாக ஜொலித்தார்.

இந்திய நடிகைகளில் அதிக சம்பளம் வாங்கும் நடிகையாகவும் மாறினார்.

பின்னர் அமிதாப் பச்சனின் மகன் அபிஷேக் பச்சனை திருமணம் செய்து கொண்டார். ஐஸ்வர்யா ராய் அபிஷேக் பச்சனை விட 5 வயது பெரியவர்.

ஐஸ்வர்யா ராய் நடிப்பில் தமிழில் 'பொன்னியின் செல்வன்' படம் விரைவில் வெளியாக இருக்கிறது.



# தமிழ் சினிமாவை தூக்கி நிறுத்தியது ரசிகர்கள் மட்டுமே

**சிம்பு** நடித்துள்ள புதிய படம், ''வெந்து தணிந்தது காடு". இந்த படத்தை கவுதம் வாசுதேவ் மேனன் டைரக்ட் செய்துள்ளார். வேல்ஸ் இண்டர் நேஷனல் பட நிறுவனம் சார்பில் ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னை பல்லாவரத்தில் உள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் நடந்தது. இதில் நடிகர் கமல்ஹாசன் கலந்து கொண்டு பேசியதாவது: ''வெந்து தணிந்தது காடு என்பது பாரதியாரின் வரிகள். அது எனக்கு மிகவும் பிடிக்கும். அதன் அடுத்த வரிகள், ''தழல் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ". அதுபோல் இந்த படத்திலும் அந்த நெருப்பு இருக்குமென நம்புகிறேன். வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கணேஷ், என்னை தந்தை போல் என்பார். அவருக்கு, நான் தனியாக ஏதும் செய்யவில்லை. நல்ல படம் தமிழ் படத்தை தூக்கி நிறுத்துவது தமிழ் படம்தான். தமிழ் படத்தை கெடுப்பதும் தமிழ் படம் தான். நல்ல படம் கொடுக்க வேண்டும். புதிதாக கொடுக்க ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்கள். தமிழ் ரசிகர்கள் நல்ல படங்களை கைவிட்டது இல்லை. தமிழ் சினிமாவை தூக்கி நிறுத்தியது எந்த நடிகரும் இல்லை. அது ரசிகர்கள் மட்டுமே. மக்கள் ஆதரவு தருவார்கள். சிம்பு கடின உழைப்பாளி. படத்தின் வெற்றி விழாவில் சிம்பு ஆனந்த கண்ணீர் விடுவதை நான் பார்க்க வேண்டும்.

வேட்டையாடு விளையாடு 2ம் பாகம் பற்றி 2 ஆண்டுகளுக்கு முன்பு கவுதம் வாசுதேவ் மேனன் சொன்னார். ஆனால் இடையில் கொரோனா வந்துவிட்டது. வேல்ஸ் பிலிம்சில் படம் செய்ய கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் இம்மாதிரி வாய்ப்புகளை நான் 'மிஸ்' செய்வதில்லை. நாளையே பேசி முடித்துவிடலாம். இந்தப்படம் வெற்றி பெற என் வாழ்த்துக்கள்." இவ்வாறு அவர் பேசினார்.





# 25 கோடியை தாண்டிய அரபிக்குத்து

**பீஸ்ட்** படத்தில் இடம் பெற்ற அரபிக்குத்து பாடல் யூடியூபில் 25 கோடி பார்வையாளர்களை கடந்து உள்ளது. சென்னை, நடிகர் விஜய் நடிப்பில், இயக்குனர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில், சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவான பீஸ்ட் படம் ஏப்ரல் 14ந்தேதி திரையரங்கில் வெளியானது. அதிரடி, காமெடி கலந்த இந்த படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடிகை பூஜா ஹெக்டே நடித்திருந்தார்.

மேலும், யோகி பாபு, செல்வராகவன் உள்ளிட்ட திரை பிரபலங்கள் பலரும் நடித்துள்ளனர். பீஸ்ட் படத்தில் இடம் பெற்ற அரபிக்குத்து மற்றும் ஜாலியோ ஜிம்கானா ஆகிய பாடல்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றன.

இதில், முதல் பாடலான அரபிக்குத்து பாடல் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று, யூடியூப்பில் சாதனையும் படைத்தது. அரபிக்குத்து பாடலுக்கு அனிருத் இசையமைத்து உள்ளார்.

இதில் இடம் பெற்ற விஜயின் நடனம், காட்சியமைப்பு ஆகியவற்றால் ரசிகர்களிடம் தொடர்ந்து வரவேற்பை பெற்று வருகிறது. இதன்படி, அரபிக்குத்து பாடல் யூடியூபில் 25 கோடி பார்வையாளர்களை கடந்து உள்ளது.

இதனை சன் பிக்சர்ஸ் தனது டுவிட்டரில் தெரிவித்து உள்ளது. இதையடுத்து ரசிகர்கள் டுவிட்டரில் அரபிக்குத்து, விஜய், பூஜா ஹெக்டே உள்ளிட்ட ஹேஷ்டேக்குகளை பகிர்ந்து கொண்டாடி வருகின்றனர்.

# வித்தியாசமான தோற்றத்தில் சரத்குமார்

**சரத்குமார்** பொன்னியின் செல்வன் படத்தில் பெரிய பழுவேட்டரையர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இதில் சரத்குமார் வித்தியாசமான தோற்றத்தில் கம்பீரமாக இருப்பதாக ரசிகர்கள் பாராட்டி வலைத்தளத்தில் வைரலாக்கி வருகிறார்கள்.

இதுபோல் சின்ன பழுவேட்டரையராக நடிக்கும் பார்த்திபன் தோற்றமும் வெளியாகி இருக்கிறது. சரத்குமார் வானம் கொட்டட்டும் படத்துக்கு பிறகு தெலுங்கு, கன்னட படங்களில் நடித்தார். தமிழ், தெலுங்கில் தயாராகும் வாரிசு படத்தில் விஜய்யுடன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

ஆழி, ருத்ரன் ஆகிய படங்களும் கைவசம் உள்ளன. டைரக்டர் விக்ரமன் மகன் கனிஷ்கா கதாநாயகனாக அறிமுகமாகும் ஹிட் லிஸ்ட் படத்தில் நடிக்கவும் ஒப்பந்தம் செய்துள்ளனர்.






# பூஜிதா பொன்னடா ரகசிய திருமணம்

**பூஜிதா** பொன்னடாவும், பிரபல இசையமைப்பாளரும் காதலித்து ரகசிய திருமணம் செய்து கொண்டதாக வலைத்தளத்தில் தகவல் பரவி உள்ளது. தமிழில் 'செவன்' படத்தில் நடித்தவர் பூஜிதா பொன்னடா. இவர் தற்போது 'பகவான்' என்ற படத்தில் நடித்து வருகிறார். தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கிறார். பூஜிதா பொன்னடாவும், பிரபல இசையமைப்பாளர் தேவி ஸ்ரீ பிரசாத்தும் காதலித்து ரகசிய திருமணம் செய்து கொண்டதாக வலைத்தளத்தில் தகவல் பரவி உள்ளது. தேவி ஸ்ரீபிரசாத் தமிழில் வில்லு, சச்சின், சிங்கம், கந்தசாமி, வீரம் உள்ளிட்ட பல படங்களுக்கு இசையமைத்துள்ளார். தெலுங்கிலும் அதிக படங்களுக்கு இசையமைத்து இருக்கிறார். இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஏற்கனவே சில நடிகைகளுடன் இணைத்து கிசுகிசுக்கப்பட்ட நிலையில் இப்போது நடிகை பூஜிதா பொன்னடாவை மணந்துள்ளதாக தகவல் பரவி உள்ளது. இதுகுறித்து பூஜிதா பொன்னடா அளித்துள்ள விளக்கத்தில், ''நான் தேவி ஸ்ரீபிரசாத்தை ரகசிய திருமணம் செய்து கொண்டதாக வெளியான தகவல் உண்மை அல்ல. இதுபோன்ற வதந்திகள் எங்கிருந்து உருவாகின்றன என்று புரியவில்லை. நான் யாரையும் காதலிக்கவில்லை. சமூக வலைத்தளத்தில் எனக்கு எதிராக தவறான தகவல்களை பரப்புகின்றனர்" என்றார்.



# மணமக்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்த நடிகர் சூர்யா

**தனது** ரசிகர், ரசிகையின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நடிகர் சூர்யா மணமக்களை தொலைபேசியில் அழைத்து வாழ்த்து கூறினார். காஞ்சிபுரம், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் கணேஷ். நடிகர் சூர்யாவின் தீவிர ரசிகர். இவருக்கும், அவரைப் போலவே சூர்யாவின் தீவிர ரசிகையான லாவண்யா என்பவருக்கும் கோவிலில் திருமணம் நடைபெற்றது. இந்த நிலையில் திருமணத்திற்குபின் திருமண மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மணமக்களுக்கு குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், ரசிகர் மன்ற நிர்வாகிகள் என அனைத்து தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வந்தனர். அப்போது திடீரென கணேசின் செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதனை எடுத்து பார்த்தபோது நடிகர் சூர்யா மணமக்கள் இருவருக்கும் திருமண வாழ்த்து சொல்லி இன்ப அதிர்ச்சி ஏற்படுத்தினார்.

மேலும் மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு மனம் விட்டு பேசிக்கொள்ள வேண்டும் என்ற அறிவுரை கூறிய சூர்யா அவர்களுக்கு திருமண வாழ்த்து கூறினார்.

மேலும் தான் ஒரு மாத காலம் வெளியூரில் இருப்பதால் பிறகு வந்து சந்திப்பதாக கூறினார். திருமண வரவேற்பு நடக்கும் பொழுதே சூர்யா வாழ்த்து கூறிய சம்பவத்தால் மணமக்கள் இருவரும் மகிழ்ச்சியில் திக்குமுக்காடினார்கள்.

# காலையில் வெறும் வயிற்றில் டீ பருகினால் ஏற்படும் பக்கவிளைவுகள்



காலையில் எழுந்ததும் முதல் வேலையாக டீ பருகும் பழக்கத்தை பலரும் பின்பற்றுகிறார்கள். ஆனால், வெறும் வயிற்றில் தேநீர் அருந்துவது நல்லதா என்று எப்போதாவது யோசித்து பார்த்திருக்கிறீர்களா? தேநீர் பல ஆரோக்கிய நன்மைகளைக் கொண்ட பானம்தான் என்றாலும் அதனை தினமும் காலையில் வெறும் வயிற்றில் பருகுவது நல்லதல்ல என்கிறார் ரோகினி பட்டீல்.

தேநீரில் ஆன்டி ஆக்சிடென்டுகள் உள்ளன. அவை நோய் எதிர்ப்பு சக்தியையும், வளர்சிதை மாற்றத்தையும் அதிகரிக்கச்செய்யும். என்றாலும் காலையில் வெறும் வயிற்றில் பருகினால் வயிற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். வயிற்றில் இருக்கும் அமிலங்களை தூண்டி செரிமானத்தை சீர்குலைக்கக்கூடும் என்று ரோகினி பட்டீல் எச்சரிக்கை விடுத்துள்ளார். காலையில் வெறும் வயிற்றில் டீ பருகும்போது வாயில் இருக்கும் பாக்டீரியாக்கள் குடலுக்கு கடத்தப்பட்டு பாதிப்பை ஏற்படுத்தும். அஜீரணம், நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சினைகளை உண்டாக்கும்.

வெறும் வயிற்றில் பருகப்படும் டீ ஏற்படுத்தும் மேலும் சில பக்கவிளைவுகள் குறித்து பார்ப்போம்.

**தலைவலி:** தலைவலியால் அவதிப்படுபவர்கள் அதனை கட்டுப்படுத்த டீ பருகி இருக்கலாம். ஆனால் டீயில் காபின் இருப்பதால் எதிர்பார்க்கும் பலனை தராது. டீக்கு பதிலாக தண்ணீர் அதிகம் பருகுவது தலைவலியின் வீரியத்தை குறைக்க உதவும்.

**அஜீரணம் நீரிழப்பு:** வெறும் வயிற்றில் தேநீர் பருகுவது செரிமான அமைப்புக்கு இடையூறை ஏற்படுத்தும். வாயு தொந்தரவையும் உண்டாக்கும். தேநீரில் இருக்கும் டையூரிடிக் சேர்மம், அடிக்கடி சிறுநீர் கழிப்பதற்கு வழிவகுத்துவிடும். அப்படி சிறுநீர் கழிப்பது உடலில் நீரிழப்பை உண்டாகிவிடும்.

இரவில் பல மணி நேர தூக்கம் காரணமாக ஏற்கனவே உடல் நீரிழப்புடன் காணப்படும். காலையில் எழுந்தவுடன் டீ குடித்தால், நீரிழப்பை அதிகப்படுத்திவிடும். தேநீரில் உள்ள தியோபிலின் என்ற ரசாயனப் பொருளும் நீரிழப்பை அதிகப் படுத்திவிடும். மலச்சிக்கலுக்கும் வழி வகுத்துவிடும் என்கிறார் ரோகினி பட்டீல்.

**ஊட்டச்சத்து உறிஞ்சுதலை தடுக்கும்:**

தேநீரில் டானின் என்ற சேர்மம் உள்ளது. இது சாப்பிடும் உணவில் இருந்து உடலுக்கு இரும்புச் சத்து உறிஞ்சப்படுவதை தடுத்துவிடும். மேலும் தேநீரில் உள்ள காபினும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சும் அளவை குறைத்துவிடும்.

**அசிடிட்டி பிரச்சினை ஏற்படும்**

வயிற்றில் இருக்கும் திரவங்களின் செயல்பாடுகளுக்கு தேநீர் தொந்தரவு ஏற்படுத்தும்.

அமில, கார சம நிலையையும் சீர்குலைக்கும். அசிடிட்டி பிரச்சினை தலைதூக்கும். நெஞ்செரிச்சல் ஏற்படும். கீழ் மார்பில் வலியை உணரக்கூடும்.

வெறும் வயிற்றில் தேநீர் அருந்துவதற்கு பதிலாக ஏதேனும் சிற்றுண்டி உட்கொள்ளலாம். குறிப்பாக சிறிதளவு நட்ஸ் வகைகளை சாப்பிட்டுவிட்டு தேநீர் அருந்துவது சிறப்பானது. தேநீரில் வெள்ளை சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் சேர்க்கலாம். வெல்லத்தில் பாஸ்பரஸ், இரும்பு, மெக்னீசியம் மற்றும் பொட்டாசியம் போன்ற பல வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்துள்ளன. எளிதில் செரிமானம் நடைபெறுவதற்கும் வித்திடும்.



"தேநீர் அருந்துவதற்கு சிறந்த நேரம் மாலை 3 மணிதான். அது நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த உதவும். காய்ச்சல் மற்றும் சளி வராமல் தடுக்கும்" என்கிறார்,

# கண்களைக் கவரும் ஆடைகள்



❖ கண் கவரும் கலர்ஃபுல் காம்பினேஷனில் அழகான எம்ப்ராய்டரி வேலைப்பாட்டுடன் கூடியது அனார்கலி ஃபிட்டிங் சல்வார். கைப்பகுதியில் செய்யப்பட்டிருக்கும் நெட் மற்றும் லேஸ் வொர்க் அணிந்ததுமே ரிச் லுக் தரும். கையில் பார்டர், கல் வேலைப்பாடுகள் இருப்பது கூடுதல் அழகு! இந்த உடையை பல மடங்கு எடுப்பாகக் காட்டுவது நுட்ப வேலைப்பாடுகள் கொண்ட துப்பட்டாதான். ஃப்ராக் போன்ற தோற்றத்தைத் தரும் இந்த சல்வார் எல்லா விசேஷங்களுக்கும் சரியான தெரிவு. கண்ணை உறுத்தாத கலை வண்ணம்.

❖ எம்ப்ராய்டரி, நெட் வேலைப்பாடுகள் பார்த்துப் பார்த்து செய்யப்படுவது கிராண்ட் லுக் சல்வார். பெயர் 'டபாங்'. பனாரஸ் மெட்டீரியலில் ஸ்லீவ் இணைக்கப்பட்டிருப்பதால் வித்தியாசமாக இருக்கும். பலவண்ண பளிச் கலவையில் அமைந்திருப்பதால் இதற்கு மெட்சாக எந்த நகையையும் அணிந்து கொள்ளலாம். உயரமான பெண்களுக்கு மிகப்பொருத்தமாக இருக்கும் வகையில் டாப்ஸில் பிரில் வொர்க். வெல்வெட் பார்டரில் சிவப்பு, வெள்ளை, ரோஜா நிறப் பூக்களை வரிசையாகப் பதித்தது போல வேலைப்பாடு செய்யப்பட்ட துப்பட்டா கொள்ளை அழகு.

# அதிக நேரம் உட்கார்ந்தே வேலை பார்ப்பவர்களா நீங்கள்?

கம்ப்யூட்டர் முன்பு அதிக நேரம் அமர்ந்து வேலை செய்பவர்கள் உடல் இயக்க செயல்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியம். தினமும் எட்டு மணி நேரத்திற்கு மேலாக உடல் இயக்க செயல்பாடு இல்லாமல் உட்கார்ந்து வேலை பார்ப்பவர்கள், புகைப் பிடித்தல் மற்றும் உடல் பருமன் போன்ற பிரச்சினைகளுக்கு நிகரான ஆபத்தை சந்திப்பதாக பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தொடர்ச்சியாக இருந்த இடத்தில் இருந்து வேலை செய்வது அவசியமானதாகவும், தவிர்க்க முடியாததாகவும் இருந்தாலும் உடற்பயிற்சிக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது அவசியமானது. இல்லாவிட்டால் உடல் பலவீனமடையும்; உற்சாகமாக செயல்படவும் முடியாது. ஒருசில அறிகுறிகளை கொண்டே உடல் ஆரோக்கியத்தின் தன்மையை அளவீடு செய்துவிடலாம்.

அலுவலகத்திற்கு வேலைக்கு செல்பவர்கள், மாடிப்படி ஏறுவதற்குள் மிகவும் சிரமப்பட்டு மூச்சுவிட்டால், உடனே கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். அதிலும் இருக்கையில் சென்று அமர்வதற்குள் உடல் சோர்வாக இருப்பதாக உணர்ந்தால் உஷாராகிவிட வேண்டும். அது உடல் பலவீனத்திற்கான அறிகுறியாகும். தினமும் வேலைக்கு வருவதற்கு முன்பு உடற்பயிற்சிக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள்.

காலையில் அலுவலகம் செல்லும்போது இருக்கும் உற்சாகம், பணி முடிந்து செல்லும்போது நிறைய பேருக்கு இருக்காது. வீடு போய் சேருவதற்குள் சோர்ந்து போய்விடுவார்கள். குறிப்பாக வீட்டுக்கு சென்றதும் உடல் அசதியால், சாப்பிடக்கூட விருப்பமில்லாமல் தூங்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படலாம். நாள் முழுவதும் இருந்த இடத்தை விட்டு எங்கும் நகரவில்லை என்பதுதான் அதற்கு காரணமாகும். எப்போதாவது கழிவறைக்கு சென்று வந்திருப்பார்கள். அப்படி கம்ப்யூட்டர் முன்பு அதிக நேரம் உட்கார்ந்திருப்பது ஆற்றலை சேமிக்காது. மாறாக ஆற்றலை அபகரிக்கும். அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறையாவது சில நிமிடங்கள் எழுந்து நடமாடுவது நல்லது.




நீண்டகாலமாக உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கு தசை இயக்கங்களில் குறைபாடு ஏற்படலாம். உடல் இயக்க செயல்பாடு இல்லாமையின் காரணமாக, தசைகள் பலவீனமடைந்து இந்த பாதிப்பு ஏற்படும். உடல் தசைகள்தான் எல்லா இடத்திற்கும் உடலை தூக்கிக்கொண்டு செல்கிறது. தசைகள் உறுதியாகவோ, வலுவாகவோ இல்லாவிட்டால் உடல் பலவீனமடைந்துவிடும்.

# செல்ஃபி உலா


Loges


ElakKiya


Anupama





Sabitha


Sulochana


Vivinna

## செல்ஃபி உலா

நீங்கள், உங்கள் Phone களில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் Selfie படங்களை இந்த செந்தூரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543 என்ற whatsappக்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.


Naren



Ramani

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து



நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்தூரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீர்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

## எண்களை இணைத்து நிறம் தீட்டுங்கள்





## வழிகாட்டுங்கள்



## விலங்குகளின் பெயர்களை எழுதுங்கள்



## நேரத்தைக் குறித்துக்காட்டுங்கள்




## 15 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்






# பிரதேச கலை இலக்கியத்துக்கு பங்களிப்பு செய்யும் அக்பர் சலீம்



மேடை நாடகத்தில் கால் பதித்து பிரதேச கலை இலக்கியத்திற்கு பங்களிப்பு செய்து அடையாளமற்றிருக்கும் ஒரு முகம் அதுதான் கலைஞர் மற்றும் **அதிபர் எம். ஏ. அக்பர் சலீம்** அவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தபோது.

**கேள்வி : உங்கள் பிறந்தகம் பற்றி சொல்லுங்களேன்?**

கிண்ணியா மாஞ்சோலைச் சேனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முகம்மது அனிபா அக்பர் சலீம் ஆகிய நான் 1959.11 .18ல் பிறந்தேன்.

**கேள்வி : கற்ற பாடசாலையும் இதே ஊர்தானா?**

ஆமாம்! ஆரம்பக் கல்வியை அல்ஹிரா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை தி/கிண்ணியா மத்திய கல்லூரியிலும் கற்றேன்.

**கேள்வி : உங்கள் தொழில் பற்றி ?**

போட்டிப் பரீட்சை மூலம் 198805 19 இல் ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்று 1990/91 கல்வியாண்டில் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றேன்.

**கேள்வி : நாடகத்துறைக்கு எவ்வாறு அறிமுகமானீர்கள்?**

அல்ஹிரா வித்தியாலத்தில் ஆரம்பக் கல்வியை கற்கின்ற போது1976 இல் கிண்ணியா முற்போக்கு வாலிப மன்றத்தால் நடாத்தப்பட்ட மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையிலான இஸ்லாமிய வரலாற்று நாடகப் போட்டியில் SM.சரீப் சேர் அவர்களினால் நெறிப்படுத்தப்பட்ட "இது நீதியா" என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் நாடகத்துறைக்கு அறிமுகமானேன்.

இந்த நாடகம் முதலிடம் பெற்றதன் மூலம் கிராமக்கோட்டு மைதான மீலாத் விழா மேடையில் மேடையேற்றப்பட்டு முன்னாள் தகவல் ஒளிபரப்புத்துறை பிரதியமைச்சராகவிருந்த மர்ஹூம் AL.அப்துல் மஜீத் அவர்களினால் பாராட்டுச் சான்றிதழும்,பரிசில்களும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி : இது வரையில் எத்தனை நாடகங்களை நெறிப்படுத்தியுள்ளீர்கள்?**

1994 ஆம் ஆண்டு அல்அக்ஸா கலை இலக்கிய மன்றத்தால் அதிபர் ARM.பரீட் சேர் அவர்களின் வழிகாட்டலில் நடாத்தப்பட்ட நாடக விழாவில் சமூக,இஸ்லாமிய வரலாற்று நாடகங்களாக பின் வரும் நாடகங்களை நெறிப்படுத்தியுள்ளேன் தியாகம்,திருந்திய.உள்ளம்,சுல்த்தான் சலாகுதீன்,பாதை மாறிய பக்தாத் திருடன், அந்நியம் அடக்கப்படுகின்றது போன்ற நாடகங்களும் சிரிக்கும் சிலை,ஸ்பொட் லைட் போன்ற நாடகங்களும் மேடையேற்றப்பட்டன.



இந்நாடக விழாவுக்கு பிரதம அதிதியாக வருகை தந்த வடகிழக்கு மாகாண கல்விச் செயலாளர் சுந்தரம் திவகலாலா அவர்களினால் இந்நிகழ்வினைப் பாராட்டியதுடன் தி/கிண்ணியா அல்அக்ஸா கல்லூரியில் க.பொ.தா உயர்தர விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிப்பதற்கான அனுமதியையும் வழங்கிச் சென்றார். இது அல்அக்ஸாவின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது.

**கேள்வி : நாடகத் துறையில் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்?**

கல்வி உயர் கல்வி அமைச்சின் நாடளவினான நாடக செயற்பாட்டறை 2000/07/05 இல் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்றபோது கலந்து கொண்டது. கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை அமைச்சின் 1999ஆம் ஆண்டில் மூன்று நாள் நாடகப் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டது சேவா லங்கா நிறுவனம் ஏற்பாடு நாடகப் பயிற்சி பட்டறையில் 2009 இல் கலந்து கொண்டது.

**கேள்வி : இத்துறையில் நீங்கள் பெற்றுக் கொண்ட விருதுகள், சான்றிதழ்கள்?**

2008 இல் "கௌரவிக்கப்பட்ட சமூகம்" எனும் மகுடத்தின் கீழ் கிண்ணியா நகரசபையால் நாடகத் துறைக்காக பொன்னாடை மற்றும் கௌரவமளிக்கப்பட்டது.

2014 இல் கலை,இலக்கிய நாடகத் துறையில் ஈபாடு கொண்டு பற்காற்றிய சிறந்த சேவைகளின் உபகாரமாக கிண்ணியா கலை இலக்கிய மன்றத்தினரால்"கலைச்சுடர்"என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன்.




**கேள்வி : நாடகத் துறையின் வளர்ச்சிக்கு நீங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்துள்ளீர்கள்?**

2019 இல் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் கிண்ணியா பிரதேச செயலகத்தால் நடாத்தப்பட்ட இளைஞர்களுக்கான நாடகப் பட்டறையில் "நாடகக் கலை வளவாளராக கலந்து கொண்டு பயிற்சிகள் வழங்கியமை.

பிரதிகள் எழுதி அரசியல்,சமூக,ஓரங்க நாடகம் என்பவற்றில் மாணவர்களை நடிக்க வைத்து அவர்களை தேசிய தமிழ் தினப்போட்டிகளில் பங்குபற்றச் செய்தமை மீலாத் விழாக்களில் இஸ்லாமிய நாடகங்கள் எழுதி மேடையேற்றியமை போன்ற பிரதேச நாடகத்துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புகளைச் சொல்லலாம்.

**கேள்வி : சமூகப் பணிகளில் ஆர்வம் காட்டியுள்ளீர்களா?**

பல்வேறு சமூகப் பணிகள் புரிந்துள்ளேன். குறிப்பாக 2006இல் சர்வோதயத்தின் தேசோதய அமைப்பின் மாவட்ட செயலாளராகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான இழந்த கல்வியை பெறுவதற்கான வேலைத்திட்டத்தின் அதிபராகவும் கடமையாற்றியுள்ளேன்.

நேர் காணல்
ஏ.எம் கஸ்புள்ளா

**கேள்வி : ஆசிரியராக இருந்த வேளையிலும் அதிபராக பதவி உயர்வு பெற்ற நிலையிலும் மாணவர்கள் மத்தியில் உங்கள் நிலைப்பாடு எப்படி இருந்தது?**

எந்த அதிகாரமும் வந்த போதும் மாணவர்களிடம் அன்பான ஆசானாக தந்தையாக,தோழனாக, சகமாணவாக இருந்து கல்வியை எந்த வழியில் அவர்களுக்கு புகட்டலுமோ அந்த வழியில் சென்றேன்.

**கேள்வி : இன்றைய சூழலில் மாணவர்கள் மத்தியில் அல்லது சமூகத்தில் மேடை நாடகங்களை விரும்புகின்றார்களா?**

உண்மையில் ஆர்வம் குறைந்து விட்டது. காரணம் குறுந்திரைப்படத்தில் அதிக ஆர்வம் காட்டுவதால். திறந்த வெளியில் மேடையில் மக்கள் பார்வைக்கு முன்னால் நடித்து காண்கின்ற சந்தோஷம் எங்கும் கிடைப்பதில்லை. உடனடியாக மக்கள் சான்றிதழ் பெறுகின்ற தன்மை நாடகத்திற்கு மாத்திரமே உண்டென்பதை எவரும் மறுக்க முடியாது.

**கேள்வி : தற்போது என்ன செய்கின்றீர்கள்?**

தி/கிண்ணியா அல்அதான் வித்தியாலய அதிபராக கடமையாற்றிய பின் எனது சுயவிருப்பின் பேரில் தி/கிண்ணியா அல்றவ்லாலு வித்தியாலயம்(தாமரைவில்)2012 0508முதல் இட மாற்றம் பெற்று அதிபராக கடமையேற்று ஓய்வுநிலை வரும்வரை அப்பாடசாலையிலேயே கடமையாற்றி மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களிலும்,இணைபாடவிதான செயற்பாடுகளிலும் கவனம் செலுத்தி, கற்றலில் ஆர்வமுள்ளவர்களாக மாணவர்களை மாற்றி 2019/11/18 ஆந் திகதி அப்பாடசாலையில் இருந்தே எனது கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளேன்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

## குறும்பாவும் குறும் -பாவும்

குறுகியதும் குறும்பு தருவதுமான பா குறும்பா(Limerick). இது குறும்பாவின் வரைபுச் சட்டகத்திற்குள் அமைந்திருக்கும்.

எ+டு

**பள்ளியிலே அவளழகு மயிலாம்**
**பழகுவதில் தனிப்பாணி ஒயிலாம்**
**கல்வியிலே முன்னேறிக்**
**கடந்துவிட்டாள் ஏஎல் லும்**
**பின்னாலே**
**திரிந்தவர்கள் பெயிலாம்.**

**குறும்பு தராமல் குறுமையாக அமையும் பா குறும் பா.( Short Poem)**

எ+டு

(1)
**பயிற்சியெடு,தீமைவிடு விலகு**
**பண்பான நடத்தைகளைப்**
**பழகு**
**பெருநன்மை விளையும்**
**பாவங்கள் களையும்**
**உயர்வான மாதமிது அழகு!**

(2)
**இறையோனே ஈந்திட்ட**
**வரம்தான்**
**இதயங்கள் மலர்கின்ற**
**அறம்தான்**
**பிறைகண்டு ஏற்று**
**பிறைகாண நோற்று**
**நிறைவுபெறும்,**
**உயர் நோன்பு தரம்தான்!**

இவை நோன்பு பற்றிய இரண்டு குறும் பாக்கள் (Short Poems). இவை குறும்பாவின்(Limerick) வரைபுச் சட்டகத்திற்குள் அமைந்துள்ள போதிலும் குறும்பு தராமையால் குறும் பா(Short Poems) வாகிற்று. குறும்பும் குறுமையும் இருந்தும் குறும்பா வரைபுச் சட்டகத்திற்குள் அமையாமல் இருப்பவை குறும் பாக்களே.(Short Poems)

எ+டு

**அன்று தவழ்ந்தேன்.**
**ஆஹா "குழந்தை"யென**
**அள்ளி முகர்ந்தார்கள்!**
**இன்று தவழ்கிறேன்**
**இவனா..?"குடிகாரன்"**
**என்று நகர்கிறார்கள்!**

ஆகவே,

**1.குறும்பா (Limerick) என்பது குறுமை+ குறும்பு+குறும்பாவின் வரைபுச்சட்டகத்திற்குள் அமைவது.**

**2. குறுமை+ குறும்பாவின் வரைபுச் சட்டகம் இருந்து, குறும்பு இல்லாமற் போனாலோ**

**3. குறுமை +குறும்பு இருந்து குறும்பாவின் வரைபுச் சட்டகம் இல்லாமற் போனாலோ**

**அவை குறும்பாக்களல்ல ((Limericks). அவை, குறும்பாக்களே. (Short Poems) .**

இவற்றைத் தெரிந்து கொண்டால், சிறந்த குறும்பாக்களை(Limericks) அல்லது குறும் பாக்களை( short poems) இனங்கண்டு எழுதவும் சுவைத்திடவும் முடியும்.

பாலமுனை பாறூக்...

# அகம் பத்து 02

'வேங்கையும் ஒள் இணர் விரிந்தன நெடு வெண் திங்களும் ஊர் கொண்டன்றே'' என்று முடிகிற கபிலர் பாடல் குறிஞ்சி நிலத் திணையின் அக மாந்தர் பண்பாட்டைப் பாடுகிறது தோழி கூற்றாகி பகலிரவெனும் காலம் சார்ந்து நின்று பேசுகிற பாடல் இது. தலைவன் எதிர் நிற்கிறாள்;. தலைவியின் மனநிலைப் படத்தை வரைகிறாள் தோழியானவள். அவள் வரைவது 'வரைவு கடாயது' துறை சார்ந்தது.

குறிஞ்சிமலை வளநாடு காதலர்களின் புணர்தல் உரி கொண்டது.

மலைநாட்டுக் குரங்கொன்று முதிர்ந்த வாழைக்கனிகளாலும், பக்க மலையின் பலாக்கனிகளாலுமான சுனையில் தேன் பருகியது. பின் அருகிருந்த மிளகுக் கொடிபடர்ந்த சந்தன மரத்தில் ஏறமுடியாததாகி அதன் நிழலிடத்தில் பூக்கள் நிறைந்த படுக்கையில் உறங்குகிறது. இதுவொரு மலை நாட்டுக் காட்சி. மலைக்குரங்கு ஒரு குறியீடு உள்ளுறைக்காட்சி.

குரங்கு போலாகிறான் மலைநாட்டுத் தலைவன். பகற்குறியில் காதல் தேனருந்துகிறான் தலைவியோடு இன்புற்று புணர்ந்து கொள்கிறான். அத்தலைவியோ மூங்கிலொத்த தோளழகி; நிறுத்தவும் நில்லா நினைப்பு நெஞ்சங் கொண்டவள். இதன் பொருட்டு இரவுக் குடியிலும் புணர்விலும் திளைக்கும் அருகதை பெறுகிறான் மலைத்தலைவன்.

'குறியா இன்பம் எளிதின் நின்மலை பல்வேறு விலங்கும் எய்தும் நாடன்'' என விளிக்கும் தோழி, பகற்குறி மறுக்கிறாள்;. பின் இரவுக்குறி மறுக்கிறாள்;. வரைவு தூண்டுகிறாள்;. தோழி பெண்ணிலை சார்ந்து விடுதலை சார்ந்து முனைப்புறு பாத்திரமாகக் குறிஞ்சிப் புனைவில் வெளிப்படுகிறாள்.

கபிலர் வரையும் குறிஞ்சிக் காட்சியில், ஒளி மிகுந்த பூங்கொத்துகள் விரியப் பெற்ற பசும் புதர் சூழ்ந்த வேங்கை மரங்கள்;, ஒளி நிரம்பிய வெண்ணிறச் சந்திரன் ஆகியவற்றைக் காணுகிறோம்.

தோழி கூறும் வேங்கையும், திங்களும் அவளது கருத்து நிலைக்கு உரம். அவள் உணர்த்துகிறாள். வேங்கை பூக்கும் காலம் தினை அறுக்கும் காலம் தினைப்புலம் காக்கும் வேலை தலைவிக்கு இல்லை. அவள் வீட்டில் இற்செறியப்படுகிறாள். இனி, இரவுக் குறியிடத்தில் சந்திக்கலாம். ஆனாலும், திங்கள் பூத்ததால் வெளிச்சமெங்கும் சூழ்கிறது. தலைவியைச் சந்திக்கும் இரவுக் குறியிலும் வெளிச்சம். அதுவும் முடியாததாகிறது.

அதுமட்டுமல்ல, வேங்கை பூக்கும் காலம் திருமண காலம். பூரண நிலவு காலம் திருமணத்திற்கான நல்ல நாள். இந்த நாளில் வேறு எவராயினும் தலைவியை மணந்து விடுவர் என எச்சரிக்கிறாள். இந்தச் சூழல் தான் தோழியின் மனநிலையை நிரப்புகிறது. தோழியானவள் தலைவியின் மனநிலையை உணர்ந்து அவளது மணமங்கல வாழ்வுக்காகத் தூதுவிடும் பாத்திரமாகச் சித்திரிக்கப்படுகிறாள். தங்கத் தமிழில் கூடலும் கூடல் நிமித்தமுமான குறிஞ்சிப் பண் கபில மொழியின் இன்பக் குளிர்மை.



**கங்குல்**
**இரவின் மீதடரும் குளிரில்**
**பனி பூத்த நெடுவரை**

**கங்குல் கருங்காலில்**
**பொங்குமொரு கூடலுணர்வு**
**குளிர் காற்று அருவியோசை**
**ராக்குருவிகளின் சங்கீதம்**
**இழைந்தொழுகும்**
**நீ**
**நான்**
**அன்பு**

**வேங்கை மரமொன்றில்**
**தனித்து விடப்பட்ட புறா குறுகுறுக்கும்**
**பின் சிறகுலர்த்தும்**
**தென்றலிசை கேட்பாய்**
**விரிந்த நிலவொளியில்**
**முகமொளிரக் காண்பாய்**

**நீ**
**நான்**
**மீயன்பு**
**கங்குல்**

## மறுவாசல்

முல்லை முஸ்ரிபா

# வாசிப்பு வரம்

வாசிப்பு நேரம்/ நாள்/ வாரம் /மாதம் என்கிற சொல்லாடல்கள் எல்லாமே வாசிப்பை மேன்மையுறுத்தும் நேரசூசிகைதான். 'இளமையிற்கல்'' என்ற சொல்லுக்குள் 'வாசி'' என்ற பொருள் இருக்கிறது. எனவேதான் பாடசாலைகளில் வாசிப்பாற்றுப்படையாக நூலகங்கள் திகழ வேண்டும்.

வாசிப்பு மாணவர் சமூகத்தில் அருகிவிட்டது அல்லது வாசிப்பின் இடத்தை சமூக ஊடகங்கள் கவ்விக் கொண்டன என்கிற குற்றச்சாட்டுகள் கடந்து பாடசாலைகளில் நூலகங்களை உயிர்ப்பித்தல் மீது கவனம் செலுத்தவும் வேண்டும்.

வாசிப்பு மாதம் மட்டுமே வாசித்தல் பற்றிய சிந்தனையை மேற்கிளப்புவதல்ல. வாசிப்பு ஊக்கியை தொடர் தேர்ச்சியாக இளஞ்சமூகத்திற்கு உற்சாகம் ஊட்ட வேண்டும். இன்று இலத்திரனியல் நூலகம், ஈ நூல் என்பன தோற்றம் கொண்ட அல்லது வாசிப்பு வழிஃ முறைமை மாறியிருக்கிற சூழலில் இதன் மீதான கவனக்குவிவு பாடசாலைகளுக்கு அவசியம்.



வாசிப்பு என்பது அறிவு வளர்ச்சிக் கருவி மட்டுமல்ல. அதுவொரு பண்பாட்டு மேம்பாட்டுக்கான உத்தியும், அனுபவ வெளிப்பாட்டுக்கான காரணியும், மன ஒழுங்கமைப்புக்கான ஆற்றுப்படுத்துகையும் கூட.

எனவே பாடசாலைகள் வாசிப்புக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் கலைத்திட்ட வகுப்பறைச் செயற்பாட்டுக்கும் அப்பால் இணைக் கலைத்திட்ட விரிவாக்கத்திலும் நூலகக் கட்டமைப்பிலும் வாசிப்பை உள் நகர்த்த வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் வாசிப்புக் கலாசார விருத்திக்கும் தனித்துவமான இடம் வேண்டும். மிகக் குறிப்பாக ஆசிரிய மனோபாவம் மாணாக்கரை வாசிப்பினூடு வளர்த்தெடுப்பதில் நுட்ப சித்தி கொண்டிருக்க வேண்டும். வாசிப்பு என்பது வாரமல்ல வரம். இந்த வரத்தை மரத்தை வளர்ப்பது போல் வளர்த்தெடுப்போம். வாசிப்பு எக்காலத்துக்குமான உன்னதம்.

# ஔவன் கவிதை

## பஃறுளி

பிரதியிலிருந்து ஒழுகும்
ஒவ்வொரு துளியிலும்
ஒவ்வொரு நிறம்
முன்னம் வெண்நிறத்தது
தண்ணீரின் நிறம்
பன்னீரின் நிறம்
புன்னகையின் நிறம்

பிரதியிலிருந்து வழியுமொரு
துளி மஞ்சள் கரைந்தொழுகும்
முகம் பொங்கிற்று
பிரகாசத்தின் நிறம்

பிரதியிலிருந்ததொரு துளி
பச்சை வர்ணம்
புல்வெளி பேசிற்று
இளந்தென்றலொழுகத் தழுவிற்று
மேலொரு காதல்

மறு கணம்
மறு துளி கருமை
கண்ணீர் நிறமென்ன
காயங்களின் கூட்டு

பிரதி நனைந்திற்று
ஒரேயொரு துளி
சிவப்பு
செஞ்சிவப்பு
ரத்தத்தின் பீறல்
கடுஞ்சினத்தின் ஈறல்
இதயத்திலிருந்து வீழ்ந்தழிந்த
துளியொரு காலம்

துளி...
துளி.....
ப:்.றுளி
ஆறெடுக்கும்
உணர்வெழு மனசின் உள்ளொளி

பிரதியின் அட்சரங்களைப்
பிழிகையில் வழிகிறது
ஒரு வானம்
சில மேகம்
ஆறு நட்சத்திரம்
நிலவினொரு துண்டு
உடைந்த என் மனம்




# நீர் வளரி; கோணங்கியின் எழுத்துக் கோலம்

தமிழில் நவீன எழுத்தின் பாய்ச்சலை ஏற்படுத்திய எழுத்தாளுமைகளில் குறிப்பிடும் படியான இன்னொரு ஆளுமை கோணங்கி. கோணங்கி நான்கு தசாப்தமாக எழுத்தில் இயங்குபவர். நூறைத் தொடும் கையளவு கொண்ட இவரது கதைகளுக்குள் இயங்கும் உலகு விசித்திரமானது. மதினிமார்கள், கொல்லனின் ஆறு பெண் மக்கள், பொம்மைகள் உடைபடும் நகரம், பட்டுப்பூச்சிகள் உறங்கும் மூன்றாம் ஜாமம், உப்புக்கட்டியில் மறையும் சிறுத்தை, வெள்ளரிப் பெண் என ஆறு கதைகளில் கதை உலகை உலவ விட்டவர். முதல் ஐந்தின் தொகையாக 'சலூன் நாற்காலியில் சுழன்றபடி'' யைத் தந்தவர் கோணங்கி.

கோணங்கியின் பாழி, பிதிரா, த, நீர் வளரி ஆகிய நாவலெழுத்துக்கள் வெள;வேறு உலகுகளை வரைவன. 2020இல் வெளிவந்த நீர்வளரி 'வேட்டுவ வரி இயற்றி இந்த நாவலுக்கு கதை மரபைக் கொடுத்த மண்கால் துறவி இளங்கோ அடிகளுக்கு பாசிலும் பளிதமும் மலைநாட்டுப் பாக்கும் பனையடியில் படைத்தல்...' என்பது காணிக்கையோ.

நீர் வளரி, இரு பகுதிகள் கொண்டது. முதல் பகுதி மகரத்திருப்பம் மேகலா ரேகை. நீர்முளரி குன்றக்குரவை முதல் சுண்ணாம்பு வாளம்ளூ முத்துப்பட்டணம் வரை 19 உட்பகுதிகள் கொண்டது. இரண்டாம் பகுதி, கடத்திருப்பார் அவந்திகா ரேகை. இருட்டு முளரி நாளம், செம்மண் முளரி நாளம் என இரு உட்பகுதியில் கொண்டது.




கோணங்கி இந்தக் கட்டமைப்பினூடாக எழுதிச் செல்லும் நீர்வளரி 772 பக்கங்கள் வரை வளர்கிறது. இடையில் வருவனவான உட்தலைப்புகள் கோணங்கியின் எழுத்துக் கோணத்திற்கு உட்பெறுமானம்.

சபரிநாதன் பின்னட்டையில் எழுதிய குறிப்பு நாவல் குறித்த ஆவல் பூக்கிறது.

தமிழில் நீர்வழி போலான நாவல்கள் வளர்ந்து விட்ட சூழல், மிகுந்த அவதானிப்புக்குரியது. நாவல் கூறும் முறையிலேற்பட்ட கட்டுடைப்பு அல்லது சிதைத்தெழுப்பும் போக்கு அல்லது பின் நவீன கட்டுமானம் இத்தகைய படைப்பாளிகளூடாக மேலெழும்புகிறது. உள்ளடக்கப் பாணி அல்லது கதையில் சுழலும் உட்சுருள் அல்லது வாசிப்பாளனை இழுத்துச் செல்லும் புது உலகு, புது அனுபவத்தை வாசிப்பினூடாக மேலெழச் செய்கிறது.

மலைமுழஞ்சியில் தொங்கியாடும் மினிக்கி மந்து தொடங்கி குருவிகள் ஓலை தானே சொல்லும் கதை 11. அவன் விசார வீடு திரும்புகிறார். வரையாக வளரும் நீர்வளரி...... தெருவில் வாடைக்காற்று. காய்ந்த இலைகளின் ஓட்டம். அனாதியான காற்றுவாக்கில் எழுந்து செம்பராம்பொட்டல் காட்டுப்பாதையில் நடந்தான் என நாவல் நிறைவுறுகிறது.

கோணங்கியின் நன்றி நவிலல் குறிப்பைப் படிக்கும் போது நீர்வளரியின் ஊற்று மூலத்தையும் அவரது விரிந்த வாசிப்பு, தேடல், புதுமை நாட்டம், வரலாற்றுப் பார்வை, போன்றவற்றையும் அறிய முடிகிறது.

கோணங்கி நாவலை எழுதத் தூண்டியதாக அவர் குறிப்பிடுவன மிகுந்து அவதானிக்கக் தக்கன.

'முடிந்தவரை தேய்பிறைகளில் மெலிந்து தலைமுறையாய் வேட்டைக் கணங்களோடு இரவிரவாய் வந்து நாவலை எழுதி மறைந்த பிறைவாளங்களைக் கூட்டி வருகிறாள் மந்திர இலைகள் விடும் பொய்யாக்கொடிவையை. நீர் வளரியேந்தி வருகிறாள் கதைகளாகப் படர்ந்து'

# குமிழ்முனை ஓவியக்கலை



- சந்தன ரணவீர

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் குமிழ்முனைப் பேனா தொழில்முறை மற்றும் தொழில்சாரா சித்திரம் தீட்டுபவர்களுக்கான ஒரு பல்துறை ஊடகமாக நிரூபிக்கப்பட்டது. பாரம்பரிய கலை ஊடகங்களுடன் ஒப்பிடுமிடத்து குமிழ்முனைப் பேனாக் கலை இலகுவாக அடையக்கூடிய ஓர் ஓவிய ஊடகமாகும். குமிழ்முனைப் பேனா எல்லா இடங்களிலும் இலகுவாகக் கிடைப்பதனால் அதனை வாங்குவதற்கு ஓவியர்கள் நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய தேவை ஏதும் இல்லை. விரைவான வரிவடிவ வேலைப்பாடுகளுக்கு குமிழ்முனைப் பேனா மிகவும் இலகுவானதாக இருக்கும். அவற்றை சில ஓவியர்கள் அவர்களுடைய கலப்பு ஊடக கலைப்படைப்புகளுக்குப்



பயன்படுத்துகின்றனர். ஆனால், குமிழ்முனைப் பேனா ஓவியர்கள் அதனுடன் மாத்திரமே தங்கியுள்ளனர். புதிய ஊடகம் அதற்கென ஒரு வரையறையைக் கொண்டுள்ளது. உதாரணமாக கறுப்பு, நீலம் மற்றும் பச்சை போன்ற நிறங்களுக்கு வர்ணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் உங்களுக்கு நிழற்படுத்த முடியாது. எவ்வாறோ, இணையத் தளத்தின் உதவியுடனம் செய்தித் தாள்களில் அவ்வப்போது வெளிப்படும் வெளிக்காட்டுதல்கள்;மூலமும் குமிழ்முனைக் கலை செழித்து வளர்கின்றது.

வோர்ஹோல் அல்பேர்டோ மற்றும் ஜியாகொமெட்டி போன்ற 20ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற ஓவியர்கள் தமது கலைப்படைப்புகளுக்கு குமிழ்முனைப் பேனாக்களையே பயன்படுத்தியுள்ளனர். ஏனையோர் தமது குமிழ்முனை ஓவியங்களை 1970களில் கண்காட்சிப்படுத்தினர். பாரம்பரிய கலைப்படைப்புக்களுடன் காணப்பட்ட வகுப்பறை மற்றும் விடுதி காரணமாகவே தான் குமிழ்முனை ஓவியங்களுக்குப் பழக்கப்பட்டதாக சுயமாக உந்தப்பட்ட ஓவியரான சந்தன ரணவீர கூறுகின்றார். ஒரு மாணவனாக தனது ஒய்வு





நேரத்தை ஓவியம் வரைவதில் செலவிட்டார்.

ஓவியம் வரைய ஆர்வம் உள்ளவர்கள் அதற்காக குமிழ்முனைப் பேனாக்களை எவ்வாறு பயன்படுத்துவது என மிகவும் இலகுவாகக் கற்றுக்கொள்ள முடியும் என அவர் கூறுகின்றார். தனது வாலிப வயதில் உடற்கூறியலின் அடிப்படைகளையும் உளக்காட்சிகளையும் பத்திரிகைகளில் கண்டெடுத்து கற்றுக்கொண்டதாக உலகப் புகழ்பெற்ற குமிழ்முனை ஓவியரான லெனி மெகோ கூறுகின்றார்.

21ஆம் நூற்றாண்டில்; பல மக்கள் அதனை நடைமுறைப்படுத்துவதனால்; குமிழ்முனை ஓவியம் இன்று வளர்ச்சி கண்டுள்ளது. அவர்களில் சிலர் ஊடக அனுசரணையையும் ஆதரவினையும் பெற்று கண்காட்சிகளை நடாத்துகின்றனர். அவர்களுடையது ஓர் இயக்கம் என குமிழ்முனை ஓவியர்கள் கூறுகின்றனர். எவ்வாறோ, சில கலை விமர்சகர்கள் குமிழ்முனை ஓவியத்தை ஓர் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஊடகமாக கருதுவதில்லை.

கொரிய நாட்டு ஓவியரான மெகோ, 1980ற்கும் 1990ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பல குமிழ்முனை கலைப்படைப்புக்களை உருவாக்கியுள்ளார். அவர் அவற்றை 'பென்டிங்ஸ்' என அழைத்தார். கருப்பு வர்ண குமிழ்முனை பேனாவினை மாத்திரம் பயன்படுத்தி பிரித்தானிய ஓவியரான ஜேம்ஸ் மில்னே புகைப்பட யதார்த்தக் கலைப்படைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார். சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற ஜுவானா பிரான்ஸிஸ்கேர் மற்றுமோர் குமிழ்முனை ஓவியராவார்.

குமிழ்முனை ஓவியங்களுக்கு ஆயத்தப்படுத்தல் தேவை இல்லை என ரணவீர கூறுகின்றார். நிறக் கலவைகளை செய்வதிலோ அல்லது தூரிகைகளை தேடுவதிலோ எந்தப் பிரச்சினையும் இங்கு இல்லை. சில சமயங்களில் பயணத்தில் இருக்கும்போதோ அல்லது கிராமப்புறங்களில் தனது விடுமுறையினைக் கழிக்கும்போதோ அவர் குமிழ்முனை ஓவியங்களை வரைகின்றார். சில விளைவுகள் பொதுவாக புள்ளிமுறை ஓவிய வரைவுகள் மற்றும் குறுக்;கு சமாந்தர கோடுகள் வரைவதன் மூலம் தொடர்புபடுத்தப்படுவதில்லை. எவ்வாறோ, சரியான முறையில் மையினை விநியோகிக்க குமிழ்முனை பேனாவினை நேராகப் பிடித்துக் கொள்ளவும்.

தான் கண்ணால் பார்ப்பதையோ அல்லது கற்பனை செய்கின்ற ஒன்றையோ அழகான வரிகள்; மூலம் வரைகின்றார். அவர் நீலம் கறுப்பு மற்றும் பச்சை நிற குமிழ்முனை பேனாக்களை வரைவதற்காகப் பயன்படுத்துகிறார். அவருடைய முஹூதே ஓர் ஓவியம் மூலம் இரண்டு படகுகள் அமைதியான நீரின் மேல் இருப்பதனை சித்தரிக்கின்றார். அவரது மயூர ஓவியம் மூலம் கடவுள் மயிலின் மேல் அமர்ந்து இருப்பதனை சித்தரிக்கின்றார். ஹாமுதுருவோ ஓவியம் மூலம் ஒரு பௌத்த துறவி குடை ஒன்றினை எடுத்துச் செல்வதனை சித்தரிக்கின்றார். அவரது கெவல் ஓவியம் மூலம் நகர்ப்புறம் தொடர்புபட்ட தூய்மையின்மையை சித்தரிக்கின்றார். இந்த அனைத்து ஓவியங்களும் தனிப்பட்ட மற்றும் சுதந்திரமான அணுகுமுறையைச் சித்தரிக்கின்றது. அவர் தற்போது நாட்டில் இல்லாததன் காரணமாக எவ்வாறோ கலை ஆர்வலர்கள் அவருடைய ஓவியங்களைப் பார்க்கின்ற சந்தர்ப்பத்தை இந்த நாட்டு கலை ஆர்வலர்கள் இன்னும் பெறவில்லை.

கலாபூஷணம்
ஆர்.எஸ். கருணாரத்ன ...

# கப்பலோட்டிய தமிழனில் சிவாஜியின் மனைவியாக நடித்தவர் ருக்மணி



பழம்பெரும் நடிகை ருக்மணி தமிழகத்தின் தஞ்சை மாவட்டம் மெலட்டூரை பூர்வீகமாகக் கொண்டவர். இவர் நடிகை நுங்கம்பாக்கம் ஜானகியின் மகளும், நடிகை லட்சுமியின் தாயாரும், நடிகை ஐஸ்வர்யாவின் பாட்டியும் ஆவார். இவரது கணவர் பெயர் வை. வி. ராவ். பின்னர் இருவரும் பிரிந்துவிட்டனர்.

மும்பையில் ஹரிச்சந்திரா திரைப்படத்தின் படப்பிடிப்பு நடந்து வந்த வேளையில். லோகிதாசன் வேடத்துக்குப் பொருத்தமான சிறுவன் கிடைக்கவில்லை. அப்போது டி. பி. ராஜலட்சுமி தங்கியிருந்த விடுதியின் பக்கத்து அறையில் தங்கி இருந்தவரின் அழகான பெண் குழந்தையைக் கண்டு அக்குழந்தையின் பெற்றோரிடம் பேசி திரைப்படத்தில் லோகிதாசனாக நடிக்க வைத்தனர். இந்த ஹரிச்சந்திரா திரைப்படத்தில குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர்தான் குமாரி ருக்மணி. குமாரி ருக்மணிக்கு டி.பி. ராஜலட்சுமியுடன் தொடர்ந்து நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

'ஜலஜா' என்னும் படம் வழியாக ஹிந்தித் திரைப்படத்திலும் அறிமுகமானார். அம்மா ஜானகியும் ருக்மணியும் சேர்ந்து 'பாக்யலீலா' பத்தில் நடித்தார்கள்.

**நடித்த பிற படங்கள்:**

டி. ஆர். மகாலிங்கத்துக்கு இணையாக பூலோக ரம்பை, ஸ்ரீ வள்ளி போன்ற திரைப்படங்களில் நடித்தார்.

1946 இல் வெளியான லவங்கி திரைப்படம். இந்தப் படத்தில் நாயகனாக நடித்த இயக்குநர் ஒய். வி. ராவுடன் குமாரி ருக்மணிக்கு காதல் திருமணம் நடந்தது.

1947 இல் வெளியான பங்கஜ வல்லி திரைப்படத்தில் கிருஷ்ணனாக ஆண் வேடத்தில் நடித்தார்.

ஸ்ரீராம் ஜோடியாக நடித்த முல்லை வனம் திரைப்படம் குமாரி ருக்மணி கதாநாயகியாக நடித்த கடைசிப் படம்.

கப்பலோட்டிய தமிழன் படத்தில் சிவாஜி கணேசனின் மனைவியாக நடித்தார் ருக்மணி.

1961 தொடங்கி 1975 வரையில் பல திரைப்படங்களில் அன்னை வேடங்களில் நடித்தார். கர்ணன் படத்தில் கர்ணனின் வளர்ப்புத் தாய் ராதையாக நடித்தார்.

வெண்ணிற ஆடை படத்தில் ஜெயலலிதாவின் தாயாக, மேஜர், சுந்தர்ராஜனுக்கு ஜோடியாக நடித்தார். ஏவியெம் மெய்யப்பச் செட்டியார் தயாரித்து இயக்கிய ஸ்ரீவள்ளி படத்தில் டி.ஆர்.மகாலிங்கத்திற்கு ஜோடியாக வள்ளி வேடத்தில் நடித்து புகழ் பெற்றவர் ருக்மணி.

ஸ்ரீவள்ளி ஏவியெம் நிறுவனத்திற்கு அமோக லாபத்தைக் கொட்டிக் கொடுத்த படமாகும்.

இப்படம் 1945.04.13 அன்று ஓர் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் திரைக்கு வந்து , திரையிட்ட அனைத்து ஊர்களிலும் அமோக வசூலுடன் ஓடி சாதனை படைத்தது.

இப்படத்துடன் டி.ஆர்.மகாலிங்கம் நல்ல புகழடைந்தார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.